# பொருளியல் நோக்கு

ஆனி/ஆடி 2011



# புதிய உலக ஒழுங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஒரு மக்கள் வங்கி வெளியீடு

# நிகழ்வுக் குறிப்பேடு

**ஜூன்**

1 சனல் ~ 04 காணொலிக் காட்சிகளின் மங்கலான தன்மை காரணமாக, அது பற்றிய ஓர் முழுமையான மதிப்பீட்டை அரசாங்கத்தால் மேற்கொள்ள இயலாதுள்ளதென இலங்கையின் பிரதிநிதியான சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் அவர்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கூறினார்.

மே 30 ஆம் திகதியன்று கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலையத்தில், ஆடை உற்பத்தித் தொழிலாளர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் நிகழ்ந்த மோதலின்போது காயமடைந்து, பின்னர் இறந்துபோன ஒரு தொழிலாளியின் மரணத்திற்கு எதிர்வினையாற்றும் வகையில், பொலிஸ்மா அதிபர் கலாநிதி மஹிந்த பாலசூரிய, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவர்களிடம் தனது இராஜினாநாமாக் கடிதத்தைக் கையளித்தார். தொழிலாளர்களின் இவ்வார்ப்பாட்டமானது அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட தனியார் துறை ஊழியர்களுக்கான ஓய்வூதியம் தொடர்பான ஓர் சட்ட மூலத்திற்கு எதிரானதாகும்.

5 இரண்டாயிரத்து அறுநூறாவது (2600) ஆவது சம்புட்டாத்வ ஜெயந்தியைக் குறிக்கும் முகமாக, பாக்கிஸ்தான் அரசாங்கம் இலங்கைக்குப் புத்த பெருமானின் புனித தந்ததாதுவை அனுப்பி வைத்தது. சபாநாயகர் சமல் ராஜபக்ச அவர்கள் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து இதைப் பெற்றுக்கொண்டார்.

6 தெற்காசியாவிலேயே மிக உயரமான தன்னியக்கத் தொழிற்பாட்டு ஒலிபரப்பு கோபுரமான, முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கொக்காவில் ஒலிபரப்புக் கோபுரம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவர்களால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

பான் கீ ~ மூன் அவர்கள், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் செயலாளர் நாயகமாக மீண்டும் தெரிவு செய்யப்படுவதற்கான தனது ஆதரவை இந்தியா வெளிப்படுத்தியது. பான் கீ ~ மூன் அவர்களுடைய இரண்டாவது பதவிக் காலத்திற்கான வேட்புமனுவை தாமும் ஆதரிப்பதாக நியூ யோர்க்கில் உள்ள ஐ.நா. காரியாலயத்தில் ஒன்றுகூடிய ஆசியக் குழு முறைப்படி அறிவித்தது.

7 உலக வங்கியின் உலக பொருளாதார வாய்ப்பு நிலை அறிக்கையானது (ஜூன் 2011) வெளியிடப்பட்டது. இவ்வறிக்கையானது இலங்கையின் யுத்தத்திற்குப் பின்னரான பொருளாதார மீட்சியை மிகவும் பாராட்டியுள்ளதுடன், 2013 இல் 7.9 சதவீத மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியை அடையும் வகையிலான தெற்காசியப் பொருளாதார வளர்ச்சிப் பாதைக்கு, இந்தியாவும் இலங்கையும் தலைமை தாங்குமெனவும் அதில் குறிப்பிட்டுள்ளது.

8 ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளில் நான்கு நாடுகளான ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, சீனா, பிரான்ஸ் ஆகியன, பான் கீ ~ மூன் அவர்கள் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் செயலாளர் நாயகமாக இரண்டாவது தடவையும் 5 வருடங்கள் பதவியில் இருப்பதற்கான தமது ஆதரவை வெளிப்படுத்தியதன் பின்னர், ஐரோப்பிய ஒன்றியமும் அதற்கான ஆதரவை வழங்கியுள்ளது. எஞ்சியுள்ள நிரந்தர உறுப்பு நாடான ரஷ்யா இதுவரையில் தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தவில்லை.

முன்னொரு போதும் இல்லாத மிக உயர்வான வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல் தொடர்பான சாதனையைப் பற்றி இலங்கை முதலீட்டுச்சபை அறிவித்துள்ளது. 2011 இன் முதலாவது காலாண்டிற்கான 236 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான தேறிய வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சலானது, 2010 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் நிகழ்ந்த முதலீட்டு உட்பாய்ச்சலுடன் ஒப்பிடுமிடத்து, 160 சதவீத அதிகரிப்பாகக் காணப்படுகின்றது.

தென் மற்றும் மத்திய சீனாவில் பெய்த விசை மாரியான மழையால் திடீரெனத் தூண்டப்பட்ட வெள்ளப்பெருக்கால் 52 பொதுமக்கள் இறந்துள்ளதுடன், 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டதாகவும் சீனாவின் ஸ்ரேட் எனும் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய அமெரிக்காவில், பாரியதும் நன்கு பிரசித்தி பெற்றதுமான கம்பனிகள் மற்றும் நிறுவனங்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் இணையத் தாக்குதல் காரணமாக, இறுதியாகப் பாதிக்கப்பட்ட ஓர் நிறுவனமாக சர்வதேச நாணய நிதியம் காணப்படுகின்றது என றொயிட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. கவனமாகக் கையாள வேண்டிய உள் தகவல்களை பெறுவதையே இத்தாக்குதல் இலக்காகக் கொண்டிருந்தது.

11 இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் எதிர்கால அரசியல் மாற்றங்களைப் பற்றி கலந்துரையாடுவதற்காக ஜூன் 10 ஆம் திகதியன்று இலங்கைக்கு வருகை தந்த, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன், வெளிநாட்டு விவகார அமைச்சின் செயலாளர் நிருபமா ராவ், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பிரதீப் குமார் ஆகியோரை உள்ளடக்கிய உயர்மட்ட இந்திய தூதுக் குழுவானது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவர்களை அலரிமாளிகையில் சந்தித்தது. இச்சந்திப்பின்போது, 13 ஆவது திருத்தச் சட்டம் அரசியல் யாப்பில் உள்ளடக்கப்படுமாயின், தனது அரசாங்கம் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு விட்டுக்கொடுக்காது என ஜனாதிபதி தெரிவித்தார். மாகாணசபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்கப்படுவதை தனது பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கூறாகவுள்ள கட்சிகள் எதிர்ப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

இலங்கையிலுள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில், இலங்கைக்கு எதிராக தமிழ்நாட்டு சட்டசபை நிறைவேற்றிய தீர்மானமானது தவறான எண்ணம் கொள்ளச் செய்வதுடன், அது பொருத்தமற்றதாகவும் காணப்படுகின்றது எனவும் விமர்சித்து, தென்னிந்தியாவின் இரு முன்னணி அரசியல்வாதிகளான, ஜனதாக் கட்சியின் தலைவரான சுப்பிரமணிய சுவாமி, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரான எம். கருணாநிதி ஆகிய இருவரும் அதை வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

12 சூடானின் அப்யேய் மற்றும் தென் கோடோபான் ஆகிய எல்லைப் பிராந்தியங்களில் காணப்படும் நெருக்கடிகளைத் தீர்ப்பதை நோக்கமாகக் கொண்டு, வட மற்றும் தென் சூடான் தலைவர்கள் எதியோப்பியாவில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தனர் எனும் செய்தியை Associated Free Press வெளியிட்டது.

13 முப்பது வருடங்களுக்கு மேலாகக் காணப்பட்ட பயங்கரவாதச் செயற்பாடுகள் காரணமாக, நிறுத்திவைக்கப்பட்டிருந்த, தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையிலான படகுச்சேவை மீள ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கையில் நிகழ்ந்ததாகக் குற்றஞ்சாட்டப்படும் நீதி முறைமைக்கு புறம்பான கொலைகள் பற்றிய சனல் 4 இன் புதிய காணொலிக் காட்சிகள் போலியானவை, என்பதை அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஸ்ரீ ஹேவாவிதாரண என்பவர் மீண்டும் ஒருதடவை கண்டுபிடித்து உறுதிப்படுத்தியுள்ளார். இவர், உலகிலுள்ள முன்னணி எண்ணியல் ஒளிக் காட்சி அமைப்புத் துறை வல்லுநர்களில் ஒருவரும் Cisco's Global Broadcast மற்றும் Digital Video Practice பிரிவின் முன்னாள் தலைவருமாவார்.

14 இலங்கைக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு இந்திய பிரதமரான கலாநிதி மன்மோகன் சிங் அவர்களை தமிழ்நாட்டு முதலமைச்சரான ஜெ. ஜெயலலிதா அவர்கள் வற்புறுத்தி உள்ளார். அவரிடம் ஓர் மனுவைக் கையளித்து, தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையிலான படகுச் சேவையை நிறுத்தி வைக்குமாறும் இந்தியாவின் மத்திய அரசை அவர் வேண்டிக் கொண்டார்.

15 பிரித்தானியாவில் ஒளிபரப்பப்பட்ட தொலைக்காட்சி ஆவணப்படத்தில் முன்னிலைப்படுத்திக் காட்டப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிக்குமாறு பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரன் அவர்கள் இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்தி உள்ளார்.

"இலங்கையின் கொலைக் களங்கள்" எனும் சனல் 4 இன் படத்தில் காட்டப்பட்டவாறு, இலங்கை தன் சொந்தக் குடிமக்கள் மீது வேண்டுமென்றே இலக்கு வைத்துள்ளது எனும் குற்றச்சாட்டை இலங்கை அரசாங்கம் ஆணித்தரமாக மறுத்துள்ளதென லண்டனிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிக ராலயம் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சனல் 4 படமானது, எதிர்கால சந்ததியினர் உட்பட இலங்கையில் வசிக்கும் பல்வேறு வகைப்பட்ட சமூகங்கள் மத்தியில் பகைமை உணர்வைத் தூண்டுவதற்கான வாய்ப்பைக் கொண்டுள்ளது. எனவே, தற்போது நடைமுறையில் உள்ள தேசிய நல்லிணக்கச் செயல்முறை இதனால் மிக மோசமாகப் பாதிக்கப்படுமெனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி .................... 52ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளியல் நோக்கு

மலர்: 37 இதழ்கள் 1 & 2 ஏப் / மே 2011

வெளியீடு:
ஆராய்ச்சித் திணைக்களம்,
மக்கள் வங்கி,
தலைமை அலுவலகம்,
சேர் சிற்றம்பலம் ஏ.
கார்டினர் மாவத்தை,
கொழும்பு 02,
இலங்கை.

ஆலோசனைச் சபை

டபிள்யூ. கருணாஜீவ
தலைவர், மக்கள் வங்கி

என். வசந்தகுமார்
பிரதம நிறைவேற்று அதிகாரி /
பொது முகாமையாளர்
மக்கள் வங்கி

கே. பி. தர்மதாச
ஆராய்ச்சிப் பணிப்பாளர்
மக்கள் வங்கி

ஆலோசகர் பதிப்பாசிரியர்
கலாநிதி. ஏ. பி. கீர்த்திசிங்க

ஒருங்கிணைப்பாளர்
எச். எஸ். சோமச்சந்திர
ஆராய்ச்சி உதவியாளர்

[illegible]

E-mail:ecorev@peoplesbank.lk

உள்ளடக்கம்

## சிறப்புக் கட்டுரைகள்


| | | |
|---|---|---|
| கலாநிதி ரனில் டி. குணரட்ன | 32 | இரசாயன ஆயுதங்களும் அவற்றின் உடன்பாடு தொடர்பான சர்வதேச சட்டங்களும் |
| கலாநிதி டி.ஜி.பி.எல். அபேயகோன் | 37 | சனத்தொகை முகாமைத்துவத்தின் இலங்கையின் வெற்றி: ஏனைய திட்டங்களுக்கான ஓர் படிப்பினை |


## மாணவர் நோக்கு


| | | |
|---|---|---|
| பேராசிரியர் டபி. அத்தபத்து | 42 | பொருளாதார வளர்ச்சி |


## நூல் மதிப்பாய்வு


| | | |
|---|---|---|
| கலாநிதி சரத் ராஜபத்திரன | 46 | தென்னாசியாவில் வர்த்தகத் தாராளமயமாக்கலும் வறுமையும் |


விசேட அறிக்கை

# புதிய உலக ஒழுங்கு


| | | |
|---|---|---|
| பேராசிரியர் நாலினி கீர்த்திசிங்க | 03 | புதிய உலக ஒழுங்கு: அதன் தோற்றமும் வரலாற்று ரீதியான பரிணாம வளர்ச்சியும் |
| சுஜீவனி டி மெல் | 09 | பெருகிவரும் வாய்ப்புக்கள்: புதிய உலக ஒழுங்கில் தென்னாசியாவிற்கான இடம் |
| கலாநிதி எம். கணேசமூர்த்தி | 13 | இலங்கைப் பொருளாதாரம் கடந்தகால மற்றும் நிகழ்காலம் பற்றிய ஓர் விமர்சன ரீதியான மதிப்பாய்வு |
| வி.ரி. தமிழ்மாறன் | 22 | சர்வதேச நிறுவனங்களின் ஜனநாயகமயமாதல் செயல்முறை: சவால்களும் எதிர்கால வாய்ப்புகளும் |
| கலாநிதி ரஞ்சித் பி. குமார | 28 | ஆரம்பகால பௌத்தக் கோட்பாடுகளில் காணப்படும் நீதியும் சமாதானமும் தொடர்பான முன்னோக்கு |


*அடுத்த இதழ்கள்:*

**போக்குவரத்து**

**ஆயுர்வேதம்**

[illegible]

*அச்சுப் பதிப்பு – மக்கள் வங்கி அச்சீட்டுச் சேவைகள் திணைக்களம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய உலக ஒழுங்கு பற்றிய சில சிறப்புக் கூறுகள்



மூலம்: http://en.wikipedia.org/wiki/potential superpowers



மூலம்: World Economic Outlook-IMF, 2011



மூலம்: World Economic Outlook-IMF, 2011



மூலம்: http://en.wikipedia.org



மூலம்: World Economic Outlook-IMF, 2011



மூலம்: World Economic Outlook-IMF, 2011



மூலம்: World Economic Outlook-IMF, 2011



மூலம்: World Economic Outlook-IMF, 2011



மூலம்: The Global Competitiveness Report, 2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய உலக ஒழுங்கு: அதன் தோற்றமும் வரலாற்று ரீதியான பரிணாம வளர்ச்சியும்

**பேராசிரியர் காமினி கீரவெல**

*முதுநிலைப் பேராசிரியர் - வரலாறு*
*பேராதனை பல்கலைக்கழகம்*

புதிய உலக ஒழுங்கு பற்றிய எண்ணக் கருவின் வரலாற்று ரீதியான மரபுவரிசை ஆய்வு மற்றும் அப்புதிய உலக ஒழுங்கு ஒன்றிற்கான ஆர்வ எதிர்பார்ப்பு என்பவற்றின் மூலத்தை மனித வரலாற்றின் தொடக்க காலத்திலேயே கண்டறிய முடியும். புதிய உலக ஒழுங்கு பற்றிய கருத்தானது, வரலாற்று நிலைமாற்ற கால கட்டங்களிலும், முனைப்பான அரசியல் நெருக்கடி மிகுந்த காலங்களிலும் மீண்டும் மீண்டும் எதிர்பாராத வகையில் தோற்றம் பெற்றது. ஆயினும், உலக அரசியலில் நெருக்கடிகள் மற்றும் கொடிய நிகழ்வுகள் என்பவற்றைக் கொண்ட 20 ம் நூற்றாண்டின் அரசியல் கருத்தார்ந்த விவாதத்திலேயே, பரந்த மற்றும் முழுமையான கட்டமைப்பில் புரிந்துகொள்ளப்பட்ட ஓர் 'புதிய உலக ஒழுங்கு' பற்றிய எண்ணக்கரு தோற்றம் பெற்றது. ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற ஓர் முதலாளித்துவப் பொருளாதார ஒழுங்கின் வளர்ச்சியுடன் இணைந்ததாகக் காணப்பட்ட வரலாற்று ரீதியான செயல் முறைகள் மற்றும் அதன் விளைவாக 16 ம் நூற்றாண்டிலிருந்து கட்டம் கட்டமாக உலகின் ஏனைய பாகங்களில் ஏற்பட்ட குடியேற்ற ஆட்சி ஆதிக்கத்தின் தோற்றமும் விரிவாக்கமும் என்பன காரணமாக, 20 ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் முழு உலகுமே ஓர் ஒற்றைத் தொகுதியாக நிலைமாற்றமடைந்தது. அதேவேளை, ஏகாதிபத்திய உலக ஒழுங்கின் அக முரண்பாடுகள் 20 ம் நூற்றாண்டின் முதல் அரைப்பகுதியில் அரசியல், பொருளாதார நெருக்கடிகள் மற்றும் உலக மகா யுத்தங்கள் என்பன நிகழ்வதற்கான சூழ்நிலையை உருவாக்கின. வரலாற்று ரீதியான இச்சூழமைவிலேயே, புதிய உலக ஒழுங்கு பற்றிய எண்ணக்கருவானது அதனுடைய கட்டமைப்பு ரீதியான பொருளில் பரிணாம வளர்ச்சியடைந்தது.

### முதலாவது உலக மகாயுத்தத்தின் பின்னரான புதிய உலக ஒழுங்கு பற்றிய தாராண்மைவாத மற்றும் சோசலிஷ விளக்கமுறைகள்

இவ்வுலகை மீள் ஒழுங்குபடுத்துவதற்கான ஓர் விதியமைப்பாக, 'புதிய உலக ஒழுங்கு' எனும் இச்சொற்பதத்தை முதன்முதலில் உபயோகித்தவர்களில் வூட்ரோ வில்சனும், வி. ஐ. லெனினும் மிக முக்கியமானவர்களாக இருந்தனர். இப்புதிய உலக ஒழுங்கானது முதலாம் உலக மகா யுத்தத்திற்குப் பின்னர், தாராண்மை ஜனநாயக நியதிகளை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டுமென வில்சன் விரும்பினார். இதற்கு முரணாக, ரஷ்யப் புரட்சியானது மானிட வரலாற்றில் ஓர் புதிய சகாப்தத்தைக் கட்டியம் கூறுகின்றது எனவும், ஐரோப்பாவில் விரைவில் நிகழவுள்ள சோசலிஷப் புரட்சிகள் மற்றும் குடியேற்ற உலகில் நிகழ இருக்கும் தேசிய ஜன நாயகப் புரட்சிகள் என்பன காரணமாக, ஓர் புதிய உலக ஒழுங்கு அங்கீகரிக்கப்படும் எனவும் லெனின் நம்பினார். 1918 ஜனவரியில் அமெரிக்க காங்கிரஸில் ஆற்றிய தனது உரையில், முதலாவது உலக மகா யுத்தத்திற்குப் பின்னரான சமாதானத்திற்கு அடிப்படையாக, பிரபல்யமான 14 விபரக்கூறுகளை வூட்ரோ வில்சன் முன்வைத்தார். முதலா வது உலக மகா யுத்தத்தின் பின்விளைவாக அமைந்த, ஐரோப்பிய அரசியல் ஒழுங்கின் நெருக்கடி நிறைந்த இச்சூழமைவில், நாடுகளுக்கு இடையில் கட்டுப்பாடுகளற்ற பொருளாதாரத்தைப் பேணுவதையும் இரகசிய ஒப்பந்தங்களை இல்லாமல் செய்வதையும் பரிந்துரைத்த அவருடைய முக்கியமான இந்த 14 விபரக்கூறுகளும் ஓர் புதிய உலக ஒழுங்கை தொடக்கி வைக்குமென வூட்ரோ வில்சன் மேலும் நம்பினார். ஐரோப்பாவில் உடனடியாக தீர்வு காணப்பட வேண்டிய தேசிய இனப்பிரச்சினையை கையாள்வதன் பொருட்டு, ஐரோப்பாவின் அரசியல் வரைபடத்தை மீள வரைவதில் தேசிய சுயநிர்ணயக் கோட்பாட்டுக்கு வில்சன் தொடர்ந்தும் ஆதரவாக இருக்க விரும்பினார். இச்சுயநிர்ணயம் சிறந்த ஓர் உலகிற்கு வழிவகுக்கும் என அவர் நம்பியதுடன், அது பற்றிய அவருடைய விளக்கமுறையானது இவ்வெண்ணக்கருவின் தாராண்மைவாதக் கூறுகளால் நெறிப்படுத்தப்பட்டும் இருந்தது. "வில்சனைப் பொறுத்தவரையில், சுயநிர்ணயம் என்பது அநேகமாக, பிரபல்யம் மிக்க இறைமைக்கான மற்றுமோர் சொல்லாகும். இவ்விடயத்தில் அவர் பிரித்தானிய அரசியல் மரபை விட பிரெஞ்சு மற்றும் அமெரிக்க அரசியல் மரபுகளையே பின்பற்றினார்........ வில்சன் கோட்பாட்டின் இன்றியமையாத ஓர் கூறாக ஜனநாயகத்தின் உயர்ந்த இலட்சிய நிலை காணப்பட்டது"[1] என அல்பிரட் கோபன் என்பவர் கருத்துரை கூறியுள்ளார். முக்கியமான இந்த 14 விபரக்கூறுகளை நிறைவேற்றிய தன் விளைவாக, 1918 நவம்பரில் ஜேர்மனியும் அதனுடைய நட்பு நாடுகளும் போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு உடன்பட்டதுடன், இம்முக்கிய விபரக்கூறுகளை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகள் வேர்சையில் சமாதான உடன்படிக்கையில் மேற்கொள்ளப்பட்டன. முக்கியமான இந்த 14 விபரக்கூறுகளின் இறுதிக்கூறுடன் ஒருநிலைப்பட்டதாக, ஜனநாயகத்திற்குப் பாதுகாப்பான ஒன்றாக இவ்வுலகை ஆக்குவதற்குரிய ஓர் 'புதிய உலக ஒழுங்கை' நோக்கிய உறுதியான முன்னேற்றத்தில் காணப்பட்ட ஓர் முன்னணி அமைப்பாக அப்போது நிறுவப்பட்ட சர்வ தேசச் சங்கம் விளங்கியது. ஆயினும், அமெரிக்காவின் அங்கத்துவத்தை அதன் செனட் சபை நிராகரித்தமை காரணமாக, இச்சர்வதேசச் சங்கத்தில் அதனால் ஓர் அங்கத்துவ நாடாக இருக்க முடியவில்லை. அதன் விளைவாக, வில்சனின் கூற்றுப்படி, ஓர் புதிய உலக ஒழுங்கிற்கு வழிகாட்டியாக இருந்த சர்வதேசச் சங்கம் அதன் தொடக்கத்திலேயே மிகக் கடுமையான தடங்கலுக்கு உள்ளானது.

அது, மார்க்சிஸக் கோட்பாடு சார்ந்த பரந்த உலக நோக்கை *(Weltanschauung)* அடிப்படையாகக் கொண்ட ஓர் புதிய உலக ஒழுங்கின் ஆரம்பமாக இருக்குமென, ரஷ்யாவில் ஏற்பட்ட அக்டோபர் புரட்சியின் பின்னர், லெனினும் ரொஸ்கியும் நம்பினர். அக்டோபர் புரட்சியானது உலக சோசலிஷப் புரட்சிகளுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கான முன்னோடிச் செயற்பாடாக இருக்குமென லியோன் ரொஸ்கி நம்பினார். இந்த அக்டோபர் புரட்சி ஓர் சர்வதேசப் புரட்சியாக இருப்பதுடன், அதன் வெற்றியானது 'செல்வந்த' நாடுகள் மற்றும் குடியேற்ற நாடுகள் ஆகிய இரு தரப்பு நாடுகளையும் சூழ்ந்துகொள்ளும் உலகளாவிய புரட்சிகளால் உறுதிப்படுத்தப்படும் எனவும் லெனின் நம்பினார்.[2] வளர்ந்து வரும் புதிய உலக ஒழுங்கானது சீர்கெட்ட, வேண்டப்படாத முதலாளித்துவ உலக ஒழுங்கிற்கு எதிரானது எனும் கருத்தை பொதுவுடைமைத் தொலைநோக்கு உடையவரான லெனின் வெளிப்படுத்தியிருந்தார். ரொஸ்கியைப் பொறுத்தவரை, ஒரு நாட்டில் மாத்திரம் சோசலிஷம் சாத்தியமானதன்று என்பதுடன், 'நிரந்தரமான புரட்சியே' கடைசி முடிவாக புதிய சோசலிஷ உலக ஒழுங்கைத் தொடக்கி வைக்கும் என நம்பினார்.[3] 1924 ல் லெனின் மரணமடைந்து, சோவியத் ஒன்றியத்தில் ஜோசப் ஸ்டாலினின் அரசியல் அதிகாரம் நிலைபெற்றதன் பின்னர், சோசலிஷ உலக ஒழுங்கு பற்றிய எண்ணக்கருவானது, படிப்படியாக மறைந்து போய்விட்டது.

### நாஜிகளும் புதிய உலக ஒழுங்கும்

முதலாவது உலக மகா யுத்தத்திற்குப் பின்னர் தோற்றம் பெற்ற, புதிய உலக ஒழுங்கு பற்றிய தாராண்மைவாத (வில்சன்), சோசலிஷ (லெனின் மற்றும் ரொஸ்கி) மாற்று வடிவங்கள் நாடுகளுக்கு இடையில் யுத்தம் நிகழ்ந்த காலத்தில் மறைந்துபோன அதேவேளை, ஐரோப்பாவில் காணப்பட்ட பாஸிஸத்தின் எழுச்சி காரணமாக, புதிய உலக ஒழுங்கு பற்றிய கருத்தானது வேறுபட்ட ஓர் கட்டமைப்பில் தோற்றம் பெற்றது. 'ஆயிரம் ஆண்டுகால, நாஜிகளின் ஆட்சிக்குரிய ஜேர்மன் குடியரசு' (Thousand-Year Reich) எனும் தனது கோட்பாட்டில், தூய ஆரிய ஜேர்மனியரின் உச்ச உயர்நிலை ஆதிக்கத்தை அடிப்படையாகக் கொண்ட, ஓர் புதிய உலக ஒழுங்கு பற்றிய கருத்துக்களை அடோப் ஹிட்லர் வெளியிட்டார். ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர், முதலில் ஐரோப்பாவையும், பின்னர் முழு உலகையும் உள்ளடக்கிய ஓர் 'புதிய உலக ஒழுங்கு' எனும் தனது குறிக்கோளை அடையப்பெறும் முயற்சியாக, ஹிட்லர் மூலப்பொருட்களையும் மனித வளங்களையும் ஒருங்கு திரட்டினார். பாஸிஸத்தின் சித்தாந்த ரீதியான தோல்வியுடன் சேர்த்து, இரண்டாவது உலக மகா யுத்தத்தின் இறுதியில் நாஜி ஜேர்மனிக்கு ஏற்பட்ட இராணுவ ரீதியான தோல்வியானது, ஹிட்லரின் புதிய உலக ஒழுங்கு பற்றிய மாற்று வடிவத்தின் முடிவைச் சுட்டியுணர்த்தியது.

### இரண்டாம் உலக மகா யுத்தமும் அதன் விளைவாகத் தோற்றம் பெற்ற சூழ்நிலையும்

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் வேதனைத் துடிப்பைத் தொடர்ந்து, சமாதானத்தை ஏற்படுத்தி, யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதன் பொருட்டு உலக நாடுகளை ஒன்றிணைப்பதற்கான ஓர் புதிய உலக ஒழுங்கு பற்றிய கருத்தை எச்.ஜி. வெல்ஸ் என்பவர் வெளிப்படுத்தினார். "புதியதோர் உலக ஒழுங்கு தோற்றம் பெறும் நாளென்று ஒரு நாள் இருக்காது. படிப்படியாக, இங்கும் அங்குமாக அது நிகழும் என்பதுடன், அது தோற்றம் பெறுகின்றபோது கூட புதிய தோற்றப்பாடுகளை விருத்தி செய்யும், ஐயத்திற்கு இடமற்ற பிரச்சினைகளைக் கண்டுபிடிக்கும், அதன் பின்னர் புதிய துணிகரச் செயல்களில் ஈடுபடும்..... உலக ஒழுங்கானது விஞ்ஞானத்தைப் போல, பெரும்பாலான கண்டுபிடிப்புக்களைப் போல இருக்கும் என்பதோடு, ஓர் சமூகப் படைப்பான கணக்கிட முடியாத எண்ணிக்கையிலான சிறப்பியல்பு வாய்ந்த மனிதர்கள், கூட்டுச் சாதனைகளுக்காக தம்மிடம் உள்ளவற்றுள் மிகச் சிறந்தவற்றை வழங்கி, நிறைவான வாழ்க்கையை வாழ்ந்திருப்பர்." [4] என எச்.ஜி. வெல்ஸ் அவர்கள், 1940 இல் வெளியிடப்பட்ட The New World Order எனும் தனது நூலில் குறிப்பிடுகின்றார். ஆயினும், முதலாம் உலக மகா யுத்தத்திற்குப் பின்னரான சூழ்நிலையுடன் ஒப்பிடுமிடத்து, இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னரான பொருளாதார மற்றும் அரசியல் புனர்நிர்மாணத்தை அடுத்து வந்த காலகட்டத்தில் புதிய உலக ஒழுங்கு எனும் இச்சொற்தொடரானது அதிகமானோரால் பயன்படுத்தப்படவோ அல்லது ஏற்றுக்கொள்ளப்படவோ இல்லை என்பதைக் கூர்ந்து நோக்குவது ஆர்வத்துக்குரிய ஒன்றாகும். யுத்தத்திற்குப் பின்னரான உலகின் நிதி மற்றும் வர்த்தக உறவுகளின் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய விதிமுறைகளை வகுப்பதற்காக, யுத்தத்தில் வெற்றி பெற்ற 44 நேச நாடுகளின் தூதுக்குழுக்கள் 1944 ஜூலையில் நியூ ஹம்ஷயரில் உள்ள பிறட்டன் வூட்ஸ் எனும் இடத்தில் ஒன்று கூடி, பிறட்டன் வூட்ஸ் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன. புதிதாக உருவாக்கப்பட்ட சர்வதேச அமைதியையும் பாதுகாப்பையும் பேணுவதற்கான, முதன்மையான நிறுவனமாகிய ஐக்கிய நாடுகளுடன் சேர்த்து, இந்த பிறட்டன் வூட்ஸ் முறைமையின் பிரதான நிறுவனங்களாகிய சர்வதேச நாணய நிதியம் (IMF), புனர்நிர்மாணத்திற்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கி (IBRC) என்பன ஓர் புதிய பொருளாதார மற்றும் அரசியல் உலக ஒழுங்கைத் தொடக்கி வைக்கும் என நம்பப்பட்டது. பனிப் போர் என அழைக்கப்பட்ட, 1947 இன் பின்னர் எதிர்பாராதவிதமாக திடீரெனத் தோற்றம் பெற்ற, ஐக்கிய அமெரிக்காவுக்கும் சோவியத் ஒன்றியத்திற்கும் இடையிலான வெளிப்படையான போட்டிநிலையானது அமைதியுடனும் உறுதிப்பாட்டுடனும் கூடிய ஓர் புதிய உலக ஒழுங்கிற்கான ஆர்வ எதிர்பார்ப்பைப் பொய்யாக்கி விட்டது.

### புதிய சர்வதேச பொருளாதார ஒழுங்கும் மூன்றாம் உலக நாடுகளும்

ஐக்கிய நாடுகள் கட்டமைப்பிலான பொருளாதார முக்கியத்துவத்துடன் கூடிய, ஓர் புதிய உலக ஒழுங்கு பற்றிய எண்ணக்கரு 1960களில் மீண்டும் ஒரு தடவை திடீரெனத் தோற்றம் பெற்றது. 1945 இற்குப் பின்னர் காணப்பட்ட குடியேற்ற நாடுகளுக்கு அரசியல் சுதந்திரம் வழங்கும் செயற்பாடானது, ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் 'புதிய அரசுகளின்' தோற்றத்திற்கு வழிவகுத்தது. 1950களிலும், 1960களிலும் உலகளாவிய அரசியலில் கவனத்தை ஈர்ப்பதற்காக தன்னம்பிக்கையுடன் நடந்துகொள்வதற்கு முன்வந்த, இந்த 'மூன்றாம் உலக' நாடுகள், மேலைத்தேச வல்லரசுகளினதும், கைத்தொழிலில் ஆதிக்கமுடைய ஏனைய நாடுகளினதும் ஆதிக்கத்திற்குட்பட்ட சர்வதேச அரசியல் சூழலை மாற்ற விரும்பின. இந்த 'மூன்றாம் உலகிலுள்ள' நாடுகளில் பெரும்பாலானவை அணிசாரா நாடுகளாக தம்மை ஒருங்கிணைத்துக் கொண்டதுடன், ஐ.நா.வில் தமக்குள்ள எண்ணிக்கை ரீதியான (அங்கத்துவம்) பலத்தைக் கருவியாகக் கொண்டு, தமது நலன்களை முன்வைப்பதற்காக ஐ.நா. நிறுவனங்களை பயன்படுத்தின. திருத்தத்தை வேண்டி நிற்கும், சர்வதேச பொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாதார உறவுகளின் தற்போதைய முறைமையில் அடிப்படையான குறைபாடு காணப்படுகின்றது எனும் பொதுவான ஒரு நோக்கு இம்மூன்றாம் உலக நாடுகள் மத்தியில் காணப்பட்டது. நூறிட் இஸ்லாம் என்பவரின் கூற்றுப்படி, தற்போதைய பொருளாதார ஒழுங்கில் காணப்படும் திருப்தியின்மைக்கு மேலதிகமாக, இது சம்பந்தமாக, மூன்றாம் உலகின் உளப்பாங்கை வடிவமைத்த ஏனைய மூன்று காரணிகள் காணப்படுகின்றன. முதலாவதாக, "அவற்றில் பெரும்பான்மையானவை குடியேற்ற ஆட்சியின் விளைபயனாக ஏற்பட்ட அவமதிப்பு, மரியாதைக் குறைவு, சமத்துவமின்மை என்பவற்றுடன் கூடிய, அபிவிருத்தியடைந்த ஐரோப்பிய நாடுகளின் குடியேற்ற ஆதிக்கத்திற்கு உட்பட்ட பொதுவான ஓர் வரலாற்றை உடைமையாகக் கொண்டுள்ளன." இரண்டாவதாக, "வருமான மட்டங்கள் மற்றும் இயற்கை வளங்களின் கொடை என்பவற்றை பொருட்படுத்தாத நிலையில், விஞ்ஞானத்தையும் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு தொடர்பிலான செயற் திறன் குறித்த வகையில், அவை அபிவிருத்தியடைந்த நாடுகளை விட தொழில்நுட்ப ரீதியாக தரம் தாழ்ந்த நிலையில் உள்ளன." மூன்றாவதாக, "உலக விவகாரங்கள் தொடர்பான தீர்மானம் எடுத்தல் செயல்முறையில் இந்த மூன்றாம் உலக நாடுகளின் பங்கேற்பு போதுமான அளவில் இல்லை." வர்த்தகம் மற்றும் அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் ஆணைக்குழு (UNCTAD) 1964 ல் நிறுவப்பட்டதைத் தொடர்ந்து, நடைமுறையில் உள்ள சர்வதேச பொருளாதார ஒழுங்கை மாற்றுவதற்கான தேவை பற்றிய கருத்தார்ந்த விவாதத்திற்கான ஓர் மன்றம் தோற்றம் பெற்றது. 1964 ல் நடைபெற்ற உலக வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி பற்றிய ஜெனிவா மகாநாட்டுக்காக ரவூல் பிரபிச் என்பவரால் தயாரிக்கப்பட்ட அறிக்கையில், நடைமுறையிலுள்ள சர்வதேச பொருளாதார முறைமையில் ஓர் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான தேவை பற்றிய விபரங்களைக் காண முடியும். புதிய சர்வதேச பொருளாதார ஒழுங்கு பற்றிய மேலும் முறையான, தெளிவான கருத்துரைப்பை 1964 - 1974 காலகட்டத்தில் காண முடிகின்றது. ஓர் புதிய சர்வதேச பொருளாதார ஒழுங்கை நிறுவுவதற்கான பிரகடனத்தை ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை 1974 ல் நிறைவேற்றியது. இப்புதிய சர்வதேச பொருளாதார ஒழுங்கானது வர்த்தகம், அபிவிருத்தி என்பவற்றுடன் மாத்திரம் தொடர்புடைய பிரச்சினைகளையே உள்ளடக்கியிருந்தது என்பது உண்மை எனினும், நடைமுறையிலுள்ள உலக அதிகார உறவுகளை மாற்றுவதன் மூலம், ஓர் புதிய உலக ஒழுங்கை உருவாக்குவதை நோக்கிய முதலாவது நடவடிக்கையாக இது கருதப்படுகின்றது. "புதிய சர்வதேச பொருளாதார ஒழுங்கு என்பது பகிர்வு பற்றியதாகும்; அதாவது, உலக உற்பத்தியின் பகிர்வு, ஏதாவது நாடுகளிலிருந்து கிடைக்கும் மிகை உற்பத்திகளின் பகிர்வு, பொருளாதார ஆதிக்கத்தின் பகிர்வு என்பனவே அவையாகும்" [5] என தன்சானியாவைச் சேர்ந்த அனன் ஜே. செகலா (Anon J. Nsekela) என்பவர் 1977 இல் கருத்துரை கூறினார். "தற்போது, தீர்மானங்கள் வகுக்கப்பட்டு உடன்பாடு காணப்படுகின்ற போது, தமது நலன்களை மிகுந்த கவனத்தில் கொள்ளவதற்கு மூன்றாம் உலக நாடுகளுக்கு செயல்திறனுடைய, போதுமானளவு கருத்துரிமை உள்ள, குறிப்பிடத்தக்களவு முக்கியத்துவமுடைய முறைசார்ந்த அல்லது முறைசாராத் தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடிய மன்றங்கள் அநேகமாக இல்லை" என அவர் மேலும் குறிப்பிடுகின்றார். ஓர் புதிய சர்வதேச பொருளாதார ஒழுங்கிற்காக ஏங்கி நிற்கும் நிலையின் ஊக்கம் நெடுங்காலத்திற்கு நிலைத்திருக்கவில்லை. புதிய சர்வதேச பொருளாதார ஒழுங்கு தொடர்பாக, அணிசாரா இயக்க மாநாடுகளில் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் பிரகடனங்களைத் தவிர, இந்த நாடுகளுக்கு இடையேயான அக முரண்பாடுகள், தெளிவான செயற்பாட்டுத் திட்டங்களின்மை, குறிப்பிட்ட சில எண்ணக்கருக்கள் தொடர்பில் காணப்படும் பொருள் தெளிவின்மை என்பன காரணமாக, இந்த அணிசாரா இயக்கத்தின் தனிக்கருத்துப் போக்குடைய நிறுவனர்களால் எதிர்பார்க்கப்பட்டவாறு, அதனால் மேம்பாடு அடைய முடியவில்லை. இறுதி முடிவாகக் கூறின், அது வோர் அரசியல் முழக்க வாசகமாக மாத்திரமே காணப்பட்டது.

### பனிப் போருக்குப் பிந்திய நிகழ்முறைகளும் புதிய உலக ஒழுங்கும்

பனிப் போருக்குப் பின்னர் தோற்றம் பெற்ற, மாற்றத்திற்குட்பட்ட இந்த வரலாற்றுச் சூழ்நிலையில் புதிய உலக ஒழுங்கு பற்றிய எண்ணக்கருவானது புத்தம்புதிய உந்துவிசையைப் பெற்றது. பனிப் போரானது முறைசார்ந்த வகையில் முடிவுக்கு வரும் முன்னரேயே, புதிய உலக ஒழுங்கு பற்றிய தனது தொலை நோக்கை ஜனாதிபதி மிக்கைல் கொர்பச்சேவ் தெளிவாக எடுத்துரைத்திருந்தார். இது தொடர்பான பிரதான கொள்கை அறிக்கையை ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் 1988 டிசம்பரில் அவர் முன்வைத்தார். அவருடைய அந்த அறிக்கையில் ஓர் புதிய உலக ஒழுங்கை தோற்றுவிப்பதற்கு அவசியமான, பல விடயங்களை உள்ளடக்கிய நடவடிக்கைகளை அவர் இனம் கண்டிருந்தார். மாற்றத்திற்குள்ளான இச்சர்வதேசச் சூழமைவின் பொருட்டு, ஒத்துழைப்பிற்கான ஓர் புதிய மட்டத்தை அடைவதற்காக, அரசுகளுக்கு இடையிலான உறவுகளில் வேண்டப்படாத கோட்பாட்டு ரீதியான கருத்துக்களை அகற்றுவதன் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்திக் கூறினார். மேலும், பனிப் போர் நிர்ப்பந்தங்களிலிருந்து தற்போது விடுபட்ட நிலையிலுள்ள ஐக்கிய நாடுகளுக்கான மேலும் முக்கியத்துவம் வாய்ந்த ஓர் வகிபாகத்தையும் அவர் விரும்பினார். புதிய உலக ஒழுங்கை ஊக்குவித்து வளர்ப்பதில், சோவியத் யூனியன் தனது படைகளை கிழக்கு ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் இருந்து மீள அழைத்துக் கொள்ளுதல், அத்துடன் ஐரோப்பாவின் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பிற்கான ஆணைக்குழு (CSCE), சர்வதேச நீதிமன்றம் ஆகியன போன்ற பல்வேறு முக்கியமான சர்வதேச அமைப்புகளில் இணைதல் என்பவற்றிற்கான அதனுடைய சம்மதத்தை கொர்பச்சேவ் வெளிப்படுத்தினார். இது தவிர, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் படுகடன் பிரச்சினை போன்ற உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினைகளைக் கையாள்வது தொடர்பில் உலக நாடுகளின் ஒத்துழைப்பின் அவசியத்தையும் அவர் வலியுறுத்திக் கூறினார்.

பனிப் போரின் முடிவால் சர்வதேச அரசியல் சூழலில் ஏற்படுத்தப்பட்ட அத்துடன் ஏனையவற்றிலும் தாக்க விளைவை உண்டாக்கும் மாற்றங்கள், ஓர் புதிய சர்வதேச ஒழுங்கிற்கான நம்பிக்கை உணர்ச்சியை முன்னர் எப்போதும் இல்லாத அளவில் தூண்டின. பனிப் போர் முடிவிற்கு வந்தமையானது, ஓர் தீர்க்கமான வரலாற்று நிகழ்வாக கருதப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுவதுடன், 'வரலாற்று முடிவு' மற்றும் அதன் பின்விளைவாக அமைந்த ஓர் புதிய வரலாற்று சகாப்தத்தின் தொடக்கம் என்பவற்றிற்கான சான்றாதாரமாகவும் கூடக் குறிப்பிடப்படுகின்றது. புதிய நம்பிக்கையும் தொலைநோக்கும் தோற்றம் பெற்ற இப்புதிய சூழமைவிலேயே புதிய உலக ஒழுங்கைப் பற்றிய வரலாற்றுச் சுவடிகள் எழுதப்பட்டன. கிழக்கு - மேற்கு வேற்றுமையின் முடிவிற்கு அடையாளக் குறியாக அமைந்ததும், 1989 நவம்பரில் பேர்ளின் சுவர் அழிக்கப்பட்டு மூன்றே வாரங்களின் பின்னர், பனிப் போருக்குப் பின்னரான உலக ஒழுங்கு பற்றி கலந்துரையாடுவதற்காக, ஜனாதிபதிகளான மிக்கைல் கொர்பச்சேவும், ஜோர்ஜ் புஷ்ஷும் மோல்ட்ராவின் மாசக்ஸ்லோக் (Marsaxlokk) துறைமுகக் கரையில் நங்கூரமிட்டிருந்த எஸ்எஸ் மக்சிம் கோர்க்கி (SS *Maxim Gorkiy)* எனும் சோவியத் யூனியனின் விரைவுப் போர்க் கப்பலில் 1989 டிசம்பர் 2 - 3 ஆம் திகதிகளில் சந்தித்தனர். துரித வேகத்தில் வெளிப்பட்டுக் கொண்டிருந்த பனிப் போருக்குப் பின்னரான உலகத்தின் பொருளைச் சுட்டுவதற்காக, 'புதிய உலக ஒழுங்கு' எனும் சொற்பதத்தை இந்த மோல்ட்ரா மகாநாட்டில் இவ்விரு தலைவர்களும் பரவலாகப் பயன்படுத்தினர். கிழக்கு ஐரோப்பாவில் நிகழ்ந்த அரசியல் சீர்திருத்தங்கள், ஜேர்மனியின் ஒன்றிணைவு என்பன ஐரோப்பாவில் காணப்பட்ட புதிய உலக ஒழுங்கில் மிக முக்கியமான கூறுகளாகக் கருதப்பட்டன. வல்லரசுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பானது புதிய உலகின் அமைதிக்கும் பாதுகாப்பிற்குமான அத்திவாரமாகக் காணப்பட்டது. கலந்துரையாடப்பட்ட ஏனைய பிரச்சினைகள் மத்தியில், புதிய உலக ஒழுங்குடன் தொடர்புடைய விடயங்களுள் வடக்கு - தெற்கு ஒத்துழைப்பும் படுகடன் பிரச்சினையும் உள்ளடங்கியிருந்தன. 1990 செப்டம்பர் 11 ஆம் திகதியன்று காங்கிரஸின் கூட்டு அமர்விற்கான தனது உரையில், "ஓர் புதிய உலக ஒழுங்கு தோன்றக்கூடும்; அதாவது, பயங்கரமான சூழ்நிலையின் அச்சுறுத்தலிலிருந்து விடுபட்டதும், நீதி மற்றும் அமைதிக்கான நீள் தேட்டத்தில் மேலும் அதிகளவான பாதுகாப்பு என்பவற்றை அடையப்பெறும் முயற்சியில் உறுதியானதுமான ஓர் புதிய சகாப்தம் தோன்றக்கூடும். உலகின் கிழக்கு மற்றும் மேற்கு, வடக்கு மற்றும் தெற்கு ஆகிய பாகங்களில் உள்ள நாடுகள் செழிப்படைந்து, ஒருமைப்பாட்டுடன் வாழும் ஓர் சகாப்தம் தோன்றக்கூடும்" [6] எனும் சிந்தனைப் போக்கைக் கொண்ட ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் குறிப்பிட்டார். ஆயினும், பனிப் போரின் முடிவால் தோற்றுவிக்கப்பட்ட புதிய உலகத்தின் தோற்றம் தொடர்பான களிப்புணர்ச்சி குறுங் காலத்திற்கே நீடித்திருந்தது என்பது நிருபிக்கப்பட்டுள்ளது. 1990 ஒகஸ்டில் குவைத் மீது ஈராக் படையெடுத்தது. குவைத் மீதான ஈராக்கின் படையெடுப்பைக் கண்டித்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை பல தீர்மானங்களை நிறைவேற்றியதுடன், 660 ம் இலக்க தீர்மானத்தை நிலைநிறுத்தி நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான அனைத்து வழிவகைகளையும் மேற்கொள்வதற்கு அதிகாரம் அளிக்கும், 678 ஆம் இலக்க தீர்மானத்தை நவம்பர் 29 ஆம் திகதியன்று நிறைவேற்றியது. பாலைவனப் புயல் *(Operation Desert Storm)* எனும் இராணுவ நடவடிக்கையை ஐக்கிய அமெரிக்கா 1991 ஜனவரியில் ஆரம்பித்தது. 1992 டிசம்பர் 24 ஆம் திகதியன்று முடிவிற்கு வந்த சோவியத் ஒன்றியத்தின் பிளவுச் செயல்முறையானது ஐக்கிய அமெரிக்காவை உலகின் ஒரேயொரு வல்லரசாக ஆக்கியது.

பனிப் போர் முடிவிற்கு வந்த முறையானது, அது சம்பந்தமான கருத்தார்ந்த விவாதம் மேலும் பரிணாம வளர்ச்சியடைவதற்கான வரலாற்று - அரசியல் கட்டமைப்பை உருவாக்கியது. இப்பனிப் போரானது வன்முறை நிறைந்த இராணுவ ரீதியிலான பேரழிவின் விளைவாக அன்றி, பனிப் போரின் 'பொதுவுடைமை' (கொமியூனிஸ) போட்டி நாடு தன்னிச்சையாகக் கலைக்கப்பட்டதன் விளைவாகவே முடிவுக்கு வந்தது. ஆகவே, இது தாராண்மைவாத ஜனநாயகத்திற்கான கோட்பாட்டு ரீதியான ஓர் வெற்றியாக விளக்கப்படுகின்றது. மேலெழுந்த வாரியாகப் பார்க்கின்றபோது, இரு வேறுபட்ட முறைமைகளுக்கான யுத்தத்தில் தாராண்மைவாத முதலாளித்துவம் வெற்றி பெற்றுள்ளது என்பது உண்மையே. கென் வூத் (Ken Booth) என்பவர் சுட்டிக்காட்டுகின்றவாறு, முதலாளித்துவம் ஓர் அடிப்படை மட்டத்தில் வெற்றியடைந்துள்ளது. ஏனெனில், அடிப்படைத் தேவைகள் அனைத்தையும் அதனால் நிறைவு செய்ய முடியும் என்பதனாலாகும். ஆனால், பலம் வாய்ந்தவர்களின் தேவைகளையே அதனால் நிறைவு செய்ய முடியும். [7] 'சர்வாதிகாரப் பொதுவுடைமைக்கான' ஒரேயொரு மாற்றீடு தாராண்மைவாத ஜனநாயகமன்று. திபன்கார் பெனேர்ஜி (Dipankar Banerjee) என்பவரின் கூற்றுப்படி, "முதலாது முறைமையின் முடிவானது தவிர்க்க முடியாத வகையில் இரண்டாவதை தோற்றுவிப்பதல்ல. பதிலாக, அது மேலும் மேலும் தெளிவாகத் தெரிய வருகின்றமையால், தற்போது தோற்றம்பெற்று வரும் சர்வாதிகாரம், தேசியவாதம், கூட்டாண்மைவாதம்/ கூட்டு முறைமை (corporatism) சந்தைப் பொதுவுடைமைவாதம் ஆகியவற்றின் ஏராளமான வடிவங்கள் காணப்படுகின்றன. சித்தாந்த அடிப்படையில் நிகழும் ஏராளமான சமய ரீதியான மாற்றீடுகள் கூட காணப்படுவதுடன் அவை மதச் சார்பற்ற வழியைப் பின்பற்றுவதில்லை." [8] புதிய உலக ஒழுங்கை விபரிப்பதற்காக ஐக்கிய அமெரிக்காவின் அரசியல் தலைமைத்துவத்தால் பயன்படுத்தப்படுகின்ற மொழிநடையும் மரபுத் தொடரும் உலக அரசியல் மேலாதிக்கத்திற்கான அமெரிக்காவின் நோக்கங்களை வெளிக்காட்டுகின்றன. ஆயினும், தனது சொந்த வரலாற்றுச் சுவடியை எழுதுவதற்கு, பனிப் போருக்குப் பின்னரான உலக அரசியலில் காணப்படும் யதார்த்தங்கள் ஐக்கிய அமெரிக்காவை அனுமதிப்பதில்லை. அதனுடைய இராணுவ ரீதியான இயலாற்றலைப் பொறுத்தளவில், ஐக்கிய அமெரிக்காவானது, குறைந்தபட்சம் சோவியத் ஒன்றியம் பிளவுபட்ட நிலையில் இருக்கும்வரை, உலகில் மிகவும் பலம்வாய்ந்த நாடாகத் தொடர்ந்து இருக்கும். ஆனால், ஒருபக்கமான செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கான அதனுடைய ஆற்றலை வளர்ந்து வரும் பன்முக அதிகார மையங்கள் மேலும் மேலும் குறைவடையச் செய்துள்ளது. உலகிலுள்ள அதிகார அமைப்பானது ஓர் முப்பரிமாண செஸ் விளையாட்டை ஒத்திருக்கின்றது என ஜோசப் நை (Joseph Nye Jr.) என்பவர் தெரிவிக்கின்றார். அதாவது, "ஐக்கிய அமெரிக்காவானது ஏனைய அரசுகளை விட விஞ்சியிருக்கும் ஓர் நிலையில் காணப்படுகின்ற ஒற்றை அதிகார மையமே உயர் நிலையிலுள்ள இராணுவ ரீதியான ஆட்டப்பலகையாகும். ஆனால், மொத்த உலக உற்பத்தியில் மூன்றில் இரண்டு பங்கிற்குப் பொறுப்பாகவுள்ள ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பா, யப்பான் ஆகியவற்றை உள்ளடக்கிய பன்முக அதிகார மையமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவிலுள்ள பொருளாதார ஆட்டப்பல கையாக அமைந்துள்ளது. அரசாங்கத்தின் கட்டுப்பாடுகளுக்கு அப்பால், எல்லை களைக் கடந்து செல்கின்ற பன்னாட்டு உறவுகளே அடியிலுள்ள ஆட்டப்பலகை யாகும்." [9]

பனிப் போருக்குப் பின்னரான உலகச் சூழமைவில் யுத்தத்தின் இயல்பும் கட்ட மைப்பும் மாற்றமடைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். மனித பாது காப்பு தொடர்பான அறிக்கையில் (Human Security Report 2006) குறிப்பிடப்பட்டுள்ளவாறு, உலகம் பூரா வும் காணப்படும் ஆயுத முரண்பாடுகளின் எண்ணிக்கையானது, 1990களிலிருந்து 40 சதவீதத்திற்கும் அதிகமாக வீழ்ச்சியடைந் துள்ளது. [10] நாடுகளுக்கு இடையிலான பிரகடனப்படுத்தப்பட்ட யுத்தங்களின் முனைப்பும் வன்முறையும், நாடுகளுக்கு உள்ளேயான யுத்தங்களால், குறிப்பாக பல்வேறு அடையாளங்களை அடிப்படை யாகக் கொண்ட முரண்பாடுகளால், மாற் றீடு செய்யப்பட்டுள்ளன. அதேவேளை, தலையீடு பற்றிய புதிய கொள்கைகள் கூட தோற்றம் பெற்றுள்ளன. தலையீடு களை நியாயப்படுத்துவதற்காக பயன் படுத்தப்படுகின்ற இரு தொகுதி நிபந் தனைகளை 1992 செப்டம்பரில் வெளி வந்த, லண்டனைத் தளமாகக் கொண்ட Economist சஞ்சிகை இனங்கண்டுள்ளது. [11] இவ்விரு நிபந்தனைகளும், முதலாவ தான 'நலன்களுக்கான யுத்தங்கள்', இரண்டாவதான 'மனச்சாட்சிக்கான யுத்தங்கள்' ஆகியவற்றை உள்ளடக்கி யுள்ளன. நலன்களுக்கான யுத்தங்களின் சிறப்புக் கவனமானது அபிவிருத்திய டைந்த உலகிற்கு அவசரமாகத் தேவைப் படும் முக்கியமான நலன்களின் கட்டுப் பாடு மீது உள்ளது. பந்தோபஸ்து தொடர் பான துறைகள் மற்றும் வளங்கள் என்ப வற்றில் தமது நலன்களைப் 'பாதுகாப்ப தன்' பொருட்டு துரிதமான நடவடிக்கை எடுப்பதற்கு அபிவிருத்தியடைந்த நாடு கள் தயங்குவதில்லை என்பதை, பனிப் போருக்குப் பின்னரான கால கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கூட்டுப்படைத் தலையீடுகள் எடுத்துக்காட்டுகின்றன. இழிவான வாழ்க்கைச் சூழ்நிலை மற்றும் மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட அல்லது இயற்கை காரணமாக ஏற்பட்ட மனிதாபி மான நெருக்கடிகள் என்பவற்றிற்கு எதிர்வினையாற்றும் வகையில், இன்றி யமையாததாக அமைந்துள்ள நேரடி இராணுவத் தலையீட்டை இரண்டாவது வகை உள்ளடக்குகின்றது. ஆயினும், இவற்றிலுள்ள சிக்கல்கள் மற்றும் போட் டித்தன்மை வாய்ந்த பாதுகாப்புடன் தொடர்புடைய நலன்கள் என்பன காரண மாக, இந்த இரண்டாவது வகைத் தலை யீட்டைப் பொறுத்தவரை இதுவரை பொதுவான ஓர் உடன்பாடு காணப்பட வில்லை.

**உலகமயமாதல் சூழமைவில் புதிய உலக ஒழுங்கு**

புதிய ஒழுங்கு பற்றிய எண்ணக்கருவா னது இரு விதமாக, அதாவது, ஓர் விபரிப்பாகவும் (பண்புருவாகவும்) ஓர் விதியமைப்பாகவும் (நீள்வரன்முறை வழக்காறாகவும்) நோக்கப்படுகின்றது. வூட்ரோ வில்சன், லெனின், கொர்பச் சேவ், புஷ் ஆகியோரைப் பொறுத்த வரை, இது பெரும்பாலும் வளர்ந்து வரும் / விருப்பத்திற்குரிய அரசியல் / உலக ஒழுங்கிற்கு வழிகாட்டுவதற்கான ஓர் விதியமைப்பாக நோக்கப்பட்டது. அண்மைக் காலத்தில், உலக ஒழுங்கு பற்றிய இந்த எண்ணக்கருவானது, உலகமயமாதலின் பல்-பரிமாண செயல் முறையின் விளைவாக வெளிப்படுகின்ற, உலமயமாதல் செயல்முறைக்கு உட்பட்ட உலகு பற்றிய ஓர் விபரிப்பாக, மேலும் சட்ட ரீதியாகச் செல்லுபடியாகும் தன் மையை பெற்றுள்ளது. பல்வேறு திசை களிலும் சிதறிக் காணப்படும் இடச்சூழல் களையும் மக்களையும் இணைப்பதன் மூலம், பொருட்கள், சேவைகள், நிதி, மக்கள், உருப்படிவங்கள், கருத்துகள் என்பவற்றின் முனைப்பான உலகளாவிய பாய்ச்சலானது உலகத்தைச் சுருக்கியுள் ளது. தொழில்நுட்ப முன்னேற்றங்கள் காரணமாக மனித செயற்பாடுகளில் காணப்படும் நேரம் மற்றும் இடம் என்ப வற்றின் முன்னொருபோதும் இல்லாத அளவிலான இச்சுருக்கமானது, எதிரெ திர்ச் செயல்விளைவு மற்றும் உறவுகளின் வலைப்பின்னல் என்பவற்றின் கட்ட மைப்பு ரீதியான வேறுபட்ட ஓர் கட்டத் திற்குள் முழு உலகையுமே முன்நோக்கி தள்ளியுள்ளதுடன், ஒன்றிலொன்று மிக அதிகளவில் சார்ந்திருக்கும் நிலை மற் றும் உலக அரசியலில் காணப்படும் கூட் டுத் தீர்மானம் மேற்கொள்ளல் முறைமை களின் பன்முகத் தன்மைகள் என்பவற்றை யும் தோற்றுவித்துள்ளன. இதன் விளை வாக, ஓர் நாடு ஏனைய பல நாடுகளின் தீர்மானங்களில் சார்ந்திருக்கிறது. கிறிஸ் ரோபர் கோக்கர் (Christopher Coker) என்பவர் குறிப்பிடுகின்றவாறு உலகமய மாதலானது, "முதலாவதாக, 20ம் நூற் றாண்டின் பிற்பகுதியில் தோற்றம் பெற்ற, ஒன்றுடனொன்று இணைக்கப்பட்டுள்ள தன்மை மற்றும் ஒன்றிலொன்று சார்ந் திருக்கும் நிலை என்பவற்றின் வேறுபட்ட பல கூறுகள் ஒன்றிணைந்த ஒழுங்கு முறைகளைக் குறிக்கின்றது. சமூக வாழ்வின் அனைத்துச் செயற்களங் களுக்குமான, அதாவது, பொருளாதார, அரசியல், இராணுவம் தொடர்பான செயற்களங்களுக்கான, சிக்கல்களை அது கொண்டுள்ளது; அது, இவை மூன் றிலுமே உலகளாவிய கட்டமைப்புகள், செயல்முறைகள், நிகழ்வுகள் என்பவற் றுடன் உள்ளூர் வாழ்க்கையை பிணைக் கின்றது." [12] இன்று உலகம் மாற்றமடைந் துள்ள விதத்தை நாளாந்த வாழ்க்கை யில் காணப்படும் இணையம், மின்னஞ் சல், Facebook, Twitter போன்ற சமூக வலையமைப்புச் சேவைகளின் வகிபாகம் பிரதிபலிக்கின்றது. மொறொக்கோ, எகிப்து ஆகியவற்றில் நிலவிய அடக்கு முறை ஆட்சிக்கு எதிரான கிளர்ச்சிக்கு பொதுமக்களை அரசியல் ரீதியாக ஒருங்குதிரட்டுவதில் Facebook, Twitter என்பன ஆற்றிய வகிபாகமானது, தகவல் புரட்சியின் அரசியல் ரீதியான நுட்பக் குறியீடுகளை முன்னிலைப்படுத்திக் காட்டுகின்றது. இச்சூழமைவிலேயே புதிய உலக ஒழுங்கு பற்றிய எண்ணக் கருவானது, வளர்ந்துவரும் உலகு பற்றிய ஓர் விபரிப்பாக புதுப்பிக்கப்பட்ட தகைமைகளை பெற்றது.

**பழைய உலக ஒழுங்கிலிருந்து புதிய உலக ஒழுங்கு வரை**

வரலாற்று ரீதியிலான நோக்கில், வளர்ந்துவரும் உலகு பற்றிய ஓர் விபரிப் பாக இப்புதிய உலக ஒழுங்கை புரிந்து கொள்வதன் பொருட்டு, அதை 'பழைய உலக ஒழுங்கிலிருந்து' வேறுபடுத்த வேண்டியுள்ளது. நவீன 'தேசிய அரசு' முறைமையுடன் இணைந்த வகையில், 15 மற்றும் 16 ம் நூற்றாண்டுகளில் மேற்கு ஐரோப்பாவில் காணப்பட்ட முதலாளித்துவ பொருளாதார ஒழுங்கின் வளர்ச்சி காரணமாகவே நவீன உலக முறைமை தோற்றம் பெற்றது. இந்த மேலைத்தேசக் குடியேற்ற வாதமானது, தேசிய அரசுகளாக இணங்காணப்பட் டுள்ள தனிப் பண்புடைய புதிய அரசியல் அமைப்புக்களின் ஓர் அரசியல் செயற் திட்டத்தைப் போல, வர்த்தக அடிப்படை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலான ஓர் பொருளாதார செயற்திட்டமாகவும், அதன் பின்னர் கைத்தொழில் மற்றும் நிதி அடிப்படையிலான முதலாளித்துவமாகவும் தோற்றம் பெற்றது. உற்பத்திச் சக்திகளுக்கு புத்துயிரளிக்காமலும், உற்பத்தி உறவுகளை விரிவுபடுத்தாமலும் நவீன முதலாளித்துவத்தால் ஒருபோதும் நிலைத்திருக்க முடியாதென றோசா லக்சம்பேக் (Rosa Luxemburg) வாதிடுகின்றார். இயல்பிலேயே ஓர் விரிவாக்க முறைமையாக காணப்படும் முதலாளித்துவமானது, மூலதனத் திரட்சியின் இயக்க ஆற்றலால் நெறிப்படுத்தப்படுகின்றது. ஆகவே, இந்த முதலாளித்துவமானது, முதலாளித்துவப் பொருளாதார செயற்களத்திற்கு வெளியேயுள்ள மூலப்பொருட்கள் மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் என்பவற்றுடன் சேர்த்து, சந்தைகளையும் நாடி நிலையாக விரிவடைகின்றது. லக்சம்பேக்கின் கூற்றுப்படி, 'முதலாளித்துவம் அல்லாத அமைப்புகளின் உதவி இன்றி மூலதனம் பெருக்கமடைய முடியாது. அல்லது மறுபுறத்தில், அதற்கு, அம்முறைமை மாத்திரம் ஒன்றுக்கொன்று அருகாக தொடர்ந்து இருப்பதை ஏற்றுக்கொள்ளும் திறன் இருக்க முடியாது. முதலாளித்துவம் அல்லாத அமைப்புகளின் தொடர்ச்சியான பிளவு மூலதன திரட்சியைச் சாத்தியப்படச் செய்கின்றது."[13] ஆகவே, ஏகாதிபத்தியமானது முதலாளித்துவத்தின் இயற்கூறான ஓர் அம்சமாக இருப்பதுடன், அது நவீன முதலாளித்துவத்தின் நெருக்கடிக்கான ஊக்கியாகவும் அமைந்துள்ளது. உலகளாவிய ரீதியில், நெடுந்தொலைவில் மேற்கொள்ளப்படும் வியாபாரத்துடன் கூடிய ஓர் உலக முறைமையாக நவீன முதலாளித்துவம் தோற்றம் பெற்றுள்ளதென இம்மானுவேல் வொலஸ்ரீன் (Immanuel Wallerstein) வாதிடுகின்றார். முதலாளித்துவ உலக முறைமையின் புற எல்லையிலிருந்து கிடைக்கும் மிகையானது, தொடர்ச்சியாக மத்திய பகுதியை நோக்கி இடம் மாற்றப்படுகின்ற ஒரு சமத்துவமற்ற பரிமாற்றமாக அது காணப்படுகின்றது. அது, உலகளவிலான மூலதனத் திரட்சிச் செயல்முறைக்கு வழிவகுப்பதுடன், புற எல்லையிலிருந்து கிடைக்கும் மிகையை நியாயமற்ற வகையில் சொந்தமாக்கிக் கொள்ளல் மற்றும் நிலைமாற்றம் செய்தல் என்பவற்றில் தவிர்க்க முடியாதவாறு சம்பந்தப்பட்டுள்ளது. ஒன்றிலொன்று சார்ந்திருக்கும் இரு பகுதிகள், அதாவது ஓர் ஒற்றை உலக முறைமையினுள் காணப்படும் மையப் பகுதியும் புற எல்லையும், காணப்படுவதற்கு தொழில் பிரிவு வழிவகுக்கின்றது.[14] உலக முறைமையின் தோற்றமானது எந்த இடர்பாடுகள் மற்றும் வன்முறைகள் அற்ற ஓர் செயல்முறையன்று. காலம் கடந்துசெல்கையில், மையப் பகுதிக்கும் புற எல்லைக்கும் இடையேயான சமநிலையற்ற அதிகார உறவுகளுக்கிடையில் போட்டி நிலை தோன்றும் என வொலஸ்ரின் மேலும் விமர்சனம் செய்கின்றார். முதலாளித்துவ மையப் பகுதியின் சவால்கள், அகரீதியான அரசியல் மற்றும் பொருளாதார முரண்பாடுகள் என்பன 'உலக முறைமையில்' முழுமையான நெருக்கடியைத் தோற்றுவிக்கும். இறுதியாக, நவீன முதலாளித்துவம், தேசிய அரசு முறைமை, நவீன விஞ்ஞானம் மற்றும் அறிவொளிக் கலாசாரம் என்பவற்றின் கூறுகள் உள்ளடங்கியிருக்கும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டுள்ள ஓர் வரலாற்றுத் தொகுப்பாக இந்த 'நவீன' உலக ஒழுங்கு பரிணாம வளர்ச்சியடைந்துள்ளது என்பதை அழுத்திக் கூறுவது முக்கியமானதாகும். குடியேற்ற நாடுகளுக்கு அரசியல் சுதந்திரம் வழங்குதல், 'புற எல்லையில்' காணப்படும் பொருளாதார வளர்ச்சி மையங்களின் தோற்றம், கைத்தொழில்மயமாக்கப்பட்ட 'மையப் பகுதியில்' காணப்படும் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகள், இனத்துவ ரீதியான அரசியல் அணி திரள்வு, உபதேசிய இனங்களின் அரசியல் ரீதியான உறுதியான நம்பிக்கை என்பவற்றிலிருந்து, உலகமயமாதல் செயல்முறை வரையிலான பெரும் எண்ணிக்கையிலான வரலாற்றுச் செயல்முறைகள் 'நவீன' (பழைய) உலக ஒழுங்கின் கட்டமைப்பையும் இயக்க ஆற்றல்களையும் மாற்றுவதற்கு பங்களிப்புச் செய்துள்ளதுடன், அதன் ஆக்கக் கூறுகளுக்கும் சவால் விடுத்துள்ளன. புதிய உலகு பற்றிய இவ்வெண்ணக்கருவானது, உலகமயமாதல் சூழமைவில் காணப்படும் 'பின்நவீன' உலக ஒழுங்கின் / ஒழுங்கின்மையின் ஓர் விதியமைப்பாக வன்றி, விபரிப்பாக மேலும் சட்ட ரீதியாகச் செல்லுபடியாகும் தன்மையைப் பெற்றுள்ளது.

**அடிக்குறிப்பு**

[1] Alfred Cobban, The Nation State and National Self-determination, New York: Thomas Y. Crowell Company, 1970. p.63.

[2] V.I. Lenin, Collected Works, Vo. 31, Moscow: Foreign Language Publishing House. 1961. p.371.

[3] *Witnesses to Permanent Revolution: The Documentary Record*, edited and translated by Richard B. Day and Daniel Gaido. (Brill, 2009).

[4] H.G. Wells, The New World Order (reprinted by Hesperides Press in 2006).

[5] Amon J. Nsekela, "The World Bank and the New International Economic Order," development dialogue, 1977:1, p.78

[6] http://en.wikisource.org/wiki/Toward_a_New_World_Order

[7] Ken Booth, New Thinking About Strategy and International Security, London: Harper Collings Academic, 1991, P.4.

[8] D. Banerjee," A New World Order: Trends for the Future" in Security in the New World Order – An Indo-French Dialogue, Maj. Gen. Dipankar Banerjee, ed., New Delhi: Institute of Defence Studies and Analyses, 1994, p.5.

[9] Joseph S. Nye Jr., " The American national interests and global goods" International Affairs, & 8:2, April 2002

[10] Human Security Centre, Human Security Report 2005- Part II: The Human Security Audit, p63.

[11] The Economist (London), 5 September, 1992

[12] Christopher Coker, Globalization and Insecurity in the Twenty-first Century: NATO and the Management of Risk, Adelphi Paper 345, Oxford: Oxford University Press, 2002. pp. 18-19

[13] Rosa Luxemburg, The Accumulation of Capital, London: Routledge and Kegan Paul, 1951, p.416.

[14] Immanuel Wallerstein, *The Modern World-System: Capitalist Agriculture and the Origins of the European World-Economy in the Sixteenth Century*. New York: Academic Press. 1974. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருகிவரும் வாய்ப்புக்கள்: புதிய உலக ஒழுங்கில் தென்னாசியாவிற்கான இடம்

ஸ்ரீபணி டி மெல்

*கொள்கை ஆய்வு நிறுவனம்*
*இலங்கை*

கடந்த சில தசாப்தங்களாக, ஆசியாவில் ஏற்பட்டுவரும் துரித பொருளாதார வளர்ச்சியும் அபிவிருத்தியும், உலக பொருளாதார சக்தியின் இட அமைப்பியலை அழுத்தமாகப் பதிய வைத்துள்ளன. 1970களில் எழுச்சி பெற்ற ஆசியப் புலிகளின் வளர்ச்சி மற்றும் அதையடுத்து சீனாவில் நிகழ்ந்த பொருளாதார அதிகரிப்பு என்பவற்றைத் தொடர்ந்து, உலக பொருளாதாரத்தில் காணப்படுகின்ற, எதிர்பார்க்கப்படும் குறைந்தளவில் அல்லாத இந்தியாவின் வளர்ந்துவரும் விஞ்சிநிலை காரணமாக, தென்னாசியப் பிராந்தியமானது உறுதியானதும் மாறாத நிலைப்பாட்டை உடையதுமான பொருளாதார வளர்ச்சியை வெளிக்காட்டியுள்ளது. 1970களிலிருந்து அதன் (தென்னாசியாவின்) முக்கியமான நாடுகளால் மேற்கொள்ளப்பட்டு வந்த பரந்த அடிப்படையிலான பொருளாதாரச் சீர்திருத்தங்கள், இப்பிராந்தியத்திற்கு உள்ளேயான மற்றும் பிராந்தியங்களுக்கு இடையேயான இவ்விரு மட்டங்களிலும் ஒருமைப்பாட்டை மேம்படுத்தியுள்ளதுடன், பிராந்திய வியாபாரத்தையும் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் அளவையும் விரிவுபடுத்தியுள்ளன. 2003 - 2008 வரையான காலப்பகுதியில் தென்னாசியாவின் சராசரிப் பொருளாதார வளர்ச்சி அண்ணளவாக 8 சதவீதமாகக் காணப்பட்டதுடன், அண்மைக்கால நிதி நெருக்கடியின், உலகளாவிய பொருளாதாரம் மீதான, நெடுங்காலம் நீடித்த பாதகமான விளைவுகளின் மத்தியிலும், இப்பிராந்தியமானது எதிர்காலத்தில் மிகவும் உறுதியாக வளர்ச்சியடையுமென ஊகிக்கப்படுகின்றது.[1] தீர்வு காணப்பட வேண்டிய ஏராளமான சவால்கள் நிச்சயமாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றன; வறுமையின் தொடர்ச்சியான நீடிப்பு, பிராந்திய ஒருமைப்பாட்டை எளிதாக்கத் துணைபுரியும் செயற்பாடுகளுடன் இணைந்துள்ள நெருக்கடிகள், இப்பொருளாதாரங்களில் காணப்படும் இயற்கூறான கட்டமைப்பு ரீதியான மற்றும் நிறுவன ரீதியான பலவீனங்கள் என்பவை இது தொடர்பில் முக்கியமானவையாக உள்ளன. இருந்தபோதிலும், தென்னாசியாவின் எதிர்காலப் பொருளாதார வெற்றி வாய்ப்புகள் தொடர்பில் தளரா நம்பிக்கை கொண்டிருப்பதற்கான நியாயம் உண்டு. இது, இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதால் மாத்திரமன்றி, எழுச்சி பெற்றுவரும் வளர்ச்சி வாய்ப்புகளான நிகழ்வெல்லையும் காரணமாக அமைந்துள்ளது என்பதனாலுமாகும். இவ்வாய்ப்புகளில் மிக முக்கியமானவையாக, தென்னாசியாவின் தற்போதைய குடித்தொகை நிலைமாற்றத்தால் தோற்றுவிக்கப்பட்டுள்ள "குடித்தொகை அனுகூலம்", துரிதமாக வளர்ச்சியடைந்து வரும் ஓர் மத்திய தர வர்க்கம், அதிகரித்தளவிலான உலகளாவிய ஒருமைப்பாடு, சேவைத் துறையின் வளர்ச்சி, இந்தியாவின் தொடர்ச்சியானதும் அதிகரித்துச் செல்வதுமான பொருளாதார வெற்றிகளின் வழிவந்த பிராந்திய ரீதியான அனுகூலங்கள் என்பவை அமைந்துள்ளன.

## குடித்தொகை அனுகூலம்

உயர்வாகக் காணப்பட்ட இறப்பு மற்றும் கருவள வீதங்கள் காலப்போக்கில் குறைவடைந்ததன் விளைவாக, தென்னாசியாவானது தற்போது ஓர் குடித்தொகை நிலைமாற்றத்திற்கு உள்ளாகி வருகின்றது. இது, பொருளாதார வளர்ச்சி தொடர்பான முக்கியமான விளைவுகளைக் கொண்டுள்ளது; இறப்பு வீதம் வீழ்ச்சியடைந்த பின்னரும், கருவள வீதம் வீழ்ச்சியடைவதற்கு முன்னரும் பிறந்த சந்ததி தொழில்புரியும் வயதை நெருங்குவதால், இப்பிராந்தியம் ஊழியப் படையில் காணப்படும் குறிப்பிடத்தக்க ஓர் விரிவுக்கு உள்ளாகின்றது. உண்மையில், 2020ம் ஆண்டிற்கு முன்னர் தென்னாசியாவானது, உலகிலேயே மிகவும் இளம் வயதுடைய சனத்தொகையைக் கொண்டிருக்குமென மதிப்பிடப்படுகின்றது.[2] குடித்தொகை நிலைமாற்றம் மூலம் கிடைக்கின்ற, அதிகரித்தளவிலான பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்பானது "குடித்தொகை அனுகூலம்" எனும் சொற்களால் விபரிக்கப்படுகின்றது. இக்குடித்தொகை அனுகூலமானது, ஓர் நாட்டினுடைய தொழில்புரியும் வயதுக்கும் தொழில்புரியாத வயதுக்கும் இடையிலான விகிதத்தில் காணப்படும் ஓர் அதிகரிப்பின் மூலம் தோற்றம்பெறும் ஓர் மெய்மைநிகழ்வாகும்.

தென்னாசியாவின் தொழில்புரியும் சனத்தொகையானது, அடுத்துவரும் 20 வருடங்களில் ஆண்டு ஒன்றிற்கு சராசரியாக 18 மில்லியன் மக்கள் தொகை எனும் அளவில் வளர்ச்சியடையுமெனக் கணக்கிடப்படுகின்றது.[3] இந்த மிகை ஊழியம், உற்பத்தித் திறனுள்ள வகையில் பயன்படுத்தப்படுமாயின், இப்பிராந்தியத்தால் விளைபயனாக பெறக்கூடியதாகவுள்ள சாத்தியப்படத்தக்க அனுகூலங்கள் மிகுதியானதாக இருக்கும். இலங்கையைத் தவிர, (இங்கு ஒப்பீட்டளவில் உரிய காலத்திற்கு முன்னரே ஏற்பட்ட துரிதமான இறப்பு மற்றும் கருவள வீதங்களின் வீழ்ச்சியானது குடித்தொகை அனுகூலத்தைத் தோற்றுவித்துள்ளது) ஏனைய தொன்னாசிய நாடுகளைப் பொறுத்தவரை, தொழில்புரியும் வயது - தொழில்புரியா வயது விகிதமானது, இன்னும் அதிகரித்துக் கொண்டிருப்பதுடன், அடுத்து வரும் நான்கு தசாப்த காலத்தின் பல்வேறு கட்டங்களில் உச்ச உயர் நிலையை அடையும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறாக, இக்குடித்தொகை மாற்றத்தின் சாத்தியப்படத்தக்க உயரளவான அனுகூலங்களை அகப்படுத்துவதற்கு, இப்பொருளாதாரங்களுக்கு சாதகமான ஓர் கொள்கைச் சூழல் தேவைப்படுகின்றது.

இது தொடர்பில் புளூம் என்பவரும் ஏனையோரும் நான்கு முக்கியமான காரணிகளைக் கவனத்தில் கொள்கின்றனர்.[4] அவற்றில் ஒன்று, இக்குடித்தொகை அனுகூலத்திற்கு துணைபுரிவதற்கு நற்பயன் அளிக்கக்கூடிய ஓர் அடித்தளத்தை வழங்குவதில் அரசாங்க நிறுவனங்களுக்கு உள்ள ஆற்றலாகும். குடித்தொகை நிலைமாற்றத்தால் தோற்றுவிக்கப்படுகின்ற மேலதிக ஊழியம், உற்பத்தித் திறன்வாய்ந்த வகையில் பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு, தொழிற் சட்டங்கள் மீதும் குறிப்பான கவனஞ் செலுத்தப்பட வேண்டும். இவ்வாய்வானது, இது தொடர்பில் இரு மாற்று வழிகளை யோசனையாக முன்வைக்கின்றது; ஒன்று, "இழிநிலைத் தொழில் அணுகுமுறை (low-road approach)"; இது, மிகை ஊழியத்தை இணைத்துக் கொள்வதற்காக குறைந்த கூலித் தொழில்களை விரிவுபடுத்துவதை உள்ளடக்கியுள்ளது. மற்றையது, "உயர் நிலைத் தொழில் அணுகுமுறை (high-road approach)"; இது, சேவைகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தொழில் மற்றும் விவசாயத் துறைகளில் காணப்படும் தொழில்களின் அதிகளவு உயர்திறன் வாய்ந்த வகைவடிவங்களை விருத்தி செய்வதற்கு முயல்கின்றது.[5] அதிகரித்தளவிலான குடித்தொகை அனுகூலத்திற்கு பங்களிப்புச் செய்யும் ஏனைய இரு காரணிகளாக, பேரினப் பொருளாதார முகாமைத்துவமும் வியாபாரக் கொள்கையும் அமைந்துள்ளன. தொழில்வாய்ப்புகளை அதிகரிப்பதற்காக ஏற்றுமதி கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதைப்போல, எதிர்பார்க்கப்படும் சேமிப்புகள் மற்றும் முதலீட்டு அதிகரிப்புகள் என்பவற்றிற்கு பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தலும் சாதகமான ஓர் உள்நாட்டுச் சூழலை பேணுதலும் முக்கியமானவையாகும். முக்கியத்துவமிக்க மற்றுமோர் விடயம் கல்விக் கொள்கையாகும்; தென்னாசியாவில் தளிர்விடும் சேவைத் துறைக்கு உயர் திறன் வாய்ந்த தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர். குடித்தொகை நிலைமாற்றமானது, கல்வியிலான செயற்திறன் மிக்க முதலீட்டின் ஊடாக, இவ்வகையான தொழிலாளர்களின் படிநிலைகள் விரிவடைவதற்கான உன்னதமான ஓர் வாய்ப்பை வழங்குகின்றது. தொழிலாளர்களின் பெரும் பிரிவினருக்கான வேலைகளின் ஓர் "உயர்நிலைத் தொழில் அணுகுமுறை" வகைவடிவத்தை அடைவதற்கான சாத்தியக்கூறை அத்தகைய முதலீடுகள் பெருகச் செய்கின்றன.

**தென்னாசிய மத்தியதர வர்க்கத்தின் தோற்றம்**

தென்னாசியாவில் ஏற்படுகின்ற குடித்தொகை மாற்றம் கூட வருமானப் போக்குகளை ஒட்டியதாகவே நிகழ்ந்துள்ளது. முன்னர் நாளொன்றிற்கு 2 டொலர்களுக்கும் குறைவான வருமானத்தில் வாழ்க்கை நடாத்திய மக்களில் பெரும் எண்ணிக்கையானோர் மத்தியதர வர்க்க படிநிலைகளுக்குள் செல்வதை, வறுமையில் ஏற்பட்ட கணிசமானளவு வீழ்ச்சி விரைவுபடுத்தியது. தென்னாசியாவிலுள்ள வறியவர்களில் கணிசமான பங்கினருக்கு தாயகமாக உள்ள இந்தியாவில் இவ்விளைவைத் தெளிவாகக் காணக்கூடியதாக உள்ளதுடன், இங்கே காணப்படும் உறுதியான பொருளாதார வளர்ச்சியானது கடந்த பல வருடங்களாக வருமானத்தில் முன்னேற்றங்களைத் தோற்றுவித்துள்ளது. அடுத்த தசாப்தத்தினுள், பாரியளவிலான மத்திய தரவர்க்க விரிவாக்கத்திற்கு உள்ளாகுமென எதிர்பார்க்கப்படும் மற்றுமோர் தென்னாசிய நாடு இலங்கையாகும். தென்னாசியாவின் மத்தியதர வர்க்கமானது கடந்த சதாப்த காலத்தில் வருடத்திற்கு சராசரியாக 12 சதவீதம் எனும் அளவில் வளர்ச்சியடைந்துள்ளது. இது, ஏனையவற்றுடன் ஒப்பிட்டு நோக்கப்படாத நிலையில், மாறாத எண்ணிக்கையில், *2000 ம் ஆண்டில் 24 மில்லியனாகவும் 2010 ம் ஆண்டில் 72 மில்லியனாகவும்* காணப்படுகின்றது.[6] *2025 ம் ஆண்டிற்குள் 1 பில்லியன்* மக்களை அல்லது அதன் சனத்தொகையில் 55 சதவீதத்தை மத்தியதர வர்க்கமாகக் கொண்ட பிராந்தியமாக தென்னாசியா பெருமைப்பட முடியும் என மதிப்பிடப்பட்டுள்ளது.[7] இது, அதன் தற்போதைய வீத அளவான 4.5 சதவீதத்திலிருந்து, குறிப்பிடத்தக்க ஓர் அதிகரிப்பாக காணப்படுவதுடன், மேலும் குறிப்பிடத்தக்க வகையில், உலக மொத்தச் சனத்தொகையில் அண்ணளவாக கால் பங்காக அமைந்துள்ளது. அதே வருடத்தினுள், இந்தியாவின் மத்தியதர வர்க்கமானது ஏனையவற்றுடன் ஒப்பிட்டு நோக்கப்படாத நிலையில், மாறாத எண்ணிக்கையில், உலகின் மிகப் பெரும் தொகையாக இருக்கும்.[8]

பாரிய மற்றும் அதிகரித்துச் செல்லும் மத்தியதர வர்க்கத்தால், பொருளாதார வளர்ச்சிச் செயல்முறைக்கு ஆற்றக்கூடிய பங்களிப்பு வழிமுறைகள் அடுக்கு நிகழ்வாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.[9] முதலாவதாக, பொருளாதாரம் ஒன்றில் காணப்படும் முயற்சியாண்மையின் அளவுக்கும் அதன் மத்தியதர வர்க்கத்தின் பருமனுக்கும் இடையில் காணப்படும் உறுதியான தொடர்புகள். இரண்டாவதாக, மத்தியதர வர்க்கத்தின் அங்கத்தவர்கள், வறியவர்களைவிட, குறைந்த பட்சம், ஏனையவற்றுடன் ஒப்பிட்டு நோக்கப்படாத நிலையில், மாறாத எண்ணிக்கையில், சேமிப்புகளையும் மனித மூலதன முதலீட்டையும் ஒன்றுதிரட்டுவதற்கு கணிசமானளவில் பங்களிப்புச் செய்கின்றனர் - நடுத்தர வருமானம் பெறும் குழுக்கள் தமது தொழில் ஓய்வுக்காலம், வீடமைப்பு, குழந்தைகளின் கல்வி என்பவற்றிற்காக சற்றே பெரும்படியான தொகையை வழக்கமுறையாகச் சேமிக்கின்றன. இதனால், அவை மூலதன முதலீட்டிற்காக மிகையளவான வளங்களை வழங்குகின்றன. முக்கியத்துவம் மிக்க மற்றுமோர் விடயம் எதுவெனில், மத்தியதர வர்க்கத்தின் பருமனுக்கும் உள்நாட்டு நுகர்வுக்கும் இடையில் காணப்படும் தொடர்பாகும். மத்தியதர வர்க்கத்தில் காணப்படும் வளர்ச்சியானது, நீண்டகாலத்திற்குப் பயன்படுத்தக்கூடிய நுகர்வுப் பொருட்கள் மற்றும் ஏனைய தயாரிப்புப் பொருட்கள் என்பவற்றிற்கான கேள்வியின் அளவை அதிகப்படுத்துகின்றது. உள்நாட்டு நுகர்வோர் அடித்தளத்தின் பருமனில் காணப்படும் இவ்வதிகரிப்பானது, மூலதன முதலீட்டை ஊக்குவிப்பதுடன், சர்வதேச வியாபார விருத்தியையும் பேணுகின்றது.

மத்தியதர வர்க்கமானது தீர்வுக்கட்டமான எண்ணிக்கையை எட்டுகின்ற அதே சமயத்திலேயே, உயரளவிலான நுகர்வு, நிறுவனத்தின் அதிகளவான இலாபம், உயர் சேமிப்பும் முதலீடும், அதிகரித்த பொருளாதார வளர்ச்சி என்பவற்றில், ஒன்று அதிகரிப்பதனால் மற்றொன்று அதிகரிப்பதற்குக் காரணமாக அமையும், மீண்டும் மீண்டும் நிகழும் ஓர் சுற்று வட்டத்தையும், அதன் விளைவாக பாரிய மத்தியதர வர்க்கம் ஒன்றையும் தோற்றுவிப்பதற்கான சாத்தியக்கூறு கூட காணப்படுகின்றது. இவற்றிற்கு பங்களிப்புச்செய்கின்ற அம்சமாக, நிறுவனங்கள் மத்தியிலான உற்பத்திப்பொருள் வேறுபடுத்தலையும் அதன் விளைவாகப் பெறப்படும் உயரளவிலான இலாபத்தையும் ஊக்குவிக்கின்ற, உயர்தரம் வாய்ந்த பொருட்களுக்கு மேலும் அதிகளவு பணத்தைச் செலவிடுவதற்கான மத்தியதர வர்க்கத்தின் விருப்பார்வம் அமைந்துள்ளது.

**அதிகரித்தளவிலான உலக ஒருமைப்பாடு**

அண்மைய தசாப்தங்களின், வியாபாரப் பங்கேற்பு மற்றும் நிதி ரீதியான திறந்த தன்மை என்பவற்றில் தென்னாசியா குறிப்பிடத்தக்களவு விரைந்த முன்னேற்றம் கண்டுள்ளது. இறக்குமதியும் ஏற்றுமதியும் உறுதியாக வளர்ச்சியடைந்துள்ளன. *1997 - 2001* காலகட்டத்தில் *5.3* சதவீதமாக இருந்த, இப்பிராந்தியத்தின் சராசரி ஏற்றுமதி வளர்ச்சி வீதமானது *2002 - 2006* காலகட்டத்தில் *14.3* சதவீதமாக உயர்வடைந்துள்ளது.[10] அவ்வாறே, *1997 - 2001* காலகட்டத்தில் *2.2* சதவீதமாக காணப்பட்ட இறக்குமதி வளர்ச்சியானது, *2002 - 2008* காலகட்டத்தில் *24.6* சதவீதமாக அதிகரித்தது.[11] குறிப்பாக, *2002 - 2008* காலப் பகுதியில் *19.3* சதவீதமாகக் காணப்பட்ட, இப்பிராந்தியத்தின் ஏற்றுமதி வளர்ச்சி வீதமானது உலக சராசரி வீதமான, *11* சதவீதத்தை விட கணிசமான அளவு உயர்வானதாகும்.[12]

இப்பிராந்தியத்தினுடைய வியாபாரப் பங்காளர் அடித்தளத்தின் விரிவாக்கமானது, மற்றுமோர் முக்கியமான வளர்ச்சியாக இருந்து வந்துள்ளது. தென்னாசிய நாடுகளில் பெரும்பாலானவை மரபுரீதியாக விவசாய மற்றும் தயாரிப்புப் பொருட்களையே மேலைத்தேசச் சந்தைகளுக்கு விநியோகித்து வந்தன. ஆயினும், மிக அண்மைக்காலத்தில் இந்த நாடுகளுக்கும் ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கும், குறிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக ஆபிரிக்கா, மத்திய கிழக்கு மற்றும் ஆசியாவின் ஏனைய பகுதிகளிலுள்ள நாடுகளுக்கும், இடையில் பலமான வியாபாரத் தொடர்புகள் விருத்தியடைந்துள்ளன. 1985 ல், தென்னாசியாவின் ஏற்றுமதிகளில் 38.1 சதவீதத்தை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பெற்றுக்கொண்டதுடன், தென்னாசியாவிற்குத் தேவைப்படும் இறக்குமதிகளில் 43.8 சதவீதத்தை இதே அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளே வழங்கின. 2006 ம் ஆண்டுக்குள் இப்பங்குகள் முறையே 42.7 மற்றும் 49.1 சதவீதங்களாக அதிகரித்தன.[13] குறிப்பாக, சீனாவுடனான வியாபாரம் 2000ம் ஆண்டிலிருந்து மிகவும் உறுதியாக விரிவடைந்து வருகிறது. உதாரணமாக, 2010 ம் ஆண்டில் சீனாவிற்கும் சார்க் நாடுகளுக்கும் இடையேயான மொத்த வியாபாரத்தின் பெறுமதி அண்ணளவாக 80.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது.[14] இப்பரஸ்பர அனுகூலங்களின் அளவு வீதத்தை மேலும் விரிவுபடுத்துவதை குறியாகக் கொண்டு, 2015 ம் ஆண்டிற்குள் 100 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இருதரப்பு வியாபார இலக்கிற்கு இந்தியாவும் சீனாவும் உடன்பட்டுள்ளன.[15] 2003 - 2008 காலப்பகுதியில், பிராந்தியத்திற்கு உள்ளேயான தனது வியாபாரத் தொகையை இரட்டிப்பாக்கிய ஓர் அனுபவத்திற்கு தென்னாசியா கூட உள்ளாகியமை இதற்கு உற்சாகம் ஊட்டுவதாக அமைந்துள்ளது.[16]

இதுதவிர, கடந்த தசாப்த காலத்தில் நிகழ்ந்த தென்னாசியாவிற்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டுப் பாய்ச்சல்கள் ஒரே சீராக அதிகரித்து வந்துள்ளன. 2000களின் ஆரம்பத்தில் 6.7 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்த வெளிநாட்டு நேரடி முதலீடானது, 2006/07 ல் 22 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்தது.[17] இப்பிராந்தியத்தில் அதிகளவு வெளிநாட்டு முதலீடுகளைப் பெறும் நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகியவற்றைப் பொறுத்தவரை, அவற்றிற்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல் 2003/04 மற்றும் 2006/07 இடையிலான காலகட்டத்தில் இரு மடங்குகளுக்கும் மேலாக அதிகரித்தது.[18] தென்னாசியாவிற்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சலின் பங்கானது, ஆசியாவிலுள்ள அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான உட்பாய்ச்சலின் அண்ணளவாக 5 சதவீதமாகவும், உலகெங்கும் உள்ள அனைத்து அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான உட்பாய்சல்களின் அண்ணளவாக 3 சதவீதமாகவும் உள்ள போதும், கடந்த காலத்தில் அது அதிகரித்து வந்துள்ளமையானது, அதன் ஒத்த நிலையிலுள்ள ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து, இப்பிராந்தியத்தின் முதலீட்டுக்கான அதிகரித்துச்செல்லும் ஈர்ப்புத் தன்மையை சுட்டிக்காட்டுகின்றது.[19]

உலகத்துடனான தென்னாசியாவின் நிதி தொடர்பான ஒருமைப்பாட்டுச் செயல்முறையில் காணப்படும் ஆர்வத்துக்குரிய ஓர் நிகழ்வு எதுவெனில், வெளிநோக்கிய வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கான ஓர் மூலமாகக் காணப்படும் அதனுடைய மெதுவான ஆனால் தெளிவான வெளிப்பாடாகும். 2006/07 ல், தென்னாசியாவிலிருந்து வெளியேறிய வெளிநாட்டு நேரடி முதலீட்டு வெளிப்பாய்ச்சல் அண்ணளவாக 10 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது. இதில், 9.67 பில்லியன் இந்தியாவிலிருந்தும், 0.11 பில்லியன் பாகிஸ்தானிலிருந்தும், 0.03 பில்லியன் இலங்கையிலிருந்தும் வெளியேறியதாக நம்பப்படுகின்றது.[20] உண்மையில், இந்தியாவானது பிராந்தியத்திற்கு உள்ளேயான வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கான குறிப்பிடத்தக்க ஓர் மூலமாகக் கருதப்படுகின்றது. நெருக்கமான ஒத்துழைப்பின் ஊடாக, தென்னாசிய நாடுகள் ஒன்றுக்கொன்று உதவக்கூடிய மற்றுமோர் வழிவகையாகவும் இது அமைந்துள்ளது.

## சேவைத் துறை அபிவிருத்தி

தென்னாசியாவின் பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புகளில் சேவைத் துறை அபிவிருத்தியின் முக்கியத்துவம் பற்றி நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது, பிராந்திய மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மிகப் பெரும் பங்காக சேவைகள் உள்ளன. இது, 2008 ம் ஆண்டில் அண்ணளவாக 55 சதவீதமாக இருந்தது.[21] உண்மையில், மாற்றுத் துறைகள் ஊடாகக் கிடைக்கும் பொருளாதார வளர்ச்சியுடன் ஒப்பிட்டு நோக்குகையில், சேவைத் துறையின் அபிவிருத்தி ஊடாகக் கிடைக்கும் பொருளாதார வளர்ச்சிக்கான மிக அதிகளவான சாத்தியப்பாட்டை தென்னாசிய நாடுகள் வெளிக்காட்டுகின்றன. இதற்கான காரணம்; முதலாவதாக, சேவைகள் வழிமுறை ஊடாக உலகமயமாதலுக்கு அதிகளவான வாய்ப்புகள் காணப்படுவதுடன், உலக சந்தையில் சேவைகளுக்கு கணிசமானளவு கேள்வியும் உண்டு. தற்போது, உலக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேவைகள் 70 சதவீதத்திற்கும் மேற்பட்டவையாக உள்ளன. தயாரிப்புத் துறையின் பங்களிப்பைவிட இது இரு மடங்கு அதிகமானதாகும்.[22] இரண்டாவதாக, சேவைகளின் உற்பத்தி, நாடுகள் மத்தியில் காணப்படும் மிகப் பெருமளவான செலவு வேறுமையுடன் சம்பந்தப்பட்டுள்ளது. இது, தென்னாசியாவுக்கு சாதகமான ஒன்றாகும்.

இதுதவிர, பொருளாதாரக் காரணிகளின் சங்கமமானது, சேவைகள் உற்பத்திக்கு சாதகமான ஓர் சூழ்நிலையை தென்னாசியாவில் தோற்றுவித்துள்ளது. அத்தகைய காரணிகளில் மிக முக்கியமானதாக, ஒப்பீட்டளவில் உயர் திறன் வாய்ந்த (இது, இந்தியாவில் காணப்படும் உறுதியான உயர் கல்வி மரபின் விளைவாகத் தோற்றம்பெற்றதாகும்) மற்றும் சரளமாக ஆங்கிலத்தைப் பேசுகின்ற (இது, இப்பிராந்தியத்திற்கு உரித்தான கடந்த கால குடியேற்ற ஆட்சியின் ஓர் தனிப்பண்பாகும்) ஓர் ஊழியப் படை அமைந்துள்ளது. தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள துரித முன்னேற்றங்களின் அனுபவத்தையும் அவை பற்றிய அறிவையும் ஈட்டியுள்ள, உலகின் பல பாகங்களிலும் பெருந்தொகையாகப் பரவிக் காணப்படும் புலம்பெயர்ந்தோர் மற்றுமோர் குறிப்பிடத்தக்க அனுகூலமாக அமைந்துள்ளனர்; புலம்பெயரந்த இவர்கள் இந்தியாவின் தகவல் தொழில் நுட்பத்தை வளர்ச்சியுறச் செய்வதிலும் தகவல் சேவைகள் துறைகளிலும் பெறுமதிமிக்க ஓர் வகிபாகத்தை ஆற்றியுள்ளனர்.

தென்னாசியப் பொருளாதாரங்கள் மத்தியில் காணப்படும் சேவைகள் உற்பத்தியின் வளர்ச்சியானது, உலகளாவிய சேவைகள் வியாபாரத்தில் இந்த நாடுகளின் அதிகரித்தளவிலான பங்குபற்றுதலுக்கும் அதேயளவில் வழிவகுத்துள்ளது. 1991 - 2006 காலகட்டத்தில் 16.1 சதவீதம் எனும் அளவில் வளர்ச்சியடைந்திருந்த, தென்னாசியாவின் சேவைகளிலான வியாபாரமானது, ஓர் குறிகாட்டி எனும் வகையில், அதனுடைய (தென்னாசியாவின்) பண்ட வியாபார வளர்ச்சி வீதமாகிய 12.7 சதவீதத்தை விஞ்சியுள்ளது.[23] சேவைகள் ஏற்மதிகளின் ஒருங்கமைவு முறையானது இப்பிராந்தியத்தினுள்ளேயே மிகத் தெளிவாக வேறுபட்டிருக்கின்றது; இந்தியாவிலும் பங்களாதேஷிலும் கணினி, தொடர்பாடல் மற்றும் ஏனைய சேவைகள் என்பன வர்த்தக சேவைகள் ஏற்றுமதியை மேம்பட்டிருக்கின்றன. நேபாளம், பாகிஸ்தான், இலங்கை ஆகியன போக்குவரத்து மற்றும் பயணச் சேவைகளன் என்பவற்றின் உயர் மட்டங்களை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. அதேவேளை, மாலைதீவின் சேவைகள் ஏற்றுமதியானது, பயணச் சேவைகளால் மேம்பட்டு நிற்கின்றது.[24]

சேவைத் துறை அபிவிருத்தியைப் பொறுத்த வரையில், இப்பிராந்தியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கனவே கணிசமான அளவு முன்னேற்றத்தை அடைந்துள்ளபோதும், மேலதிக முன்னேற்றத்திற்கான அதிகளவு வாய்ப்பு நிலை தொடர்ந்தும் காணப்படுகின்றது. குறிப்பாக, இத்துறையை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு பிராந்திய ஒருமைப்பாட்டையும் நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பையும் அடைவதில் மேலும் ஒன்றிணைந்த முயற்சி தேவைப்படுகின்றது. அத்தகைய ஒத்துழைப்பு இன்றி, இப்பிராந்தியத்தினுள் நிகழும் சேவைகள் துறையிலான அபிவிருத்தியின் மூலம் கிடைக்கும் சாத்தியப்படத்தக்க பொருளாதார நன்மைகளின் பெரும் பகுதியை, இந்த நாடுகளால் விளைபயனாகப் பெற முடியாதிருக்கும் என இச்சேவைகள் துறையால் விளைவிக்கப்பட்ட திரட்சியின் அனுகூலங்கள் மறைமுகமாகச் சுட்டிக் காட்டுகின்றன.

### இந்தியாவின் வெற்றியும் அதன் விளைவாகத் தோற்றம்பெற்ற பிராந்தியச் சூழலும்

இந்தியா, உலகப் பொருளாதார செயற்களத்தில் ஓர் முக்கியமான செயற்பாட்டாளராக வெளிப்பட்டுள்ளமையானது, தென்னாசியாவின் பிராந்திய ரீதியான பொருளாதார வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான மிக முக்கியமான வாய்ப்புகளில் ஒன்றாக அமைந்துள்ளது. அத்தகைய சாத்தியப்பாட்டின் இயல்பு பல வடிவங்களைக் கொண்டதாகும். (முதலாவதாக, (அத்துடன், எதிர்வாதத்திற்குரிய வகையில் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் உள்ளது) இந்தியாவின் விரைவளர்ச்சி காணும் சேவைத் துறையை நாம் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. 1980 களின் பிற்பகுதியில் தளிர்விட்ட மென்பொருள் தொழில் காரணமாக, தகவல் தொழில்நுட்ப முன்னேற்றத்தால் சாத்தியப்படத்தக்க, வணிகச் செயல்முறை ஒப்பந்த ஏற்பாடு (Business process outsourcing - BPO) உட்பட, மருந்தாக்கல், உயிரியல் தொழில்நுட்பம், மருத்துவச் சேவைகள் என்பவற்றை உள்ளடக்குவதன் பொருட்டு, இந்தியாவின் சேவைத் துறையானது காலப்போக்கில் விரிவடைந்தது. 2002/03 இற்கும் 2005/06 இற்கும் இடைப்பட்ட காலத்தில், இந்தியாவின் சேவைகள் ஏற்றுமதியானது, சேவைத் துறையிலான வளர்ச்சி வேகத்தின் ஓர் குறிகாட்டியாக, மூன்று மடங்காக அதிகரித்தது. அதாவது, 20 பில்லியன் அமெரிக்க டொலரிலிருந்து 60 பில்லியன் அமெரிக்க டொலராக அது அதிகரித்தது.[25] மேலும், 2008ல் உலகளாவிய அனைத்து மென்பொருள் வணிகச் செயல்முறைக்கான வெளியாருடனான ஒப்பந்த ஏற்பாட்டில் இந்தியா 60 சதவீதத்திற்கு பொறுப்பாக இருந்தது.[26]

இப்பிராந்தியத்தைப் பொறுத்த வரையில், மிக முக்கியமாக, இந்தியாவின் தகவல் தொழில்நுட்ப மற்றும் ஏனைய சேவைத் துறை நிறுவனங்கள் உற்பத்திப் பெறுமான சங்கிலியை தொடர்ந்தும் மேல் நோக்கி நகர்த்துவதால், அந்நிறுவனங்கள் கூட வழக்கமுறையான செயற்பாடுகளை அதிகளவுக்கு பிராந்திய ரீதியில் வணிகச் செயல்முறை ஒப்பந்த ஏற்பாட்டின் மூலம் பெற ஆரம்பித்துள்ளன. ஆகவே, குறைந்த கூலிகளுடன் கூடிய, போதுமானளவு திறன் வாய்ந்த ஊழியப் படையைக் கொண்டுள்ள தென்னாசிய நாடுகள், இந்தியாவின் சேவைத் துறையில் காணப்படும் தொடர்ச்சியான வளர்ச்சியிலிருந்து கணிசமானளவு அனுகூலங்களைப் பெறுகின்றன. இதனால், பிராந்தியத்தின் சேவைத் துறையிலான வளர்ச்சியானது இனிமேலும் இந்தியாவின் எல்லைக்குள் மாத்திரம் அடங்கியிருக்காது. மிக நுட்பமாகக் கூறுவதானால், அது ஏனைய தென்னாசிய நாடுகளுக்கு, குறிப்பாக பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும், விரிவடைந்துள்ளது. இதைத் தொடர்ந்து, தென்னாசியாவால் உலக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வணிகச் செயல்முறை ஒப்பந்த ஏற்பாட்டு மத்திய நிலையமாக உருவாக முடியும் எனும் கருத்து கவனத்தை ஈர்த்துள்ளது. ஆயினும், அத்தகையதோர் குறிக்கோளுக்கு செயல்வடிவம் கொடுப்பதன் பொருட்டு, உயிர்த்துடிப்பும் ஆற்றலும் நிறைந்த ஓர் சேவைத் துறையை நலிவுறாது நீடித்திருக்கச் செய்வதற்கு அவசியமான பிராந்திய ரீதியான அகக்கட்டுமான வசதிகளை மேம்படுத்துவதுடன், தென்னாசியாவினுள் காணப்படும் பிராந்திய ஒருமைப்பாட்டின் அளவை ஆழமாக்குவதற்கும் கணிசமானளவு முயற்சிகள் தேவைப்படுகின்றன. சாதகமான ஓர் வணிகச் சூழலைப் பேணுவதற்காக கல்வியை மேம்படுத்துவதற்கும், புதிய நிறுவனங்களை அமைப்பதற்கான செலவுகளைக் குறைப்பதற்குமான அருமுயற்சிகளை மேற்கொள்வது கூட விரும்பத்தக்கனவாகும்.

மேலும், இந்திய சேவைத் துறை நிறுவனங்கள், அறிவாற்றல் உருவாக்கத்துடன் சம்பந்தப்பட்டுள்ள பொருளாதார செயற்பாடுகளை நோக்கி மேலும் மேலும் நகர்கின்றன. எடுத்துக்காட்டாக, இந்தியாவில் குறிப்பிட்ட சில மருந்தாக்கக் கம்பனிகள், வெறுமனே ஏற்கனவே உள்ள மருந்துகளின் செலவு குறைந்த இனப் பொதுவியல்புடைய மாற்று வடிவங்களை உற்பத்தி செய்வதைவிட, புதிய மருந்துகளை விருத்தி செய்ய ஆரம்பித்துள்ளன. இப்பாங்கில் இந்தியாவால் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான ஓர் மத்திய நிலையமாக இறுதியில் தன்னை உருவாக்கக்கூடியதாக இருக்குமாயின், அறிவு மற்றும் தொழில்நுட்ப மாற்றம் என்பவற்றைப் பொறுத்த வரையில், இப்பிராந்தியத்திற்கான சாத்தியப்படத்தக்க பின்விளைவாக தோற்றக்கூடிய சூழலின் நன்மைகள் கணிசமானளவில் விரிவடையும். இருந்தபோதிலும், இவ்வனுகூலங்களுக்குச் செயல் வடிவம் கொடுத்தலானது, நாடுகள் தமக்குள்ளேயும் இந்தியாவுடனும் பயனுள்ள வகையில் ஒன்றிணைப்பது தொடர்பில் அவற்றிற்கு உள்ள ஆற்றலில் மிக முக்கியமாகத் தங்கியுள்ளது.

இப்பிராந்தியத்திற்கு நன்மையளிக்கத்தக்க இந்தியாவினுடைய இரண்டாவது "வெற்றி" எதுவெனில், வெளிநாட்டு நேரடி முதலீட்டு வெளிப்பாய்ச்சலுக்கான ஓர் மூலமாக அது தோற்றம் பெற்றுள்ளமையாகும். முன்னர் குறிப்பிடப்பட்டவாறு, அண்மைய வருடங்களில் தென்னாசியாவிற்கான மூலதன உட்பாய்ச்சல்கள் அதிகரித்த அளவில் இருந்து வந்துள்ளன. ஆயினும், இந்தியப் பொருளாதாரத்தில் காணப்படும் வளர்ச்சியானது, அதேயளவுக்கு, வெளிநாடுகளில் இந்திய முதலீட்டு பற்றிய நம்பிக்கைய ஊக்குவித்துள்ளது. கடந்த 5 தொடக்கம் 10 வருட காலத்தில், இந்தியாவின் வெளிநாட்டு நேரடி முதலீட்டு வெளிப்பாய்ச்சல்கள் கவனிக்கத்தக்க வகையில் அதிகரித்துள்ளன; எடுத்துக்காட்டாக, 2005/06 ல் 5 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்த வெளிநாட்டு நேரடி முதலீட்டு வெளிப்பாய்ச்சலானது, 2007/08 ல் 12.8 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்தது.[27] குறிப்பாக, இந்தியாவின் வெளிநாட்டு நேரடி முதலீட்டில் பெரும் பகுதி அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளை நோக்கி நெறிப்படுத்தப்பட்டதுடன், அதில் கணிசமான வீத அளவு பிராந்தியத்திற்கு உள்ளேயே சென்றடைந்துள்ளது. உதாரணமாக, இலங்கைக்கான தற்போதைய வெளிநாட்டு நேரடி முதலீட்டின் மூன்றாவது பெரிய மூலமாக இந்தியாக காணப்படுகின்றது. இருந்தபோதிலும், சேவைத் துறை வளர்ச்சி எடுத்துக் காட்டைப் போன்று, இந்தியாவின் அதிகரித்த அளவிலான வெளிநாட்டு நேரடி முதலீட்டு பாய்ச்சலானது பிராந்தியங்களுக்கு இடையே செல்வதைவிட, பிராந்தியத்திற்கு உள்ளேயே சென்றடைவதை உறுதிப்படுத்துவதற்கு ஆழமான பிராந்திய ஒட்டுறவு விரும்பத்தக்கதாகும்.

### முடிவுரை

வறுமை, உலக பொருளாதாரத்தின் நிலையுறுதியற்ற தன்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டில் காணப்படும்

தொடர்ச்சி .......... 26ம் பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதாரம்: கடந்தகால மற்றும் தற்காலம் பற்றிய ஓர் விமர்சன ரீதியான பகுப்பாய்வு

**கலாநிதி எம். கணேசமூர்த்தி**

*முதுநிலை விரிவுரையாளர்*
*பொருளியல் துறை*
*கொழும்பு பல்கலைக்கழகம்*

## அறிமுகம்

இலங்கை, அது சுதந்திரமடைந்த வருடமாகிய 1948 இலிருந்து அபிவிருத்திக்கான மிகச் சிறந்த ஒரு வாய்ப்பைக் கொண்டிருந்தது. ஏனைய முன்னாள் பிரித்தானிய குடியேற்ற நாடுகளைப் போலன்றி, இலங்கையானது அவசியமான உயர்தரம் வாய்ந்த பொருளாதார மற்றும் சமூக உட்கட்டுமான வசதிகள், மேம்பட்ட அரசியல், சட்ட மற்றும் ஆட்சி முறைமைகள், புதிய சூழ்நிலைகளுக்குத் தக்கவாறு தம்மை மாற்றிக்கொள்ளும் மனப்பான்மையுடன் கூடிய சனத்தொகை மற்றும் அபிவிருத்திச் செலவீனங்களுக்கு நிதியளிப்புச் செய்வதற்கான நிதி வளங்களின் ஓர் தொகுதி என்பவற்றைக் கொண்டிருந்தது (World Bank - 1953, Snodgrass - 1998, Lakshman and Tisdel - 2000).

ஆயினும், பொருளாதார ரீதியாக நீடித்திருக்கத்தக்க இயல்புக்கான ஆதரவு எதுவுமே இல்லாத ஓர் நிலையில், பிரதானமாக தொலை நோக்கற்ற அல்லது தவறான அரசியல் மற்றும் பொருளாதார முன்னுரிமைகள், நிறைவேற்றி முடிப்பதற்குக் கடினமான சேமநல மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் அதன்பின்னர் அண்ணளவாக மூன்று தசாப்தங்களாக நீடித்த உள்நாட்டு யுத்தம் என்பன காரணமாக, ஆரம்ப காலத்தில் காணப்பட்ட அபிவிருத்திக்கான அனுகூலத்தை இழந்து, மிகக் கடுமையான பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்குள் இந்நாடு வீழ்ந்தது (Alaili-ma - 1997). உயரளவான சமூக சேமநலம் மற்றும் அடிப்படை மனித தேவைகள் நிறைவுசெய்யப்பட்டமை என்பவற்றுடன் கூடிய, மெதுவான பொருளாதார வளர்ச்சியின் பண்புகளைக் கொண்ட ஓர் பொருளாதாரமாகக் காணப்பட்ட இந்நாடானது, அபிவிருத்திப் பொருளியலாளர்களைப் பொறுத்தவரை, ஏனைய நாடுகளை மதிப்பிடுவதற்கான ஓர் எடுத்துக்காட்ட மாதிரியாக விளங்கியது (Osmani - 1994).

## பொருளாதாரச் செயற்பாடுகள்

பொருளாதார வெற்றிக்கான ஒரு தருணத்திற்காக மிகு அளவான கடும் முயற்சியை மேற்கொள்வதற்கு, இலங்கையின் கடந்த ஆறு தசாப்த காலப் பொருளாதார வளர்ச்சி போதுமானதாக இருக்கவில்லை. ஆனால், ஒரே வகையான ஜனரஞ்சக மற்றும் தேசியவாதக் கொள்கைகளைப் பின்பற்றி அல்லது வன்முறை நிறைந்த உள்நாட்டு முரண்பாடுகளை அல்லது யுத்தத்தை அவ்வப்போது எதிர்கொண்ட நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து, இப்பொருளாதார வளர்ச்சி மிகவும் குறைவானதாகக் காணப்படவில்லை. 1950 - 1977 இற்கும் இடையில் சராசரியாக 3 - 4 சதவீத பொருளாதார வளர்ச்சியையும், அதன்பின்னர் 5 - 6 சதவீத பொருளாதார வளர்ச்சியையும் இலங்கையால் பேணக்கூடியதாக இருந்தது. எண்ணெய் நெருக்கடி, வரட்சி, கலவரம், உள்நாட்டு யுத்தம் போன்ற உள்வாரி மற்றும் வெளிவாரி ஆகிய இரு வகையான அதிர்ச்சிகளின் விளைவுகளையும் கையாளக்கூடிய குறிப்பிடத்தக்களவான ஆற்றலை இலங்கைப் பொருளாதாரம் வெளிக்காட்டியுள்ளது. மிகக் கடுமையான வரட்சி மற்றும் இளைஞர் கிளர்ச்சி என்பன நிலவிய 1970 களின் ஆரம்பத்தில், சாதகமான பொருளாதார வளர்ச்சி வீதமாகிய அண்ணளவாக 2 - 3 சதவீதத்தை இந்த நாட்டால் பேணக்கூடியதாக இருந்தது. 1983 - 2009 வரையான உள்நாட்டு யுத்த சகாப்தத்தில், 2001 ஆம் ஆண்டைத் தவிர, இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சி 4 சதவீதத்திற்கும் அதிகமானதாக இருந்தது (Ganeshamoorthy - 2002).

அட்டவணை 1 இலங்கையில் காணப்பட்ட அரசியல் முறைமைகள், பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் பொருளாதாரச் செயற்பாடுகள் (1950 - 2010)

| ஆட்சிக் காலம் | அரசியல் முறைமை | பொருளாதாரக் கொள்கை | பொருளாதார வளர்ச்சி % |
|---|---|---|---|
| 1950-1955 | UNP – வலதுசாரி ஜனரஞ்சக முறைமை | தாராள சந்தைப் பொருளாதாரம் | 4.26 |
| 1956-1964 | MEP- இடதுசாரிச் சமதர்ம முறைமை | மூடிய பொருளாதாரம் | 2.50 |
| 1965-1969 | UNP - வலதுசாரி ஜனரஞ்சக முறைமை | பகுதியளவான திறந்த சந்தைப் பொருளாதாரம் | 4.64 |
| 1970-1976 | SLFP – இடதுசாரிச் சமதர்ம முறைமை | மூடிய பொருளாதாரம் | 2.52 |
| 1977-1993 | UNP – வலதுசாரி முதலாளித்துவம் | திறந்த சந்தைப் பொருளாதாரம் | 4.92 |
| 1994-2000 | PA - மனிதப் பண்புகளுடன் கூடிய இடதுசாரி முதலாளித்துவம் | தலையீட்டுடன் கூடிய திறந்த சந்தைப் பொருளாதாரம் | 5.17 |
| 2001-2002 | UNP- வலதுசாரி முதலாளித்துவம் | திறந்த சந்தைப் பொருளாதாரம் | 1.25 |
| 2003-2004 | PA – மனிதப் பண்புகளுடன் கூடிய இடதுசாரி முதலாளித்துவம் | தலையீட்டுடன் கூடிய திறந்த சந்தைப் பொருளாதாரம் | 5.65 |
| 2005-2010 | UPFA – இடதுசாரித் தேசியவாதம் | தேசிய உணர்வுகளுடன் கூடிய திறந்த சந்தைப் பொருளாதாரம் | 6.36 |

* *சராசரி வருடாந்த பொருளாதார வளர்ச்சி*

UNP – *ஐக்கிய தேசியக் கட்சி* MEP – *மக்கள் ஐக்கிய முன்னணி*

SLFP – *ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி* UPFA – *பொதுஜன ஐக்கிய முன்னணி*

*மூலம்: கட்டுரையாசிரியரின் தொகுப்பு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை - 1 இலுள்ள விபரங்களின்படி, இந்த நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிச் செயற்பாடானது, ஆளும் கட்சிகளின் அரசியல் மற்றும் பொருளாதாரக் கொள்கைகளுடன் மிக நெருக்கமாகப் பின்னிப்பிணைந்ததாகக் காணப்பட்டது எனும் முடிவிற்கு ஒருவரால் வர முடியும்.

இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து 1994 வரையான காலப்பகுதியில், இந்த நாட்டை ஒன்றுக்கொன்று மாற்றீடாக ஆட்சி செய்த இரு பிரதான கட்சிகளும், அதாவது ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஒன்றுக்கொன்று முற்றிலும் எதிரான அரசியல் மற்றும் பொருளாதாரக் கொள்கைகளைப் பின்பற்றின. மேலைத்தேச முதலாளித்துவத்திற்குச் சார்பான ஓர் கட்சியாக உள்ள ஐக்கிய தேசியக் கட்சியானது, தாராண்மைவாத சந்தைப் பொருளாதாரக் கோட்பாடுகளுடன் ஒத்துப்போனதுடன், இந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில், நாட்டின் பொருளாதாரக் கொள்கைகள் இவ்விலக்கை நோக்கி நெறிப்படுத்தப்பட்டன. அதே சமயத்தில், மேலைத்தேசத்திற்கு எதிரான ஓர் கட்சியாகக் காணப்படும் தேசியவாதக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சமதர்மக் கோட்பாடுகளில் நம்பிக்கை வைத்திருந்தது. ஆதலால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் பரவலான தேசியவாத உணர்வுகளுடன் கூடிய, ஓர் மூடிய பொருளாதாரம் நடைமுறையில் இருந்தது.

சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் நிகழ்ந்ததைப் போன்று, ஓர் உயர் பொருளாதார வளர்ச்சி வழிமுறையை நோக்கி இந்த நாட்டை எடுத்துச் சென்றிருக்கக் கூடிய, அபிவிருத்தி முயற்சிகளைப் புதிதாகத் தொடங்குவதற்கு, பொருளாதார கொள்கைகளில் காணப்பட்ட தொடர்ச்சியற்ற தன்மை பிரதானமான ஓர் முட்டுக்கட்டையாக இருந்தது. ஆயினும், முன்னைய அரசாங்கத்தால் கைக்கொள்ளப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளை, மிக முக்கியமான மாற் றங்கள் இன்றி, பின்பற்றுவ தற்கு இடதுசாரிக் கொள் கைச் சார்புடைய மக்கள் முன்னணி அரசாங்கம் தீர்மானித்ததைத் தொடர்ந்து, இத்தடங்கல் 1994 இல் அகற்றப்பட்டது. இருந்தும், அதற்குப் பின்னர் இந்த நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சி வாய்ப்புகளைக் குறைப்பதில் மற்றுமோர் முட்டுக்கட்டையான உள்நாட்டு யுத்தம் பிரதான வகிபாகத்தை ஆற்றியது (அருணாதிலகவும் ஏனையோரும் - 2000).

அட்டவணை 2 இலங்கையினுடைய மொ.உ.உற்பத்தியின் கட்டமைப்பு மாற்றம் (1950 - 2010)

| வருடம் | விவசாயம் | கைத்தொழில் | சேவைகள் |
|---|---|---|---|
| 1950 | 46.3 | 19.6 | 36.9 |
| 1960 | 37.8 | 16.8 | 45.4 |
| 1970 | 28.3 | 23.8 | 47.9 |
| 1980 | 27.6 | 29.6 | 42.8 |
| 1990 | 26.3 | 26.0 | 47.7 |
| 2000 | 19.9 | 27.3 | 52.8 |
| 2010 | 12.8 | 29.4 | 57.8 |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கைகள்*

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிச் செயற்பாடானது, பல்வேறுபட்ட அரசியல் முறைமைகளின் கீழ் குறிப்பிடத்தக்களவு மாற்றத்திற்கு உட்பட்டு வந்துள்ளதாகக் காணப்படுகின்றது. இடதுசாரி அரசாங்கங்களின் ஆட்சிக் காலத்துடன் ஒப்பிடுமிடத்து, வலதுசாரி அரசாங்க ஆட்சிக் காலத்தில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி உயர்வானதாகக் காணப்பட்டது. இப்போக்கு 1993 வரை தொடர்ந்ததுடன், அதன்பின்னர், இதுவரைக் காணப்பட்ட, வேறுபட்ட ஓர் அரசியல் கட்சி ஆட்சிக்கு வரும்போது ஏற்படும் மாற்றம் காரணமாக, பொருளாதாரக் கொள்கைகளும் மாற்றத்துக்குள்ளாகும் நடைமுறையிலிருந்து குறிப்பிடத்தக்க ஓர் பிறழ்வு காணப்பட்டது என்பதை அட்டவணை 1 காட்டுகின்றது. 1994 இல் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் முன்னணி அரசாங்கமானது, முன்னைய அரசாங்கத்தின் கொள்கைகளை, அவசியமென கருதப்பட்ட அடிப்படையான சில மாற்றங்களுடன், தொடர்வதற்குத் தீர்மானித்தது. இப்புதுக் கொள்கையானது, "மனிதப் பண்புகளுடன் கூடிய சந்தைப் பொருளாதாரம்" எனும் சொற்றொடரால் விபரிக்கப்பட்டு வந்ததுடன், இது, சரியான திசையில் செல்லும் ஓர் உறுதியான நடவடிக்கை எனவும் கருதப்பட்டது. பேரினப் பொருளாதாரக் கொள்கை தொடர்பில், தற்போதைய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் கூட முன்னைய அரசாங்கங்களிலிருந்து அதிகளவுக்கு விலகிச் செல்லவில்லை. எனினும், அதனுடைய மிக முக்கியமான கவனம் தேசிய உணர்வுடன் கூடிய, கிராமியப் பொருளாதாரத்தின் மீது இருந்து வந்துள்ளது (மக்கள் முன்னணி அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனம் - 1994, மகிந்த சிந்தனை - 2005). பொருளாதாரக் கொள்கைகள் சரியான வழிமுறையில் நெறிப்படுத்தப்படுமாயின், தொடர்ந்து அதிகரித்துச் செல்லுகின்ற யுத்த நோக்கிலான வரவு - செலவுத் திட்டத்திற்கு மத்தியிலும், ஓர் இடதுசாரி அரசாங்கத்தால் பொருளாதார வளர்ச்சியைச் சாத்தியப்படச் செய்ய முடியும் என்பதை, 2005 இலிருந்து அதிகாரத்திலிருக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் குறிப்பிடத்தக்க பொருளாதார வளர்ச்சிச் செயற்பாடு காட்டுகின்றது (இலங்கை மத்திய வங்கி, 1995 - 2010).

கடந்த அறுபது வருட காலத்தில் இலங்கைப் பொருளாதாரம் கணிசமானளவு

அட்டவணை 3 இலங்கையின் சமூகக் குறிகாட்டிகள் (1946 - 2010)

| | 1946 | 1953 | 1963 | 1973 | 1980 | 1990 | 2000 | 2010 |
|---|---|---|---|---|---|---|---|---|
| வளர்ந்தோர் எழுத்தறிவு | 58 | 65 | 72 | 78 | 86 | 88 | 90.7 | 91.3 |
| பாடசாலைச் சேர்வு (வயது 5-14) | 41 | 58 | 65 | 86 | 100 | 100 | 100 | 100 |
| ஆயுட்கால எதிர்பார்ப்பு | 43 | 56 | 63 | 66 | 68 | 72 | 74 | 75 |
| குழந்தை மரணவீதம் (1,000 பிறப்புக்களுக்கு) | 141 | 71 | 56 | 46 | 34 | 18 | 9.8 (2005) | 10 )06) |
| இறப்பு வீதம் (1,000) | 20 | 11 | 9 | 8 | 6 | 6 | 6.1 | 6.2 |
| பிறப்பு வீதம் (1,000) | 37 | 39 | 34 | 28 | 28 | 21 | 18.4 | 17.6 |
| இயற்கையான அதிகரிப்பு(%) | 1.7 | 2.8 | 2.5 | 2.0 | 2.2 | 1.5 | 1.7 | 1.5 |
| சனத்தொகை வளர்ச்சி | 2.3 | 3.3 | 2.5 | 1.6 | 1.8 | 1.1 | 1.3 | 1.0 |

*மூலம்: Snodgrass (1998) தரவுகள் மற்றும் இலங்கை மத்திய வங்கித் (2010) தரவுகள் என்பவற்றைக் கொண்டு கட்டுரையாசிரியரால் தயாரிக்கப்பட்ட தொகுப்பு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டமைப்பு ரீதியான மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளது (அட்டவணை 2). 1950 இல், பொருளாதாரத்தில் விவசாயத் துறை மேம்பட்டு நின்றது (மொத்த உள் நாட்டு உற்பத்தியில் அது 46.3 சதவீதமாக இருந்தது). 2010 இல் அதன் பங்களிப்பு 12.8 சதவீதமாகக் குறைவடைந்தது. அதேவேளை, இக்காலப்பகுதியில் 36.9 சதவீதமாக இருந்த, சேவைகள் துறை யின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான பங்களிப்பு 2010 இல் 57.8 சதவீதமாக அதிகரித்தது. இது, இலங்கையை சேவைகள் துறையால் இயக்கப்படும் ஓர் பொருளாதாரமாக ஆக்கியுள்ளது. 1950 இல் 19.6 சதவீதமாக இருந்த, கைத் தொழில் துறையின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான பங்களிப்பானது, 2010 இல் 29.4 சதவீதமாக உயர்ந்தது. ஆயி னும், பொருளாதாரத்தை அதனுடைய கைத்தொழில்மயமாக்க வளர்ச்சிப் பாதையில் நீடித்திருக்கச் செய்வதற்கு இம்மாற்றம் போதுமானது எனக் கருதப் படவில்லை. அபிவிருத்தி குன்றிய ஒரு பொருளாதாரத்தை, அபிவிருத்தியடைந்த நாடு எனும் தகுதிநிலைக்கு உயர்த்தும் மாதிரி எடுத்துக்காட்டாக அமைந்துள்ள நிலைமாற்றமானது, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி மற்றும் ஏனைய பல மேலைத் தேய நாடுகளில் நிகழ்ந்ததைப் போன்று, வழமையாக விவசாயத்திலிருந்து கைத் தொழிலுக்கான மாற்றத்துடனும், அதன் பின்னர் கைத்தொழிலிருந்து சேவைகள் துறை மேம்பட்டிருக்கும் ஓர் பொருளா தாரத்திற்கான மாற்றத்துடனும் சம்பந்தப் பட்டுள்ளது. ஆயினும், சிங்கப்பூர், ஹொங் கொங், மாலைதீவு போன்ற நாடுகள், கைத்தொழில் துறையைத் தவிர்த்து, விவசாயத்திலிருந்து நேரடியாக சேவைகள் துறையால் இயக்கப்படும் பொருளாதாரங்களாக மாற்றமடைந்துள் ளன. கைத்தொழில்களுடன் ஒப்பிடு மிடத்து, சேவைகள் துறை வளர்ச்சியின் பிரதான அனுகூலம் யாதெனில், மிகக் குறைந்தளவான வளங்களுடன், எளிய தொழில்நுட்பத்தை உபயோகித்து அதை விருத்தி செய்வதற்குக் குறுகிய காலம் போதுமானது என்பதாகும். ஆயினும், சேவைகள் துறையானது, உள்வாரி மற்றும் வெளிவாரி ஆகிய இரு அதிர்ச்சி களின் பாதிப்பிற்கும் அதிகளவில் உள் ளாகக் கூடிய நிலையில் இருப்பதால், இத்துறையால் நெறிப்படுத்தப்படும் பொருளாதார வளர்ச்சியானது, மிக அதி களவில் கட்டுறுதியற்றதாகக் காணப் படுகின்றது. இலங்கையின் சேவைகள் துறைக்கு பிரதானமாக பங்களிப்புச் செய் பவையாக சில்லறை மற்றும் மொத்த வியாபாரம், போக்குவரத்தும் தொடர்பாட லும், வங்கித்துறை, காப்புறுதி, மெய் ஆதனம், அரசாங்கச் சேவைகள் என்பன அமைந்துள்ளன (இலங்கை மத்திய வங்கி - 2010).

**சமூக சேமநல நிலைமைகள்**

சமூக சேமநல குறிகாட்டிகளிலும் அடிப் படை மனிதத் தேவைகளை நிறைவு செய்வதிலும் இலங்கையானது அபி விருத்தியடைந்து வரும் நாடுகள் மத்தி யில், முற்றிலும் நேர்மாறான ஒன்றாக இருந்து வருகின்றதெனக் கருதப்படுகின் றது. இந்த நாட்டில் ஓர் சேமநல அரசை உருவாக்குவதே, புதிய அரசாங்கத்தின் பிரதான குறிக்கோளாகுமென சுதந்திர இலங்கையின் முதலாவது அரசாங்கம் பெருமிதமாக அறிவித்தது. இலங்கையின் சேமநலக் கொள்கையின், நிறைவேற்றி முடிப்பதற்குக் கடினமான மிகு முக்கியத் துவம் வாய்ந்த மூன்று அம்சங்கள், அதா வது இலவச சுகாதார சேவை, இலவசக் கல்வி மற்றும் அனைவருக்குமான இல வச அல்லது மானிய விலையிலான உணவு என்பன, சமூகக் குறிகாட்டிகளில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க சாதனை களுக்கு வழிவகுத்துள்ளன (அட்டவணை 3). இக்குறிகாட்டிகள், அபிவிருத்திய டைந்த உயர் மற்றும் நடுத்தர வருமானம் பெறும் நாடுகளுடன் ஒப்பிடத்தக்கன வாகும். எனினும், நாட்டினுடைய பொரு ளாதார வளர்ச்சிக்குத் தேவையானவை எனக் கருதப்பட்ட வளங்களை அது காலி யாக்கியமையால், போதுமானளவு பொரு ளாதார வளர்ச்சி இல்லாத நிலையில் இத்திட்டங்களின் நீடித்திருக்கும் தன்மை யானது மிகக்கடுமையான ஓர் பிரச்சினை யாகக் காணப்பட்டது (Snodgrass - 1998).

சனத்தொகை அதிகரிப்பும், அனைவருக் கும் சேமநலம் வழங்கப்பட்டமையும் அதன் தொடர்ச்சியான பேணுகையைக் கடினமாக்கியது. இதனால், அடுத்தடுத்து ஒன்றன்பின் ஒன்றாக ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் சேமநல வழங்கலின் அளவை, குறிப்பாக மானிய விலையி லான உணவுப் பொருட்களின் அளவை, குறைப்பதற்கு முயற்சித்தன. சேமநல மானது மிக அதிகளவுக்கு அரசியல்மயப் படுத்தப்பட்ட ஓர் விடயமாக இருந்தமை யால், இந்நடவடிக்கைக்கு ஒருங்கிணைக் கப்பட்ட குழுக்களிடமிருந்து கடும் எதிர்ப் புத் தோன்றியது - சிலவேளைகளில் அது வன்முறையாகவும் மாறியது. ஆகவே, சேமநலச் செலவீனங்களைக் குறைப்பதற் காக எடுக்கப்படும் எந்தவொரு நட வடிக்கையுமே அரசியல் ரீதியாக மிக அதிகளவு பிரதிகூலமானதாக கருதப் பட்டதுடன், 1977 இல் மிக முக்கியமான மாற்றம் ஏற்படும் வரை, அனைத்து அரசாங்கங்களும் இச்சேமநல அரசை முழுமையாகப் பேணி வந்தன. 1978 ஆம் ஆண்டின் வரவு - செலவுத்திட்டத்தில், அனைவருக்கும் உணவு மானியம் வழங்கும் முறை நீக்கப்பட்டு, தேர்ந்தெடுக் கப்பட்ட ஓர் செயல் இலக்கை அடிப்படை யாகக் கொண்ட உணவு முத்திரைத் திட்டத்தால் அது (உணவு மானிய முறை) மாற்றீடு செய்யப்பட்டது. இருந்தும், ஏனைய இரு முக்கிய அம்சங்களான இலவச சுகாதார சேவையும் இலவசக் கல்வியும் தொடர்ந்தும் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால், இவற்றின் மீதான செலவீனங்கள் அடுக்கு நிகழ்வாக கணிசமான அளவு குறைக்கப்பட்டு வந்துள்ளன. கல்வி மற்றும் சுகாதாரம் என்பவற்றில் செலவு செய்தலானது, மென் உட்கட்டுமான வசதிகள் மீதான ஓர் முதலீடாகக் கருதப்படுகின்றது. இந்தியா, சீனா போன்ற விரைவாக வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் கல்வி மற்றும் ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் என்பவற்றின் மீது மிகைப்படியாக

அட்டவணை 4 இலங்கையின் வருமானப் பங்கீடு (1953 - 2009/10)

| | 1953 | 1963 | 1973 | 1978/ 1979 | 1981/ 1982 | 1986/ 1987 | 1996/ 1997 | 2003/ 2004 | 2006/ 2007 | 2009/ 2010 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சனத்தொகையில் 20%ஆகவுள்ள செல்வந்தர்களுக்கான பங்கு | 56.7 | 55.2 | 45.9 | 54.1 | 56.8 | 56.8 | 53.0 | 55.1 | 54.7 | 52.1 |
| சனத்தொகையில் 20%ஆகவுள்ள வறியவர்களுக்கான பங்கு | 5.1 | 3.9 | 5.0 | 3.8 | 3.7 | 3.6 | 4.1 | 3.6 | 4.6 | 4.7 |
| சனத்தொகையில் 60%ஆகவுள்ள மத்தியதரவர்க்கத்தினருக்கான பங்கு | 38.2 | 40.9 | 49.1 | 42.1 | 39.5 | 39.6 | 42.9 | 41.3 | 40.7 | 43.2 |
| கினிக் குணகம் | 0.46 | 0.45 | 0.35 | 0.43 | 0.45 | 0.46 | 0.43 | 0.46 | 0.49 | 0.47 |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கைகள் (பல வருடங்கள்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலீடுகளை மேற்கொள்கின்றன. தற்போது இலங்கையில் கல்வி மற்றும் சுகாதாரத்தின் மீதான அரசாங்கச் செலவீனம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதியில் 2 சதவீதமாக மாத்திரமே உள்ளது. இவற்றின் மீதான செலவுகளைக் குறைப்பதற்கு, சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளில் காணப்படும் தனியார் துறையின் பங்கேற்பானது துணை புரிந்துள்ளது. வெளிநாட்டுத் தனியார் முதலீட்டாளர்களுடன் சேர்த்து உள்நாட்டு தனியார் முதலீட்டாளர்களின் பங்கேற்புக் காரணமாக, இவ்விரு துறைகளும் விரைவாக வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்றன (இலங்கை மத்திய வங்கி - 2010).

இலங்கையில் அடுத்தடுத்து ஒன்றன்பின் ஒன்றாக ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களால் கைக்கொள்ளப்பட்ட சேமநல நடவடிக்கைகளை, மீள்பகிர்வு நியாயத்தை அடைவதற்கான ஓர் உபாயமாக கருதமுடியும். இலங்கை சுதந்திரமடைந்து ஆறு தசாப்தங்கள் கடந்த பின்னரும் கூட இலங்கையின் வருமானப் பகிர்வு கணிசமான அளவில் மாற்றமடையவில்லை. நாட்டினுடைய வருமானத்தில் அரைவாசிக்கும் மேற்பட்ட பங்கை மேல்மட்டத்திலுள்ள 20 சதவீதமான செல்வந்தர்கள் அனுபவிக்கின்றனர். அதேவேளை, அடிமட்டத்திலுள்ள 20 சதவீதமான வறியவர்கள் 4.7 சதவீத வருமானத்தை மாத்திரமே பெறுகின்றனர் (அட்டவணை 4). நாட்டில் நியாயமான ஓர் வருமானப் பகிர்வு காணப்படுகின்றது என்பதை இது காட்டவில்லை. இந்த நாடு அடையும் பொருளாதார வளர்ச்சியின் பெரும் பகுதி சமூகத்தின் செல்வம் மிக்க பிரிவினரைச் சென்றடைகின்றது: ஆகவே, சமூகத்தின் வறிய பிரிவினருக்கு உதவுவதற்கும் வறுமையைக் குறைப்பதற்கும் அரசாங்கத் தலையீடு இன்றியமையாததாகும். வறுமையைக் குறைப்பதில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் முயற்சிகள் பாராட்டத்தக்கனவாக இருந்து வருகின்றன. அண்மைக் காலத்தில், பல்வேறுபட்ட திட்டங்களின் கீழ் அரசாங்கத்தால் தொடக்கி வைக்கப்பட்டுள்ள, வாய்ப்புகளை உருவாக்குதல் போன்ற, இயலளவு மேம்படுத்தல் செயல்திட்டத்தின் மூலம், வறியவர்களில் பெரும்பான்மையானோருடன் சம்பந்தப்பட்டுள்ள கிராமியப் பொருளாதாரத்தின் மீது செலுத்தப்படுகின்ற அதிகரித்தளவிலான கவனம், சாதகமான பலாபலன்களைத் தோற்றுவித்துள்ளது. 2002 இல் 22.7 ஆகக் காணப்பட்ட, வறியோர் எண்ணிக்கைச் சுட்டெண் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட, வறுமை நிகழ்வு வீதமானது, 2010 இல் 7.6 ஆகக் குறைந்துள்ளது.

**அட்டவணை 5 மொ.உ. உற்பத்தியின் சதவீதமாக அரசாங்கத்தின் இறைச் செயற்பாடுகள் (2000 - 2010)**

| வருடம் | அரசாங்க வருவாயும் கொடைகளும் | அரசாங்கச் செலவினம் | (கொடைகளின் பின்னரான) ஒட்டுமொத்த வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறை |
|---|---|---|---|
| 2000 | 17.2 | 26.7 | -9.5 |
| 2001 | 17.0 | 27.5 | -10.4 |
| 2002 | 17.0 | 25.4 | -8.5 |
| 2003 | 15.6 | 22.9 | -7.3 |
| 2004 | 15.3 | 22.8 | -7.5 |
| 2005 | 16.8 | 23.8 | -7.0 |
| 2006 | 17.3 | 24.3 | -7.0 |
| 2007 | 16.6 | 23.5 | -6.9 |
| 2008 | 15.6 | 22.6 | -7.0 |
| 2009 | 15.0 | 24.9 | -9.9 |
| 2010 | 14.9 | 22.0 | -7.9 |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை, 2010*

இது, பெருந்தோட்ட, கிராமிய, நகரத் துறைகளில் ஏற்பட்டுள்ள வறுமைக் குறைப்பில் காணப்படும் கணிசமானளவு முன்னேற்றத்தை சுட்டிக் காட்டுகின்றது. இருந்தும்கூட, பெருந்தோட்டத் துறையின் வறுமை மட்டம் (11.4) தேசிய சராசரியை (7.6) விட உயர்வானதாகக் காணப்படுகின்ற நிலைமையானது, இலங்கையின் வறுமை நிலையை ஓர் "பெருந்தோட்ட மெய்மையாக" ஆக்கியுள்ளது (இலங்கை மத்திய வங்கி - 2010).

**அரசாங்கத் துறையின் வகிபாகம்**

ஊழியர்களின் எண்ணிக்கை, அரசாங்க நிறுவனங்களின் எண்ணிக்கை, அமைச்சுகளின் எண்ணிக்கை மற்றும் அரசாங்கச் செலவின் அளவு என்பன தொடர்பில், இலங்கை பாரியதோர் அரசாங்கத் துறையைப் பேணி வருகின்றது எனபது வெளிப்படையானதாகும். அரசாங்க இயந்திரத்தை இயக்குவதற்குத் தேவைப்படும் வளங்கள், மிக முக்கியமாக வரி அறவிடல் மற்றும் கடன்பெறல் என்பவற்றின் மூலம் பெறப்படுகின்றது. நாட்டினுடைய குறுகிய வரி அடித்தளத்தையும் செயற்திறனற்ற வரி நிர்வாகத்தை யும் கவனத்தில் கொள்கையில், வரி அறவீட்டின் ஊடாக போதுமானளவு வருமானத்தை உருவாக்கும் செயற்பாடானது வரையறைகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. நாட்டினுடைய தேசிய வருமானத்தின் அரைப் பங்கு, சமூகத்தில் மேல் மட்டத்திலுள்ள 20 சதவீதமான செல்வந்தர்களால் அனுபவிக்கப்படுவதால், வருமான வரி ஊடாக வருவாயை உருவாக்குதல் வரையறைக்கு உட்பட்டதாக இருந்து வருகின்றது. கம்பனித்துறை வருமான வரிகளிலிருந்து மேலும் வருவாயைப் பெருக்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள், தனியார் முதலீட்டையும் நடைமுறையிலுள்ள உயரளவிலான வரி வீதங்களையும் ஊக்

**அட்டவணை 6 மொ.உ. உற்பத்தியின் சதவீதமாக இலங்கையின் அரசாங்கப் படுகடன் (1950 - 2010)**

| வருடம் | உள்நாட்டு | வெளிநாட்டு | மொத்தம் |
|---|---|---|---|
| 1950 | 13.7 | 3.2 | 16.9 |
| 1960 | 28.9 | 5.1 | 34.0 |
| 1970 | 46.1 | 17.5 | 63.6 |
| 1980 | 43.7 | 33.5 | 77.2 |
| 1985 | 38.6 | 41.7 | 80.2 |
| 1990 | 41.6 | 55.0 | 96.6 |
| 1995 | 43.3 | 51.9 | 95.2 |
| 2000 | 53.8 | 43.1 | 96.9 |
| 2001 | 58.0 | 45.3 | 103.3 |
| 2002 | 60.0 | 45.6 | 105.6 |
| 2003 | 56.0 | 46.3 | 102.3 |
| 2004 | 54.7 | 47.6 | 102.3 |
| 2005 | 51.6 | 39.0 | 90.6 |
| 2006 | 50.3 | 37.5 | 87.9 |
| 2007 | 47.9 | 37.1 | 85.0 |
| 2008 | 48.5 | 32.8 | 81.4 |
| 2009 | 49.8 | 36.5 | 86.2 |
| 2010 | 45.8 | 36.1 | 81.9 |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கைகள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவிப்பதற்காக, அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களால் முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட பல்வேறுபட்ட வரிச் சலுகைகளால் மட்டுப்படுத்தப்பட்டன. 1977 வரை, இலங்கை அரசாங்கங்களின் வருவாய்க்கான பிரதான மூலமாக சர்வதேச வர்த்தகத்தின்/ வியாபாரத்தின் ஊடாகக் கிடைக்கும் வரிகள் இருந்து வந்தன. அரசாங்கத்தின் வர்த்தகத் தாராளமயமாக்க நடவடிக்கைகளின் விளைவாக, வர்த்தக வரிகளின் முக்கியத்துவம் 1977 இலிருந்து குறைவடைந்ததுடன், வரி வருவாய்க்கான பிரதானமான ஓர் மூலமாக உள்நாட்டு மறைமுக வரிகள் தொடர்ந்தும் இருந்து வந்தன. வரிவிதிப்பு தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவால் அண்மையில் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள், வரிக் கட்டமைப்பை எளிமையாக்கி, வரி நிர்வாகத்தை செயல்திறன் உடையதாக ஆக்கக் கூடியனவாகக் காணப்படும் அதே வேளை, வரி அடித்தளத்தை விரிபடுத்துவதற்கான ஓர் முயற்சியாகவும் அவற்றைக் கருத முடியும். புதிய நடவடிக்கைகள் மற்றும் செயற்திறன் மிக்க அமுலாக்கம் என்பன காரணமாக, தற்போதைய அரசாங்கத்தால் வரி வருவாய் சேகரிப்பை கணிசமானளவு அதிகரிக்கக் கூடியதாக உள்ளது (இலங்கை மத்திய வங்கி - 2010).

இலங்கை அரசாங்கத்தின் செலவீனங்கள், அதனுடைய வருவாயை விட எப்பொழுதுமே மிகைப்பட்டிருந்தன. இது அரசாங்கத்தின் சேமிப்புகளை எதிர்மறையாக்கியது (அட்டவணை 5). பாதுகாப்பு, பொது நிர்வாகம், நிதி ஆகிய அமைச்சுகளுக்கு ஒதுக்கப்பட்ட செலவீனங்கள், முக்கியத்துவமிக்க செலவுக் கூறுகளாக உள்ளன. மத்திய, மாகாண மற்றும் பிரதேசச் செயலக மட்டங்களில் பரவிக் காணப்படும் மிகப் பெரிய அரசாங்கத் துறையானது, வேறு நோக்கங்களுக்காகச் செலவிடத்தக்க, அரசாங்க நிதியத்தின் கணிசமானளவு தொகையை பயன்படுத்துகின்றது; 100க்கும் மேற்பட்ட அமைச்சுகளைக் கொண்டுள்ள மிகப் பெரும் மத்திய அரசாங்கமானது, செலவீனங்களை அநாவசியமாக மிகுதியாக்குகின்றது. அரசாங்கப் பணப்பேழையை கணிசமானளவு காலியாக்குவதற்கு உள்நாட்டு யுத்தம் காரணமாக இருந்துள்ளதுடன், யுத்த காலத்தில் விருத்தி செய்யப்பட்ட சண்டையிடுவ தற்கான ஆளணிகள் மற்றும் கட்ட மைப்புகள் என்பவற்றைத் தொடர்ந்தும் பேணுவதற்கு அரசாங்கம் முன்னுரிமை வழங்குவதன் காரணமாக, யுத்தம் முடிவுற்று இரு வருடங்கள் கழிந்த பின்னரும் கூட, பாதுகாப்புச் செலவீனங்களைக் குறைக்க முடியாதுள்ளது. அச்சுறுத்தல் இருப்பதாக உணரப்படும் ஒரு நிலைமை இந்நாட்டில் இன்னும் இருப்பதாக அரசாங்கம் கருதுவதனால், முன்னுரைணக்கூடிய எதிர்காலத்தில், பாதுகாப்புச் செலவீனங்கள் குறைக்கப் படுவதற்கான சாத்தியக் கூறுகள் மிகக் குறைவாகவே உள்ளன. ஒரு நாட்டினுடைய இறைமைக்கும் உறுதிப்பாட்டிற்கும், உண்மையான அல்லது உண்டெனக் கருதப்படும், அச்சுறுத்தல் காணப்படும் ஓர் சூழ்நிலையில் எந்தவொரு நாட்டிற்குமே பொதுமக்கள் பாதுகாப்பு உச்ச உயரளவிலான முன்னுரிமையுடையதாக அமைந்துள்ளது. இவ்வச்சுறுத்தல்கள் குறைவுறு கின்ற போது, அரசாங்கம் இராணுவச் செலவீனங்களை குறைக்க வேண்டும் என்பதுடன், குடிமக்கள் பயன்பாட்டை நோக்கி அவற்றை நெறிப்படுத்தவும் வேண்டும் (வரவு - செலவுத்திட்ட உரை - 2010, 2011).

அட்டவணை 7 இலங்கையின் செலுத்தப்படாத மொத்த அரசாங்கப் படுகடன் (1950 - 2010)

| வருடம் | அரசாங்கப் படுகடன் (மில்லியன் ரூபா) |
|---|---|
| 1950 | 654 |
| 1955 | 1,121 |
| 1960 | 2,282 |
| 1965 | 4,435 |
| 1970 | 8,689 |
| 1975 | 14,564 |
| 1980 | 51,346 |
| 1985 | 130,284 |
| 1990 | 310,779 |
| 1995 | 635,696 |
| 2000 | 1,218,700 |
| 2005 | 2,222,341 |
| 2006 | 2,582,648 |
| 2007 | 3,041,685 |
| 2008 | 3,588,762 |
| 2009 | 4,161,422 |
| 2010 | 4,590,245 |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கைகள்*

வரவு - செலவுத்திட்டப் பற்றாக்குறை அதிகரித்துச் செல்லல், இந்த நாட்டின் பேரினப் பொருளாதார உறுதிப்பாட்டிற்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்து வருகின்றது. பணவீக்கத்தை ஏற்படுத்தக்கூடிய மூலங்களிலிருந்து பற்றாக்குறைக்கு நிதியளிப்புச் செய்தலானது பணவீக்கத்தைத் தூண்டுவதுடன், உள்நாட்டு மூலங்களிலிருந்து பெறப்படும் அரசாங்கக் கடன்கள், தனியார் துறை முதலீட்டிற்கானது எனக் கருதப்படும் வளங்களை முழுவதுமாகப் பயன்படுத்துவதற்கும் வழிவகுக்கின்றது. அண்மைக் காலங்களில், பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கமானது வேறு வழியின்றி, முதன்மையான கடன்பெறல் கருவிகளாக திறைசேரி உண்டியல்கள், (அரச) பிணைகள் என்பவற்றை பயன்படுத்தி, சந்தையை அடிப்படையாகக் கொண்ட கடன்பெறல் வழிமுறைகளை நாடியுள்ளது. இடர்காலக் கடனுதவி உடன்படிக்கை வடிவில் நிதியுதவியைப் பெற்றுக்கொள்வதற்காக, சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொள்ளப்பட்ட அண்மைக்கால ஏற்பாட்டின்படி, இலங்கையின் வரவு - செலவுத்திட்டப் பற்றாக் குறையை அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 7 சதவீதத்திற்குக் கீழ் குறைக்க வேண்டும் என்ற நிபந்தனையை அது நிறைவு செய்ய வேண்டியுள்ளது. பிரதானமாக யுத்தம் தொடர்பான செலவு காரணமாகவே 7 சதவீதம் எனும் இவ்விலக்கை அரசாங்கம் தவறவிட்டது. அரசாங்கமானது, பொருளாதார அபிவிருத்தியை மேலும் குறிக்கோளாகக் கொண்டு, நாட்டின் செலவு முன்னுரிமையை மீளத் திட்டமிட்டு, தனியார் துறை முதலீட்டிற்குச் சாதகமான ஓர் உறுதியான பேரினப் பொருளாதாரச் சூழலை உருவாக்கும் அதேவேளை, முகாமை செய்யத்தக்க வீத அளவிற்கு அதனு

அட்டவணை 8 இலங்கையில் சேமிப்புக்களும் முதலீடும் (2006 - 2010)

| | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|---|---|
| மொ.உ.உ சதவீதத்தில் தனியார் சேமிப்புக்கள் | 19.3 | 18.7 | 19.8 | 21.6 | 20.8 |
| மொ.உ.உ சதவீதத்தில் அரசாங்கச்சேமிப்புக்கள் | -2.3 | -1.1 | -2.0 | -3.7 | -2.1 |
| மொ.உ.உ சதவீதத்தில் உள்நாட்டுச்சேமிப்புக்கள் | 17.0 | 17.6 | 13.9 | 17.9 | 18.7 |
| மொ.உ.உ சதவீதத்தில் தேசியச் சேமிப்புக்கள் | 22.3 | 23.3 | 17.8 | 23.7 | 24.7 |
| மொ.உ.உ சதவீதத்தில் முதலீடு | 28.0 | 28.0 | 27.6 | 24.4 | 27.8 |
| சேமிப்பு - முதலீட்டு இடைவெளி | 5.7 | 4.7 | 9.8 | 0.7 | 3.1 |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை, 2010*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைய வரவு - செலவுத்திட்டப் பற்றாக் குறையைக் குறைக்கவும் வேண்டும் (சர்வதேச நாணய நிதியம் - 2009).

இலக்காகக் கொள்ளப்பட்ட வரவு - செலவுத்திட்டப் பற்றாக்குறையைக் கடந்து செல்லலானது, இந்த நாட்டினுடைய அரசாங்க நிதியின் பிரதானமான ஓர் அம்சமாக இருந்து வந்துள்ளது. இது, அரசாங்கக் கடன்பெறலில் காணப்படும் அதிகரிப்புகள் மற்றும் உள்நாட்டு, வெளி நாட்டு மூலங்கள் ஊடாக பெறப்படும் அரசாங்கப் படுகடன் பெருக்கம் ஆகிய பிரச்சனைகளுடனான தொடர்பைக் காட்டுகின்றது (அட்டவணை 6).

பெறப்படும் கடன்களை உற்பத்தித் திறன்வாய்ந்த முதலீடுகளில் பயனுடைய வகையில் பயன்படுத்தாதுவிடின், இலங்கையின் அரசாங்கப் படுகடன்கள் பெருக்கமடைந்து, இந்த நாட்டை படுகடன் பொறியொன்றிற்குள் தள்ளு வதற்கான சாத்தியக்கூறு உண்டென்பதை அட்டவணை 7 காட்டுகின்றது. நாட்டி னுடைய பொருளாதார வளர்ச்சி வாய்ப்புகளை விரிவுபடுத்தும் செயற் பாட்டில், கடன்களை பயனுள்ள வகை யில் பயன்படுத்தும்போது, அது ஏற் கனவே பெறப்பட்ட கடன்களின் மீளச் செலுத்தல் இயலளவை மேம்படுத்தும். உள்நாட்டு வளங்களை ஒருங்கு திரட்டுதல் கடினமானதாகக் காணப்படும் ஓர் சூழ்நிலையில், வேறு வழியின்றி வெளிநாட்டு மூலங்களை நாடுதல் தவிர்க்க முடியாததாகும். இந்த நாடு, குறைந்தளவான நடுத்தர வருமானம் பெறும் நாடுகளின் படிநிலைக்கு மாற்ற மடைந்துள்ளமையால், இலங்கைக்கு சலுகை அடிப்படையில் கடன் வழங் கக்கூடிய மூலங்கள் இனிமேலும் கிடை யாது என்பதுடன், கடன்பெறலுக்காக வர்த்தக மூலங்களை நாடுவதற்கு இந்த நாடு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. எனினும், ஏற்கனவே பெறப்பட்ட கடன்களை மீளச் செலுத்துவதற்காக பெருந்தொகையான கடன்களைப் பெறுவதும், அரசாங்கத் தினுடைய மீண்டெழும் செலவீனங் களுக்கு நிதியளிப்புச் செய்வதற்காக கடனைப் பயன்படுத்துவதும், ஐக்கிய அமெரிக்கா போன்ற மட்டுமீறிய ஓர் பொருளாதாரத்தில் கூட நிகழ்ந்ததைப் போன்று, மிக ஆபத்தான படுகடன் பொறியொன்றுக்குள் வீழும் ஒரு போக்கைத் தோற்றுவிக்கும்.

*2010 ஆண்டில் பிறந்தவர்கள் உட்பட, இந்த நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் 222,255.60 ரூபாவை கடனாகச் செலுத்த வேண்டியவர்களாக உள்ளனர். இதில் 98,028.51 ரூபாவை வெளிநாட்டவர் களுக்குச் செலுத்த வேண்டியுள்ளது. இலங்கைப் பொருளா தாரத்தின் பருமனுடன் ஒப்பிடுமிடத்து, இது சிறு தொகையன்று. மேலும், மொத்த உள்நாட்டு உற் பத்தியின் பெறுமதியில் அண்ணளவாக 6 சத வீதம்* அரசாங்கக் கடன் களுக்கான வட்டியாக தற்போது செலுத்தப்படு கின்றது. இவ்வீதத்தை குறைத்தலானது, எதிர் வரும் காலங்களில் இலங்கைக்கு உண்மை யான சவாலாக இருக்கப் போகின்றது. படுகடன் களுக்கு வட்டி செலுத்து வதற்காக, வளங்களின் கணிசமானளவு தொகை வெளிப் பாய்ச்சலாக எதிர் காலத்தில் வெளியேற வுள்ளது (இலங்கை மத்திய வங்கி - 2010).

**அட்டவணை 9 இலங்கையில் வெளிநாட்டு நேரடி முதலீடு (1999 - 2010)**

| வருடம் | வெளிநாட்டு நேரடி முதலீடு (மில்லியன் அமெரிக்க டொலர்) |
|---|---|
| 1999 | 210 |
| 2000 | 175 |
| 2001 | 082 |
| 2002 | 122 |
| 2003 | 229 |
| 2004 | 234 |
| 2005 | 287 |
| 2006 | 604 |
| 2007 | 734 |
| 2008 | 889 |
| 2009 | 601 |
| 2010 | 516 |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கைகள் (பல வருடங்கள்)*

**சேமிப்பு, முதலீடு மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு**

அண்ணளவாக 80 சதவீதமான உயரளவு எல்லை நுகரவு நாட்டத்துடன் கூடிய, ஓர் நுகர்வுப் பொருளாதாரமாக இலங்கை கருதப்பட்டு வந்துள்ளது. இப்பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடு களுடன் ஒப்பிடுமிடத்து, இலங்கையின் தனியார் சேமிப்பு வீதமானது குறைவான தாக இருந்து வருகின்றது. யப்பான், சிங்கப்பூர் போன்ற நாடுகளில், அவற்றின் அபிவிருத்தியின் ஆரம்பகட்டத்தில் காணப்பட்ட சேமிப்புகளுடன் ஒப்பிடு மிடத்து, இது இன்னும் குறைவாகக் காணப்படுகின்றது. உதாரணமாக, அத னுடைய அபிவிருத்தியின் ஆரம்ப கால கட்டத்தில் யப்பான் 30 - 35 வரையான சேமிப்பு வீதத்தை (வீட்டுத்துறை மற்றும் கம்பனித்துறைச் சேமிப்புகள்) பேணி வந்தது (Herbener - 1999, http://mises.org/daily/298).

இந்த நாட்டினுடைய சேமிப்பு மற்றும் முதலீடு என்பவற்றின் போக்குகளைப் பற்றிய அண்மைக்காலத் தரவுகளை அட்டவணை 8 காட்டுகின்றது. அரசாங்கச் சேமிப்புகள் எதிர்மறையாக இருப்பத னால், இந்த நாட்டினுடைய உள்நாட்டுச் சேமிப்பானது, தனியார் சேமிப்பை விட குறைவாகவே உள்ளது. இது, அரசாங் கத் துறையால் தனியார் சேமிப்புகள் முழுவதுமாகப் பயன்படுத்தப்படுவதை சுட்டிக் காட்டுகின்றது. முதலீடானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறு மதியில் அண்ணளவாக 28 சதவீதமாக இருந்த அதேவேளை, நாட்டினுடைய தேசிய சேமிப்பு வீதமானது 2010 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறு மதியில் அண்ணளவாக 25 சதவீதமாக

**அட்டவணை 10 இலங்கையில் இலகுவாக வணிகம் செய்தல் தொடர்பான குறிகாட்டிகள்**

| | சிங்கப்பூர் | இலங்கை | சட் |
|---|---|---|---|
| வணிகம் செய்தல் தொடர்பான தரவரிசைப்படுத்தல் | **1** | **102** | **138** |
| வணிகத்தை ஆரம்பித்தல் | 4 | 34 | 182 |
| கட்டட நிர்மாண அனுமதியைக் கையாளுதல் | 2 | 169 | 101 |
| சொத்துக்களைப் பதிவுசெய்தல் | 15 | 155 | 137 |
| கடன் பெறல் | 6 | 72 | 152 |
| முதலீட்டாளர்களைப் பாதுகாத்தல் | 2 | 74 | 154 |
| வரிகளைச் செலுத்துதல் | 4 | 166 | 179 |
| நாடு கடந்த வர்த்தகச் செயற்பாடுகள் | 1 | 72 | 171 |
| ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துதல் | 13 | 137 | 164 |
| வணிகத்தை முடிவிற்குக் கொண்டுவருதல் | 2 | 43 | 183 |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை, 2010*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. இதன் காரணமாக, 3 சதவீதமான முதலீடு - சேமிப்பு இடைவெளி வெளிநாட்டு முதலீடுகளால் நிரப்பப்பட்டது.

ஆளும் ஐக்கிய சுதந்திர முன்னணி அரசாங்கமானது, இந்த நாட்டினுடைய ஆள்வீத (தலா) வருமானத்தை 2016 இற்குள் இரட்டிப்பாக்கும் இலக்கைக் கொண்டுள்ளது. நிறைவேற்றி முடிப்பதற்குக் கடினமான இவ்விலக்கை அடைவதற்கு, 2016 ம் ஆண்டு வரை 8 சதவீதத்திற்கும் மேற்பட்ட வருடாந்த பொருளாதார வளர்ச்சி வீதத்தை இந்த நாடு பேண வேண்டியுள்ளது. 8 - 9 சதவீத வருடாந்தப் பொருளாதார வளர்ச்சியை பேணுவதற்கு, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதியில் 32 - 35 சதவீத முதலீடு தேவைப்படுகின்றது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதியில் 27.8 சதவீதமாகவுள்ள தற்போதைய முதலீட்டு வீதமானது, இத் தேவையை விட மிகவும் குறைந்ததாகும். எளிதல்லாத இப்பொருளாதார வளர்ச்சி எதிர்வு கூறலை மெய்யாக்குவதற்கு, இந்த நாடானது முதலீட்டை, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதியில் மேலும் 5 சதவீதம் அளவில் அதிகரிக்க வேண்டியுள்ளது (IPS -2007).

அரசாங்க நிதிகளில் காணப்படும் முட்டுக்கட்டைகளை கவனத்தில் கொள்கையில், இந்த இடைவெளியை நிரப்புவதற்காக அரசாங்க முதலீடுகளை உயர்த்துதலானது விரைந்து செய்யப்பட வேண்டிய ஓர் பணியாக உள்ளது. தற்போது, அரசாங்க முதலீடானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதியில் 6.2 சதவீதமாக உள்ளது. அதனுடைய மீண்டெழும் செலவீனங்களுக்கு நிதியளிப்புச் செய்வதற்குக் கூட அரசாங்க வருவாய் போதாது இருப்பதனால், அரசாங்க முதலீட்டை அதிகரிப்பது மிகக் கடினமானதாகும் (வரவு - செலவுத்திட்ட உரை - 2000, 2010).

முதலீட்டை அதிகரிப்பதற்கான சாத்தியப்படத்தக்க ஓர் மாற்றுத் தீர்வு யாதெனில், வெளிநாட்டு நேரடி முதலீட்டின் உட்பாய்ச்சலை ஊக்குவித்தலாகும். 2009 இன் நடுப் பகுதியில் உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து, பெருந் தொகையான வெளிநாட்டு நேரடி முதலீட்டைக் கவர்ந்திழுப்பது தொடர்பில், பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் அதிகளவு நம்பிக்கை உணர்வுடன் இருந்தது. ஆனால், எதிர்பார்க்கப்பட்டவாறு அத்தகையதோர் திரளான வரவு நிகழவில்லை என்பதுடன், அட்டவணை 9 இல் தெளிவாகக் காட்டப்பட்டவாறு,

அட்டவணை 11 மொத்த ஏற்றுமதிகளின் சதவீதமாக இலங்கையின் பாரிய ஏற்மதி இலக்குகள் (2006 - 2010)

| ஏற்மதி இலக்குகள் | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|---|---|
| ஐக்கிய அமெரிக்கா | 29.1 | 25.8 | 23.0 | 22.2 | 21.1 |
| ஐக்கிய இராச்சியம் | 12.8 | 13.3 | 13.4 | 14.4 | 12.3 |
| இந்தியா | 7.1 | 6.7 | 5.2 | 4.5 | 5.6 |
| இத்தாலி | 3.7 | 5.2 | 5.5 | 6.2 | 5.6 |
| ஜேர்மனி | 4.8 | 5.7 | 5.0 | 4.9 | 4.8 |
| பெல்ஜியம் - லக்ஷம்பேர்க் | 5.2 | 5.2 | 5.2 | 5.1 | 4.8 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | 2.5 | 2.7 | 3.1 | 3.0 | 3.0 |
| ரஷ்யா | 2.7 | 2.7 | 2.7 | 2.7 | 2.9 |
| நெதர்லாந்து | 1.8 | 2.0 | 1.9 | 2.2 | 2.2 |
| சிங்கப்பூர் | 1.1 | 1.0 | 0.9 | 1.2 | 2.2 |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை, 2010*

உண்மையான வெளிநாட்டு நேரடி முதலீடு இலங்கையில் குறைவாகவே காணப்படுகின்றது. இந்தியா, வியட்னாம், சீனா போன்ற நாடுகளுக்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டுடனும், மிகச் சிறிய ஓர் தொகையாகவுள்ள இலங்கையினுடைய மொத்த உள்நாட்டு உற்பத்தியுடனும் ஒப்பிடும்போது, இலங்கையின் உள்நோக்கிய வெளிநாட்டு நேரடி முதலீட்டின் பருமனானது மிகச் சிறியதாகவே காணப்படுகின்றது. ஆயினும், 2010 இல் 1 பில்லியன் அமெரிக்க டொலரையும், 2012 இல் 1.5 பில்லியன் அமெரிக்க டொலரையும், 2013 இல் 2 பில்லியன் அமெரிக்க டொலரையும் வெளிநாட்டு நேரடி முதலீடாக கவர்ந்திழுக்க முடியுமென முதலீட்டுச் சபை எதிர்பார்க்கின்றது.

அண்மைக் காலத்தில், இலங்கைக்கு நேரடி வெளிநாட்டு முதலீட்டை வழங்கும் பிரதான நாடுகளாக, ஒன்றையொன்று எதிர்க்கும் போட்டி நாடுகளாகவுள்ள சீனாவும் இந்தியாவும் காணப்படுகின்றன. தமது முதலீடுகளை, குறிப்பாக தனியார் வணிக முயற்சிகளைப் போன்று, தென்பகுதித் துறைமுகம், விமான நிலையம், மின் உற்பத்தி, புகையிரதப் பாதை நிர்மாணம், வீடமைப்புச் செயற்திட்டங்கள் போன்ற அரசாங்கத்தின் நிறைவேற்றி முடிப்பதற்கு கடினமான அபிவிருத்திச் செயற்திட்டங்களில் மேற்கொள்ளப்படும் முதலீடுகளை உயர்த்துவதன் மூலம், இவ்விரு நாடுகளுமே தமது பிரசன்னத்தை இலங்கையில் அதிகரித்துள்ளன. ஆசியாவின் இவ்விரு வல்லரசுகளும் இலங்கையில் சம்பந்தப்பட்டுள்ளமையானது, இந்து சமுத்திரத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஓர் இடத்தை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கான, பகைமைப் போக்குடைய ஓர் அதிகாரப் போட்டியாகவே கருதப்படுகின்றது. இலங்கையானது இவ்விரு நாடுகளுடனுமே மிகவும் நட்பார்ந்த உறவைப் பேணி வருகின்றது. பொருளாதாரத்தில் காணப்படுகின்ற, ஏனைய மூலங்களிலிருந்து பெருந் தொகையான வெளிநாட்டு நேரடி முதலீட்டைக் கவர்ந்திழுப்பதில் உள்ள இந்தத் தடைகளும் முட்டுக்கட்டைகளும் நீக்கப்பட வேண்டியனவாக உள்ளன.

183 நாடுகளை அடிப்படையாகக்

அட்டவணை 12 மொத்த இறக்குமதிகளின் சதவீதமாக இலங்கையின் பிரதான இறக்குமதி மூலங்கள் (2006 - 2010)

| இறக்குமதி மூலங்கள் | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|---|---|
| இந்தியா | 21.2 | 23.1 | 24.5 | 17.8 | 19.0 |
| சிங்கப்பூர் | 9.7 | 9.9 | 8.8 | 10.4 | 11.6 |
| சீனா | 7.6 | 8.2 | 7.9 | 10.1 | 9.2 |
| ஈரான் | 7.4 | 7.5 | 8.5 | 8.8 | 6.7 |
| யப்பான் | 4.4 | 3.7 | 3.0 | 2.2 | 4.3 |
| ஹொங் கொங் | 6.4 | 6.4 | 4.9 | 5.1 | 4.3 |
| ஐக்கிய அரபு எமிரேற்ஸ் | 2.1 | 2.9 | 3.0 | 4.0 | 3.5 |
| மலேசியா | 4.3 | 2.5 | 2.5 | 2.8 | 2.8 |
| தாய்லாந்து | 2.0 | 2.0 | 2.1 | 2.7 | 2.3 |
| பாகிஸ்தான் | 1.4 | 1.6 | 1.4 | 1.9 | 2.1 |
| கனடா | 2.1 | 0.7 | 2.7 | 2.7 | 2.1 |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை, 2010*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு கணிப்பிடப்பட்ட வணிகம் தொர்பான சுட்டெண்ணானது (The doing business index) இலங்கையை நடுத்தர எல்லையான 102 ஆவது படிநிலையில் வைத்துள்ளது. முழுமையான வணிக நலன்களின் அடிப்படையில் இயங்கும், சர்வதேச ரீதியாகப் புகழ்பெற்ற பல்தேசிய கம்பனிகளிலிருந்து வெளிநாட்டு நேரடி முதலீட்டைக் கவர்ந்திழுக்க வேண்டுமாயின், இலங்கையானது இந்த வரிசைப்படுத்தலில் கணிசமானளவு முன்னேற்றத்தை அடைய வேண்டியுள்ளது என்பதை அட்டவணை 10 இல் உள்ள தரவுகள் சுட்டிக் காட்டுகின்றன. ஓர் சர்வதேச முதலீட்டாளரைப் பொறுத்தவரை, இலங்கையை கவனத்தில் எடுப்பதற்கு முன்னர், இப்பட்டியலிலிருந்து தெரிவு செய்யக்கூடிய 101 நாடுகள் உள்ளன. தேசியவாதத்தையும் நாட்டுப் பற்றையும் போற்றுதல் அல்லது எமக்கு அனுகூலமான வகையில் கடந்த காலப் பெருமைகளை முன்வைக்கும் வகையில் உணர்ச்சிவசமாக உரையாற்றுதல் என்பன விவேகமுள்ள முதலீட்டாளர்களை கவர்ந்து இழுப்பதற்குத் துணை புரிவதில்லை. ஆனால், இலாபகரமான வணிக முயற்சிகளுக்கு சாதகமானதும் பொருத்தமானதுமான ஓர் வணிகச் சூழலை உருவாக்குதலானது, முதலீட்டாளர்களைக் கவர்ந்து இழுப்பதற்கு நிச்சயமாகத் துணைபுரியும்.

**வெளிநாட்டு நேரடி முதலீட்டைக் கவர்ந்திழுப்பதில் காணப்படும் முக்கியமான பிரச்சினைகள்**

- **i.** தொழில் சந்தையின் இறுக்கமான தன்மை; இலங்கையில் தொழில் சட்டங்கள் மிக இறுக்கமானவையாக இருப்பதுடன், ஓர் தொழிலாளியை வேலைக்கு அமர்த்துவது ஒப்பீட்டு ரீதியில் இலகுவானதாக இருக்கும். அதேவேளை, அந்நபரை தொழிலிலிருந்து நீக்குவது அதிகளவு செலவு மிக்கதாகும்.
- **ii.** உயரளவான கூலி வீதங்கள் மற்றும் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லும் சக்திச் செலவு என்பன காரணமாக ஏற்படும் அதிகரித்தளவிலான உற்பத்திச் செலவு.
- **iii.** சிறிய உள்ளூர்ச் சந்தை.
- **iv.** மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதியில் 7 - 8 சதவீதமாகக் காணப்படும் உயரளவிலான வரவு - செலவுத்திட்டப் பற்றாக்குறை மற்றும் அதிகரித்துச் செல்லும் வெளிநாட்டு படுகடன் என்பன காரணமாக ஏற்பட்டுள்ள பேரினப் பொருளாதார உறுதிப்பாடின்மை.
- **v.** தமது செயற்பாடுகளுக்குப் பதில் கூறும் பொறுப்பு மற்றும் நல்லாட்சி என்பவற்றுடன் தொடர்புடைய பிரச்சினைகள்

**அட்டவணை 13 இலங்கையின் சென்மதி நிலுவை (2006 - 2010)**

| வருடம் | வர்த்தக நிலுவை (பில்லியன் அ. டொலர்) | நடைமுறைக் கணக்கு நிலுவை (பில்லியன் அமெரிக்க டொலர்) |
|---|---|---|
| 2006 | 3.3 | 1.5 |
| 2007 | 3.6 | 1.4 |
| 2008 | 5.9 | 3.9 |
| 2009 | 3.1 | 0.2 |
| 2010 | 5.2 | 1.4 |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை, 2010*

- **vi.** தனியார் வெளிநாட்டு நேரடி முதலீடு தொடர்பாக அரசாங்கக் கொள்கைகளில் காணப்படும் நிச்சயமற்ற தன்மை; அப்பலோ வைத்தியசாலை, ஷெல் எரிவாயுக் கம்பனி, ஸ்ரீ லங்கன் எயர்லைன்ஸ், இலங்கை - இந்திய எண்ணெய்க் கம்பனி என்பவை தொடர்பிலான அரசாங்கத்தின் அண்மைக்கால தீர்மானங்கள், அத்தகைய நிச்சயமற்ற தன்மைக்கான உதாரணங்களாக அமைய முடியும்.

**வெளிநாட்டுத் துறையின் செயற்பாடுகள்**

மூன்று சதாப்தங்களாக நீடித்த உள்நாட்டு யுத்தம் 2009 இன் நடுப்பகுதியில் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து, மேலைத்தேச நாடுகளுடனான இலங்கையின் உறவு சீர்கெடத் தொடங்கியது. யுத்தம் நிகழ்ந்த காலத்தில் இலங்கை மனித உரிமைகளை மீறியுள்ளதென மேலைத்தேச நாடுகள் குற்றஞ்சாட்டுகின்றன. இக்குற்றச்சாட்டை இலங்கை ஆவேசமாக மறுத்து வருகின்றது. அண்மைக்காலத்தில் நிகழ்ந்த மனித உரிமை மீறல் விடயம் தொடர்பில், ஓர் சர்வதேச விசாரணையைக் கோரும், மேலைத்தேச நாடுகளின் நடவடிக்கைகளைத் தடுக்கும் ஓர் முயற்சியாக, மேலைத்தேசத்திற்கு எதிரான மற்றும் இஸ்லாமிய நாடுகளின் உதவியை இலங்கை நாடியது. சீனா, இந்தியா, ரஷ்யா, உக்கிரைன், ஈரான் என்பனவும் ஆபிரிக்கா, கிழக்காசியா, மத்திய கிழக்கு ஆகியவற்றிலுள்ள சில நாடுகளும் இலங்கையின் முக்கியமான நட்பு நாடுகளாகும்.

மேலைத்தேச நாடுகளுடன் இலங்கை முரண்பட்டு வந்துள்ளமைக்கு இது முதலாவது எடுத்துக்காட்டல்ல. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை நிறுவுவதற்காக, இடதுசாரி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தால் வெளிநாட்டு எண்ணெய்க் கம்பனிகள் தேசியமயமாக்கப்பட்டதைத் தொடர்ந்து, இவ்வகையான முதலாவது நிகழ்வு 1950 களின் பிற்பகுதியில் இடம்பெற்றது. மேலைத்தேச எண்ணெய்க் கம்பனிகளை இலங்கை தேசியமயமாக்க வேண்டியிருப்பின், சுத்திகரிக்கப்படாத எண்ணெயை குறைந்த விலையில் இலங்கைக்கு விநியோகிப்பதற்கு சோவியத் அரசாங்கம் வாக்குறுதி அளித்திருந்தது. இலங்கை அரசாங்கமானது தேசிய நலனை மனதில் வைத்துக்கொண்டு, ஏற்கனவே தீர்மானித்த அதனுடைய தேசியமயமாக்கல் திட்டத்தை நிறைவேற்ற ஆரம்பித்தது. தேசியமயமாக்கலின் விளைவாக, அமெரிக்க மற்றும் பிரெஞ்சு எண்ணெய்க் கம்பனிகள் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டதுடன், சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் முழுமையான நட்டஈடு வழங்கப்பட வேண்டுமென அவை வற்புறுத்திக் கோரின. இதற்கு அரசாங்கம் ஒத்துக்கொள்ளவில்லை. இதற்குப் பதிலடியாக, பிரசித்திபெற்ற Smoot - Hawley சட்டத்தை இலங்கைக்கு எதிராகப் பயன்படுத்துவதற்கு அமெரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததுடன், இவ்வெண்ணெய்க் கம்பனிகளுக்கு முழுமையான நட்டஈடு வழங்கப்படும் வரை இலங்கைக்கான அதனுடைய அனைத்து நிதியுதவிகளையும் ஏனைய உதவிகளையும் நிறுத்தியது. உடனடித் தேவைகளுக்காக சோவியத் யூனியன், சீனா, இந்தியா ஆகிய நாடுகளின் உதவியை இலங்கை நாடியது. ஆனால், இந்நடவடிக்கை காரணமாக வெளிநாட்டு சந்தையின் அரைவாசிக்கும் மேற்பட்ட பகுதியை இலங்கை இழக்க வேண்டியிருந்தது. எண்ணெய் கம்பனிகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தால் முழுமையான நட்டஈட்டுக் கொடுப்பனவு வழங்கப்பட்டதன் பின்னர், மேலைத்தேசத்துடனான முறையான உறவு 1956 இல் மீளத் தொடங்கப்பட்டது.

தற்போதைய உலகின் புவியியல்சார் (பிராந்திய) அரசியல் அதிகார போட்டியில், இலங்கையின் நட்பு நாடுகள் பொருளாதார ரீதியாக மிக உயர்ந்த நிலையில் இருப்பதுடன், அண்மைக் காலத்தில் நிதி நெருக்கடிகள், பொருளாதாரப் பெரும் குழப்பம் என்பவற்றின் பாதிப்புக்கு உள்ளான மேலைத்தேச நாடுகளைவிட அவை அதிகளவு பலம்வாய்ந்தனவாகவும் காணப்படுகின்றன. 21 ஆம் நூற்றாண்டானது ஓர் ஆசிய நூற்றாண்டாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் எனும் எண்ணம் மனதில் கருக்கொள்வது தொடர்பில், சிலர் மிகுந்த நம்பிக்கையுணர் உடையவர்களாக இருப்பதுடன், உலகின் அனைத்துப் பொருளாதார வளர்ச்சிகளும் ஆசிய நாடுகளிலேயே நிகழப்போகின்றது எனவும் எதிர்வு கூறப்படுகின்றது (Scott - 2008). துல்லியமாகக் கூறின், மேலைத்தேச நாடுகளின் நடவடிக்கைகளை தடுக்க வேண்டிய அவசியம் எப்போதாவது ஏற்படுகின்றபோது, நிதி மற்றும் இராஜதந்திர உதவிகளுக்கு மேலதிகமாக, தமது நாட்டு சந்தைகளைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளை வழங்குவதன் மூலம், இலங்கைக்கு அதன் நட்பு நாடுகளால் ஆதரவு வழங்கக்கூடியதாக இருக்குமென ஒருவர் வாதிடக்கூடும். ஆனால், தற்போதைய இச்சூழமைவில் இலங்கை போன்ற ஓர் சிறிய நாடு அத்தகையதோர் கொள்கையைக் கடைப்பிடிப்பதால் ஏற்படக்கூடிய உயரளவிலான இழப்புகளை புரிந்து கொள்வது கடினமான ஒன்றாக இருக்காது என்பதை, மேற்போக்கிலான ஓர் அவதானத்தின் மூலம் கூட உணர முடியும்.

அட்டவணை 11 இல் காட்டப்பட்டுள்ள வாறு, இலங்கையானது அதனுடைய ஏற்றுமதிகளுக்காக மேலைத்தேச சந்தைகளிலேயே தற்போது பிரதானமாகத் தங்கியுள்ளது. ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் ஆகிய இவ்விரண்டும் இலங்கையின் உற்பத்திப் பொருட்களுக்கான மிக முக்கியமான ஏற்றுமதிச் சந்தைகளாக உள்ளன. இந்த நாட்டினுடைய ஏற்றுமதிகளில் மூன்றில் ஒரு பங்கு இவ்விரு நாடுகளையே சென்றடைகின்றது. இலங்கையின் ஏற்றுமதிகளில் அரைவாசிக்கும் மேற்பட்டவை மேலைத்தேய நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இலங்கையின் ஏற்றுமதிப் பண்டங்களின், அதாவது தேயிலை, இறப்பர், தெங்குப்பொருள், தைத்த ஆடைகள், பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள், வைரக்கற்கள், இரத்தினம், ஆபரணங்கள் ஆகியவற்றின், இயல்புகளைக் கவனத்தில் கொள்ளும் போது, இலங்கையின் புதிய நட்பு நாடுகளால் அத்தகைய பாரிய சந்தை வாய்புகளை வழங்க முடியும் என்பதற்கான சாத்தியக்கூறுகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. உண்மையில், சீனா, இந்தியா ஆகியன கூட தமது ஏற்றுமதிகளுக்காக அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளிலேயே அதிகளவுக்குத் தங்கியுள்ளன. ஆகவே, இலங்கை, தனது உற்பத்திப் பொருட்களுக்காக மேலைத்தேசம் அல்லாத நாடுகளைத் தேடிக் கண்டுபிடிப்பது இலகுவான ஓர் முயற்சியாக இருக்காது. இலங்கைக்கான ஜி.எஸ்.பி. வரிச் சலுகைகளை நிறுத்தி வைத்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்மானமானது, ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கையினுடைய ஏற்றுமதிகள் மீது கணிசமானளவு அழுத்தத்தைக் கொடுத்துள்ளது.

இலங்கை, வர்த்தகக் கணக்கு நிலுவை மற்றும் நடைமுறைக் கணக்கு நிலுவை ஆகிய இரண்டிலும் பற்றாக்குறையை எதிர்கொண்டு வருகின்றது (அட்டவணை 13). உயரளவிலான வர்த்தகப் பற்றாக் குறையானது பிரதானமாக வெளிநாட்டில் வதிவோரின் உள்நோக்கிய பணஅனுப்பீடு வடிவிலான தனியார் மாற்றல் பெறுகைகள் மூலம் சரியீடு செய்யப்பட்டுள்ளது. இதனால், நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை, வர்த்த நிலுவையை விடக் குறைவான ஓர் தொகையைப் பதிவு செய்கின்றது. சென்மதி நிலுவைக்கான பெண்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது என்பதை கவனத்தில் கொள்வது ஆர்வத்துக்குரிய ஒன்றாகும். தேயிலை, தைத்த ஆடைகள் ஆகிய இலங்கையின் முக்கியமான இரு ஏற்றுமதிப் பொருட்களும் பிரதானமாக பெண் தொழிலாளர்களாலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. அந்நியச் செலாவணிச் சம்பாத்தியங்களுக்கான மூன்றாவது பெரிய மூலமாக, மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரியும் பயிற்சி பெறாத புலம்பெயர் பெண் தொழிலாளர்களின் பண அனுப்பீடுகள் அமைந்துள்ளன. இலங்கையைப் பொறுத்தவரை, ஓர் வளர்ந்து வரும் பொருளாதாரமாக அதனுடைய எண்ணப் பதிவைப் பற்றி பெருமையடித்துக் கொள்வதற்கு இது சாதகமான ஒன்றல்ல.

அதிகரித்துச் செல்லும் வர்த்தகப் பற்றாக் குறைக்கான தீர்வுக்கு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி என்பவற்றின் கட்டமைப்பில், பொதுவாக இந்த நாட்டினுடைய பொருளாதாரக் கட்டமைப்பில், அடிப்படை மாற்றங்கள் தேவைப்படுகின்றன. ஏற்றுமதிப் பண்டங்களின் வகைகளைப் பல்கிப் பெருகச் செய்வதற்கான முயற்சிகள் இன்னும் குறிப்பிடத்தக்களவான முன்னேற்றத்தை அடையவில்லை. வர்த்தக இடைவெளியைக் குறைப்பதற்குத் துணைபுரியக் கூடிய ஓர் முன்னணித் துறையாக சுற்றுலாத் துறையை, குறிப்பாக வடக்கு - கிழக்கில் யுத்தம் முடிவுற்ற பின்னர், இந்த நாடு இனங்கண்டுள்ளது. ஆயினும், மாலைதீவு அல்லது தாய்லாந்து போன்ற மிக முக்கியமான சுற்றுலாப் பயண இலக்குகளுடன் ஒப்பிடும் போது, இங்கு வரவுள்ள பெரும் எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவுசெய்வதற்கான இயலளவை இந்த நாடு கொண்டிருக்கவில்லை அண்மைக்கால சுற்றுலாத் துறை ஊக்குவிப்புச் செயற்பாடுகள் வெற்றிகரமானவையாக இருந்து வந்துள்ளன. ஆனால், மிக முக்கியமான ஓர் சுற்றுலாப் பயண இலக்காக இருப்பதற்கான, அதனுடைய அனுகூலமான நிலையை நீடித்திருக்கச் செய்வதற்கு உட்கட்டுமான வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியுள்ளன. அதிகளவு செலவு செய்யும் சுற்றுலாப் பயணிகள் இலங்கையை விட மாலைதீவை நோக்கியே பயணம் செய்கின்றனர். ஏனெனில், அதிகளவு செலவு செய்யும் இச்சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுப்பதற்காக, 2004 இல் ஏற்பட்ட கடல்கோள் (சுனாமி) பேரழிவின் பின்னர், அதனுடைய சுற்றுலாத்துறை உட்கட்டுமான வசதிகளை மாலைதீவு புனர்நிர்மாணம் செய்துள்ளது. இவ்வனுகூலத்தை பெற்றுக்கொள்வதில் இலங்கை இது வரை தோல்வியடைந்துள்ளது. ஆயினும், எதிர்காலத்தில் இத்துறையை விருத்தி செய்வதற்கு அதிகளவான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

**முடிவுரை**

ஆரம்ப காலத்தில் பொருளாதார வளர்ச்சிக்குச் சாதகமான சூழ்நிலைகள் காணப்பட்டபோதும், கடந்த 60 வருட காலத்தில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிச் செயற்பாடானது திருப்திகரமானதாக இருக்கவில்லை. குறைந்தளவான பொருளாதார வளர்ச்சியின் மத்தியிலும், இந்த நாட்டினுடைய சமூக அபிவிருத்தி தொடர்பான பதிவுகள் போற்றத்தக்கனவாக இருந்து வந்துள்ளன. பொருளாதார வளர்ச்சிச் செயற்பாடுகளை அதிகரிப்பதற்கான அண்மைக்கால முயற்சிகள் கூட உள்நாட்டு மற்றும் சர்வதேசக் காரணிகளால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. உள்நாட்டு யுத்தம் முடிவுற்றதன் பின்னர், மேற்கு உலகுடான இலங்கையின் பொருளாதார உறவுகள் சீர்கெட்டு வந்துள்ளன. நிறைவேற்றி முடிப்பதற்குக் கடினமான அதனுடைய அபிவிருத்தி இலக்குகளை மெய்யாக்குவதற்கு, ஒன்றுக்கொன்று எதிரான அணிகளாகப் பிரிந்து நிற்கும் இச்செயற்பாடு இலங்கைக்கு எந்தவிதத்திலும் துணைபுரியாது. அதிகளவான மனித சுதந்திரத்துடன் கூடிய ஓர் திறந்த பொருளாதாரமாக, இந்த நாட்டினுடைய எண்ணப் பதிவை பழைய நிலைக்கு மீண்டும் கொண்டுவருவதற்கு ஓர் ஒன்றிணைந்த முயற்சியே அவசியமானதாகும்.

**துணை நூற்பட்டியல்**

Alailima, P. (1997). Social Policy in Sri Lanka. In: W.D. Lakshman (ed) Dilemmas of Economic Development: Fifty Years of Economic Change in Sri Lanka, Sri Lanka Association of Economists (SLAE), Colombo.

Arunatilake, N, Jayasooriya, S. and Kelegama, S. (2000). The Economic Cost of the War in Sri Lanka, Institute of Policy Studies, Colombo.

Athukorala, P. and Rajapathirana, S. (1994). Macroeconomic Policies, Crisis, and Growth in Sri Lanka, 1960-90, The World Bank,
தொடர்ச்சி ......... 26ம் பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நிறுவனங்களின் ஜனநாயகமயமாதல் செயல்முறை: சவால்களும் எதிர்கால வாய்ப்புகளும்


**வீ.ரீ. தமிழ்மாறன்**

*தலைவர்*
*பொதுச் சட்ட மற்றும்*
*சர்வதேசச் சட்டத் துறை*
*கொழும்பு பல்கலைக்கழகம்*


## அறிமுகம்

வழமையாக ஓர் உடன்படிக்கையின் மூலம் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அரசுகளால் நிறுவப்படுகின்ற ஓர் அமைப்பை விபரிப்பதற்காகவே "சர்வதேச நிறுவனம்" எனும் சொற்பதம் பயன்படுத்தப்படுகின்றது.[1] கூட்டு இலக்குகளை அடையும் நோக்கத்தி லேயே இவ்வமைப்புகள் நிறுவப்படு கின்றன. அவற்றின் ஆக்கக் கூறாக அமைந்துள்ள, ஆவணங்களில் குறிப் பிடப்பட்டுள்ள இலக்குகளை அடைவதன் பொருட்டு பணியாற்றுவதற்கான அதி காரத்துடன் கூடிய, அரசுகளுக்கு இடை யிலான நிறுவனங்களாக அவை ஓரள வுக்குக் காணப்படுகின்றன. ஆயினும், உலகம் பூராவும் உள்ள மக்களின் பொது வான சேமநலத்திலிருந்து இவ்விலக்கு களை விடுவிக்க முடியாதுள்ளது. ஒவ் வொரு நிறுவனமும், தனது முதன்மை யான குறிக்கோள்கள், அதிகாரம், தொழிற்பாடு என்பவற்றை வரையறுத்துக் கூறுகின்ற, அதனுடைய சொந்த ஆக்கக் கூறாக அமைந்துள்ள ஆவணத்தைக் கொண்டுள்ளது. குறிப்பிட்ட ஒரு நிறுவனத்தின் யாப்பிற்கு சட்டப்படி கட்டுப் படுவதற்கான கடமைப் பொறுப்புடைய தாக இருப்பதன் பொருட்டு, ஏதாவது ஓர் அரசினால் வெளிப்படுத்தப்படும் மனமார்ந்த விருப்பமே, ஒரு நாடு அந்நிறுவனத்தில் உறுப்பினராவதற்கான தகுதியாக அமைந்துள்ளது. உண்மை யில், அது அரசுகளின் ஒரு வகையான கழகமாகும். ஆனால், குறிப்பிட்ட நிறு வனத்தை உருவாக்கிய உறுப்பு நாடு களால் ஏற்றுக்கொள்ளப்பட்டவாறு, பல்வேறுபட்ட நோக்கங்களுக்காக அவற்றை அமைக்க முடியும். ஐக்கிய நாடுகள் சபை நிறுவப்படுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்னரே அத்தகைய பல நிறுவனங்கள் தோற்றுவிக்கப்பட்ட போதும், ஐ.நா.வின் வருகையே அத்த கைய நிறுவனங்களின் இயல்பினதும் தொழிற்பாடுகளினதும் முக்கியமான அம்சங்களை குறிப்பிடத்தக்க வகையில் மாற்றியுள்ளது.

அத்தகைய நிறுவனங்கள் அரசியல், பாதுகாப்பு, பொருளாதாரம், நிதி, இயற்கை வளங்கள், வர்த்தகம், சுகா தாரம், விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், போக்குவரத்து, சுற்றுலாத்துறை போன்ற ஏராளமான செயற்களங்களில் தொழிற் படுவதை ஒருவரால் இன்று காண முடியும். இவற்றுள் முக்கியமானவையாக ஐக்கிய நாடுகளும் அதன் தனித்துவம் வாய்ந்த நிறுவனங்களான சர்வதேசத் தொழில் அமைப்பு (ILO), உலக சுகாதார நிறுவனம் (WHO), உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் (IMF), உலக வர்த்தக நிறுவனம் (WTO), ஆகியனவும் உள்ளன. ஐ.நா.வால் ஊக்குவிக்கப்பட்ட வாறு, பலம் வாய்ந்த பிராந்திய அமைப் புகளை உருவாக்குவதில் கூட அரசுகள் முனைப்பான ஆர்வத்தை வெளிப்படுத்தி வந்துள்ளன. வட அத்திலாந்திக் ஒப்பந்த அமைப்பு (NATO), ஐரோப்பிய ஒன்றியம், ஐரோப்பியப் பேரவை, ஐரோப்பாவின் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்புக்கான அமைப்பு (OSCE), ஆபிரிக்க ஒன்றியம், அமெரிக்க அரசுகளுக்கிடையிலான அமைப்பு என்பன, சர்வதேச செயற்களங் களில் தற்போது அதிகளவு ஆதிக்கம் செலுத்துகின்ற நிறுவனங்களாகக் கருதப்படுகின்றன.

இவ்வமைப்புகளின் முதன்மையான தொழிற்பாடு யாதெனில், மக்களின் சேம நலத்தை ஊக்குவித்தல் மற்றும் அதைப் பாதுகாத்தல் என்பவற்றில் சர்வதேச மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் மேற் கொள்ளப்படும் அரசுகளின் செயற்பாடு களுடன் இணைந்து செயல் புரிவதும் அவற்றுக்குப் பங்களிப்புச் செய்வது மாகும். குறிப்பிடப்பட்ட இந்த நோக்கங் களை நிறைவேற்றுவதற்கு அவசியமான சட்டரீதியான அதிகாரத்தை அவை பெற்றுள்ளதுடன், உரிய கண்காணிப்பு வழிமுறை மூலம், தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகளில் அவை மிகவும் செயல்திறன் உடையன என்பதை அவை நிரூபித்தும் உள்ளன. மூன்றாம் உலக நாடுகளின் அரசாங்கங்களினுடைய இணக்கப்பாட்டை உறுதிசெய்வதில் "சன்மானமும் தண்ட னையும்" எனும் கொள்கையை உபயோ கிப்பதற்கும் அவை ஒருபொழுதும் தயங்குவதில்லை.

ஆயினும், பனிப்போர் முடிவுக்கு வந் தமை மற்றும் உலகமயமாதல் செயல் முறையின் ஆரம்பம் என்பன காரணமாக, சர்வதேச நிறுவனங்களினுடைய செயற் பாடுகளைக் உன்னிப்பாகக் கூர்ந்து நோக்குகையில், முன்மாதிரி எடுத்துக் காட்டாகக் கொள்ளத்தக்க ஒரு மாற்றம் இருந்து வந்துள்ளதைக் காணலாம். "ஜனநாயகமயமாதலும் சட்டத்தின் ஆட்சியும்" எனும் முழக்க வாசகமானது, அவற்றின் செயற்பாடுகள் அனைத்திலும் பொறிக்கப்பட்டுள்ள கவர்ச்சிகரமான ஓர் சின்னமாக ஆகியுள்ளதோடு, அங்கத்துவ நாடுகளின் செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்கான முன்னுதாரணமான ஒரு நிபந்தனையாகவும் இருந்து வருகின்றது. சர்வதேசமயப்படுத்தப்பட்ட உலக விவ காரங்களில், அரசுகளின் ஆள்புல எல் லைகளைக் கடந்து செல்லுகின்ற ஏராள மான பிரச்சினைகள் காணப்படுவதுடன், ஏனைய அரசுகளின் ஆதரவும் ஒத் துழைப்பும் இன்றி, குறிப்பிட்ட சில அரசு களால் மாத்திரம் அவற்றைக் கையாள முடியாது என்பதும் உண்மையே. போக்கு வரத்து, தொடர்பாடல், தகவல் தொழில் நுட்பம், எல்லை கடந்த குற்றச்செயல் களின் பெருக்கம் என்பன இதற்கான சிறந்த உதாரணங்களாகும். ஆகவே, அரசுகள் ஒன்றுடன் ஒன்று இணைந்து செயற்படுவதன் அவசியம் உணரப்பட் டுள்ளது. சர்வதேச அமைப்புகளின் ஊடாக இதை மேற்கொள்வதே இலகு வான ஓர் வழிமுறையாகும். எவ்வாறா யினும், இந்த நிறுவனங்கள் சிலவற்றால் விதிக்கப்படும் நிபந்தனைகளைத் தளர் வற்ற வகையில் கடைப்பிடிக்க வேண்டு மெனக் கோரிக்கை விடுத்தல், ஒருதலைச் சார்பானதாகவும் அநேகமான அபிவிருத் தியடைந்து வரும் நாடுகளை எரிச்சலடை யச் செய்வதாகவும் உள்ளதெனக் கருதப் படுகின்றது. அந்நாடுகளின் அபிப்பிராயப் படி, இந்த நிபந்தனைகள் தமது உள் நாட்டு அரசியலிலான தலையீட்டுக்குச் சரிநிகரானதாகவும், சம்பந்தப்பட்ட நாட்டு மக்களின் இறைமையை சட்டரீதியாகப் பயன்படுத்துவதிலிருந்து தம்மைக் கட்டுப் படுத்துவதாகவும் உள்ளன. இந்த அர்த் தத்தில், அவை தமது அங்கத்துவ நாடு களின் அரசியல் சுதந்திரத்தையும், ஆள் புல ஒருமைப்பாட்டையும் வலுவிழக்கச் செய்யும், தவிர்க்க முடியாத கூறுகளாக ஆகியுள்ளன. அரசுகளின் ஆட்சி முறை மையை ஜனநாயகமயப்படுத்துவதுடன் தொடர்புடைய விடயமே இந்த நிபந்தனைப் பட்டியலில் முதன்மை நிலையில் உள்ளது.

## உலகமயமாதலும் ஜனநாயக மயமாதலும்

பரவலாகக் காணப்படுகின்ற ஒரு தப்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணம் யாதெனில், உலகமயமாதலா னது ஜனநாயகத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் ஊக்குவிக்கின்றது என்பதாகும்.[2] ஒருவரின் மனதில் முழுவதுமாக இடம்பிடித்துள்ள பல்வேறு வகையான ஜனநாயக முறைகளைப் பற்றி பேசுவதை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு, இவ் விடயம் பற்றி அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலுள்ள கல்விமான்களால் மிக அதிகளவுக்கு மாற்றீடான முறையில் வாதிடப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, குடியேற்ற ஆட்சியை நிறுவிய நாடுகளுக்கும் குடியேற்ற ஆட்சிக்கு உட்பட்ட நாடுகளுக்கும் இடையேயான வேறுபாடானது, அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தி குன்றிய எனும் சொற்பதங்களால் மாற்றீடு செய்யப்பட்டுள்ளதென அங்கி (Anghie) என்பவர் விவாதிக்கின்றார். உலகமயமாதலுக்கு உட்பட்ட இவ்வுலகில் காணப்படும் செல்வந்தர்களுக்கும் வறியவர்களுக்கும் இடையிலான பிளவை நீடித்திருக்கச் செய்வதற்காக, அபிவிருத்தியடைந்த நாடுகளால் பயன்படுத்தப்படுகின்ற ஒரு கருவியே இந்த உலகமயமாதலாகும் எனக் கருதப்படுகின்றது. "எம்முடைய வாழ்க்கைக் காலத்தில், எமது சம்மதத்தைத் தவிர அனைத்துமே உலகமயமாக்கப்பட்டுள்ளன."[3] எனும் மறைபொருளாகவுள்ள உண்மை, ஜோர்ஜ் மொன்பொட் (George Monbiot) என்பவரின் அவதானிப்பில் சரியான வகையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இன்றைய சூழமைவில், "உலகமயமாதல்" மற்றும் "உலகம்" ஆகியன இரண்டுமே பொருளாதாரத்தையும் சந்தையையும் பற்றியதாகும்.[4] இந்த உலகமயமாதல் செயல்முறையானது புவியியல், அரசியல், சமூகம் உட்பட அனைத்து எல்லைகளையும் கடந்து செல்கின்றது. ஆச்சரியமற்ற வகையில், நிதிச் சந்தைகளை ஸ்திரப்படுத்தும் கடமைப் பொறுப்பைக் கொண்டுள்ள நிறுவனங்களுக்கு உலகமயமாதல் செயல்முறையை முன்நோக்கி நகர்த்துவதில் குறிப்பான கரிசணை உண்டு. செயல்திற உபாயரீதியாக, ஆட்சி முறையின் அனைத்துத் துறைகளிலும் ஜனநாயகமயப்படுத்தலையும் சட்டத்தின் ஆட்சியையும் ஊக்குவிக்கும் ஓர் கொள்கையை அவை கொண்டுள்ளன. மேலும், வலையமைப்புகளின் ஊடாகத் தொழிற்படுகின்ற தனது சொந்த இயற்கூறான ஆற்றலையும் இந்த உலகமயமாதல் கொண்டுள்ளது.[5] அத்தகைய ஊக்குவிப்புக்காக வடிவமைக்கப்பட்டுள்ள திட்டங்கள் யாவுமே சந்தை நலன்கருதிய நிகழ்ச்சி நிரல்களை அடிப்படையாகக் கொண்டவை என்பதை நாம் கவனத்திற் கொள்ளத் தவறக்கூடாது. இந்த நிறுவனங்கள் பலவற்றின் "அதிகளவுக்கு இரகசியமற்றதாகக் காணப்படும் நிகழ்ச்சி நிரல்கள்" அபிவிருத்தியடைந்த நாடுகளின் சந்தை நலன்களை ஊக்குவிப்பதற்குச் சாதகமான சட்டரீதியான சூழலைத் தோற்றுவிப்பதை இலக்காகக் கொண்டுள்ளன.

இப்புதிய ஆயிரமாம் ஆண்டில், குறைந்த பட்சம், அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மூன்று "சொற்களாக" பணம், இணையம், ஜனநாயகமும் மனித உரிமைகளும்[6] என்பன காணப்படுகின்றன எனும் விடயம் ஹரோல்ட் ஹொஞ்சு கோ (Harold Hongju Koh) என்பவரால் பொருத்தமான வகையில் அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக, ஜனநாயகமயமாதல் பற்றிய பிரச்சினையானது, சட்டத்தின் ஆட்சி, ஜனநாயகம், நீதியை பயன்படுத்துவதற்கான சமவாய்ப்பு, மக்களை வலுவூட்டுதல் முதலியவற்றுடன் தொடர்புடைய விடயங்களை உறுதியாகக் கையாளக்கூடியதாக உள்ளது. அனைத்து சர்வதேச நிறுவனங்களுமே மேலே குறிப்பிடப்பட்ட பிரச்சினைகளைக் கையாள்வதற்கு அதிகளவு முக்கியத்துவம் கொடுத்து, தமது திட்டங்களை வடிவமைத்துள்ளதுடன், அதற்கேற்ப வரவு - செலவுத் திட்டங்களையும் தயாரித்துள்ளன. உண்மையில், ஜனநாயகமயமாக்கல் செயல்முறையானது ஐ.நா. சாசனத்திலே உறுதியாக நிலைநிறுத்தப்பட்டுள்ளதுடன், அதுவொன்றும் புதிய விடயமல்ல எனவும் விவாதிக்கப்படுகின்றது. இது பற்றிய குறிப்புகள் ஐ.நா. சாசனத்தின் முன்னுரையிலும் அதைப் பின்தொடர்ந்து வருகின்ற அரச நடைமுறைகளிலும் காணப்படுகின்றன.[7]

***தமது முதன்மையான பணியாக உலகமயமாதல் செயல்முறையை ஏற்றுக்கொள்ளல்;*** இன்று சர்வதேச நிறுவனங்கள் தமது அங்கத்துவர்களுக்கு, அதாவது அரசுகளுக்கு, நிபந்தனைகளை "விதிக்கும்" ஓர் சூழ்நிலையில் உள்ளன. சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்ற உலகளாவிய ரீதியில் நிதியைக் கையாளும் நிறுவனங்களின் எடுத்துக்காட்டில் இது பொருத்தமானதாகவே காணப்படுகின்றது. சர்வதேச நிறுவனங்கள் பலம் வாய்ந்த அரசுகளின் நலன்களை மட்டுமே பிரதிபலிக்கின்றன எனும் குற்றச்சாட்டுக்கு இது வழிவகுத்துள்ளது.[8] மறுபுறத்தில், "பலமான அரசுகளினுடைய நலன்களின்பாற் சாய்ந்துள்ள அத்தகைய திட்டங்களில், பலவீனமான அரசுகள் ஏன் பங்கேற்க வேண்டும்"[9] என்பதைப் புரிந்துகொள்வது கூட அதேயளவு பெரு வியப்புக்குரியதாகக் காணப்படுகின்றது. அதேநேரம், இதை ஓர் புதுமையான மெய்மை நிகழ்வாக மீண்டும் கருத முடியுமா? பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கத்துவ நாடுகளின் அதிகாரங்கள் தொடர்பில் தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டவாறு, ஐ.நா. சாசனத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ள "ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு எதிரான" ஏற்பாட்டைப் பற்றி யாது கூற முடியும்? அரசுகள் இன்னும் ஏன் ஐக்கிய நாடுகளாகிய இக்கழகத்தில் இணைய வேண்டும்? இதற்கான பதிலானது, குறிப்பிட்ட சில கருத்தியல் கோட்பாடுகளில் உள்ள பயபக்தியில் அன்றி, அதன் தொழிற்பாட்டுக் கட்டமைப்பைப் புரிந்து கொள்வதிலேயே காணப்படுகின்றது.

### உலகளாவிய வலையமைப்புகளும் "ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு எதிரான" தாராண்மைவாதமும்

இந்த நிறுவனங்களின் அதிகரித்தளவிலான செல்வாக்கை சர்வதேச விவகாரங்களின் ஏராளமான செயற்களங்களில் மாத்திரமன்றி, அங்கத்துவ நாடுகளின் உள்நாட்டு அரசியல், பொருளாதாரம் என்பவற்றின் வளர்ச்சிப் போக்கை நெறிப்படுத்தும் விடயங்களிலும் தெளிவாகக் காணக்கூடியதாக உள்ளது. மேலே குறிப்பிடப்பட்டவாறு, அங்கத்துவ நாடுகளின் இறைமை எனும் எல்லை வரம்புக்கு உட்பட்ட விடயங்கள் தொடர்பில், அனைத்து சர்வதேச நிறுவனங்களும் சம அளவில் ஆதிக்கம் செலுத்தாத போதும், அவற்றில் சிலவற்றின் விரிவுபடுத்தப்பட்ட செயல் எல்லையானது, உலகிலுள்ள அனைவரதும் நாளாந்த வாழ்க்கையைப் பாதிப்பதாக உள்ளது. சர்வதேச மட்டத்தில், இந்த நிறுவனங்களின் பிரதானமான உடைமையாகக் கருதப்படுகின்ற, அவற்றின் ஒருங்கிணைந்த செயற்பாடுகளில் "ஜனநாயகக் கோட்பாடுகளை நிறைவுசெய்வதிலுள்ள குறைபாடு" தொடர்பில் ஏராளமான கவலைகள் காணப்படுகின்றன. இச்சர்வதேச நிறுவனங்கள் அரசுகளின் முகவர்களாக உள்ளதோடு, உலகமயமாக்கல் செயல்முறையில் வல்லமை மிக்க பங்குதாரர்களாகவும் செயற்படுகின்றன எனும் உண்மையைக் கவனத்திற் கொள்கையில், இந்த நிறுவனங்களே தமது அக மற்றும் புறத் தோற்றத்திலும் தொழிற்பாட்டிலும் ஜனநாயகப் பண்பு அற்றவையாக இருக்குமாயின், உலகை ஜனநாயகமயமாக்கும் செயற்பாட்டை மேற்கொள்ள முடியாதிருக்கும்.

இச்சர்வதேச நிறுவனங்களினுடைய, உண்மை எனும் ஓர் எண்ணத்தைத் தோற்றுவித்துள்ள, தன்னாட்சி அதிகாரமானது அவற்றை ஜனநாயகப் பண்பு நிறைந்த அமைப்புகளாக ஆக்குவதற்கு எந்த வகையிலும் துணை புரிவதாக காணப்படவில்லை. மிக முக்கியத்துவம் வாய்ந்த சர்வதேச நிதி நிறுவனங்களில் அங்கத்துவத்தைப் பெறுவதற்கு, கவர்ச்சிகரமான பொதுவான நோக்கங்கள் ஊடாக, ஏராளமான அரசுகள் கவர்ச்சியூட்டி இழுக்கப்படுகின்றன. அத்தகைய ஒத்துழைப்பின் மூலம், தாம் அனுகூலங்களை எதிர்பார்க்க முடியுமென பலவீனமான அரசுகள் வழக்கமுறையாக நம்புகின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றன. இக்கட்டத்தில், புதிதாக உருவாக்கப்படுகின்ற அமைப்பாகிய அந்த நிறுவனத்திற்கு மிகக்கூடியளவான அதிகாரங்களை வழங்குவதற்கு அனைத்து உறுப்பு நாடுகளும் உடன்படுகின்றன.

பொதுவான ஓர் உடன்படிக்கை ஊடாக ஒப்படைக்கப்படுகின்ற இவ்வதிகாரங்கள் வழங்கப்பட்டதும், இந்த நிறுவனங்களில் உள்ள பலம் வாய்ந்த அங்கத்துவ நாடுகளின் ஒருங்கிணைந்த கருத்துகளைப் பிரதிபலிக்கும் கொள்கைகளையே, பெரும்பாலான நேரங்களில் எதிர்வுகூறக் கூடிய வகையில், ஆக்குவதற்கு இந்த நிறுவனம் ஆரம்பிக்கின்றது. இக்கொள்கைகளை வகுப்பதிலும் அவற்றை அமுல்படுத்துவதிலும் ஒவ்வொரு நிறுவனமும் தமக்கே உரித்தான ஒருங்கிணைந்த செயற்பாட்டுப் பாணியைக் கொண்டுள்ளன. ஆயினும், இந்த நிறுவனங்கள் அநேகமானவற்றின் தொழிற்பாடுகள் முழுவதிலும் காணப்படுகின்ற பொதுவான ஓர் உண்மையை கல்விமான்கள் அவதானித்துள்ளனர்.

இரு சமாந்தரமான விதிகளின் தொகுதிகளுக்கு; அதாவது முறைசார்ந்த மற்றும் முறைசாராத் தொகுதிகளுக்கு இணங்கவே இச்சர்வதேச நிறுவனங்கள் செயற்படுகின்றன[10] எனும் முடிவிற்கு ஸ்ரோன் என்பவர் வருவதற்கு இந்த அவதானிப்பு துணைபுரிந்துள்ளது. முறைசார்ந்த மட்டத்திலான செயற்பாடுகளுக்கு அங்கத்துவ நாடுகளின் உடன்பாடான வழிமுறை தேவைப்படுகின்றது. அதன் அங்கத்துவ நாடுகள் தொடர்பிலான வெளிப்படையான தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் என்பவை காணப்படாமையால், முறைசாரா மட்டத்திலான செயற்பாடுகள் மாத்திரமே அதிகளவான விமர்சனத்திற்கு உள்ளாகின்றன. சர்வதேச நாணய நிதியத்தின் ஒருங்கிணைந்த செயற்பாட்டுப் பாணியை ஆராய்ந்ததன் பின்னர், ஐக்கிய அமெரிக்காவானது முறைசாரா மட்டத்திலேயே இந்நிதியத்தை தனது முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளது[11] எனும் முடிவிற்கு ஸ்ரோன் வருகின்றார். இந்த நிறுவனங்களின் "ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு எதிரான தாராண்மைவாத" நடைமுறைகளைச் சரிபார்ப்பதற்கான பயனுள்ள ஏதாவது வழிமுறைகளைப் பற்றிச் சிந்திப்பதற்கான வாய்ப்புகள் உண்டா? இவ்வினாவானது, சர்வதேச நிறுவனங்களை நெறிப்படுத்துகின்ற சர்வதேசச் சட்டக் கட்டமைப்புடன் பெருமளவுக்குத் தொடர்புபட்டுள்ளது.

### தன்னாட்சியதிகாரம் இயல்பிலேயே தீங்கு நிறைந்ததா?

மல்கம் ஷோ என்பவரின் கூற்றுப்படி, சர்வதேச நிறுவனங்களுக்கு சட்ட ஆளுமை எனும் அந்தஸ்து (legal personality) உண்டு.[12] இந்த சட்டரீதியான நபர் எனும் அந்தஸ்தைத் தீர்மானிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற நியமங்கள், பெரும்பாலும் அதனுடைய யாப்பு மற்றும் அரசுகளுடனும் ஏனைய அமைப்புகளுடனும் உறவுகளை பேணத் தொடங்குவதற்கான அதன் ஆற்றல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளன. அரசுகளுடன் ஒப்பந்தங்களை நிறைவு செய்வதற்கான நிறுவனங்களின் ஆற்றல் மற்றும் அவ்வொப்பந்தங்களை ஏற்றுக்கொள்வதற்கும், அவற்றிற்கு இணங்கச் செயல்புரிவதற்குமான அதன் இயலாற்றல் என்பவற்றையும் அது அடிப்படையாகக் கொண்டுள்ளது.

மறுபுறத்தில், இந்த சட்ட ஆளுமை எனும் அந்தஸ்தை அரசுகளுக்கு மாத்திரமின்றி, ஏனைய அமைப்புகளுக்கும் தனியாட்களுக்கும் கூட விரிவுபடுத்தப்படக் கூடிய கடமைப் பொறுப்பை தோற்றுவிக்கின்றது. ஆகவே, சர்வதேச நிறுவனங்கள் தமது செயற்பாடுகளில் ஜனநாயக ரீதியான நடைமுறைகளைக் கொண்டிருக்க வேண்டுமென, பல்வேறு குழுவினரிடம் இருந்தும் எழும் நியாயமான ஆர்வ எதிர்பார்ப்புக்கள் காணப்படுகின்றன. *ஈடுசெய்தல் வழக்கில் (Reparation case)* சர்வதேச நீதிமன்றத்தால் (ICJ) வழங்கப்பட்ட புகழ்வாய்ந்த தீர்ப்பிலிருந்து[13] மேற்கோள் காட்டுகையில், பொதுவான நோக்கங்களை அடைவதற்கு எது அவசியமோ, அதைச் செய்வதற்கும், அத்துடன் தமது தொழிற்பாடுகளை சாத்தியமாக்குவதற்கும் இந்த அமைப்புகளுக்குத் தேவைப்படும் மறைமுகமாகச் சொல்லப்பட்ட அதிகாரங்களே மிகவும் ஆபத்தானவையாகும்[14] என, சர்வதேச நிறுவனங்கள் தொடர்பில் முன்னணி வல்லுநரான போவெத் என்பவர் குறிப்பிடுகின்றார். இந்த முறைமையின் கீழ், தமது செயற்பாடுகளை வடிவமைப்பதற்கும் அவற்றை வேறுபட்ட புதிய சூழ்நிலைகளில் மேற்கொள்வதற்குமான குறிப்பிட்ட ஓரளவு "சுதந்திரத்தை" இந்த நிறுவனங்கள் அனுபவிக்கின்றன.

இச்சுதந்திரத்தை எந்தளவிற்குப் பயன்படுத்த முடியும் என்பதை ஒரு சில எடுத்துக்காட்டுகள் தெளிவுபடுத்துவதாக அமைந்துள்ளன. 1990களிலிருந்து, ஐரோப்பிய ஒன்றியமானது மனித உரிமைகளை மூன்றாம் தரப்புகளுடனான தனது உறவின் முக்கியமானதோர் கூறாக ஆக்கியுள்ளது. 1996ல், ஐரோப்பிய ஒன்றியம் இந்தியாவுடன் ஓர் வர்த்தக உடன்படிக்கையைக் கைச்சாத்திட்டபோது, அதில் மனித உரிமைகள் தொடர்பான சட்டவிதிக் கூறும் உள்ளடக்கப்பட்டிருந்ததோடு, அது ஐரோப்பிய நீதிமன்றத்தாலும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. ஆனால் அதே வருடம், மனித உரிமைகள் தொடர்பான ஐரோப்பியச் சமவாயத்துடன் உடன்படுவதற்கான ஆற்றல் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு போதுமான அளவில் காணப்படவில்லையென அதே நீதிமன்றம் ஓர் தீர்ப்பை வழங்கியது.[15] அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான நிதியுதவியுடன் தொடர்புடைய ஐரோப்பிய ஒன்றியத்தினுடைய ஒழுங்கு விதிகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் மற்றும் சிறு மாற்றம் என்பன காரணமாக, பொருளாதாரத் தடைகள் தொடர்பான தீர்மானம் எடுத்தல் செயல்முறையானது, கண்டிப்பு மிக்க சட்ட ரீதியான கோட்பாடுகளின் செல்வாக்கினால் அன்றி, அரசியல் மற்றும் நடைமுறை மெய்மைகள் சார்ந்த நோக்கங்களின் செல்வாக்கிற்கு உட்பட்டதாகக் காணப்படுகின்றது. தென் உலகின் (அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள்) அரசாங்கங்களுக்கு கவலையளிக்கும் இன்னுமோர் அம்சம் எதுவெனில், ஐரோப்பிய ஒன்றியத்தால் அண்மையில் உருவாக்கப்பட்ட, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் சம்பந்தப்பட்ட மூன்றாம் உலக நாட்டு அரசாங்களுடைய சம்மதத்தின் செல்வாக்கிற்கு உட்பட்டிராத செயற்திட்டங்களுக்கும் நிதியுதவிகளை வழங்க முன்வருவதற்கு அதிகாரமளிக்கின்ற ஒழுங்கு விதிகளாகும்.[16]

சர்வதேச நாணய நிதிய எடுத்துக்காட்டில் ஸ்ரோன் என்பவரால் சுட்டிக் காட்டப்பட்டவாறு, அமெரிக்க காங்கிரஸின் அனுமதியின்றி சர்வதேச நாணய நிதியத்தால் கடன் வழங்க முடியும் என்பதால், சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க நிறுவனத்தைவிட அதிகளவு வளங்களை ஒருங்குதிரட்டக் கூடிய ஓர் சூழ்நிலையில் அது (சர்வதேச நாணய நிதியம்) உள்ளது. ஆகவே, தனது நீண்ட கால வெளிநாட்டுக் கொள்கை இலக்குகளுக்கு ஆதரவு வழங்குவதற்கு, நிதியுதவி பெறும் அரசாங்கங்களைத் தூண்டுவதன் பொருட்டு, சர்வதேச நாணய நிதியம மீதான தனது செல்வாக்கை ஐக்கிய அமெரிக்காவால் பயன்படுத்த முடியும்[17] என்பது வெளிப்படையானதாகும்.

இந்த நிறுவனங்களால் பின்பற்றப்படுகின்ற தீர்மானம் மேற்கொள்ளல் வழிமுறைகள் அனைத்து ஜனநாயகத் தேவைகளையும் எல்லாச் சந்தர்ப்பத்திலுமே நிறைவு செய்வதில்லை. ஏற்கனவே குறிப்பிடப்பட்டவாறு, கருத்தொற்றுமை, இரத்து அதிகாரம் (veto) ஆகியவற்றுடன், சில வேளைகளில் பலம்மிக்க அங்கத்துவ நாடுகள் சம்பந்தப்பட்ட வகையில் அவற்றின் விருப்பார்வம் அல்லது உண்மைத்தன்மை என்பவற்றிலான குறைபாடுகளை நிவர்த்தி செய்தலுக்குமான தேவைகூட காணப்படுகின்றது.

### உள்நாட்டில் ஜனநாயகம்

ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பிலான தேவைகளை நிறைவு செய்வதற்கு அவசியமான சூழ்நிலைகளை வரவேற்கும் அதேவேளை, இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்களும் அதேவகையான விழுமியங்களை தமக்குள் கடைப்பிடிக்க வேண்டுமென்ற நியாயமான எதிர்பார்க்கை எனும் தமது செயற்களத்திற்கு ஆட்பட்ட வையாக உதவிபெறும் நாடுகள் காணப் படுகின்றன. அத்தகைய எதிர்பார்க்கை களில் ஒன்று, அங்கத்துவ நாடுகளின் தேசிய சட்டசபைகளைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற பாராளுமன்றங்கள் ஊடாக தீர்மானங்களை மேற்கொள்வதாகும். இந்த நடைமுறை மேற்கொள்ளப்படு மாயின், 17 சதவீத வாக்களிப்பு அதி காரத்தை மாத்திரம் கொண்டுள்ள ஐக்கிய அமெரிக்கா சர்வதேச நாணய நிதியம் மீது அதிகளவான கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளமை போன்ற சூழ்நிலை களை, குறைந்தபட்சம், கீழ்மட்டத்திற்குக் குறைக்க முடியும். உண்மையில் இது, அரசாங்கங்களின் சர்வதேச மட்டத்திலான ஒரு பாராளுமன்றமாகும்.

ஆயினும், பல நாடுகளுடன் சம்பந்தப்பட்ட அத்தகைய பாராளுமன்றங்கள் தேசிய பாராமன்றங்களின் ஒரு பகுதியாக இருப்பதைவிட, ஐரோப்பியப் பாராளு மன்ற எடுத்துக்காட்டைப் போன்று அவற் றிற்கான உறுப்பினர்களை நேரடியாக தெரிவு செய்வது விரும்பத்தக்கதாகுமென யோசனை கூறப்படுகின்றது. தேசிய அர சின் எல்லைக்கு அப்பால் ஜனநாயகத்தை விரிவுபடுத்துவது பற்றி சிந்திப்பதற்கு இது கனிவான (பொருத்தமான) கால மாகும்.

தேசிய மட்டத்திலான உள்நாட்டு தீர்மானம் மேற்கொள்ளல் செயற்களத்திற்கு உட் பட்டவையென முன்னர் கருதப்பட்ட விடயங்களில் அநேகமானவை, தற்போது உலகளாவிய மட்டத்திற்கு நகர்ந்துள்ளன. அதே அளவுகோல் பயன்படுத்தப்படு மாயின், தென் உலகால் வலியுறுத்தப் படுகின்ற தேசிய மட்டத்திலான ஜனநாயக ரீதியான தீர்மானம் மேற்கொள்ளல் செயல்முறையை, சர்வதேச மட்டத்திலும் சம அளவில் பயன்படுத்த வேண்டும். ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் எனும் பெயர்களில் காரியங்கள் எங்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றனவோ அவ்விடங்களாகிய அனைத்து சர்வதேச மன்றங்களிலும், சிவில் சமூக செயற்பாட் டாளர்களின் பங்குபற்றலுக்கான வாய்ப்பு களை மாத்திரமன்றி, "எதிர்கால இலக்கு களாக" உள்ளோரது பங்குபற்றலுக்கான வாய்ப்புகளையும் வழங்க வேண்டி யுள்ளது.

பல நாடுகளுடன் சம்பந்தப்பட்ட பாராளு மன்றங்களின் துணையுடன் மாத்திரம் தொழிற்படுவதற்கான வாய்ப்பை, சர்வ தேச மட்டத்திலான ஜனநாயகத்தால் வழங்க முடியாது. இருப்பினும், அதை ஜனநாயகத் தன்மையுடையதாக ஆக்குவ தற்கு, அதனுடைய மூன்று முக்கிய கூறு களும் ஓர் அரசாங்கத்துக்கு அவசிய மானவையாகும். துல்லியமாகக் கூறின், நிறைவேற்றல் பிரிவு, அத்துடன் அரச தரப்பினர்களுக்கு மாத்திரமின்றி, "அர சாங்கச் செயற்பாடுகளால்" பாதிக்கப்பட வுள்ளோர் அனைவருக்கும் நியாயத்தை வழங்கக்கூடிய நீதித் துறை என்பன காணப்பட வேண்டும்.

## முடிவுரை

சர்வதேச நிறுவனங்களின் ஜனநாயகமய மாக்கலுக்கான தேவை காலப் பொருத்த முடையதாக இருப்பதுடன், உலகமய மாதல் செயல்முறையில், குறித்த நாட் டிற்கே உரித்தான அரசுகளின் முனைப் பான வகிபாகத்தையும் செல்வாக்கையும் குறைப்பதன் ஊடாக, அது (ஜனநாயக மயமாக்கல்) சாத்தியப்படத்தக்கதாக உள்ளது. தேசிய எல்லைகளுக்குள்ளும் அதற்கு வெளியேயும் பல்வேறு வகை யான நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்தகின்ற, சிவில் சமூக செயற் பாட்டாளர்கள் உட்பட, கரிசனையுடை யோர் அனைவரும் சம்பந்தப்படுகின்ற ஓர் பங்குற்றல் செயல்முறையாக அது இருக்க வேண்டும். மக்களின் வகைமாதிரி யான இயல்புகளை முழு அளவில் சரி பார்ப்புக்கு உட்படுத்தாதுவிடின், பல நாடு களுடன் சம்பந்தப்பட்ட அமைப்புகளை, பிராந்திய மட்டத்திலோ அல்லது தேசிய மட்டத்திலோ, நிறுவுவதை ஊக்குவித்த லானது, தென் உலகு மற்றும் வட உலகு (அபிவிருத்தியடைந்த நாடுகள்) என்பவற் றுக்கு இடையில் காணப்படும் இடை வெளியை எதிர்பாராத விதமாக அதிகரிக் கச் செய்யும். அரசுகளாலும் அரசுகளுக் கிடையிலான அமைப்புகளாலும் ஊக்கு விக்கப்படுகின்ற உலகமயமாதல் செயல் முறைக்குச் சமாந்தரமாக சர்வதேச சிவில் சமூக இயக்கங்களும் இருக்க வேண்டும். இவ்வியக்கங்கள் சர்வதேச அமைப்பு களின் செயற்பாடுகளை, அரசு சார்ந்த சிந்தனைப் போக்கில் இன்றி, மக்களின் முழுமையான நலன்கருதிய சிந்தனைப் போக்கிலிருந்து கண்காணிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும். இந்த சிவில் சமூக இயக்கங்கள், சந்தை சார்ந்த நலன்களுக்கு அல்லது சர்வதேச அமைப் புகளுக்கு உரித்தான நிர்ப்பந்த நிலை களுக்கு சட்டரீதியாகக் கட்டுப்பட்ட வையாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. "உதவி பெறும்" நாடுகளின் மக்களினுடைய அடிப்படை உரிமை களைத் தடுக்கின்ற இந்த உலகமயமாதல் செயல்முறை மீதான சரிபார்ப்பை மேற்கொள்வதற்கான மிகவும் பயனுறுதி வாய்ந்த ஓர் வழிமுறையாக இது இருக்க முடியும். ஜனநாயக நியமங்கள், மனித உரிமை விழுமியங்கள் என்பவற்றைக் கடைப்பிடித்தல் தொடர்பில், குறித்த நாட்டிற்கே உரித்தான அரசுகளின் செயற்பாடுகளை மதிப்பிடுவதற்கென மிக அதிகளவு எண்ணிக்கையிலான கண் காணிப்பு அமைப்புக்கள் காணப்படும் அதேவேளை, அத்தகைய கடைப்பிடித்தல் செயற்பாட்டைக் கோரவேண்டிய கடமைப் பொறுப்பைக் கொண்டுள்ள நிறுவனங் களின் உள்நாட்டுச் செயற்பாடுகளைச் சரிபார்ப்பதற்கு எந்த அமைப்புமே இல்லை என்பது புதுமையான ஓர் உண்மையாகும்.

### அடிக்குறிப்பு

[1] Michael Akehurst, **Modern Introduction to International Law** (1997), p.92

[2] Anghie, Antony., "Sovereignty in the Post Colonial State", in **Imperialism, Sovereignty and the Making of International Law** (2005)

[3] Monbiot George, **The Age of Consent : A Manifesto for a New World Order** (2003),p. 23

[4] Nye and Donahue (eds.), **Governance in A Globalising World** (2000), p.02

[5] Synder, F. G., "Governing Globalization" in Transnational Legal Process: globalization and Power Disparities, Likosky,M. (ed.), (2002 ), at p.67

[6] US Department of State, **1999 Country Reports on Human Rights Practices**, Feb., 2000

[7] See for detail discussion; Peter Burnell (ed.), **Democracy Assistance: International Cooperation for Democratization** (2000), pp.67-89

[8] Randall W. Stone, "The Scope of IMF Conditionality", **International Organization**, Vol.62, No.04, Fall 2008, at p.590

[9] Ibid.

[10] Ibid.

[11] Ibid.

[12] Malcolm W. Shaw, **International Law**, at p.241

[13] 1949 **ICJ Reports** 174

[14] Bowett, D.W., **The Law of International Institutions** (1982), at p. 337.

[15] **Portugal v. Council** [1996] ECR 1-6177

[16] Regulation (EC) No. 1889/2006 of the European Parliament and the Council of 20 Dec. 2006

[17] Stone, op.cit., at p. 594

■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.............12ம் பக்கத் தொடர்ச்சி

மெதுவான முன்னேற்றம் என்பவற்றால் தோற்றுவிக்கப்பட்டுள்ள தொடர்ச்சியான சவால்களுக்கு மத்தியிலும், தென்னாசியாவிற்கு தற்போது வழங்கப்பட்டுள்ள தனித்துவமானதும் முக்கியத்துவம் வாய்ந்தது மான வாய்ப்புகள் இப்பிராந்தியத்தை குறிப்பிடத்தக்களவு பொருளாதார வளர்ச்சியை எய்தக்கூடிய காலகட்டத்திற்கு அண்மித்த நிலையில் வைத்துள்ளன. இவ்வாய்ப்புகளிலிருந்து சரியான வகையில் பயன்பெறப்படுமாயின், மிகுதியான பண்புக் குறியாக அமைந்துள்ள வளர்ந்து வரும் ஓர் பொருளாதார சக்தியாக இப்பிராந்தியத்தை உருவாக்க முடியும். ஆயினும், அதனுடைய வெற்றியானது, மிக முக்கியமாக இந்தியாவின் தொடர்ச்சியான பொருளாதார சாதனைகளிலும் அதன் பின்விளைவாகத் தோற்றம் பெறுகின்ற சூழலின் அனுகூலங்களை உள்வாங்கிக் கொள்வதில் இப்பிராந்தியத்திற்குரிய ஆற்றலிலுமே தங்கியுள்ளது. இது, தற்போதுள்ள பிராந்திய ஒருமைப்பாட்டையும்விட அதிகளவிலான ஒருமைப்பாட்டில் தங்கியுள்ளது. இருந்தபோதிலும், ஒப்பீட்டளவில் மெதுவான முன்னேற்றத்தின் மத்தியிலும், அதை அடைவதற்காக தற்போது அதிகளவு கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. தென்னாசியாவால் அடுத்து வரும் சில வருடங்களில் புவியியல்சார் (பிராந்திய) அரசியல் கரிசனைகளை வெற்றி கொண்டு பிராந்திய ஒருமைப்பாட்டை, குறிப்பாக இந்தியாவுடனான ஒருமைப்பாட்டை, மேலும் விரும்பத்தக்க அளவில் மேம்படுத்தக்கூடியதாக இருக்குமாயின், ஆசியாவினுடைய புத்தம்புதிய பொருளாதார "அற்புதமாக" ஆகுவதற்கான சாத்தியப்பாட்டை அதனால் சிறந்த முறையில் நிறைவு செய்ய முடியும்.

**துணை நூற்பட்டியல்**

[1] Tan Tai Yong (ed.), *Challenges of Economic Growth, Inequality and Conflict in South Asia*, Singapore: World Scientific Publishing, 2010, p. 32.

[2] World Bank, *Reshaping Tomorrow: Is South Asia Ready for the Big Leap?* (forthcoming).

[3] David E. Bloom, David Canning and Larry Rosenberg, "Demographic Change and Economic Growth", in World Bank, *Reshaping Tomorrow: Is South Asia Ready for the Big Leap?* (forthcoming).

[4] *ibid.*

[5] *ibid.*

[6] Homi Kharas, "The Rise of the Middle Class" in World Bank, *Reshaping Tomorrow: Is South Asia Ready for the Big Leap?* (forthcoming).

[7] World Bank, *Reshaping Tomorrow: Is South Asia Ready for the Big Leap?* (forthcoming).

[8] *ibid.*

[9] *ibid.*

[10] Research and Information System for Developing Countries, *South Asia Development and Cooperation Report 2008*, New Delhi: Oxford University Press India, 2008, p. 27.

[11] ibid., p. 27.

[12] Ibid., p. 27.

[13] Ibid., p. 29.

[14] IMF Direction of Trade Online Statistics, <http://www2.imfstatistics.org/DOT/>, last accessed 16 June 2011.

[15] 'Sino-Indian Trade Volume Exceeds USD 60 bn Target', *Jagran Post*, 27 January 2011, http://post.jagran.com/Sino-India-trade-volume-exceeds-USD-60-bn-target-1296141127, last accessed 26 June 2011.

[16] Research and Information System for Developing Countries, *South Asia Development and Cooperation Report 2008*, p. xix.

[17] Research and Information System for Developing Countries, *South Asia Development and Cooperation Report 2008*, p. 47.

[18] Ibid., p. 47.

[19] Ibid., p. 48.

[20] Ibid., p. 53.

[21] Ibid., p. 19.

[22] Ejaz Ghani (ed.), *The Service Revolution in South Asia*, New Delhi: Oxford University Press, 2010, p. 6.

[23] Research and Information System for Developing Countries, *South Asia Development and Cooperation Report 2008*, p. 37.

[24] Ibid., pp. 38-39.

[25] Arvind Panagariya, *India: The Emerging Giant*, New Delhi: Oxford University Press, 2008, p. 266.

[26] Ejaz Ghani (ed.), *The Service Revolution in South Asia*, p. 216.

[27] Research and Information System for Developing Countries, *South Asia Development and Cooperation Report 2008*, p. 54.

■

.............21ம் பக்கத் தொடர்ச்சி

Washington DC.

Bruton Hendry J. (1992). The Political Economy of Poverty, Equity, and Growth: Sri Lanka and Malaysia, The World Bank, Oxford University Press, New York.

Budget Speech (2010 and 2011). Budget Speech of the Government of Sri Lanka, Ministry of Finance, Colombo.

Central Bank of Sri Lanka (various years). Annual Reports of the Central Bank of Sri Lanka, Colombo.

Department of Census and Statistics (2009). Poverty Statistics available at: http://www.statistics.gov.lk/povertyPovertyIndicators2009_10.pdf

Ganeshamoorthy, M. (2002). The Political Economy of Trade Liberalisation in Developing Countries: The Sri Lankan Case, NICCOS, Verlag Fur Entwicklungspolitik Saarbruken GmbH, Germany.

Herbener, J.M. (1999). The Rise and Fall of The Japanese Miracle, Mises Daily, Ludwig Von Mises Institute, available at :http://mises.org/daily/298.

International Monetary Fund (2009). IMF Executive Board Approves US$2.6 Billion Stand By Arrangement for Sri Lanka, IMF Press Release No. 09/266, Available at: http://www.imf.org/external/np/sec/pr/2009/pr09266.htm

Institute of Policy Studies (2007). Mahinda Chintana: A Complementary on Policy Options, IPS Working Paper Series No.11, Colombo.

Lakshman, W.D and Tisdel, C.A. (2000). Sri Lanka's Development Since Independence; Socioeconomic Perspectives and Analysis, Nova Publishers, New York.

Mahinda Chinthana (2005 and 2010) Mahinda Chinthana Policy Document, Government of Sri Lanka, Colombo.

Osmani (1994). Is there a Conflict Between Growth and Welfarism? The Significance of the Sri Lankan Debate, World Development No.25:387-92.

Scott, D. (2008). The 21st Century as Whose Century, Journal of World Systems Research Vol.XIII, No.2:96-118 availablw at http://jwsr.ucr.edu/archive/vol13/Scott-vol13n2.pdf.

Snodgrass, D. R. (1998). The Economic Development of Sri Lanka: A Tale of Missed Opportunities, Development Discussion Paper No. 637, Harvard Institute for International Development, Harvard University.

World Bank (1953). Economic Development of Ceylon, World Bank, John Hopkins Press, Baltimore.

■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலம்வாய்ந்த நாடுகளின் வல்லமையால் நீதியையும் நடுநிலைமையையும் மேம்பட்டு நிற்கமுடியாது* – ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச

ஐ.நா. பொதுச்சபையின் 66 ஆவது கூட்டத்தொடரின் தலைவர் அவர்களே, மேதகைகளே, சீமாட்டிகளே, பண்பாளர்களே!

இக்கூட்டத்தொடரின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டமைக்காக, மேதகு நஸீர் அப்துல் அஸீஸ் அல்–நாஸர் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். அத்துடன், செயலாளர் நாயகமாக மீண்டும் தெரிவு செய்யப்படவுள்ள மேதகு பான்–கீ மூன் அவர்களுக்கும் நட்பிணக்கத்துடன் நான் வாழ்த்துக்கூற வேண்டியுள்ளதோடு, அவருடன் இணைந்து ஆக்கபூர்வமான வகையில் பணியாற்றுவதையும் நாம் எதிர்பார்த்திருக்கின்றோம்.

இங்கு நாம் ஒன்றுகூடியுள்ள இவ்வேளையில், இந்த ஐக்கிய நாடுகள் முறைமையை உருவாக்குவதற்குத் தூண்டிய விழுமியங்களையும் இலட்சியங்களையும் ஆழ்ந்து சிந்திப்பது பொருத்தமானதாகும். ஐ.நா. வின் ஓர் சிறப்பம்சமாக எப்போதும் இருந்து வரும் அதன் நெகிழ்வுத் தன்மை, அதனுடைய முதன்மையான பண்புகளில் ஒன்றாக அமைந்துள்ளது.

திறந்த தன்மைக்கும் இசைவாக்கத்திற்குமான தேவை, எக்காலத்தையும் விட இன்று மிக அதிகமாக உள்ளது என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில், உலக ஒழுங்கின் அத்திவாரம் வியப்பூட்டும் வகையிலும் அடிப்படைக் கட்டமைப்பிலும் மாற்றமடைந்து கொண்டிருக்கின்றது. இம்மாற்றங்களில் முக்கியமானவையாக அபிவிருத்தியடைந்து வரும் உலகிலுள்ள சிறிய நாடுகளைப் பாதுகாப்பதற்கும், அவற்றின் நலன்களைத் திடமாக மேம்படுத்துவதற்குமான தேவை காணப்படுகின்றது.

இந்த நிச்சயமற்ற தன்மையின் மத்தியில், தொடர்ந்தும் நிலையாக இருக்க வேண்டிய சில விடயங்கள் உள்ளன. மிகவும் மதிக்கப்படும் எமது நம்பிக்கையையும் பற்றுறுதியையும் இவை வெளிக்காட்டுகின்றன. பாதுகாப்பான எல்லைகளுக்கு உட்பட்ட வகையில் அமையும், தமக்குச் சொந்தமான ஓர் அரசுக்கு உரித்துடையதாக இருப்பதற்கான பாலஸ்தீன மக்களின் உரிமைகளைப் பற்றி ஏராளமான அங்கத்துவ நாடுகள் இச்சபையில் மீண்டும் மீண்டும் உரையாற்றி வந்துள்ளபோதும், அதை இன்னும் எம்மால் நடைமுறையில் யதார்த்தமான ஒன்றாக ஆக்க முடியவில்லை.

இன்னும் இது நிகழவில்லை என்பது மிகப் பெரும் ஏமாற்றத்திற்குரிய விஷயமாகும். குறுகிய காலத்திற்கு மட்டுமே நீடித்திருக்கும் ஓர் அரிய வாய்ப்பு தற்போது காணப்படுகின்றது. காலம் கடந்து செல்வதற்கு முன்னர் அதை நாம் பயன்படுத்த வேண்டும். மேலும் கலந்துரையாடல்களை மேற்கொள்வதை விட தீர்க்கமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நேரம் இதுவாகும். இஸ்ரேல் உட்பட, முழுமையான இப்பிராந்தியத்தினதும் பாதுகாப்பு மற்றும் நன்னிலை தொடர்பான கரிசனையாக இது இருக்கும்.

இந்த நெருக்கடியான நேரத்தில், ஆபிரிக்கக் கண்டத்திலுள்ள நாடுகளுக்கு நிரந்தரமான ஆதரவை வழங்குவதற்கான அவசியம் பற்றிப் குறிப்பிடுவதும் பயனுடையதாகும்.

பல நூற்றாண்டுகளாகப் பேணி வளர்க்கப்பட்ட விழுமியங்கள், மரபுகள், ஆழமாக நிலைகொண்ட சமயப் பற்றுறுதி என்பவற்றை அனைத்து நாடுகளுமே மனதில் இருத்திப் பேணி வருகின்றன என்பதை நாம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டியது மிக முக்கியமானதாகும். மனித உரிமைகள் எனும் வெளிவேடம் போட்டுக் கொண்டு, அந்நிய கலாசாரத்தின் இயல்புகளைக் கொண்ட உளப் பாங்குகளை அல்லது அணுகுமுறைகளை திணிப்பதன் மூலம் அவற்றைத் திரித்துக் காட்டவோ அல்லது அவற்றின் முனைப்பைக் குறைவடையச் செய்யவோ முடியாது. அவ்வாறு செய்யப்படுமாயின், அது, அடிப்படையில் மனித உரிமை மீறல்களுக்கு சரிநிகரானதாக இருக்கும். பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் இடங்களில், அத்தகைய நடவடிக்கைகளால் ஆண்கள், பெண்கள் அத்துடன் இனிமேல் பிறக்கவுள்ள குழந்தைகளும், பொதுவாக அனைத்து மக்களுமே பாதிக்கப்படாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு மிகுந்த கவனம் எடுக்க வேண்டியுள்ளது.

கியூபா மக்களுக்கான எனது ஆதரவை மீண்டும் ஒரு தடவை வெளிப்படுத்த விரும்புவதுடன், அவர்கள் அனைவரும் வெற்றி பெற வேண்டுமெனவும் வாழ்த்துகின்றேன்.

தலைவர் அவர்களே, மேதகைகளே!

கருத்துகள், அபிப்பிராயங்கள், விழுமியங்கள் என்பவை தொடர்பாகக் கடும் வேற்றுமைகள் தொடரும் அதேவேளை, வேறுபாடுகளைத் தீர்க்கக்கூடிய வழிமுறையை விவாதம், ஆழ்ந்தாராய்வு மற்றும் கருத்தொற்றுமை ஆகியன மாத்திரமே வழங்குகின்றன என்பதை நாம் தெளிவாக அங்கீகரிக்க வேண்டியுள்ளது. பலம்வாய்ந்த நாடுகளின் வல்லமையால் நீதியையும் நடுநிலைமையையும் மேம்பட்டு நிற்க முடியாது.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் நெருக்கடி நிறைந்த இக்காலத்தில், மிக மோசமான பிணக்குகள் காரணமாக தனது ஆற்றல்களை இழந்துகொண்டிருந்த, லிச்சவீ இளவரசனுக்கு புத்த பெருமானால் ஆலோசனையாகக் கூறப்பட்ட, ஒன்றுகூடல், கலந்துரையாடல் மற்றும் நட்புறவும் நல்லெண்ணமும் உடைய ஓர் சூழலில் விட்டு விலகுதல் என்பவற்றை உள்ளடக்கியுள்ள, வெற்றிக்கு வழிவகுக்கும் விவேகமான வார்த்தைகளிலிருந்து, நாம் வழிகாட்டல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். இது, ஐக்கிய நாடுகளின் இன்றியமையாத பண்பாக, குறிப்பாக இக்காலத்திற்கு மிகவும் பொருத்தமானதாக, அமைந்துள்ளது.

பயங்கரவாதத்தால் விடுக்கப்படும் அச்சுறுத்தல், இந்த நவீன உலகின் உறுதிப்பாட்டிற்கும் முன்னேற்றத்திற்கும் குறிப்பிடத்தக்களவு சவாலாக அமைந்துள்ளது. வேண்டுமென்று செய்யப்படாது விடினும், ஒன்றுக்கொன்று ஒவ்வாத தரநியமங்கள் மற்றும் பாரபட்சமான அணுகுமுறைகள் என்பவற்றால், பயங்கரவாதச் சக்திகளுக்கு முன்னரைவிட அதிகளவு உயிர்த்துடிப்பை வழங்க முடியும் என்பதை இவ்வுலகின் அண்மைக்கால அனுபவங்கள் மிகுதியாக எடுத்துக்காட்டுகின்றன. பயங்கரவாதம் தொடர்பாக, அரசியல் ரீதியான சிறிதளவு கருத்து வேறுபாட்டையும் அங்கீகரிப்பதற்கு மறுக்கும், வெளிப்படையானதும் ஒரே சீரானதுமான ஓர் எதிர்வினை இன்றியமையாத வகையில் தேவைப்படுகின்றது.

பயங்கரவாதமானது, செல்வச் செழிப்பும் பலமும் வாய்ந்த நாடுகளால் கூட அதன் பாதிப்பிலிருந்து தப்ப முடியாத ஓர் அச்சுறுத்தலைக் கொடுக்கின்றது. பயங்கரவாதக் குழுக்கள் பெருமளவுக்கு வேறு அமைப்புகளின் வேடத்திலும் செயற்படுகின்றன என்பதை ஞாபகத்தில் கொள்ள வேண்டும். இவற்றிற்கு சட்டரீதியான சிறப்பு உரிமையை வழங்குதலானது, தவிர்க்க முடியாத வகையில் பயங்கரவாதத்தில் ஈடுபடுவோருக்கு ஆதரவையும் ஊக்குவிப்பையும் வழங்குவதாக அமைகின்றது.

பயங்கரவாதம் காரணமாக கால் நூற்றாண்டுக்கும் மேலாக மிகைப்படியான இழப்பை எதிர்கொண்ட ஓர் நாட்டின் தலைவன் என்ற வகையில், பயங்கரவாதத்திலிருந்து இவ்வுலகை விடுவிப்பதற்கு நாம் உறுதியான முடிவு எடுக்க வேண்டுமென வலியுறுத்த விரும்புகிறேன். உறுதியானதும் நடைமுறைச் சாத்தியமுடையதுமான நடவடிக்கைகளைக் களத்தில் மேற்கொள்ள வேண்டும் என்பதுடன், இப்பிரச்சினை தொடர்பாக கூட்டாக வெளியிடும் செய்தியை உரத்த குரலிலும் தெளிவாகவும் இவ்வுலகிற்கு தெரியப்படுத்த வேண்டும்.

தலைவர் அவர்களே, மேதகைகளே!

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் நலன்களை மற்றுமோர் முக்கியமான அம்சத்திலும் கூட பாதுகாக்க வேண்டியுள்ளது. பல்தரப்பு அமைப்புகளின் கட்டமைப்புகளும் நடைமுறைகளும் ஒரே சீரானதாகவும், மாறா நிலைப்பாடு உடையதாகவும் அத்துடன் பாரபட்சமற்றதாகவும் இருக்க வேண்டுமென வலியுறுத்துவது இன்றியமையாத வகையில் முக்கியத்துவமுடையதாகும்.

முன்னரே மனதில் கருக்கொள்ளப்பட்ட எண்ணங்களைக் கைவிட வேண்டுமென, தொலைதூரத்தில் உள்ள தேசங்களில் வசிக்கும் எமது நண்பர்களைக் கேட்டுக்கொள்கின்றோம். தீர்வுத்திட்டங்கள் நெடுங்காலம் நீடித்தவையாக இருப்பதற்கு அவை உள்நாட்டிலே தயாரிக்கப்பட்டவையாக இருக்க வேண்டுமென நாம் உறுதியாக நம்புகின்றோம். எமது சமுதாயங்களுக்கு தொல்லை கொடுக்கும் பிரச்சினைகளுக்கு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும் தீர்வுகளை மனதில் கருக்கொள்வது தெளிவான வகையில் நடைமுறைச் சாத்தியமற்றதாகும்.

எனது நாடு கடந்த மூன்று தசாப்த இருளிலிருந்து விடுபட்டு வெளிச்சத்திற்கு வருவதுடன், எதிர்கால வெற்றிக்கான அறிகுறிகள் காணப்படுவதால், எமது மக்களின் விருப்பங்களை அடியொற்றிய வகையில் எமது நாட்டினுடைய விதியைத் தீர்மானிப்பதற்கான கால அவகாசத்தையும் சுதந்திரத்தையும் வழங்க வேண்டும். அது, ஐக்கிய நாடுகளின் சாசனத்திலும் எம்மைக் கட்டுப்படுத்தும் சர்வதேச சட்டத்தின் முழுமையான கூறுகளிலும் காத்துப் பேணப்படுகின்ற விழுமியங்களுடன் பொருந்தி அமைவதாகக் காணப்படுகின்றது.

தொடர்ச்சி .......... 53ம் பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பகால பௌத்தக் கோட்பாடுகளில் காணப்படும் நீதியும் சமாதானமும் தொடர்பான நுண்ணோக்கு


**கலாநிதி ரஜித பி. குமார**

*முதுநிலை விரிவுரையாளர்*
*பாளி மற்றும் பௌத்தக் கற்கைகள் துறை*
*களனி பல்கலைக்கழகம்*


**அறிமுகம்**

நீதி மற்றும் சமாதானம் ஆகிய இரண்டும் சார்புநிலை எண்ணக்கருக்களாக இருப்பதுடன், நடைமுறையில் மிகுந்த முக்கியத்துவத்தையும் கொண்டுள்ளன. மானிட சமூகம் எப்போதும் நீதியிலும் சமாதானத்திலுமே தங்கியிருப்பதுடன், அவை, அநேகமாக மனித வாழ்வின் அனைத்துக் கூறுகளுடனும் அதிகளவிற்கு தொடர்புபட்டுள்ளன. நீதி இல்லாத நிலையில், சமூகத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவது மிகக் கடினமாக இருப்பதுடன், ஏனையவற்றைவிட அதிகளவு மேலாண்மை நீதிக்கு உண்டு என்பதையும் இது காட்டுகின்றது. ஒரே வகையான இவ்விரு சொற்பதங்களும் வேறுபட்ட குறிப்புப் பொருளைக் கொண்டிருப்ப துடன், மானிட சமூகத்தின் ஒத்திசைவான வாழ்க்கைக்கான அவற்றின் உச்ச உயரளவிலான முக்கியத்துவத்தையும் சுட்டிக் காட்டுகின்றன. பரந்த பொருளிலான சமாதானம் எனும் சொற்பதமானது யுத்தம் அல்லது வன்முறையிலிருந்து விடுபட்ட நிலையையும், அத்துடன் மானிட சமூகத்தில் முரண்பாடுகள், யுத்தச் செயற்பாடுகள், ஒழுங்கின்மை, குழப்பம் என்பன அற்ற, ஒத்திசைவுடனும் நட்புடனும் கூடிய ஓர் நிலையையும் சுட்டிக் காட்டுகின்றது.[1] இந்த குறிப்புப்பொருளின்படி, அதற்கு உளவியல், சமூக, பொருளாதார, அரசியல் முக்கியத்துவம் உண்டு என்பதைப் புரிந்துகொள்ளக்கூடியதாகவுள்ளது. மனித மனதில் சமாதானத்தை விதைக்கும் போது, அது மானிட சமூகம் எனும் விளைநிலத்தில் வளர்ந்து முதிர்ச்சியடைகின்றது. அதனுடைய வளர்ச்சிக்கும் விருத்திக்கும் ஒத்திசைவான ஓர் சமூகச் சூழல், குறிப்பாக நீதியை அனைவரும் சமமாக அனுபவிக்கக்கூடிய சூழல், அவசியமானதாகும். சமாதான வழிமுறை ஊடாகவே சமாதானத்தை அடைய வேண்டும் என்பதுடன், அம்முயற்சியில் நீதியும் முக்கியமான ஓர் கூறாக உள்ளது என்பதையும் இது எடுத்துக் காட்டுகின்றது. நீதியும், சமாதானமும் வெறுமனே புனைவியல் எண்ணக்கருக்களல்ல; அவை மானிட சமூகம் மற்றும் வாழ்க்கை நடைமுறைகளில் காணப்படும் மெய்மையைச் சுட்டிக் காட்டுகின்றன.

பௌத்தக் கோட்பாட்டின்படி, சமூக நிறுவனங்களிலிருந்து கிடைக்கும் முதலாவது பயனை நீதியே சுட்டிக் காட்டுவதுடன், மானிட சமூகத்தில் சமத்துவத்தைப் பேணுவதற்குத் தேவையான ஓர் கூறாகவும் அமைந்துள்ளது.[2] நீதியானது மானிட சமூகத்தில் சமத்துவத்தை அல்லது அனைவரதும் உண்மையான நலன்களின் நோக்கம் ஈடேற உதவுகின்ற, செயல்திறன் மிக்க ஓர் அரசியல் ஒழுங்கை தோற்றுவிக்கின்றது. அதேசமயத்தில், சமாதானம் முதலாவதாக மனதில் தோற்றம் பெறுவதுடன், மக்களிக்கிடையேயான உறவுகளைத் தொடர்ச்சியாகப் பேணுவதற்கான பலம் வாய்ந்த ஓர் அத்திவாரத்தை இடுகின்றது எனக் கருதப்படுகின்றது.[3] அது சமூக, அரசியல், பொருளாதார சேமநல விடயங்களில் செழிப்பு நிலையை உருவாக்குகின்றது. அத்துடன் சமாதானத்தின் விளைவாகத் தோற்றம்பெறுகின்ற, மனிதர்கள் மத்தியில் காணப்படும் ஒருவருடன் ஒருவர் நட்பு ரீதியாகப் பழகுவதற்கான குணம் மற்றும் வேற்றுமையில் ஒற்றுமையாக வாழும் வாழ்க்கை முறை என்பவற்றின் குறியீடாகவும் அமைந்துள்ளது.[4] சமாதானம் என்பது வெறுமனே யுத்தமற்ற ஓர் சூழ்நிலையை மாத்திரமன்றி, கலாசார மற்றும் பொருளாதார ரீதியான புரிந்துணர்வு, வேற்றுமையில் ஒற்றுமை என்பன காணப்படுதலையும் குறிக்கின்றது என்பதை இது எடுத்துக் காட்டுகின்றது. இது, மனித மனதிலும் மானிட சமூகத்திலும் அழிவார்ந்த, வலுச் சண்டைக்கு முனைகின்ற, தீங்கு நிறைந்த கூறுகள் இல்லாத ஓர் சாதகமான நிலையாகும்.

இவ்வாறாக, இவ்விரு எண்ணக்கருக்களும் அரசியலில் காணப்படும் மிக முக்கியமான இலட்சியங்களாக ஆகியுள்ளன. உதாரணமாக, நல்லாட்சியானது எப்பொழுதுமே நீதியையும், சமாதானத்தையும் சுட்டிக்காட்டுகின்றது.[5] சமூகத் தொடர்புகளில் காணப்படும் ஒத்திசைவும், அனைத்து உயிரினங்களதும் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு அவசியமான மனிதத் தேவைகளை நிறைவுசெய்தலுமே பௌத்த போதனைகளின் மூலம் புரிந்து கொள்ளப்பட்டுள்ள நீதியும் சமாதானமும் ஆகும்.[6] சமூகத்தின் அங்கத்தவர்கள் மத்தியில் மனிதனுடைய முனைப்பான விருப்பங்களை (உளத் தேவைகளை) நிறைவு செய்வதையும், தேசிய செல்வங்களைச் சமமாகப் பகிர்ந்தளித்தலையும் அரசு அங்கீகரிக்கின்ற போதே நீதியையும் சமாதானத்தையும் பேண முடியும்.

**நீதியையும் சமாதானத்தைப் பேணுவதில் அரசின் வகிபாகம்**

மனிதனின் உடல் மற்றும் உளத் தேவைகளாக, பிழைப்பாதாரம், பொருளாதார உறுதிப்பாடு, கல்வி, பாதுகாப்பு, சமூகத் தொடர்புகள், உடல் மற்றும் உள ஆரோக்கியம், மனித கௌரவமும் சமூக அந்தஸ்தும், அன்பார்ந்த பரிவு, இரக்கம், ஆன்மீகம் முதலியன போன்ற அடிப்படை மனிதத் தேவைகளை பௌத்தம் அங்கீகரித்துள்ளது. இத்தேவைகளை உடல், உள, ஆன்மீகத் தேவைகள் எனவும் வகைப்படுத்த முடியும். பௌத்த அரசியல், சமூக, பொருளாதார கோட்பாட்டின்படி, மானிட சமூகத்தில் நீதியையும் சமாதானத்தையும் நிறுவி, அவற்றைத் தொடர்ந்து பேண வேண்டுமாயின், இத்தேவைகளை நிறைவு செய்ய வேண்டியுள்ளது.

மானிட சமூகத்தின் பரிணாம வளர்ச்சியை நாம் அவதானிக்கின்ற போது, அதனுடைய பரிணாம வளர்ச்சியின் இயக்காற்றல் செயல்முறையில் அது உள்ளது என்பது வெளிப்படையானதாகும்; மக்களின் தேவைகள் கூட மிகத் துரிதமான வேகத்தில் அதிகரித்துள்ளன. எடுத்துக்காட்டாக, ***அக்கண்ண சுத்தா*** என அழைக்கப்படும் புத்த பெருமானுடைய கருத்தார்ந்த விளக்கப் பேருரையின்படி, இனப்பெருக்கம், வாழ்க்கை, பாதுகாப்பு என்பன அடிப்படை மனிதத் தேவைகளாகக் காணப்படுகின்றன.[7] ஏனைய அனைத்துத் தேவைகளுமே மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று வகையான மனிதத் தேவைகளுடன் தொடர்புடையனவாகும் இந்த அடிப்படை மனிதத் தேவைகளை நிறைவு செய்யும்போது, நீதியையும் சமாதானத்தையும் பாதுகாத்து, பேணக் கூடியதாக இருக்கும். .மேலே குறிப்பிடப்பட்டுள்ள இந்த மனிதத் தேவைகளை நிறைவு செய்வதுடன், அடிப்படையில் நீதி மற்றும் சமாதானம் என்பவற்றைப் பேணுவதற்காகவுமே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிட சமூகத்தில் நல்லாட்சி முறைமை உருவாக்கப்பட்டுள்ளது. மக்களால், நல்லாட்சிக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு, அரசாங்கங்கள் அமைக்கப்படுவதனால், நீதியையும் சமாதானத்தையும் மக்கள் யாவரும் சமமாக அனுபவிக்க்கூடிய ஓர் ஒத்திசைவான சூழலை தோற்றுவிப்பது எந்தவோர் அரசாங்கத்தினதும் கடமைப் பொறுப்பாகும்.[8]

இவ்வாறாக, சமூக நீதியையும் சமாதானத்தையும் பேணுதலானது, மனித அடிப்படைத் தேவைகளை ஆட்சி அமைப்புகள் நிறைவு செய்வதிலேயே பெருமளவுக்கு தங்கியுள்ளது என்பது வெளிப்படையானதாகும். அவற்றுள், பொருளாதார உறுதிப்பாடும் தேசிய செல்வங்களைச் சமமாகப் பகிர்ந்தளித்தலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தனவாகும். சமூகத்தைப் போல தனிநபர்களும் பொருளாதார யதார்த்தங்களில் தங்கியிருப்பதுடன், ஒருவருடைய வாழ்க்கையின் இயல்பையும் சமூகப் படிநிலையையும் தீர்மானிக்கும் முக்கியமான ஓர் காரணியாக இது அமைந்துள்ளது. ***குற்றடந்த, அகண்ண, மஹசுத்தஸ்ஸன*** என அழைக்கப்படும் புத்த பெருமானுடைய கருத்தார்ந்த விளக்கப் பேருரைகள் தனிநபர்களுடைய பொருளாதார நிலைமைகளில் அதிகளவுக்குக் கவனம் செலுத்துவதுடன், இப்பொருளாதார யாதார்த்தங்களை அரசு நிறைவு செய்ய வேண்டுமென ஆலோசனையும் கூறுகின்றன.[9] விசேடமாக, சமூகத்தின் ஒரு பிரிவை அல்லது தனிநபரை சூழக் காணப்படும் செல்வத்தின் சுழற்சியானது, ஒரு சமூகத்தில் ஏராளமான பிரச்சினைகள் நிறைந்த சூழ்நிலைகளுக்கு வழிவகுக்கின்றது. இது, சமூகத்தில் சமத்துவமின்மை, களவு, சூறையாடல், வர்க்கப் பிளவு, வர்க்கப் போராட்டம் என்பவற்றை தோற்றுவிப்பதுடன், சமூகத்தின் பல்வேறுபட்ட பிரிவுகள் மத்தியிலான ஏற்றத்தாழ்வை விரிவடையவும் செய்கின்றது.[10] இது மக்கள் மத்தியில் ஒத்திசைவான உறவுகளுக்கும், நீதி மற்றும் சமாதானம் என்பவற்றைப் பேணுவதற்கும் தடையாக உள்ளது. சமூகத்தின் குறிப்பிட்ட ஓர் பிரிவினரால் மேற்கொள்ளப்படுகின்ற செல்வத்தை பதுக்கிவைக்கும் செயற்பாடு, பாளி மொழி விபரணங்களில், சமூக கட்டமைப்பை சிதைக்கின்ற சமூகப் பிரிவின் மத்தியில் தெளிவான ஏற்றத்தாழ்வை தோற்றுவிக்கும், ***சன்னிட்டிக்கரா***[11] எனும் சொல்லால் அழைக்கப்படுகின்றது. நீதியையும் சமாதானத்தையும் பேணுதலானது, தேசிய செல்வத்தை சமூகங்கள் மத்தியில் சமமாகப் பகிர்ந்தளிப்பதில் தங்கியுள்ளது. தேசிய செல்வத்தைப் பயன்படுத்துவதற்கான சமவாய்ப்பை அனைவரும் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், அனைத்து குடிமக்களும் சமமான பொருளாதாரப் பயன்களை அனுபவிப்பதற்கான வாய்ப்புகளை உருவாக்குவது ஓர் அரசின் கடமைப் பொறுப்பாகும். சமூகத்தின் ஒத்திசைவான வாழ்க்கைக்கு மூலதனம் மற்றும் அகக்கட்டுமான வசதிகள் என்பவற்றை வழங்குதல் இன்றியமையாதவையெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.[12] இவ்விபரணங்களில், பயிர்ச் செய்கை, அரசாங்க சேவை, வணிக முயற்சிகள் மற்றும் ஏனைய தொழில்கள் என்பவற்றிற்கு அதிகளவு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. பௌத்தம் சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளுக்கும் சமமான முக்கியத்துவத்தை வழங்கியுள்ளதுடன், சமூகத்தில் தனிச்சலுகை அடையப்பெற்றுள்ள வர்க்கம் பற்றி விசேடமாக எதுவுமே அதில் குறிப்பிடப்படவில்லை. சமூகத்தில் உள்ள ஒவ்வொரு பிரிவினருக்கும் சமமான வாய்ப்புகள் வழங்கப்படுமாயின், அங்கு சட்டமும் (நீதி) ஒழுங்கும் (சமாதானம்) தோல்வியடைவதற்கு வழிவகுக்கின்ற, சமூக வேற்றுமைகளைத் தடுக்க முடியும்.[13] சமூகத்தின் குறிப்பிட்ட ஒரு பிரிவினர் மாத்திரம் சிறப்புக் கவனத்திற்குரியவர்களாக ஆகும்போது, தனிநபர்கள் மத்தியில் சமத்துவமின்மை தோன்றுவதுடன், முரண்பாடு நிறைந்த சூழ்நிலைகள் தோன்றுவது தவிர்க்க முடியாததாகின்றது. சில பொருளியல் கோட்பாடுகள், தாழ்ந்த நிலையிலுள்ள மக்களின் மோசமான பொருளாதாரச் சூழ்நிலைகளைக் கருவியாகப் பயன்படுத்துவதற்கு முயற்சிப்பதுடன், சமூக முரண்பாடுகளை தோற்றுவிப்பதற்கும், அத்துடன் இதன் மூலம், நெடுங்காலம் நீடித்திருக்கத்தக்க சமாதானத்தையும் சமூக நீதியையும் அடைவதற்கான தீர்வுகளைக் கண்டறிவதற்கு முயற்சிப்பதற்குமான ஓர் வழிவகையாகவும் அதைப் பயன்படுத்துகின்றன. பௌத்தம் அத்தகைய அழிவார்ந்த வழிவகைகளை நிராகரிப்பதுடன், சமூகத்தின் முரண்பாடு நிறைந்த பிரிவுகள் மத்தியில் ஒத்திசைவும் நட்புணர்வும் உடைய உறவைத் தோற்றுவிப்பதன் மூலம், சமூகத்தின் பிளவுண்டு போன பிரிவுகளைச் சமாதானப்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திக் கூறுகின்றது.[14] சமதர்மம், பொதுவுடைமை அல்லது முதலாளித்துவம் என்பவற்றின் இலட்சியங்கள் மெய்யாவதற்காக, சமூகத்தில் காணப்படும் முரண்பாட்டு சூழ்நிலைகளைப் பயன்படுத்துவதை பௌத்தம் ஆதரிக்கவில்லை. சமூகத்தின் பிரிவுகள் மத்தியில் காணப்படும் முரண்பாடுகளை மேலும் மோசமானதாக ஆக்குவதற்குப் பதிலாக, சமூகத்தின் தனிநபர்கள் மத்தியில் ஒத்திசைவான உறவுகளை தோற்றுவிப்பதற்கு பௌத்தம் முயற்சிக்கின்றது.

பௌத்தக் கோட்பாட்டின்படி, மனித மனதின் அடிப்படையான இயல்புகளில் ஒன்று வாழ்க்கையை மகிழ்ச்சியானதாக ஆக்குவதற்கான அருமுயற்சியாகும் என்பதுடன், அதுவே மனிதனை ஏனைய உயிரினங்களிலிருந்து வித்தியாசப்படுத்துகின்ற அடிப்படையான ஓர் உளவியல் செயல் ஊக்கமாகவும் அமைந்துள்ளது.[15] வாழ்க்கை சார்பு நிலையுடையது என்பதுடன், சமூகத் தொடர்பு வலையமைப்பிற்கான அத்திவாரத்தையும் அது இடுகின்றது என்பது வெளிப்படையான ஓர் உண்மையாகும். இதனாலேயே நல்லாட்சி முறைமை ஒன்று அவசியமாகவுள்ளது. ஓர் நல்லாட்சி முறைமையால், மனிதனின் உடல், சமூக, நிதி, அரசியல், தொழில், உணர்ச்சி, ஆன்மீகத் தேவைகளை நிறைவு செய்ய முடியும் என்பதுடன், இயற்கை மற்றும் மனிதனால் தோற்றுவிக்கப்படும் அனர்த்தங்களிலிருந்து மனிதனைப் பாதுகாக்கவும் முடியும். ஆகவே, மனித வாழ்கையின் இனங்காணப்பட்ட இடர்வாய்ப்புகளை கட்டுப்படுத்துவது நல்லாட்சியின் பொறுப்பாகும். மனித சமூகத்தில் நீதிக்கும் சமாதானத்திற்கும் அச்சுறுத்தல் காணப்படும் போது, சீர்ப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளது.[16]

## நீதியும் சமாதானமும் பற்றிய அடிப்படை அறநெறிக் கோட்பாடுகள்

ஓர் சமூகப் படைப்பான தனியாள் அச்சமூகத்தின் ஒரு பகுதியாக இருப்பதுடன், தவிர்க்க முடியாத வகையில், சமூகத்தின் ஏனைய அங்கத்தவர்களுடன் பல்வேறு வகையான சமூகத் தொடர்புகளை விருத்தி செய்கின்றான். இடையூறற்ற ஓர் சமூகத்தைப் பேண வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திடம் உள்ள அதே வேளை, ஒருவருடைய தேவைகளை மற்றொருவர் நிறைவு செய்ய வேண்டிய பாரிய கடமைப் பொறுப்பு சமூகத்தின் ஏனைய அங்கத்தவர்களுக்கும் உண்டு.[17] ஓர் சமூகத்தில் காணப்படும் நீதி, சமாதானம், ஒற்றுமை, ஒத்திசைவு, நேர்மை என்பவை தொடர்பில், தீர்மானிக்கும் காரணியாக தனியாள் நடத்தை அமைந்துள்ளது. தமது தேவைகளை நிறைவு செய்வதற்காக ஏனையோரிடமிருந்து உதவிகளைப் பெறுவதற்கு அனைவரும் விரும்புகின்றனர்.[18] தமது வாழ்க்கையில் மேல்நோக்கிய ஓர் பயணத்தை மேற்கொள்வதற்கு மனிதனை அழைத்துச் செல்லும் உளவியல் ரீதியிலான செயல் ஊக்கமாக மனிதனுடைய எதிர்பார்ப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் முனைப்பான விருப்பங்களும் அமைந்துள்ளன.[19] சமூகத்தில் காணப் படும் எதிர்பார்க்கைகளும் தனியாள் நடத்தையும் சமூகத் தொடர்புகளின் அடிப் படையை உருவாக்குகின்றன. இவ்வா றாக, நீதியையும் சமாதானத்தையும் பாதுகாப்பதில் மனித தொடர்புகளில் காணப்படும் ஒழுங்கைப் பேணலானது, மிகவும் முக்கியத்துவமுடையதாக அமைந்துள்ளது. ஏனையோரின் தேவை கள் மற்றும் எதிர்பார்ப்புகள் தொடர்பில் ஆக்கபூர்வமான முறையில் எதிர்வினை யாற்றுவதுடன், அவர்கள் மீது அக்கறை யும் மதிப்பும் கொண்டிருப்பதும் அவசிய மானதாகும். சமூகத்தின் ஏனைய அங்கத் தவர்கள் வெறுமனே பௌதிகப் பொருட் களல்ல என்பதனால், மனிதனுடைய அடிப் படைத் தேவைகள் தொடர்பில் ஒருவர் மதிப்புணர்வைக் கொண்டிருக்க வேண் டும். இவ்வகையான பொறுப்பு வாய்ந்த சமூக நடத்தையானது, பௌத்தத்தில் ***சமகரியா*** என அழைக்கப்படுகின்றது.[20] இது, சமூகத் தொடர்புகளின் ஒத்திசை வான வாழ்விற்கு ஆதாரமாக அமை கின்ற ஒருவகை நடத்தையாகும். ஒரு வரில் ஒருவர் சார்ந்திருப்பதாகக் காணப் படும், அனைத்து அங்கத்தவர்களினதும் வாழ்க்கையில் உள்ள மெய்மை நிலையே சமூகமாகும். சமூகத்தின் தீங்கு நிறைந்த கூறுகளைக்[21] கட்டுப்படுத்து வதற்கு, சிறந்த ஓர் சட்ட (நீதி) மற்றும் ஒழுங்கு (சமாதானம்) முறைமை எல்லா வற்றிற்கும் மேற்பட்டதாக இருக்க வேண்டும்.[22] மறுபுறத்தில், ஒவ்வொரு தனியாளும் கூட சமூகத்தில் முக்கியமான வகிபாகத்தை ஆற்ற வேண்டும். இதனா லேயே, ஏனையோர் அனைவரதும் தேவைகளை நிறைவு செய்வதில் சிறந்த சமூகத் தொடர்புகளின் முக்கியத்துவம் பற்றி பௌத்தம் வலியுறுத்திக் கூறு கின்றது.

**நீதியும் சமாதானமும் பற்றிய அடிப் படை உளவியல் கோட்பாடு**

பௌத்தக் கோட்பாட்டின்படி, மனமே மனித செயற்பாடுகளின் முன்னறிகுறி யாகும்[23] என்பதுடன், மனித செயற்பாடு களின் இயல்பானது மானிட சமூகத்தின் இயல்பைத் தீர்மானிக்கின்றது. இவ் வாறாக, நீதிக்கும் சமாதானத்திற்கும் உள வியல் ரீதியான ஓர் உறுதியான அடிப் படைக் கோட்பாடு உண்டு. பேராசை, பகைமை, பேரச்சம், போலியான நம் பிக்கை போன்ற மனித மனதின் தீவிர மான நான்கு உணர்வுகளால் ஒருவர் வழிநடத்தப்படக்கூடாது.[24] தீவிரமான விருப்பத்தை சுட்டிக் காட்டுகின்ற ஓர் கொடிய பண்பே பேராசையாகும். இது, குறிப்பிட்ட ஓர் சமூகத்தில், நீதிக்கும் சமாதானத்திற்கும் மிகக் கடுமையான தீங்கை ஏற்படுத்தவல்ல சமூக விரோத நடத்தையை நோக்கி ஓர் மனிதனை வழி நடத்தும். பகைமை அல்லது வெறுப் புணர்ச்சி என்பது சமூகம் தொடர்பாக மிகவும் உறுதியான விருப்பின்மையை யும் நட்புணர்வற்ற உளவியல் செயல் ஊக்கத்தையும் சுட்டிக் காட்டுவதுடன், மனிதனின் ஒத்திசைவான வாழ்க்கைக்கு ஊறும் விளைவிக்கின்றது. இது, ஓர் கருத்துரைப்பாகவோ அல்லது செயலா கவோ இருக்க முடியும். மேலும் இது, வெறுப்புணர்வும் வன்மமும் நிறைந்த ஒரு வகை உணர்வாகிய கோபமாக வெளிப் படுகின்றது. பேரச்சம் அல்லது கோழைத் தனமானது, நீதிக்கும் சமாதானத்திற்கும் அச்சுறுத்தலாக அமைந்துள்ள, மானிட சமூகத்தின் சகவாழ்வை சுக்குநூறாக்கித் தீங்கு விளைவிக்கும் விடயங்களை மேற் கொள்வதற்கு ஒருவரை வழிநடத்துகின் றது. சவால் நிறைந்த ஓர் சூழ்நிலையின் காரணத்தை புரிந்துகொள்வதில் காணப் படும் ஆற்றலின்மையை போலி நடத்தை சுட்டிக்காட்டுகின்றது.

சம்பந்தப்பட்ட இயற்கை உளச்சார்புடன் பொருட்கள் தொடர்புறுவதன் விளை வாக, நோக்குகள், சிந்தனைகள், கருத்து கள், எண்ணக்கருக்கள் என்பன மனித மனதில் தோற்றம் பெறுகின்றன. இதன் இறுதி விளைவு யாதெனில், புறவயமான உலகம் பற்றிய எண்ணக்கருவாக்கமா கும்.[25] மனிதனின் விதியை வடிவமைக் கும் தவறான சித்தாந்தங்கள், நோக்கு கள், சிந்தனைகள், எண்ணக்கருக்கள் போன்றவற்றை சீர்ப்படுத்தி திருத்திய மைப்பதற்கு அவசியமான அடிப்படை களை பௌத்தம் உருவாக்கியுள்ளது. உதாரணமாக, தனியாள் ஒருவரின் உள மற்றும் உடல் சார்ந்த நடத்தையில் அதிகளவு தாக்கத்தைக் கொண்டுள்ள எடுத்துக்காட்டுகளில் ஒன்றாக, பௌத்த அரசியல் மற்றும் பொருளாதாரக் கோட் பாடு அமைந்துள்ளது. நல்லாட்சி பற்றி பௌத்த கோட்பாடுகளின் மூலாதார மானது, தோழமை நிலைமையில் உள்ள மனிதர்கள் மத்தியில் சமாதானத்தையும் ஒத்திசைவையும் தோற்றுவிக்கின்ற தரும சிந்தை, அன்பார்ந்த பரிவு, உண்மைத் தன்மை, தயாள குணம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

**நீதிக்கும் சமாதானத்திற்கும் அத்தியா வசியமான ஓர் முறைமையாக தொடர்பாடல்**

பௌத்த போதனைகளின்படி, நீதியையும் சமாதானத்தையும் பேணுவதற்கு அத்தி யாவசியமான ஓர் முறைமையாக தொடர் பாடல் அமைந்துள்ளது என்பதுடன், உண் மைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை என்பவற்றிற்கான உறுதிவாய்ந்த ஓர் அத்திவாரத்தையும் அது கொண்டிருக்க வேண்டும். தொடர்பாடலானது அடிப்படை யில் இரு அம்சங்களைக், அதாவது தீங்கு நிறைந்த மற்றும் தீங்கற்ற தொடர் பாடலை, கொண்டுள்ளது. சமாதானத்தை யும் சமூக நீதியையும் பலவீனமாக்குவ தற்கு வழிவகுக்கும் தீங்கு நிறைந்த தொடர்பாடலை, கீழே காட்டப்பட்டுள்ள வாறு நான்கு அம்சங்களாக[26] வகைப் படுத்த முடியும்.

தீங்கு நிறைந்த தொடர்பாடலும் அதன் பின்விளைவுகளும்

| தீங்கு நிறைந்த தொடர்பாடல் | பின்விளைவுகள் |
|---|---|
| பொய்யுரை | ஏமாற்றுதலும் ஒருதலைப்பற்றாக நடத்தலும் |
| இனிமையற்ற சொற்கள் | தீய எண்ணமும் சமத்துவமின்மையும் |
| வன் சொற்கள் | ஒத்திசைவின்மையும் பாரபட்சமும் |
| பயனற்ற சொற்கள் | அநீதியும் நியாயமின்மையும் |

பொறுப்பற்ற தொடர்பாடலானது சமூகத் தில் ஏமாற்று, காழ்புணர்ச்சி, ஒத்திசை வின்மை, அநீதி என்பவற்றைத் தோற்று விக்கின்றது. ஏமாற்றுதலும் தீய எண்ண மும் மோசமான தொடர்பாடலின் உளவி யல் ரீதியான இரு விளைவுகளாக இருக் கும் அதேவேளை, ஒத்திசைவின்மையும் அநீதியும் மோசமான தொடர்பாடலின் சமூக ரீதியான பின்விளைவுகளாகும். இவ்வகையான தொடர்பாடல்கள் ஒத் திசைவான சமூக வாழ்க்கைக்கு அத்தி யாவசியமான மனித மனோதிடத்தையும், சக்தியையும் நலிவுறச் செய்கின்றன. இதனால், சிறந்த ஓர் தொடர்பாடலைப் பேணுவதற்கான சாதகமான பண்பு களைத் தோற்றுவிக்க வேண்டியுள்ளது.[27] சுயநலத்துடன் அல்லது அனுகூல மொன்றை எதிர்பார்த்து ஆலோசனை கள் கூறப்படலாகாது.[28] ஒத்திசைவு, ஒருமைப்பாடு, நட்பார்ந்த சகோதரத்து வம், புரிந்துணர்வு என்பவற்றை விருத்தி செய்ய உதவும் வார்த்தைகள் வெளிப் படுத்தப்பட வேண்டும்.[29] தொடர்பாடலில் காணப்படும் பின்வருவனவற்றை, அதா வது பொருத்தமான நேரத்தில் மேற் கொள்ளப்படும் தொடர்பாடல், சரியான தகவல்களை வழங்குதல், மொழியைப் பொருத்தமான வகையில் உபயோகித் தல், அர்த்தம் நிறைந்த தகவல்களின் உபயோகம், நீதி மற்றும் சமாதானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றின் உள்நோக்கம் முதலிய வற்றை, ஒருவர் கடைப்பிடிக்க வேண்டும். மேலும், தொடர்பாடலில் ஒருவர் மனதிற்கு உகந்த சொற்களின் பிரயோகம், இனிய உரையாடல், துளியளவும் கறைபடாத முறை, கருத்து நிறைவு, தொடர்பாடலைப் பெறுவோரின் கவனத்தை மிகத்தெளிவாக ஈர்க்கும் வகையில் வெளிப்படையாகத் தகவல்களை வழங்குதல், சிறந்த முறையில் கருத்துகளை முன்வைத்தல், தொடர்பாடலைப் பெறுவோரின் பெரு மகிழ்ச்சி முதலிய வற்றை கவனத்தில் கொள்ள வேண்டும்.[30] பொய்யுரைப்பதை முழுமையாகத் தவிர்ப்பதற்கும் சமூகத்தில் உண்மைத்தன்மையை ஊக்குவிப்பதற்கும் பௌத்தத்தில் ஆலோசனைகள் கூறப்பட்டுள்ளன. சமூகத்தில் உண்மைத்தன்மையை ஊக்குவித்தல் மற்றும் பொய்யுரையின் ஏற்பின்மை என்பன நீதிக்கும் சமாதானத்திற்குமான ஓர் சிறந்த அத்திவாரத்தை இடுகின்றன.

## முடிவுரை

நீதிக்கும் சமாதானத்திற்கும் உளவியல், சமூக, பொருளாதார, அரசியல் ரீதியான விளைவுகள் உண்டு என்பது வெளிப்படையானதாகும். ஒரேவகையான இவ்விரு எண்ணக்கருக்களும் சார்புநிலையான மற்றும் நடைமுறையுடன் தொடர்புடைய முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளதுடன், மானிட சமூகத்தின் கட்டமைப்பை அவையே உருவாக்குகின்றன. சமூகத்தில் சமாதானத்தை எப்போதும் பாதுகாப்பது நீதியேயாகும். இவ்வாறாக, சமூகத்தில் நீதியையும் சமாதானத்தையும் பேணுவது, ஓர் நாட்டை ஆட்சி செய்யும் அமைப்பின் மிக முக்கியமான கடமைப் பொறுப்பாகும். சமூக நீதியை நிறுவுதல் மற்றும் சமாதானத்தை அடைதல் ஆகிய செயல்முறைகளில், அடிப்படை மனிதத் தேவைகள் அடையாளம் காணப்பட்டு, அவற்றின் நடைமுறையிலும் கோட்பாட்டு ரீதியான விடயத்திலும் கவனஞ் செலுத்தப்பட வேண்டும். நீதிக்கும் சமாதானத்திற்கும் சிறந்ததோர் அத்திவாரத்தை இடும் மனித தேவைகளை நிறைவு செய்வதில், சமூகமொன்றின் அனைத்து உறுப்பினர்களுடன் சேர்த்து, அரசுக்கும் பாரிய கடமைப் பொறுப்பு உண்டு. மானிட சமூகத்திற்கு தூண்டுதல் வழங்கும் சக்தியாக, முனைப்பான விருப்பங்களின் பல்வேறு வகைகள் மற்றும் அச்சமூகத்தின் அங்கத்தவர்களது பொருள்சார் தேவைகள் என்பன அமைந்துள்ளன. எவ்வாறாயினும், பௌத்த போதனைகளின்படி, சமூகம் ஒன்றில் காணப்படும் நீதியின் பண்புத்தரமும் இயல்பும் யாதெனில், சமாதனத்திற்கு ஊக்கமளிக்கும் கோட்பாடும் அதைத் தீர்மானிக்கும் கூறுகளுமாகும்.

### அடிக்குறிப்பு

[1] Scott, Foresman Advanced Dictionary, Thorndike E.L., Clarence L. Barnhart, Scott, Foresman and Company, California, 1979, p.751

[2] Scott, Foresman Advanced Dictionary, Thorndike E.L., Clarence L. Barnhart, Scott, Foresman and Company, California, 1979 p. 558

[3] The Pali-English Dictionary. Rhys Davids. T.W. William Stede. New Delhi. 1997, p. 681

[4] Ibid

[5] Kutadanta Sutta, Dighanikaya No 05, Phys Davids T.W. Buddhist Publication Society Kandy, 1984, pp.7,8 ,9,10

[6] Encyclopaedia of Buddhism Extract-No. 3, Social Dimensions of Buddhism, Ministry of Buddhasasana, Sri Lanka1995, p.11

[7] Estlin Carpenter J. Dighanikaya, Vol.iii,Pali Text Society, Oxford,1992, pp.189,190,191

[8] Rhys Davids T.W. Estlin Carpenter, Dighanikaya, Vol.i. The Pali Text Society, London, 1975, p.133

[9] Rhys Davids T.W. Estlin Carpenter, Dighanikaya, Vol.ii. The Pali Text Society, London, 1982, pp,173,180

[10] Estlin Carpenter, Dighanikaya, Vol.i. The Pali Text Society, London, 1975, p.133

[11] Rhys Davids T.W. Estlin Carpenter, Dighanikaya, Vol.ii. The Pali Text Society, London, 1982, pp, 89, 90, 91, 92

[12] Encyclopaedia of Buddhism Extract-No. 3, Social Dimensions of Buddhism, Ministry of Buddhasasana, Sri Lanka 1995, pp.10,18, 19, 20.

[13] Encyclopaedia of Buddhism Extract-No. 3, Social Dimensions of Buddhism, Ministry of Buddhasasana, Sri Lanka 1995, pp, 13, 14, 15, 16

[14] Rhys Davids T.W. Estlin Carpenter, Dighanikaya, Vol.ii. The Pali Text Society, London, 1982, pp,173,174,175

[15] Venerable Sri Acariya Buddharakkhita, Dhammapada, Buddha Vacara Trust, Bangalore, 1986, p.52

[16] Estlin Carpenter J. Dighanikaya, vol.iii, Pali Text Society, Oxford,1992, pp.189,190,191

[17] Estlin Carpenter J. Dighanikaya, vol.iii, Pali Text Society, Oxford,1992, pp.189,190,191

[18] Jayatilaka, K. N. Buddhism and Peace, The Wheel Publication No.41, Buddhist Publication Society, Kandy, 1983, p.8

[19] Venerable Sri Acariya Buddharakkhita, Dhammapada, Buddha Vacara Trust, Bangalore, 1986, p.52

[20] Horner I.B.The Middle Length Sayings, Vol.i.The Pali Text Society, London,1995,pp.54,55

[21] Ibid.

[22] Rhys Davids T.W. Estlin Carpenter, Dighanikaya, Vol.ii. The Pali Text Society, London, 1982, pp,80,81

[23] Venerable Sri Acariya Buddharakkhita, Dhammapada, Buddha Vacara Trust, Bangalore, 1986, p.2

[24] Nayanatiloka, Buddhist Dictionary, The Corporate Body of the Buddha Educational Foundation, Taiwan,1987, p.6

[25] The Pali-English Dictionary. Rhys Davids. T.W. William Stede. New Delhi. 1997, p. 681

[26] Dighanikaya iii,pp.45,48

[27] Bhikkhu Nanamoli, The Exposition of Non-Conflict, The Wheel Publication No.269, Buddhist Publication Society, Kandy, 1979, pp.8,9

[28] Dines Andersen & Helmer Smith, Suttanipata, The Pali Text Society, Oxford, 1990, p.22

[29] Rhys Davids T.W. Estlin Carpenter, Dighanikaya, Vol.i. The Pali Text Society, London, 1975, pp.36,37,38

[30] *pannapana, patthapana, vivarana, vibajana, uttanikatum.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரசாயன ஆயுதங்களும் அவற்றின் உபயோகம் தொடர்பான சர்வதேச எதிர்வினையும்

**கலாநிதி ரணில் டி. குணரட்ண**

***இரசாயனவியல் துறை***

***கொழும்பு பல்கலைக்கழகம்***

**அறிமுகம்**

2010 ஜனவரி 25 ஆம் திகதி அன்று, முன்னாள் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைனின் தொலை உறவினரான அலி ஹசன் அல் மஜீத் என்பவருக்கு எதிரான வழக்கில் மரண தண்டனை நிறைவேற்றப் பட்டது. ஈராக்கிய குர்தீஸ் இனத்தவர்கள் அவனை ***அலி கிமியானி*** அல்லது ***கெமிக்கல் அலி*** என அழைத்து வந்தனர். அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்படுவதற்கு காரணமாக அமைந்த பல் வேறு குற்றச் செயல்களில் ஒன்று; 1988 ஆம் ஆண்டு வட ஈராக்கிலுள்ள ஹலப்ஜா எனும் குர்தீஸ் இனத்தவர்களுடைய நகர் மீது மேற்கொள்ளப்பட்ட நச்சு வாயுத் தாக்குதலில் அவனுக்கு இருந்த தொடர்பாகும்.

இந்த ஹலப்ஜா ஈராக்கின் குர்தீஸ் பகுதியிலுள்ள ஓர் நகராகும். இது ஈரானிய எல்லையிலிருந்து சுமார் 11 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளதுடன், அண்ணளவாக 45 ஆயிரம் மக்கள் தொகையைக் கொண்ட இந்நகரில் வசிப்போரில் பெரும்பான்மையானோர் குர்தீஸ் இனத்தவர்களாவர். ஈராக்கிய குர்தீஸ் இனத்தவர்கள், சதாம் ஹுசைனின் ஆட்சியுடன் பல வருடங்களாக முரண்பாடுகளைக் கொண்டிருந்தனர். இதன் காரணமாக, ஹலப்ஜா மக்கள் 1988 மார்ச் 17 ஆம் திகதியன்று மிகக் கடுமையாகத் துன்பப்பட வேண்டியிருந்தது. அன்றைய தினம் பொழுது விடிவதற்கு முன்னர், ஈராக்கிய யுத்த விமானங்கள் இந்த நகர் மீது பாரிய தாக்குதல் ஒன்றை ஆரம்பித்தன. இது பல மணிநேரம் நீடித்தது. இத்தாக்குதலின் ஒரு பகுதியாக, மரபு ரீதியான ஆயுதத் தொகுதி உபயோகிக்கப்பட்ட அதே வேளை, இரசாயன ஆயுதங்களில் தமக்குள்ள புதிய இயலாற்றலை பரீட்சித்துப் பார்ப்பதற்கு, ஈராக்கிய இராணுவம் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியது. இதில், தோலைச் சுட்டெரிக்கும் வாயு (mustard gas), மத்திய நரம்புத் தொகுதியை தாக்கும் வாயு (nerve gas) ஆகிய இரண்டுமே பயன்படுத்தப்பட்டதாக நம்பப்படுகின்றது. இரசாயன ஆயுதங்களால் மட்டும் ஏற்பட்ட உயிரிழப்பு அண்ணளவாக 5 ஆயிரம் என மதிப்பிடப்பட்டுள்ளதுடன், அத்தகைய ஆயுதங்கள் காரணமாக இது வரையில் ஏற்பட்ட மிகப் பெரும் உயிரிழப்பாகவும் இது அமைந்துள்ளது. உண்மையில், நச்சு இரசாயனங்களின் பாதிப்புக்கு உட்பட்டமையின் விளைவாக நிகழ்ந்த மிகப் பெரும் உயிரிழப்புக்கு 1984ல் இந்தியாவின் போபாலில் ஏற்பட்ட கைத்தொழில் விபத்து காரணமாக அமைந்திருந்தது.

1988 இல், ஈரானுக்கு எதிரான யுத்தத்தில் சதாம் ஹுசைனின் நிலைப்பாட்டிற்கு மேற்கு நாடுகள் ஆதரவாக இருந்தமையால், ஹலப்ஜா தொடர்பான சர்வதேச எதிர்வினை தணிந்திருந்தது. ஆயினும், இந்த ஹலப்ஜா இதுவரையில் இல்லாத, அனைத்தையும் உள்ளடக்கிய, சமநிலையான மற்றும் வெற்றிகரமான ஆயுத உடன்படிக்கைகளில் ஒன்றை நிறை வேற்றுவதற்கான ஓர் ஊக்கியாகியது.

**இரசாயன ஆயுதங்கள் என்றால் என்ன?**

இரசாயன ஆயுதங்கள் தொடர்பான சமவாயமானது, இரசாயன ஆயுதங்களைப் பின்வருமாறு வரையறுக்கின்றது. இச்சமவாயம் பற்றி பின்னர் விரிவாக எடுத்துரைக்கப்படும்.

i. **நச்சுத்தன்மை வாய்ந்த இரசாயனங்களும் அவற்றின் முன்னோடித் தயாரிப்புக்களும்** - அதாவது, இரசாயன ஆயுதங்கள் தொடர்பான இச்சமவாயத்தின் கீழ் தடைசெய்யப்படாத நோக்கங்களுக்காக திட்டமிடப் பட்டவை தவிர்ந்த ஏனையவை.

ii. **படைக்கலங்களும் கருவிகளும்** - அத்தகைய இரசாயனங்களின் நச்சியலான இயல்புகள் ஊடாக மரணம் அல்லது ஊறு விளைவிப்பதற்காக விசேடமாக வடிவமைக்கப்பட்டவை.

iii. **துணைக்கருவிகள்** - அத்தகைய படைக்கலங்கள் மற்றும் கருவிகள் என்பவற்றின் பயன்பாட்டுடன் நேரடியாகத் தொடர்புற்ற வகையில் உபயோகிப்பதற்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட ஏதாவது கருவிகள்.

இவ்வரைவிலக்கணத்தின்படி, இரசாயனங்களின் நச்சுத்தன்மைப் பாதிப்பின் ஊடாக மனிதர்களுக்கு நேரடியாக மரணம் அல்லது ஊறு விளைவிப்பனவாகக் கருதப்படுவனவே இந்த இரசாயன ஆயுதங்களாகும். இந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படக் கூடிய இரசாயனங்களில் சில, மூலமுதல் நிலையில் உயிரியல் ரீதியானதாகக் காணப்படுவதுடன், அவற்றை உயிரியல் ஆயுதங்கள் எனக் கூட வகைப்படுத்த முடியும். ஒரு நாட்டின் பயிர்களை அல்லது வனத்திலுள்ள தாவரங்களை அழிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட இரசாயனங்களை (உதாரணமாக, வியட்நாம் யுத்த காலத்தில் அமெரிக்காவால் பயன்படுத்தப்பட்ட Agent Orange என அழைக்கப்படும் இரசாயனத்தை) நிச்சயமாக, சட்டரீதியான ஆயுதங்களாகக் கருதக்கூடும். ஆனால், அவை மேலே குறிப்பிடப்பட்ட இச்சமவாயத்தில் உள்ளடக்கப்படவில்லை.

நச்சுப் பொருட்களாகக் கருதப்படுகின்ற இவ்விரசாயன ஆயுதங்கள், வரலாற்றின் பெரும்பகுதி முழுவதுமே எம்முடன் இருந்து வந்துள்ளன. இங்கே எமது கரிசனைக்குரிய விடயம் எதுவெனில், யுத்தச் செயற்பாடுகளில் 'பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களாக' பரியளவில் பயன்படுத்தப்படக்கூடியதும், அத்துடன் மிக அண்மைக் காலத்தில் பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்டுள்ள இரசாயனங்கள் தொடர்பானவையாகும்.

**இரசாயன ஆயுதங்களின் வகைகள்**

ஆயுதங்களாகப் பயன்படுத்தப்படக் கூடிய நிகழ்வாய்ப்புகளைக் கொண்டுள்ள இரசாயனங்களை பின்வருமாறு, சரிநுட்பமற்ற வகையில், 6 பிரிவுகளாக வகைப்படுத்த முடியும்.

i **நுரையீரலைப் (மூச்சடைக்கச் செய்யும்) பாதிக்கும் இரசாயனப் பொருட்கள்:** இவை, குளோறின் *(chlorine)* (கைத்தொழில்களில் இதைப் பரவலாகப் பயன்படுத்தப்படுவதால், இது பட்டியலிடப்பட்ட ஓர் இரசாயனம் அன்று), பீன் *(phosgene)*, குளோறோபிக்ரீன் *(chloropicrin)* போன்ற வாயுக்களை உள்ளடக்கியுள்ளன. யுத்தச் செயற்பாடுகளில் பயன்படுத்தப்படக் கூடிய முதல்தரமான நச்சு வாயுக்களாக இவை உள்ளன. இவ்வாயுக்கள் சுவாசிப்பதைத் தடுத்து, நுரையீரலைப் பாதிப்புறச் செய்யும் வகையில் செயற்படுகின்றன.

ii **குருதியில் பாதிப்பை ஏற்படுத்தும் இரசாயனப் பொருட்கள்:** இவை, றைசின் *(ricin)* மற்றும் சக்சிரொக்சின் *(saxitoxin)* போன்ற உயிரியல் நச்சுப் பொருட்களுடன் சேர்த்து, ஐதரசன் சயனைட் *(hydrogen cyanide)* போன்ற நச்சுப் பொருட்களையும் உள்ளடக்கியுள்ளன. இவை, குருதிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றோட்டத்தின் மூலம் கலங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அவற்றில் பல்வேறுபட்ட வழிமுறைகளில் செயல் புரிகின்றன. இவ்வாறு வகைப்படுத்தப் பட்டுள்ள இச்சேர்வைகள் வாயுக்களா கவோ அல்லது பரவக்கூடிய திண்மங் களாகவோ இருக்கக்கூடும் என்பது டன், மிகச் சிறிய அளவிலேயே மர ணத்தை ஏற்படுத்தக் கூடியனவாக உள்ளன.

iii **தீக்கொப்புளங்களை உண்டாக் கும் இரசாயனப் பொருட்கள்:** லூவைசைற் *(lewisite)* போன்ற ஆ சனிக்கைக் கொண்டுள்ள சேர்வைகளு டன் சேர்த்து, தோலைச் சுட்டெரிக்கும் வாயுக்கள் *(sulphur mustard, nitrogen mustard)* என அழைக்கப்படுவன வற்றை இவை உள்ளடக்கியுள்ளன. இவை தோலுடன் தொடுகையுறுகை யில், கொப்புளங்களை உண்டாக்குவ துடன், நுரையீரல் மீதான அவற்றின் பாதிப்புகள் மரணத்தை உண்டாக்க வல்லன. இந்த சல்பர் மஸ்ரட்டானது *(sulphur mustard)* குளோறின் *(chlorine)* மற்றும் பீன் *(phosgene)* என்ப வற்றுடன் சேர்த்து முதலாம் உலக யுத்தத்தில் பரவலாகப் பயன்படுத்தப் பட்டதோடு, 1980களில், ஈரானுக்கு எதிரான யுத்தத்தில் ஈராக்கால் பயன் படுத்தப்பட்டது.

iv **நரம்புத் தொகுதியைப் பாதிக்கும் இரசாயனப் பொருட்கள்:** இவை, மிக முக்கியமான நொதியமாகிய அசற்றைல்கோலின்எஸ்ரரேஸ்ஸை *(acetylcholinesterase)* நிரந்தரமாகச் செயலிழக்கச் செய்வதன் மூலம், மத் திய நரம்புத் தொகுதியைப் பாதிக் கின்ற சேர்வைகளாகக் காணப்படுகின் றன. இவை, கட்டமைப்பில் பொது வான பூச்சி நாசினிகளை ஒத்ததாக இருப்பதுடன், ஓகனோபொஸ்பரஸ் *(organophosphorus)* சேர்வைகள் என அழைக்கப்படும் இரசாயன வகை களுக்கு உரியனவாகும். ராபண் *(tabun)*, சாறின் *(sarin)*, சேமன் *(soman)* ஆகிய, நரம்புத் தொகுதி யைப் பாதிக்கும் முற்காலத்திற்கு உரிய இந்த இரசாயனப் பொருட்கள் 1930களில் ஜேர்மன் விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பனிப் போர் காலத்தில் இரு தரப் பினராலும் அவை சேகரித்து வைக்கப் பட்டன. ஒப்பீட்டு ரீதியில் இலகுவாக உற்பத்தி செய்யக்கூடிய தன்மை, எளி தில் ஆவியாகக்கூடிய இயல்பு என் பன காரணமாக, சிறிய நாடுகள் மற்றும் பயங்கரவாத அமைப்புகள் என்பவற்றின் மத்தியில் சாறின் *(sarin)* மிகவும் பிரசித்தி பெற்ற ஓர் தெரிவாக இருந்து வந்தது. நரம்புத் தொகுதியைப் பாதிக்கும் இந்த இர சாயனப் பொருட்களின் பாதிப்பிற்கு உள்ளாவதற்கு அவற்றை சுவாசிக்க வேண்டுமென்பதில்லை; அவை தோலின் ஊடாக உறிஞ்சப்படக்கூடி யவை. நரம்புத் தொகுதியைப் பாதிக் கும் இந்த நச்சுப் பொருட்களின் புதிய தலைமுறையின் முதலாவது தொகுதியை ஐக்கிய அமெரிக்கா 1970களில் உருவாக்கியது. VX எனும் அடையாளக் குறியைக் கொண்டுள்ள இப்பதார்த்தத்தின் 10 மில்லிகிராம் அளவு தோலில் தொடு கையுறுமாயின், அது மரணத்தை உண்டாக்கக் கூடியளவு மிகவும் அழி வார்ந்ததாகும். தன்னை ஏனைய நாடுகள் விஞ்சாது இருப்பதற்காக, VR எனும் அடையாளக் குறியைக் கொண்ட, தனது சொந்த மாற்று வடிவத்தை சோவியத் ஒன்றியம் விருத்தி செய்தது.

v **முடமாக்கும் இரசாயனப் பொருட் கள்:** இவை, செயற்கையான போதை மருந்துகள் உள்ளடங்கலான, மிகச் சிறிய அளவிலேயே மரணத்தை உண்டாக்கக் கூடியன என்பது உண் மையாயினும், அவற்றின் பாதிப்பிற்கு உட்படுவதனால் மக்களை உடல் அல் லது உள ரீதியாக முடமாக்குகின்ற இரசாயனச் சேர்வைகளாகும்.

vi **கண்ணீர்ப்புகைகள்:** இவை, கலகங் களைக் கட்டுப்படுத்துவதற்கான இரசா யனப் பொருட்களாக பொலிஸ் படை களால் பரவலாகப் பயன்படுத்தப்படு கின்ற அதேவேளை மரணத்தை ஏற் படுத்தாததும், எரிவை உண்டாக்கு வதுமான இரசாயனங்களாக இருப்ப துடன், தனிப்பட்ட பாதுகாப்புக் கருவி களில் (கண்ணில் எரிவு, கண்ணீர் ஆகியவற்றை உண்டாக்குவதுடன், தற்காலிகமாகப் பார்வையைக்கூட இல்லாமற் செய்யும் 'Pepper spray' அல்லது Oleoresin Capsicum, அல் லது OC gas அல்லது capsicum spray, எனும் பெயர்களாலும் அழைக் கப்படுகின்ற ஆயுதம் மற்றும் 'கதாயு தம்') கூடக் காணப்படுகின்றன. ஒரு நாட்டின் சொந்தப் பிரஜைகளுக்கு எதிராக இவற்றைப் பாவிப்பது சட்ட ரீதியானதாக இருக்கக்கூடும் எனினும், எதிரி நாட்டு இராணுவச் சிப்பாய் களுக்கு எதிராக கண்ணீர்ப்புகையை உபயோகித்தலானது இரசாயன ஆயு தங்கள் தொடர்பான சமவாயத்தால் சட்ட ரீதியாகச் செல்லுபடியற்றதாக்க ஆக்கப்பட்டுள்ளது.

### இரசாயன ஆயுதங்களின் சுருக்கமான வரலாறு

இரசாயனங்களை, குறிப்பாக நச்சுத் தன்மை வாய்ந்த வாயுக்களை, ஆயுதங்க ளாகப் பயன்படுத்துவதற்கான நிகழ்வாய்ப் புகள் 19ஆம் நூற்றாண்டிலேயே வெளிப் படையாக தெரிய வந்தன. இந்த நூற் றாண்டின் ஆரம்பத்தில், ஐரோப்பாவி லுள்ள பெரிய நாடுகள் ஏராளமான படைக்கலங்களைப் பெற்று யுத்தத்திற்குத் தயாராக இருந்ததுடன், முதலாம் உலக மகா யுத்தம் விரைவில் நிகழ்வதற்கான வாய்ப்பும் இருந்தது. தவிர்க்க முடியாத இந்த நிலைமையை நிகழாது தடுத்து நிறுத்துவதற்கான ஓர் முயற்சியே, நெதர்லாந்தின் தலைநகரான ஹேக்கில் முறையே 1899, 1907ம் ஆண்டுகளில் நடைபெற்ற முதலாவது மற்றும் இரண் டாவது சமாதான மகாநாடுகளாகும். இந்த ஒன்றுகூடலின்போது அடையப்பெற்ற உடன்பாடுகளில் ஒன்றான, 1899 ஆம் ஆண்டின் ஹேக் உடன்படிக்கையானது நச்சுப் பொருட்கள், நச்சுத்தன்மை வாய்ந்த ஆயுதங்கள் மற்றும் 'தீங்கு நிறைந்த வாயுக்களை வெளிவிடுவதற்கான ஏவு கருவிகள்' என்பவற்றின் பாவனையையும் தடைசெய்தது.

இரசாயன ஆயுதங்களின் முதலாவதும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான பாவனை முதலாம் உலக மகா யுத்த காலத்தின்போது காணப்பட்டது. இதை முதன்முதலில் உபயோகித்தமைக்கான குற்றச்சாட்டு வழமைபோல ஜேர்மனியர் கள் மீதே சுமத்தப்பட்டது. ஆனால் உண்மையில், பிரெஞ்சுக்காரர்களே ஒப்பீட் டளவில் பாதிப்புக் குறைந்த கண்ணீர்ப் புகையை (*ethyl bromoacetate*) எறிகுண் டில் வைத்து 1914 ஆகஸ்டில் பயன்படுத் தினர். இரண்டாவது ***ஈப்பிரஸ்*** மோதல் (Battle of Ypres - முதலாம் உலக மகா யுத்த காலத்தில் மூன்று தடவைகள் போர் நிகழ்ந்த இடமான ஒரு பெல்ஜிய நகரம்) காலத்தில், 1915 ஏப்ரலில் ஜேர்மனியர்க ளால் பாரியளவில் குளோரின் பயன் படுத்தப்பட்டமையானது, இந்த யுத்தத்தில் ஈடுபட்ட மிகவும் முன்னேறிய மூன்று நாடு களால், அதாவது பெரிய பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ் ஆகியவற்றால், மர ணத்தை உண்டாக்கும் இந்த இரசாயனங் களைப் பாரியளவில் பயன்படுத்துவதற் கான வாய்ப்புகளை வழங்கியது. இரசா யன வாயுக்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக முகமூடிகள் வடிவில் தற் காப்பு வழிமுறைகள் விருத்தி செய்யப் பட்டு, போர்முனையில் உள்ள சிப்பாய் களுக்கு அவை பகிர்ந்தளிக்கப்பட்ட அதேவேளை, பீன் (*phosgene*) மற்றும் மஸ்ரட் வாயு (*mustard gas*) போன்ற மர ணத்தை உண்டாக்கும் ஏனைய இரசாயன வாயுக்கள் கூட புதிதாக உபயோகப்படுத் தப்பட்டன.

இந்த யுத்த காலத்தில் பயன்படுத்தப்பட்ட இரசாயன ஆயுதங்கள், இரு தரப்பிலும் உள்ள சிப்பாய்கள் மத்தியில் பெருமள விலான இழப்பை ஏற்படுத்தின. ஆனால், தொழில்நுட்ப ரீதியாக குறைந்தளவே முன்னேறிய நிலையில் இருந்த ரஷ்ய இராணுவத்திற்கு ஜேர்மனியின் கிழக்கு எல்லையில் ஏற்பட்ட உயிரிழப்பானது இதுவரை ஏற்பட்ட உயிரிழப்புகளில் மிகைப்படியானதாகக் காணப்படுகின்றது. நச்சுத்தன்மை வாய்ந்த இரசாயன வாயுக் களுக்கு உட்பட்டமை காரணமாக நிகழ்ந்த 91,000 உயிர் இழப்புகளில் 56,000 ரஷ்யர் களுடையதாகும். இவ்வாயுதங்களால் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட சிப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் காயமடைந்ததுடன், அவர்களில் அநேகமானோர் நிரந்தரமாக ஊனமடைந்த னர். இதிலும்கூட ரஷ்யர்களே பெரும் பான்மையானோராக இருந்தனர்.

அதேவேளை, இரசாயன ஆயுதங்களின் உபயோகமானது, குறைந்தபட்சம் சம அள வில் முன்னேற்றமடைந்த நாடுகள் மத்தி யிலேனும், இறுதியானதாக இருக்க வில்லை எனும் மிக முக்கியமான படிப் பினையை இந்த யுத்தத்தில் ஈடுபட்ட நாடுகள் கற்றுக்கொண்டன. இவ்விரசா யன வாயுக்களின் விளைபயன் ஆற்றல், எதிர்வுகூற முடியாதவையாகவும் காற்றின் திசை போன்ற முன்னறுதி செய்யப்படாத காரணிகளின் விளைவுகளுக்கு உட்பட்ட நிலையிலும் இருந்த அதேவேளை, தற் காப்புத் துணைக்கருவிகளின் பயன்பாடா னது செயற்திறனுடையதாக இருந்தது. தமது சொந்த நச்சு வாயுவுக்கு பிரித் தானிய சிப்பாய்கள் உட்பட்டமைக்கு காற் றின் திசையில் ஏற்பட்ட மாற்றம், குறைந்த பட்சம் ஓர் சந்தர்ப்பத்திலாவது, காரண மாக இருந்தது.

யுத்தத்தை முறைசார்ந்த வகையில் முடி வுக்குக் கொண்டுவந்த வேர்சையில்ஸ் உடன்படிக்கையானது (The Treaty of Versailles) ஜேர்மனியானது இரசாயன ஆயுதங்களை உற்பத்தி செய்வதை அல் லது உபயோகிப்பதை தடை செய்தது. ஆயினும், இப்பிரச்சினைக்கான நீடித் திருக்கின்ற ஓர் தீர்வாக இருப்பதற்கு இது முற்றிலும் மாறானதாகவே இருந்தது. ஆகவே, "யுத்தத்தில், ஒருவரை மூச்சுத் திணறி உணர்விழக்கப் செய்யும், நச்சுத் தன்மை வாய்ந்த அல்லது ஏனைய வாயுக் கள் மற்றும் அனைத்துப் பண்பொத்த திரவங்கள், பொருட்கள் அல்லது கருவி கள் என்பவற்றின் பயன்பாட்டைத்" தடை செய்கின்ற ஜெனிவா உடன்படிக்கையில் பெரும் எண்ணிக்கையிலான நாடுகள் *1925* ஜுனில் கைச்சாத்திட்டன. *1928* இல் நடைமுறைக்கு வந்த இவ்வுடன்படிக்கை யானது, இரசாயன ஆயுதங்களின் பயன் பாட்டை *1993* வரை நெறிப்படுத்துகின்ற பிரதானமான ஓர் சர்வதேச உடன்படிக்கை யாக இருந்தது.

இந்த ஜெனிவா உடன்படிக்கையின் செயல் நோக்கம் இவ்வாறானதாக இருந் தும்கூட, அதைப் பலனற்றதாக ஆக்கிய ஏராளமான பலவீனங்களை அது கொண் டிருந்தது. அது, *1970* வரை யப்பானா லும், *1975* வரை ஐக்கிய அமெரிக்காவா லும் அதிகாரபூர்வமாக ஏற்புடையதாக்கப் படவில்லை. அதிகாரபூர்வமாக ஏற்புடைய தாக்கிய பல நாடுகள் கூட நிபந்தனையின் அடிப்படையிலேயே அதை மேற்கொண் டிருந்தன. மேலும், இவ்வுடன்படிக்கை யானது இரசாயன ஆயுதங்களின் உப யோகத்தை தடை செய்தனவே ஒழிய அவற்றின் உற்பத்தியையோ கையிருப் பையோ தடை செய்யவில்லை. இரண் டாம் உலக மகா யுத்த காலத்திலும் அதற் குப் பின்னரும் ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ஒன்றியம் மற்றும் ஈராக் உட்பட ஏராளமான நாடுகள் இவ்விரசாயனங் களில் பெருந்தொகையை உற்பத்தி செய்தன.

இரண்டாவது உலக மகா யுத்தத்திற்கு முன்னர், கவனத்தை ஈர்க்கும் இரு புதிய நிகழ்வுகள் இடம்பெற்றன. அதில் ஒன்று; தமக்குப் பயனுடையதாய் இருக்குமா யின், பலம் வாய்ந்த நாடுகளால், தண் டனை ஏதுமின்றி, தமது சர்வதேச உறுதி மொழிகளை அலட்சியப்படுத்த முடியும் எனும், எரிச்சலூட்டும் ஓர் உண்மையின் இன்னுமொரு மெய்ப்புச் சான்றாகும். அப்போது தவறிழைத்த நாடாக இத்தாலி இருந்ததுடன், அதன் தலைவரான பெனிட்ரோ முசோலினி தனது சாம்ராஜ் ஜிய நிர்மாணத்தின் பொருட்டு, ஐரோப்பா வின் முக்கியமான நாடுகளுடன் இணை வதில் மன உறுதி மிக்கவராக இருந்தார். இதனால் மிகவும் பாதிக்கப்பட்ட நாடு எதியோப்பியாவாகும். அதன் சக்கரவர்த்தி யான ஹெய்ல் செலசீ அவர்கள் ஜெனி வாவில் இருந்த சர்வதேசச் சங்கத்திடம் முறையிட்டும் பயன் எதுவுமே கிடைக்க வில்லை. இத்தாலியப் படைகள் எதி யோப்பியாவில் பெரும் எண்ணிக்கையில் பரவியிருந்தபோது, அவற்றால் பயன் படுத்தப்பட்ட இரசாயன ஆயுதங்கள், இந்த ஜெனிவா உடன்படிக்கையின் வெளிப்படையான ஓர் மீறலாக இருந்தது. அதற்கிடையில் இதுபோன்றே, இவ்வுடன் படிக்கையில் கைச்சாத்திட்டதும், ஆனால் அதை அதிகாரபூர்வமாக ஏற்புடையதாக் கத் தவறியதுமான யப்பான், சீனாவின் இழப்பில் தனது பேரரசை விரிவுபடுத்தி யது. இவ்விரிவாக்கமானது, படுமோச மான வகை அட்டூழியங்களுடன் இணைந் ததாகக் காணப்பட்டதோடு, சீனாவுக்கு எதிரான இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்களின் (இது கூட ஜெனிவா உடன்படிக்கையால் தடைசெய்யப்பட்டுள் ளது) உபயோகத்திற்கான மிக முக்கிய மான ஓர் எடுத்துக்காட்டாகவும் அமைந் துள்ளது. இரண்டாவது உலக மகா யுத் தத்தின் இறுதியில், யப்பான் சரணடைந்து சீனாவிலிருந்து தனது படைகளை விலக் கிக் கொண்டபோது, குறிப்பிடத்தக்களவு எண்ணிக்கையிலான இரசாயனப் படைக் கலங்களை சீன மண்ணில் கைவிட்டுச் சென்றனது எனக் கூறப்படுகின்றது.

இரண்டாவது நிகழ்வு எதுவெனில், ஏற் கனவே விபரிக்கப்பட்டவாறு, தொடக்கத் தில் ஜேர்மனிய விஞ்ஞானிகளால் கண்டு பிடிக்கப்பட்ட நரம்புத் தொகுதியைப் பாதிக்கும் நச்சுப் பொருட்களின் கண்டு பிடிப்பாகும். இவை, முன்னர் பயன்படுத் தப்பட்ட இரசாயனங்களை விடவும், அதி களவு மரணத்தை உண்டாக்கக்கூடியன வாகும். இவை நரம்புத் தொகுதியை நேரடியாகப் பாதிப்பதுடன், ஒப்பீட்டு ரீதியாக மிகச் சிறிய அளவில் உட்சுவா சித்தல் மற்றும் தோலால் உறிஞ்சப்படுதல் என்பவற்றின் மூலம் மரண ஆபத்து உடை யனவாகக் காணப்படுகின்றன. ராபன், சாறின், சேமன் *(tabun, sarin, soman)* போன்ற நரம்புத் தொகுதியைப் பாதிக்கும் இரசாயனப் பொருட்களின் 'முதலாவது தலைமுறையானது' யுத்தத்திற்கு முன் னரே ஜேர்மனியால் சேகரித்து வைக்கப் பட்டிருந்தது. ஆனால், அவை ஒருபொழு தும் பயன்படுத்தப்படவில்லை. இருந்தும், நாஜிகளால் யூதர்கள் படுகொலை செய் யப்பட்ட காலகட்டத்தில், நச்சுவாயு அறை களில் இலட்சக் கணக்கான மக்களைக் கொலை செய்வதற்காக ஏனைய வகை இரசாயனங்கள் பயன்படுத்தப்பட்டன.

யப்பானின் சீனாவுக்கு எதிரான யுத்தச் செயற்பாடுகள் நீங்கலாக, இரண்டாவது உலக மகா யுத்த காலத்தில் போரிட்டோர் எவருமே இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தவில்லை. முதலாவது உலக மகா யுத்தத்திலிருந்து கற்றுக்கொண்ட படிப்பினைகளே இதற்கான காரணமாகும்.

இரசாயன ஆயுதங்களின் கையிருப்பில் மற்றுமோர் பெருக்கத்தை பனிப் போர் கொண்டுவந்தது. ஆராய்ச்சிகள், VX மற் றும் VR (முறையே ஐக்கிய அமெரிக்கா வாலும் சோவியத் ஒன்றியத்தாலும் உற் பத்தி செய்யப்பட்டவை) போன்ற நரம்புத் தொகுதியைப் பாதிக்கும் இரசாயனப் பொருட்களின் 'இரண்டாவது தலை முறை' உட்பட, புதிய இரசாயனங்களை வல்லரசுகளின் படைக்கலத் தொகுதி களில் இணைத்தன. அதேவேளை, பேர ழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களின் உப யோகத்தை மட்டுப்படுத்துவதற்கான உடன்படிக்கைகளை எட்டும் குறிக்கோளு டன் பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்று வந்தன. உயிரியல் மற்றும் நச்சியல் ஆயு தங்கள் தொடர்பான சமவாயமானது *1972* ஏப்ரலில் கைச்சாத்திடப்பட்டு, *1975* மார்ச் சில் நடைமுறைக்கு வந்தது. ஆயினும், உறுதிமொழி வழங்குவதில் வல்லரசுகள் முழுமனதுடன் செயற்படாமையால் (அதா வது, செயல் நிறைவேற்றத்திற்கான ஓர் அமைப்பை உருவாக்குவதற்கு ஐக்கிய அமெரிக்கா எதிர்ப்புத் தெரிவித்தமை யால்), இவ்வுடன்படிக்கை கூட பலவீன மானதாகவும் நடைமுறைப்படுத்த இய லாத ஒன்றாகவும் காணப்பட்டது.

*1980*களில் இடம்பெற்ற வளைகுடா யுத் தத்தின்போது ஈரானுக்கும், குர்தீஸ் இனத்தவர்களுக்கும் எதிராக ஈராக் பெருந் தொகையான இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியமை, ஓர் திருப்புமுனை யாகக் காணப்பட்டது. அப்போது இரசா யன ஆயுதங்கள் மிகவும் மலிவானதாகக் கிடைக்கக்கூடியதாக இருந்ததுடன், பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களாக அவற்றை மிக இலகுவில் விருத்தி செய்யக்கூடியதாகவும் இருந்தது. இது தவிர, அவற்றை விருத்தி செய்வதற்கான திட்டங்கள் 20க்கும் மேற்பட்ட நாடுகளிடம் இருப்பதாகவும் நம்பப்படுகின்றது. சோவி யத் ஒன்றியத்தின் வீழ்ச்சி மற்றும் இரசா யன ஆயுதங்களை உற்பத்தி செய்வதற் கான ஈராக்கின் திட்டங்கள் நிறுத்தப்பட் டமை என்பவற்றுடன் சேர்த்து, பல வரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டங்களாகத் தொடர்ந்து இடம்பெற்றுவந்த பேச்சுவார்த்தைகள் காரணமாக, இரசாயன ஆயுதங்கள் தொடர்பான சமவாயமானது 1993 ஜனவரியில் கைச்சாத்திடப்பட்டு, தேவைப்படும் மிகக் குறைந்தள வான எண்ணிக்கையிலான நாடுகள் அதை அதிகார பூர்வமாக ஏற்புடையதாக்கியதன் பின்னர், 1997இல் நடைமுறைக்கு வந்தது.

## இரசாயன ஆயுதங்கள் தொடர்பான சமவாயம் CWC

இதுவரை கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளில், இரசாயன ஆயுதங்கள் தொடர பான இச்சமவாயமே, ஒருவேளை, பெரும்பாலும் அனைத்தையும் உள்ளடக்கிய, பூரணமான நியாயத்தன்மையுடன் கூடிய மற்றும் உலகளாவிய ஆயுதங்கள் தொடர்பான ஓர் உடன்படிக்கையாக அமைந்துள்ளது. அதன் பலம், மிக முக்கியமாக ஐக்கிய அமெரிக்கா உட்பட அதில் கையொப்பமிட்ட அனைத்து நாடுகளுமே தமது உறுதிமொழிகளை வழங்கியுள்ளமை, அதற்குச் சட்டரீதியாகக் கட்டுப்படும் கடப்பாடு உடையனவாகக் காணப்படுதல், அதன் ஏற்பாடுகள் அனைத்து நாடுகளுக்கும் சமமான அளவில் பொருந்துவனவாக உள்ளமை என்பவை தொடர்பான உண்மையான நேர்வுகளின் அடிப்படையில் காணப்படுகின்றது. மேலும், இச்சமவாயமானது செயல் நிறைவேற்றத்திற்கான ஓர் அமைப்பான இரசாயன ஆயுதங்களைத் தடை செய்வதற்கான அமைப்பை (Organisation for the Prohibition of Chemical Weapons - OPCW) நிறுவியுள்ளதுடன், இதில் கைச்சாத்திட்டுள்ள நாடுகள் (இராஜதந்திர வார்த்தைகளில் கூறுவதாயின்; அரச தரப்புக்கள்) ஒன்றையொன்று கவனமாகப் பார்த்துக்கொள்ள வகைசெய்யும் ஓர் வழிமுறையைப் பயன்பாட்டுக்குரிய நிலையில் வைத்துள்ளது.

ஐக்கிய நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட 196 நாடுகள் உள்ளன (ஐக்கிய நாடுகளால் அன்றி, ஐ.நா. வின் அங்கத்துவ நாடுகள் பலவற்றால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தாய்வான், பாலஸ்தீனம், கொசோவோ போன்ற நாடுகளை இது உள்ளடக்கவில்லை). இவற்றுள், 2010 இற்கு முன்னர், 188 நாடுகள் இரசாயன ஆயுதங்கள் சமவாயத்தில் கைச்சாத்திட்டுள்ளதுடன், அதை அதிகாரபூர்வமாக ஏற்புடையதாக்கியும் உள்ளன. அவை, இலங்கையுடன் சேர்த்து ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளன. இஸ்ரேல் மற்றும் மியன்மார் ஆகிய இரு நாடுகளும் இவ்வுடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளபோதும், அதை இன்னும் அதிகாரபூர்வமாக ஏற்புடையதாக்கவில்லை. எஞ்சியிருக்கும் நாடுகள், அதாவது அங்கோலா, எகிப்து, வட கொரியா, சிரியா, சோமாலியா மற்றும் உலகின் புதிய நாடாகிய தென் சூடான் ஆகியன இவ்வுடன்படிக்கையில் இன்னும் கைச்சாத்திடவில்லை.

இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு அதை அதிகாரபூர்வமாக ஏற்புடையதாக்கியுள்ள 'அரச தரப்புக்கள்' பின்வரும் கடப்பாடுகளை மேற்கொள்வதற்கு பொறுப்பேற்றுள்ளன.

i. பின்வருவனவற்றை ஒருபொழுதும் மேற்கொள்வதில்லையென இச்சமவாயத்தில் அங்கத்துவம் பெறும் அனைத்து அரச தரப்பினரும் உடன்பாடு கண்டுள்ளனர்:

அ. இரசாயன ஆயுதங்களை விருத்தி செய்தல், உற்பத்திசெய்தல் வேறு விதமாகக் கூறின் அவற்றைப் பெற்றுக்கொள்ளல், சேகரித்து வைத்தல் அல்லது தம்முடன் வைத்துப் பேணுதல் அல்லது அவற்றை யாருக்காவது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இடம் மாற்றுதல்;

ஆ. இரசாயன ஆயுதங்களை உபயோகித்தல்;

இ. இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கான இராணுவ ரீதியான ஏதாவது தயார்ப்படுத்தல் முயற்சிகளில் ஈடுபடல்;

ஈ. இந்த சமவாயத்தின் கீழ், அரச தரப்பிற்கு தடைவிதிக்கப்பட்டுள்ள ஏதாவது செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு எவருக்காவது ஏதாவது வழியில் உதவுதல், ஊக்குவிப்பு வழங்குதல் அல்லது அவரைத் தூண்டுதல்.

ii. இச்சமவாயத்தின் ஏற்பாடுகளை அடியொட்டி, பின்வருவனவற்றை அழிப்பதற்கு அனைத்து அரச தரப்பும் உடன்பட்டுள்ளன:

அ. நாடொன்றிற்குச் சொந்தமான அல்லது அது உடைமையாகக் கொண்டுள்ள அல்லது அந்த நாட்டின் நியாயாதிக்கத்தின் அல்லது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஏதாவது இடத்தில் அமைந்துள்ள இரசாயன ஆயுதங்கள்;

ஆ. குறிப்பிட்ட ஒரு நாடு மற்றுமொரு அரச தரப்பின் ஆள்புல எல்லையின் கைவிட்டுச் சென்றுள்ள அனைத்து இரசாயன ஆயுதங்களும்;

இ. இச்சமவாயத்தின் ஏற்பாடுகளை அடியொட்டி, நாடொன்றிற்குச் சொந்தமான அல்லது அது உடைமையாகக் கொண்டுள்ள அல்லது அந்த நாட்டின் நியாயாதிக்கத்தின் அல்லது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஏதாவது இடத்தில் அமைந்துள்ள இரசாயன ஆயுத உற்பத்திக் கருவிகள்.

iii. கலகங்களை அடக்குவதற்கான இரசாயனப் பொருட்களை ஓர் யுத்தச் செயற பாட்டு முறையாகப் பயன்படுத்துவதில்லை என அனைத்து அரச தரப்பும் உடன்பட்டுள்ளன.

இறுதியாக உள்ள இக்கடப்பாடானது ஆர்வத்துக்குரிய ஒன்றாக அமைந்துள்ளது. ஏனெனில், ஓர் நாடு தனது சொந்த குடிமக்களுக்கு எதிராக கண்ணீர்ப் புகையைப் பயன்படுத்துதல் முழுமையாகச் சட்டரீதியானதாக உள்ளபோதும், எதிரி நாட்டு சிப்பாய்களுக்கு எதிராக அதைப் பயன்படுத்துவதை இச்சமவாயம் சட்ட விரோதமானதாக ஆக்கியுள்ளது.

விசேட கவனம் செலுத்தப்பட வேண்டிய குறிப்பிட்ட சில இரசாயனங்களை அல்லது அவற்றின் வகைகளை இச்சமவாயம் பட்டியலிட்டுள்ளது. இவ்விரசாயனங்கள் ஆயுதங்களாக அல்லது ஆயுதங்களுக்கான முன்னோடித் தயாரிப்புகளாக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன அல்லது அத்தகைய பயன்பாட்டுக்கான அதிகளவான சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளன. இவை 'பட்டியலிடப்பட்ட' இரசாயனங்கள் என தெரியவருவதுடன்; அவற்றின் இறக்குமதி, ஏற்றுமதி, உற்பத்தி, நுகர்வு, சேகரிப்பு என்பன கண்காணிக்கப்படுகின்றன. பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ள, மூன்று வகையான வெவ்வேறுபட்ட பட்டியல்கள் காணப்படுகின்றன.

***பட்டியல் 1:*** இந்த இரசாயனங்களின் அறியப்பட்ட ஒரேயொரு பயன்பாடாக இரசாயன ஆயுத உற்பத்தியும் (ஏனைய எந்த நோக்கங்களுக்காகவும் இவை உற்பத்தி செய்யப்படுவதில்லை) ஆயுதங்களுக்கான முன்னோடித் தயாரிப்புகளும் உள்ளன. நரம்புத் தொகுதியைப் பாதிக்கும் இரசாயனங்கள், மஸ்ரட் வாயு (*mustard gas*), ஆசனிக்கை அடிப்படையாகக் கொண்ட குறிப்பிட்ட சில சேர்வைகள், ஆமணக்கிலிருந்து பெறப்படும் றைசின் (*ricin*) உட்பட உயிரியல் மூலமுதல் நிலையைக் கொண்டுள்ள மிகவும் அதிகளவு நச்சுத்தன்மை வாய்ந்த சேர்வைகள் என்பவற்றை இந்த இரசாயனங்கள் உள்ளடக்கியுள்ளன.

***பட்டியல் 2:*** இவை, பிரதானமாக ஆயுதங்களாக பயன்படுத்தப்படும் இரசாயனங்களாக உள்ள அதேவேளை, ஏனைய நோக்கங்களுக்காகவும் சிறிய அளவில் வணிக ரீதியாக உற்பத்தி செய்யப்படுவதுடன், ஆயுதங்களுக்கான முன்னோடித் தயாரிப்புகளாகவும் பயன்படுத்தப்படுகின்றன. இப்பட்டியலிலுள்ள முக்கியமான ஓர் இரசாயனமாக தயோடைகிளைக்கோல் (*thiodiglycol*) காணப்படுகின்றது. இது அச்சுத் தொழிலிலும், துணிகளுக்குச் சாயமிடல் தொழில் துறையிலும் ஓர் கரைப்பானாக அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால், ஓர் ஒற்றை தாக்கத்தின் மூலம் இதை மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவலாகப் பயன்படுத்தப்படும் வகை சல்பர் மஸரட் வாயுவாக (*sulphur mustard gas*) மாற்ற முடியும்.

**பட்டியல் 3:** இரட்டைப் பயன்பாடு உடைய இந்த இரசாயனங்கள் வணிக நோக்கங்களுக்காக பாரிய அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால், இவற்றை ஆயுதங்களாக அல்லது ஆயுதங்களுக்கான முன்னோடித் தயாரிப்புகளாகவும் பயன்படுத்த முடியும். பீன், ஐதரசன் சயனைட், தயோனைல் குளோறைட், பொஸ்பரஸ் றைக்குளோறைட், ரைஎதனோலமைன், ரைஎதைல் பொஸ்பைற் (*phosgene, hydrogen cyanide, thionyl chloride, phosphorus trichloride, triethanolamine, triethyl phosphite*) என்பன போன்ற ஏராளமான ஆய்வுகூட மற்றும் கைத்தொழில் இரசாயனங்கள் இப்பட்டியலில் காணப்படுகின்றன.

இரசாயன ஆயுதங்கள் தொடர்பான இச்சமவாயத்தின் ஏற்பாடுகளின் கீழ், செயல் நிறைவேற்றத்திற்கான ஓர் அமைப்பான இரசாயன ஆயுதங்களைத் தடை செய்யும் அமைப்பு (Organisation for the Prohibition of Chemical Weapons - OPCW) நிறுவப்பட்டுள்ளது. அதன் தலைமைக் காரியாலயம் பொருத்தமான வகையில் ஹேக் நகரிலேயே அமைந்துள்ளது. இரசாயன ஆயுதங்களைக் கையாளுதல் தொடர்பான முதலாவது உடன்படிக்கையானது, இந்த நகரிலேயே 100 வருடங்களுக்கு முன்னர் கைச்சாத்திடப்பட்டது. அதன் குறிக்கோள்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன.

i. இரசாயன ஆயுதங்கள் தொடர்பான சமவாயத்தின் ஏற்பாடுகளை அமுல் படுத்துதல்.
ii. இந்த இரசாயன ஆயுதங்கள் சமவாயத்தின் ஏற்பாடுகள் சர்வதேச ரீதியான விதிமுறைகளுக்கு இணங்க உள்ளனவா என்பதை சரிபார்த்தல்.
iii. அரச தரப்புகள் மத்தியில் ஆலோசனை மற்றும் ஒத்துழைப்பு என்பவற்றிற்கான ஒரு மன்றத்தை வழங்குதல்.

இரசாயன ஆயுதங்களைத் தடை செய்யும் அமைப்பில் (OPCW) உள்ள அனைத்து அங்கத்துவ நாடுகளும் ஓர் தேசிய அதிகார அமைப்பை நிறுவியுள்ளன; இலங்கையிலுள்ள தேசிய அதிகார அமைப்பானது கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் கீழ உள்ளது. இவ்வமைப்புகள் பட்டியலிடப்பட்ட இரசாயனங்களின் இறக்குமதி, ஏற்றுமதி, உற்பத்தி, சேகரிப்பு, நுகர்வு என்பவற்றை கண்காணிப்பதற்கு பொறுப்பாக உள்ளதுடன், இவை பற்றிய வருடாந்தப் பிரகடனத்தை இரசாயன ஆயுதங்களைத் தடை செய்யும் அமைப்பிற்கு (OPCW) அனுப்பிவைக்கின்றன. இவ்வமைப்பானது, தனக்கு வழங்கப்பட்ட தகவல்களை ஏனைய நாடுகளின் தகவல்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதோடு, வேறுபாடுகளையும் பரிசோதித்துப்பார்க்கின்றது. அங்கத்துவ நாடுகளிலுள்ள இரசாயன உற்பத்திக் கருவிகள் பற்றிய வழக்கமுறையான பரிசோதனைகளை இரசாயன ஆயுதங்களைத் தடை செய்யும் இவ்வமைப்பின் (OPCW) பரிசோதகர்களின் குழுவானது மேற்கொள்கின்றன. மேலும், 'சவால் நிறைந்த' பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான நியாயமான காரணங்கள் இருக்குமாயின், ஏனைய அங்கத்துவ நாடுகளின் வேண்டுகோளுக்கு இணங்க, குறுகிய கால அறிவித்தலில், அத்தகைய பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும்.

இந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளின் கீழ், இரசாயன உற்பத்திக் கருவிகளுடன் சேர்த்து இரசாயன ஆயுதங்களின் அனைத்து கையிருப்பும் குறிப்பிட்ட ஓர் கால எல்லைக்குள் அழிக்கப்பட வேண்டுமெனக் கருதப்படுகின்றது. இக்காலக் கெடுவானது தற்போது 2012 ஆம் ஆண்டுவரை நீடிக்கப்பட்டுள்ளது. இதைக்கூட இரசாயன ஆயுதங்களைத் தடை செய்யும் அமைப்பின் (OPCW) பரிசோதகர்கள் கண்காணிக்கின்றனர். அவர்களின் ஏனைய தொழிற்பாடுகள் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு உதவி வழங்குவதையும் உள்ளடக்கியுள்ளன. இறுதி முடிவாக, எளிதில் கையாள முடியாத பிரச்சினைகள் பற்றி மேலதிக நடவடிக்கைகளுக்காக ஐ. நா. பாதுகாப்புச் சபைக்கு முறையிடுவதற்கான உரிமை இரசாயன ஆயுதங்களைத் தடை செய்யும் இந்த அமைப்பிற்கு (OPCW) உண்டு.

இலங்கையில் இரசாயன ஆயுதங்கள் சமவாயத்தின் அமுலாக்கமானது, 2007 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க இரசாயன ஆயுதங்கள் சமவாயச் சட்டத்தால் நெறிப்படுத்தப்படுகின்றது. இதுதவிர, தேசிய அதிகாரசபை ஒன்றை நிறுவுதல் மற்றும் இந்த நாட்டில் இரசாயன ஆயுத உற்பத்தி அல்லது அவற்றின் பயன்பாட்டை சட்ட விரோதமானதாகப் பிரகடனப்படுத்துதல் என்பவை தொடர்பான விடயங்கள் இச்சட்டத்தின் கீழ் வருவதுடன், இச்சட்டமானது பட்டியலிடப்பட்ட இரசாயனங்களின் இறக்குமதி மீது மிகக் கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்கின்றது. அத்துடன், இரசாயன இறக்குமதியாளர்கள் இந்த அதிகார சபையில் தம்மைப் பதிவு செய்துகொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுவதுடன், பட்டியலிடப்பட்ட இரசாயனங்களின் இறக்குமதிக்கு இவ்வதிகார சபையின் அனுமதி தேவைப்படுகின்றது.

## இரசாயன ஆயுதங்களும் பயங்கரவாதமும்

கடந்த காலத்தில், அதாவது 1980களில் இடம்பெற்ற ஈரான் - ஈராக் யுத்தத்தின் போதே ஓர் நாடு இன்னுமொரு நாட்டுக்கு எதிராக இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியது. அது மீளவும் நிகழ்வதற்கான சாத்தியக்கூறு தற்போது காணப்படவில்லை. ஆயினும், மரணத்தை உண்டாக்கவல்ல ஓர் புதிய அச்சுறுத்தல் தோன்றியுள்ளது; அதாவது, இரசாயன ஆயுதங்கள் ஒப்பீட்டளவில் மலிவானதாக இருப்பதுடன், குறைந்த தொழில்நுட்பத்துடன் தயாரிக்கக் கூடிய பேரழிவை ஏற்படுத்தத்தக்க ஆயுதங்களை பயங்கரவாத அமைப்புகள் அல்லது ஐ.நா. மங்கல வழக்கின் (இடக்கரடக்கர் வழக்குச் சொல்லின்) படி 'அரசு அல்லாத செயற்பாட்டாளர்கள்' பயன்படுத்தக் கூடிய ஓர் நிலைமை தோன்றியுள்ளது.

".............. அணு, இரசாயன அல்லது உயிரியல் ஆயுதங்களை விருத்தி செய்வதற்கு, பெற்றுக் கொள்வதற்கு, தயாரிப்பதற்கு, உடைமையாக்கிக் கொள்வதற்கு, ஏற்றியிறக்குவதற்கு, இடம் மாற்றுவதற்கு அல்லது அவற்றை பயன்படுத்துவதற்கு முயற்சிக்கும் அரசு அல்லாத செயற்பாட்டாளர்களுக்கு எவ்வடிவிலான ஆதரவையும் வழங்குவதை அனைத்து அரசுகளும் தவிர்க்க வேண்டும்........" எனக் குறிப்பிடும், 1540 ஆம் இலக்க தீர்மானத்தை ஐ.நா. பாதுகாப்புச் சபை 2004 இல் நிறைவேற்றியுள்ளது. இவ்விடயம் கணிசமான அளவு முக்கியத்துவமுடையது எனக் கருதப்பட்டமையாலும், இதன் செயற்பாட்டு வேகம் மெதுவானதாக இருந்தமையாலும் மேற்குறிப்பிடப்பட்ட இத்தீர்மானமானது, 1673 ஆம் இலக்க தீர்மானம் (2006) மற்றும் 1810ஆம் இலக்க தீர்மானம் (2008) என்பவற்றின் மூலம் மீள உறுதிப்படுத்தப்பட்டது.

ஐக்கிய நாடுகளின் அத்தகைய உயர் மட்ட கரிசனைக்குக் காரணம் யாது? உலகிலுள்ள ஏராளமான அமைப்புகள் 'பயங்கரவாத அமைப்புக்களாக' விவரிக்கப்பட்டுள்ள அதேவேளை, பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களுடன் அதிகளவுக்குச் சம்பந்தப்பட்ட ஓர் அமைப்பாக யப்பானிலுள்ள ஓம் ஷின்றிக்யோ (Aum Shinrikyo) சமயப் பிரிவு காணப்படுகின்றது. இதுவோர் இந்து - பௌத்த சமயப் பிரிவாக இருப்பதுடன், 1984 இல் இச்சமயப்பிரிவு நிறுவப்படுவதற்கு முன்னர், அதன் தலைவரான ஷோகோ அசஹரா (Shoko Asahara) என்பவர் இந்தியாவிற்கும் பிற இடங்களுக்கும் அதிகளவு பயணங்களை மேற்கொண்டிருந்தார். இது ஆரம்பத்தில் முழுமையாக ஓர் சமய அமைப்பாகக் காணப்பட்டது. 1990 அளவில் இந்த ஓம் ஷின்றிக்யோ அமைப்பானது அச்சுறுத்திப் பணம் பறித்தலிலும் கொலை செய்வதிலும் ஈடுபடுவதற்கு ஆரம்பித்தது. அத்துடன், உயிரியல் ஆயுதத் தயாரிப்புக்கான அதன் பரிசோதனை முயற்சிகள் 1993 இல் தோல்வியடைந்ததன் பின்னர், சாறினைத் (*sarin*) தயாரிப்பதற்கான ஓர் ஆய்வுகூடத்தை அது உருவாக்கியது. அவர்கள்

தொடர்ச்சி .......... 41ம் பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனத்தொகை முகாமைத்துவத்திலான இலங்கையின் வெற்றி: ஏனைய திட்டங்களுக்கான ஓர் படிப்பினை

**கலாநிதி ஏ.ரீ.பி.எல்.அபயக்கோண்**

*முன்னாள் பணிப்பாளர்*
*சனத்தொகைப் பிரிவு*
*சுகாதார அமைச்சின்*

**அறிமுகம்**

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து அரசாங்கத்தால் மிகவும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களில் ஒன்றாக சனத்தொகைத் திட்டம் அமைந்துள்ளது. இது ஏனைய பொதுத்துறை திட்டங்களுக்கான ஓர் படிப்பினையாகவும் அமைந்துள்ளது. பொதுவாகக் கூறுமிடத்து உரிய தருணத்தில் மேற்கொள்ளப்பட்ட சரியான தீர்மானங்களாகவும் பொருத்தமான தொழில்களில் தகுதியானவர்களை வேலைக்கமர்த்திய ஓர் திட்டமாகவும் கூட காணப்படுகின்றது. எனவே, ஆறு தசாப்தங்களுக்கு மேற்பட்ட காலத்தில் உயர் சனத்தொகை வளர்ச்சி வீதத்திலிருந்து ஒப்பீட்டளவில் குறைந்த வளர்ச்சிக்கான நிலைமாற்றத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய கொள்கைகளையும் திட்டங்களையும் இக்கட்டுரை முழு நிறைவாக விபரிக்கின்றது.

இலங்கையின் நன்கு அறியப்பட்ட குடித்தொகையியல் வரலாற்றில் அதனுடைய உயரளவிலான சனத்தொகை வளர்ச்சி வீதத்தை இலங்கை அனுபவித்து வந்ததை 1950களின் தசாப்தத்தில் காணக்கூடியதாக இருந்தது. ஆயினும், சில வேளைகளில் மதங்களின் எதிர்ப்பு பற்றிய அச்சவுணர்வு காரணமாக, அப்போது வருடாந்தம் அண்ணளவாக 3 சதவீதமாக வளர்ச்சியடைந்து கொண்டிருந்த சனத்தொகை வீதத்தை குறைப்பதற்கு அரசாங்கத்தால் நேரடியான தலையிட முடியவில்லை. எவ்வாறாயினும், அடுத்து வருகின்ற ஓர் தேசியத் திட்டம் சாத்தியப்படுவதற்கான ஒரு சூழலை உருவாக்கிய சில தீர்மானங்களை அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கங்கள் மேற்கொண்டிருந்தன.

இலங்கையில் காணப்பட்ட சனத்தொகை தொடர்பான செயற்பாடுகளின் ஆரம்ப நடவடிக்கைகள் மட்டளவானதாக இருந்தது. குறைந்தளவான பிறப்பு இடைவெளி காரணமாக குறைந்த வருமானம் பெறும் நகர்ப்புற குடும்பங்களில் காணப்பட்ட உயரளவிலான தாய் மற்றும் சிசு மரண விகிதங்களை குறைப்பதற்கான முயற்சியை, அறிவுத் தெளிவுடைய ஓர் குழுவினரால் 1953 இல் அமைக்கப்பட்ட ஓர் அரச சார்பற்ற நிறுவனமான இலங்கை குடும்பத் திட்டச் சங்கம், மேற்கொண்டது. 1954 இல் ஓர் சிறு நிதிக் கொடையை வழங்கியதன் மூலம், இச்சங்கத்தின் செய்பாடுகள் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டன. கொழும்பு, கண்டி, காலி முதலியன போன்ற பிரதான நகரங்களிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் குடும்பத் திட்ட சிகிச்சை நிலையங்களை நடாத்துவதற்குக் கூட இச்சங்கத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. 1955 இல் அரசாங்கத்தால் ஆறாண்டு முதலீட்டுத் திட்டம் முன்வைக்கப்பட்ட போது, உயரளவிலான சனத்தொகை வளர்ச்சி வீதத்தைவிட பொருளாதாரத்தின் உற்பத்தித் திறன் இயலாற்றலை விரிவுபடுத்துவதற்கான தேவையே வலியுறுத்திக் கூறப்பட்டது (இலங்கை அரசாங்கம், 1955 ப.3). சனத்தொகை வளர்ச்சி வீதத்தை குறைப்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டமையால், திருமணம் செய்த தம்பதியினர் மத்தியில் குடும்பத் திட்டமிடலுக்கான கேள்வி காணப்படுகின்றதா என்பதையும் அத்துடன் குடும்பத் திட்டமிடலுக்கு மதங்களின் எதிர்ப்பு காணப்படுகின்றதா என்பவை தொடர்பான உண்மை நிலைமையைக் கண்டறிவதற்காக ஓர் முன்னோடி செயற்திட்டத்தை அமுலாக்குவதன் பொருட்டு, இலங்கை அரசாங்கமானது சுவீடன் அரசாங்கத்துடன் 1958 இல் ஓர் உடன்படிக்கையைச் செய்துகொண்டது. இதுவே சனத்தொகை தொடர்பான துறையில் இரு நாடுகளுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட இருதரப்பு உடன்படிக்கையாகவும் அமைந்திருந்தது. குடும்பத் திட்டமிடலைப் பொறுத்தவரை தெளிவாகப் புலப்படாத ஓர் கேள்வி அதற்கு காணப்படுகின்றது என்பதையும் இதற்கு மதரீதியான கடும் எதிர்ப்புக் காணப்படவில்லை என்பதையும் இச்செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பொது மதிப்பாய்வின் முடிவுகள் வெளிப்படுத்தின. இதனால், 1959 இல் அரசாங்கத்தால் பத்தாண்டுத் திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டபோது, "குறைந்தபட்சம் நீண்ட காலத்தில், சனத்தொகை வளர்ச்சி வீதத்தில் ஓர் வேகக் குறைப்பு மற்றும் ஒப்பீட்டு ரீதியான உறுதிப்பாடு என்பவற்றிற்கான நிகழ்வாய்ப்புகள் காணப்படாது விடின், திட்டமிடலிலும் அபிவிருத்தியிலும் இருந்து கிடைக்கும் கணிசமானளவு அனுகூலங்களை மனக்கண்ணால் பார்ப்பது கடினமானதாகும்" எனக் குறிப்பிடப்பட்டது (தேசிய திட்டமிடல் ஆலோசனை சபை, 1959 ப.16).

நாட்டிலுள்ள ஊழியப் படையில் 10 சதவீதத்தினர் வேலையற்றோராக இருக்கின்றனர் என்பதை, சர்வதேச தொழில் அமைப்பின் உதவியுடன் தொழில் திணைகளத்தால் 1960 இல் மேற்கொள்ளப்பட்ட ஊழியப்படை பற்றிய ஓர் பொது மதிப்பாய்வு வெளிப்படுத்தியது. இது கொள்கை வகுப்பாளர்களை கவலையடையச் செய்ததுடன், அரசாங்கத்தால் 1962 இல் குறுங்கால அமுலாக்கல் திட்டம் முன்வைக்கப்பட்ட போது இப்பிரச்சினையானது அளவுசார் கருத்துக் கோணத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது: "எமது தற்போதைய வருடாந்த சனத்தொகை வளர்ச்சி வீதமாகிய 2.8 சதவீதத்தில், ஆள்வீத மொத்த உள்நாட்டு உற்பத்தியிலான 2 சதவீத அதிகரிப்பிற்கு 1065 மில்லியன் ரூபா முதலீடு தேவைப்படும். வேறு விதமாகக் கூறின், 1961-62 இல் மேலதிகமாக 245 மில்லியன் ரூபாவை நாம் முதலீடு செய்ய வேண்டியுள்ளது. ஏனெனில், எமது சனத்தொகை வளர்ச்சியானது வருடத்திற்கு 1.7 சதவீதமாக அன்றி 2.8 சதவீதமாக அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்பதனாலாகும்" (தேசியத் திட்டமிடல் திணைக்களம், 1962 ப.16).

15 வயதிற்கு குறைந்தோரது சனத்தொகை 42 சதவீதமாக காணப்பட்டமையால், சனத்தொகையின் வயதுக் கட்டமைப்பானது ஓர் பிரமிட்டின் வடிவத்தை பெற்றிருந்தது என்பதை 1963 இல் மேற்கொள்ளப்பட்ட சனத்தொகைக் கணிப்பீடு பற்றிய தரவுகள் எடுத்துக்காட்டின. இந்த நாடு எவ்வளவு காலத்திற்கு இதே நிலைமையில் தொடர்ந்திருக்கின்றதோ, அந்தளவிற்கு சமூக மற்றும் பொருளாதார செலவுகள் அதிகமானதாக இருக்கும் என்பதை குடித்தொகையியல் ஆய்வாளர்கள் மற்றும் பொருளாதார திட்டமிடலாளர் ஆகிய இரு தரப்பினராலும் தெளிவாக உணரக்கூடியதாக இருந்தது. இது குறிப்பாக சுகாதாரம், மற்றும் கல்விச் சேவைகள் என்பன இலவசமாக வழங்கப்படுவதும் அத்துடன் முழுமையான சனத்தொகைக்கும் அரிசி இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்டு வந்ததுமாகிய இலங்கை போன்ற ஓர் நாட்டிற்கு மிகவும் பொருத்தமானதாகக் காணப்படுகின்றது.

**ஆரம்பக் கட்டம்**

ஆகவே, தாய்-சேய் சுகாதாரத் திட்டத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் பகுதியாக குடும்பத் திட்டமிடலை உள்ளடக்குவதற்கான ஓர் கொள்கைத் தீர்மானத்தை அரசாங்கம் 1965 இல் மேற்கொண்டது. சட்டமுறைப்படி அமைக்கப்பட்ட இந்தக் குடும்பத் திட்டமிடலானது குறிப்பிட்ட சிலரால் இந்நேரம் வரை அருவருப்பாகவே பார்க்கப்பட்டு வந்தது. இப்பிராந்தியத்திலுள்ள சில நாடுகளால் மேற்கொள்ளப்பட்டவற்றைப் போன்ற குடும்பத் திட்டமிடல் திட்டத்திற்குச் சமாந்தரமான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சபலத்தை கட்டுப்படுத்திக் கொள்ளும் ஆற்றலுடைய மிகமிகச் சிறந்த சுகாதாரத்துறை தொழில் வல்லுநர்கள் அந்த நேரத்தில் இலங்கையில் காணப்பட்டமை அதிர்ஷ்டவசமானதாகும். இவ்வாறாக, 1994 இல் சனத்தொகை மற்றும் அபிவிருத்தி பற்றிய சர்வதேச மகாநாடு நடைபெறுவதற்கு 3 தசாப்தங்களுக்கு முன்னரே தாய்-சேய் சுகாதாரம் போன்ற இனப்பெருக்கத்துடன் தொடர்புடைய ஏனைய சேவைகளுடன் கூடிய ஒன்றிணைந்த குடும்பத் திட்டமிடலின் முக்கியத்துவத்தை இலங்கை அங்கீகரித்திருந்தது. இக்கொள்கைத் தீர்மானம் காரணமாக, குடும்பத் திட்டமிடல் சங்கத்தின் குடும்ப திட்டமிடல் சிகிச்சை நிலையங்களால் அரசாங்க வைத்தியசாலைகளில் வழங்கப்பட்டு வந்த சேவைகள் அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டன. தேசிய தாய்-சேய் சுகாதாரம், குடும்ப திட்டமிடல் நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றை ஒருங்கிணைத்து நடைமுறைப்படுத்துவதற்காக 1968 இல் குடும்ப சுகாதாரப் பணியகம் எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது. இக்கொள்கைத் தீர்மானத்தின் விளைவாக, இலவச கருத்தடைச் சாதனங்களை வழங்குதல் மற்றும் குடும்பத் திட்டமிடல் சேவை வழங்கலில் சுகாதாரக் களப் பணியாளர்களை பயிற்றுவித்தல் என்பவற்றின் மூலம் இலங்கைக்கு பெருமளவு உதவி செய்வதற்கு சுவீடன் அரசாங்கம் முன்வந்தது. அந்த நேரத்தில் குடும்ப சுகாதாரப் பணியகத்தின் முழுமையான கட்டடத் தொகுதியுமே இலங்கை மக்களுக்கான சுவீடன் மக்களின் அன்பளிப்பாக கிடைத்தது. அப்போது இனப்பெருக்க தகுதியுடைய வயதிலுள்ள 70 சதவீதமான பெண்கள் எழுத்தறிவுடையோராக இருந்தமையாலும், குடும்பத் திட்டமிடல் சேவைகளை வழங்கக்கூடியதாக இருந்த நிறுவனங்களின் ஓர் வலையமைப்புடன் கூடிய நன்கு விருத்தியடைந்த ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு முறைமை காணப்பட்டமையாலும் இந்த நாட்டில் குடும்பத் திட்டமிடல் செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்கான சூழ்நிலை கூட சாதகமானதாகவே காணப்பட்டது (அபகோன், 1996).

1950 களில் காணப்பட்ட துரித சனத்தொகை வளர்ச்சி, இடைநிலை மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் இளையோர் சேர்வதில் காணப்பட்டஅதிகரிப்பு என்பன காரணமாக, தொழிற் சந்தையினுள் புதிதாக நுழைந்தோரின் எண்ணிக்கை 1960களின் இறுதியில் துரிதமாக அதிகரித்தது. இதனால் 1971 அளவில் ஊழியப்படையின் அண்ணளவாக 20 சதவீதமானோர் வேலையற்றோராக இருந்தனர். இடைநிலை மற்றும் உயர் கல்வி தகைமையுடன் கூடிய 15 - 24 வயது குழுவினரை பொறுத்தவரை இவ்வீதம் அண்ணளவாக இருமடங்காகக் காணப்பட்டது. இது 1971 சித்திரையில் ஏற்பட்ட ஓர் இளைஞர் கிளர்ச்சிக்கும் காரணமாக அமைந்தது. இளைஞர் வேலையின்மைப் பிரச்சினையைப் பற்றி ஆய்வு செய்வதற்காக இலங்கைக்கு வருமாறு, புகழ்வாய்ந்த அபிவிருத்திப் பொருளியலாளர்களில் ஒருவரான பேராசிரியர் டட்லி சியஸ் என்பவரின் தலைமையிலான சர்வதேச தொழில் அமைப்பின் குழுவிற்கு, பேராதனை பல்கலைக்கழகத்தின் முன்னாள் பொருளியல் பேராசிரியரான திட்டமிடல் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளர் வேண்டுகோள் விடுத்திருந்தார். அரசாங்கத்திற்கு ஓர் தொகுதி பரிந்துரைகளை முன்வைத்த அதேவேளை, இந்த டட்லி சியஸ் அறிக்கையானது சனத்தொகை பிரச்சினை தொடர்பாக பின்வருவனவற்றையும் குறிப்பிட்டிருந்தது: "மலேரிய ஒழிப்புத் திட்டம் அமுல்படுத்தப்பட்ட காலமாகிய 1940 களில் குடும்பத் திட்டமிடல் கொள்கையொன்று அமுல்படுத்தப்பட்டு, 1000க்கு 25 எனும் தற்போதைய பிறப்பு வீத இலக்கு 1955 இல் எட்டப்பட்டுவிட்டது என வைத்துக் கொள்ளுங்கள், இன்று (1971), அத்தகைய ஓர் நிகழ்ச்சித் திட்டத்தின் விளைவானது வேலை வாய்ப்புகளை உருவாக்கும் இலக்கை கணிசமானளவு இலகுவானதாக ஆக்குவதாக இருந்திருக்கும்." தவிரவும், "1975 இல் 1000க்கு 25 எனும் பிறப்பு வீதத்தை அடைவதற்காக சுகாதார சேவைகளின் முழுமையான வளங்களைப் பயன்படுத்தி, 1970 இல் திடமான ஓர் உத்தியோகபூர்வ கொள்கை இருந்திருப்பின், 2000 ஆம் ஆண்டில் வேலையின்மையை குறைப்பதற்கான நிகழ் வாய்ப்புகள் மிக மோசமானதாக இருந்திருக்கும் என வேலைவாய்ப்புகள் பற்றிய மற்றுமோர் தூதுக் குழு 1985 இல் கூறுமா?" என இவ்வறிக்கை மேலும் குறிப்பிடுகின்றது (சியஸ், 1971 ப.45).

ஆகவே, 1972 இல் அரசாங்கத்தினுடைய ஐந்தாண்டுத் திட்டம் முன்வைக்கப்பட்ட போது, பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. "தற்போதைய உயரளவிலான வீதத்தில் காணப்படும் தொடர்ச்சியான சனத்தொகை அதிகரிப்பானது அனைத்துத் தீர்வு முயற்சிகளுக்கும் சவால் விடுக்கும் பிரச்சினைகளை தோற்றுவிக்கும். நீண்ட காலத்தில், தற்போதைய வீதத்தில் காணப்படும் சனத்தொகை விரிவாக்கமானது 2000 ஆம் ஆண்டில் 27 மில்லியன் அளவில் சனத்தொகை அதிகரிப்பதற்கு காரணமாக அமையும். தற்போதைய சனத்தொகை வளர்ச்சி வீதத்தால் திணிக்கப்படும் வளங்கள் மீதான சுமை அநேகமாக சகிக்க முடியாததாக இருக்கும். இதனால், வளர்ந்தோர் சனத்தொகையின் பெரும் எண்ணிக்கையானோர் மத்தியில் குடும்பத் திட்டமிடல் வாய்ப்பு வசதிகளை பரவச் செய்வதற்கு இத்திட்டம் மிக அதிகளவிலான முக்கியத்துவம் கொடுக்கின்றது" (திட்டமிடல் வேலைவாய்ப்பு அமைச்சு, 1971 ப.21.) அப்போது சுகாதார அமைச்சராக இருந்த பெண்மணி, குடும்ப சுகாதார நிகழ்ச்சித் திட்டத்தில் தனிப்பட்ட கரிசனை எடுத்ததுடன் அறுவைச் சிகிச்சை கருத்தடைச் சேவைகளையும் பலப்படுத்தினார்.

இச்சனத்தொகை நிகழ்ச்சித் திட்டத்தை விரிவுபடுத்துவதற்காக அரசாங்கத்திற்கும் ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்திற்கும் (UNFPA) இடையில் 1973 இல் ஓர் செயற்திட்ட உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. பாடசாலைகளிலும் தொழிலாளர் கல்வியிலும் சனத்தொகைக் கல்வியை இணைத்துக் கொள்ளல், நகர்ப்புறத் துறையிலும் பெருந்தோட்டங்களிலும் குடும்பத் திட்டமிடலை நடைமுறைப்படுத்துதல், மருத்துவக் கல்லூரிகளில் சனத்தொகை இயக்க ஆற்றலையும் குடும்பத் திட்டமிடலையும் போதித்தல், குடித்தொகையியல் பயிற்சியும் ஆராய்ச்சியும் மேற்கொள்ளல், குடும்ப சுகாதாரத்தையும் கல்வியையும் விரிவாக்குதல் போன்ற 11 செயற்திட்டங்களுக்கு ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம் நிதியளிப்புச் செய்தது. சுகாதார அமைச்சுக்கு வெளியே ஏராளமான நிறுவனங்கள் காணப்பட்டமையால் சனத்தொகைச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் ஒருங்கிணைப்பு முக்கியமான ஒரு விடயமாகியது. இதனால், ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தால் நிதியளிப்புச் செய்யப்பட்ட செயற்திட்டங்களின் ஒருங்கிணைப்பானது 1974 இல் நிறைவேற்று அதிகாரமுடையவராக இருந்த பிரதம மந்திரியின் கீழ் செயற்பட்ட புதிய திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சிற்கு உரியதாக இருந்தது.

### வளர்ச்சிக் கட்டம்

1977 இல் சனத்தொகைக் கொள்கை வகுப்பு மற்றும் ஒருங்கிணைப்பு ஆகிய பணிகள் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், மருத்துவச் சிகிச்சை சார்ந்த கருத்தடைச் சேவைகளுக்கு முக்கியத்துவம் வழங்குவதுடன் கூடிய சனத்தொகை நிகழ்ச்சித் திட்டத்திற்கு அதிகளவு முக்கியத்துவம் வழங்க வேண்டியதன் தேவை பற்றி அப்போதைய அரசாங்கத்தின் சிம்மாசனப் பிரசங்கத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. சட்டக் கல்விமானாகவும் அரசாங்கச் சேவைக்கு வெளியே இருந்து வந்தவருமான திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் புதிய செயலாளர் இத்திட்டத்தில் தனிப்பட்ட கரிசனை காட்டினார். ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு 2000 ஆம் ஆண்டில் இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27 மில்லியன் சனத்தொகையை எட்டு வதை எவ்வாறு தடுப்பதென்பது குறித்த வினா அவரது மனதில் முதன்மையான இடத்தைப் பிடித்திருந்தது. உண்மையில் 2001 இல் சனத்தொகைக் கணிப்பீடு மேற் கொள்ளப்பட்டபோது இந்த நாட்டின் மொத் தச் சனத்தொகை 18.7 மில்லியன் மாத் திரமே எனக் கணிக்கப்பட்டது. மொத்தச் சனத்தொகை அளவை கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதில் பின்வரும் நிகழ்வுகள் நிச்சயமாகப் பங்களிப்புச் செய்திருந்தன.

எண்ணங்களுக்குச் செயல்வடிவம் கொடுப்பதில் துரிதமாக செயற்படுபவரான திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் தனது தொழில்நுட்ப பணி யாளர்களுடன் கலந்தாலோசித்து, குடும் பக் கட்டுப்பாட்டு அறுவைச் சிகிச்சையை தன்னிச்சையாக ஏற்றுக்கொள்வோருக்கு நிதி ரீதியான தூண்டுதல்களை வழங்கு வதன் மூலம் கருவள வீதத்தை கணிச மான அளவு குறைக்க முடியுமென்ற முடிவிற்கு வந்தார். 30 - 49 வயதிற்கும் இடைப்பட்ட வயதுப் பிரிவினரில் உள்ள பெண்களில் அண்ணளவாக மூன்றில் ஒரு பிரிவினர் ஆரம்பக் கல்வி மட்டத்தை விட குறைந்தளவு கல்வியறிவு உடை யவர்களாக இருந்ததுடன், அவர்களுக் கிருந்த குழந்தைகளின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் உயர்வானதாகக் காணப் பட்டதென அப்போது கிடைத்த தகவல் கள் எடுத்துக்காட்டின. வருடாந்த பிறப்பு களில் 31 சதவீதமானவை இந்த வயதுப் பிரிவில் உள்ள பெண்களுக்கே கிடைக் கின்றது என்பதும் தெளிவாகத் தெரிந்தது. ஆகவே, திட்டமிடப்படாத அல்லது வேண் டப்படாத பிறப்புகளை குறைப்பதற்கான நிரந்தரமான கருவள கட்டுப்பாட்டு முறை களின் கிடைப்பனவை விரிவுபடுத்துவதே இதன் உபாயமாக இருந்தது. எவ்வாறா யினும் அப்போதைய அரசாங்கத்தின் அமைச்சரவை உறுப்பினர் ஒருவரின் சகோதரராக இருந்த குடும்ப சுகாதார பணியகத்தின் பணிப்பாளர் இத்திட்டத் திற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். ஆனால், திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் தனிப்பட்ட கருத்துகளை விட தேசிய நலன் முற்பட்டு நிற்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்தார். இவ் வாறாக, மருத்துவக் குழுக்களுக்கும் குடும்பக் கட்டுப்பாட்டு அறுவைச் சிகிச் சையை ஏற்றுக்கொள்வோருக்கும் நிதி ரீதியான ஊக்குதவிகளை வழங்குவதற் கான தீர்மானம் பரவலாகக் காணப்பட்டது. குடும்பக் கட்டுப்பாட்டு அறுவைச் சிகிச் சையை ஏற்றுக்கொள்வோருக்கு மாவட் டச் செயலகங்களூடாக கொடுப்பனவு களை வழங்குவதற்கான தீர்மானம் கூட மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறாக 1979 வைகாசியிலிருந்து தன்னிச்சையாக குடும் பக் கட்டுப்பாட்டு அறுவைச் சிகிச்சையை மேற்கொள்ளும் மருத்துவக் குழுக்களுக் கான நிதி தூண்டுதல்களை வழங்குவ தற்கு அரசாங்கம் தீர்மானித்தது. இது 1980 தையிலிருந்து வாடிக்கையாளர் களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. இரு குழந் தைகளைக் கொண்டவர்களாகவும் தன் னிச்சையாக குடும்பக் கட்டுப்பாட்டு அறுவைச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட் டோராகவும் காணப்பட்ட திருமணமான ஆண்கள் அல்லது பெண்களின் எண் ணிக்கை துரிதமாக அதிகரித்தது. 1970 இல் 4,971 ஆகக் காணப்பட்ட தன்னிச் சையாக குடும்பக் கட்டுப்பாட்டு அறுவைச் சிகிச்சையை புதிதாக ஏற்றுக்கொண் டோரின் எண்ணிக்கை 1980 இல் 112,926 ஆக அதிகரித்தது. உயரளவிலான பெண் கள் இனப்பெருக்க ஆற்றலுடைய வயது களை கடக்கும்வரை இவ்வெண்ணிக்கை யானது தொடர்ந்தும் ஒப்பீட்டளவில் உயர் வானதாகவே காணப்பட்டது. 1982 இல் 3.7 ஆகக் காணப்பட்ட மொத்தக் கருவள வீதம் (பெண்களுக்கான குழந்தைகளின் சராசரி எண்ணிக்கை) 1987 இல் 2.8 ஆக வீழ்ச்சியடைந்தது என்பதுடன், தன்னிச்சையான குடும்பக் கட்டுப்பாட்டு அறுவைச் சிகிச்சை கருத்தடை முறையின் கிடைப்பனவு மொத்தக் கருத்தடை சாதன பயன்பாட்டில் அண்ணளவாக 50 சதவீத மாக இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்க தாகும். வேறுவிதமாகக் கூறின், அவசிய மற்ற பிறப்புகளைத் தவிரக்கும் முறை களில் அரைவாசிப் பங்கு குடும்பக் கட்டுப் பாட்டு அறுவைச்சிகிச்சையாக இருந்தது.

மேலும், திடமான தகவல், கல்வி மற்றும் தொடர்பாடல் செயற்பாடுகள் காரணமாக, 1980களில் இந்த நிகழ்ச்சித் திட்டமானது அதிகளவு கவனத்தைப் பெற்றது. அர சாங்கத் தரப்பைப் பொறுத்தவரை தகவல் திணைக்களமும் சனத்தொகை தகவல் மத்திய நிலையமும் மிக முக்கியமான ஓர் பங்கை வகித்தன. அரசசார்பற்ற நிறு வனங்களைப் பொறுத்தவரையில் குடும் பத் திட்டமிடல் சங்கத்திற்கு மேலதிகமாக ஏனைய மூன்று அரசசார்பற்ற நிறுவனங் கள் அதாவது, சமூக அபிவிருத்தி சேவை கள், சனத்தொகை சேவைகள் லங்கா மற்றும் தன்னிச்சையான குடும்பக் கட்டுப் பாட்டு அறுவைச் சிகிச்சைகளுக்கான இலங்கைச் சங்கம் ஆகியன அரசாங்க நிகழ்ச்சித் திட்டத்திற்கு மிக அதிகளவில் தேவைப்பட்ட குறைநிரப்பு ஆதரவை வழங்கின. அப்போது, அர்ப்பணிப்பும் முகாமைத்துவ ஆற்றலுமுடைய தலை சிறந்த நபர்களால் இவ்வமைப்புகள் நிர் வகிக்கப்பட்டன. குடும்ப சுகாதாரத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் தலைமை தாங்கப்பட்டதும் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் மற்றும் பணி முறை சார்ந்த அமைச்சுக்களின் செயலா ளர்கள் மற்றும் குடும்பத் திட்டமிடல் தொடர்பான அரசசார்பற்ற நிறுவனங்கள் உட்பட சனத்தொகைச் செயற்பாடுகளை அமுல்படுத்திய அவற்றின் சிரேஷ்ட பணியாளர்கள், சம்பந்தப்பட்ட கொடை நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகி யோரை அங்கத்தவர்களாகவும் கொண்டி ருந்த தேசிய சனத்தொகை ஒருங்கிணைப் புக் குழுவானது (NCCP) இத்திட்டத்தை வினைத்திறனுடைய முறையில் ஒருங் கிணைத்தது. புதிதாக உருவாக்கப்பட்ட இச்சனத்தொகைப் பிரிவானது புதிய எண்ணங்களுக்கு செயல் வடிவம் கொடுக கும் ஆற்றலுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களின் ஓர் சிறிய குழுவை ஆக்கக் கூறாகக் கொண்டிருந்தது. இச்சனத் தொகைப் பிரிவானது தேசிய சனத் தொகை ஒருங்கிணைப்புக் குழுவின் செயலகமாக தொழிற்பட்டதுடன், இத் திட்டத்தை தேசிய மற்றும் மாவட்ட மட்டங்களில் கண்காணித்தும் வந்தது.

1980 பங்குனியில், குடும்பத் திட்டமிடல் தொடர்பில், அனைத்து அரசியல் கட்சி களதும் பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசாங்க அமைச்சர்களும் பொதுவான கருத்துகளையும் நோக்கங்களையும் கொண்டவர்களாக இருந்தனர். குடும்பத் திட்டமிடலானது ஓர் அரசியல் ஆயுதமாக பயன்படுத்தப்பட்டு வந்த முன்னைய தேர்தல் காலங்களுடன் ஒப்பிடுமிடத்து, இக்காலகட்டம் ஓர் மைல்கல்லாக இருந் தது. அமைச்சரவை அந்தஸ்துள்ள ஓர் சிரேஷ்ட அமைச்சரை தலைவராகக் கொண்ட பாராளுமன்ற ஆலோசனைக் குழுவொன்று 1982 இல் அமைக்கப்பட் டது. மாவட்ட மட்டச் சனத்தொகைச் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்காக அரசாங்க அதிபர்களைத் தலைவர்களாகக் கொண்ட மாவட்டச் சனத்தொகைக் குழுக் கள் இதே ஆண்டில் அமைக்கப்பட்டன. அரசாங்க நிறுவனங்களாலும் அரச சார் பற்ற நிறுவனங்களாலும் வெளியிடப்பட்ட குடும்பத் திட்டமிடல் செய்திகள் தொடர் பில் ஆலோசனை கூறுவதற்கென 1983 இல் தகவல், கல்வி மற்றும் தொடர்பாடல் என்பவற்றிற்கான ஓர் தேசிய ஆலோ சனை குழு (IEC) அமைக்கப்பட்டது. குடும்பத் திட்டமிடல் செயற்பாடுகளில் ஈடுபாடும் கரிசனையும் கொண்டிருந்த மருத்துவ அதிகாரிகள் தேசிய சனத் தொகை ஒருங்கிணைப்புக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டதுடன், அவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன், அவர் கள் ஆய்வுச் சுற்றுலாக்களுக்காக வெளி நாடுகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டனர்.

குடும்பச் சுகாதார அமைச்சர், திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் செயலாளர், மாவட்ட மட்டங்களிலுள்ளோர் உட்பட அவற்றின் அர்ப்பணிப்புமிக்க பணியாளர் கள் என்போரால் வெளிப்படுத்தப்பட்ட உறுதியான அர்ப்பணிப்பு காரணமாக, இந்த நிகழ்ச்சித் திட்டமானது இயக்க உந்துவிசையை பெற்றதுடன், சனத் தொகை மற்றும் குடும்பத் திட்டமிடல் தொடர்பான பல குறிகாட்டிகளும் மேலும் முன்னேற்றமடைந்தன. 1987ற்குள் சனத் தொகை வளர்ச்சி வீதமானது 1.3 சதவீத மாக வீழ்ச்சியடைந்ததுடன், கருத்தடைச் சாதனக் கிடைப்பனவு 62 சதவீதமாக அதிகரித்தது. ஆயினும், கருத்தடை முறைகளுக்கான நிறைவேற்றப்படாத தேவையானது 12 சதவீதமாக இருந்தது.

### முதிர்ச்சிக் கட்டம்

1980களின் இறுதியில் சனத்தொகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சித் திட்டமானது, கேள்வி உருவாக்கக் கட்டத்திலிருந்து குடும்பத் திட்டமிடல் சேவை வழங்கல் முழுக் கவனத்துக்குரியதாக ஆகியுள்ள நிரம்பல் வகைப்பட்ட ஒன்றாக மாற்றமடைந்தது. ஆகவே, *1989* இல் சனத்தொகைக் கொள்கை வகுப்பு மற்றும் ஒருங்கிணைப்பு என்பவற்றின் தொழிற்பாடு சுகாதார அமைச்சிற்கு மீள் பணி ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன், திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் சனத்தொகைப் பிரிவானது சுகாதார அமைச்சிற்கு மாற்றப்பட்டது. இப்புதிய ஏற்பாட்டின்படி தேசிய சனத்தொகை ஒருங்கிணைப்புக் குழுவிற்கு சுகாதார அமைச்சின் செயலாளர் தலைமை தாங்கியதுடன், சனத்தொகைப் பிரிவானது அதனுடைய செயலகமாக தொடர்ந்தும் இயங்கி வந்தது. இலங்கை *2000* ஆம் ஆண்டிற்குள் பதிலீட்டு மட்டக் கருவள வீதத்தை அடைவதை குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும் என்பது *1990* இல் தேசிய சுகாதார பேரவையின் கருத்தாகக் காணப்பட்டது. ஆகவே, இச்சனத்தொகைப் பிரிவு ஓர் கொள்கை அறிக்கையைத் தயாரித்ததுடன், பதிலீட்டு கருவள வீதத்தை அடைவதற்கான குறுங்கால சனத்தொகைச் செயற்திட்டங்களையும் கருத்தடைச் சாதனத் தேவைகளையும் தயார்படுத்தியது. இது பிரதமரால் தலைமை தாங்கப்பட்ட தேசிய சுகாதாரப் பேரவையால் அங்கீகரிக்கப்பட்டது. *1994* இல், கெய்ரோவில் இடம்பெற்ற சனத்தொகை மற்றும் அபிவிருத்தி தொடர்பான சர்வதேச மகாநாட்டின் (ICPD) செயற்பாட்டுத் திட்டங்களில் விபரமாக எடுத்துக்கூறப்பட்டுள்ள இனப்பெருக்கம் தொடர்பான பரந்த அடிப்படையிலான ஓர் எண்ணக்கருவுடன் உலகளாவிய கருத்துடன்பாட்டை எட்டுவதற்காக கையொப்பம் இடும் நாடுகளில் ஒன்றாக இலங்கையும் சேர்ந்துகொண்டது.

சனத்தொகை மற்றும் அபிவிருத்தி தொடர்பான சர்வதேச மகாநாட்டின் செயற்பாட்டுத் திட்டங்களுக்கு எதிர்வினையாற்றுவதன் பொருட்டு ஏராளமான நடவடிக்கைகளை இலங்கை மேற்கொண்டது. இவற்றில் முக்கியமானதோர் நடவடிக்கையாக, *1998* இல் வகுக்கப்பட்ட சனத்தொகை மற்றும் குடும்பச் சுகாதாரக் கொள்கையும் இக்கொள்கையை அடிப்படையாகக் கொண்ட செயற்பாட்டுத் திட்டம் ஒன்றின் வளர்ச்சியும் அமைந்துள்ளன. ஏனையவை சனத்தொகை மற்றும் குடும்பச் சுகாதாரச் செயற்பாடுகளின் மேம்பாட்டிற்கான ஓர் வெளிப்படையான ஆதரிப்பு உபாயத்தின் வளர்ச்சி, சனத்தொகை மற்றும் குடும்பச் சுகாதாரம் தொடர்பான தகவல், கல்வி மற்றும் தொடர்பாடல் என்பவற்றிற்கான ஓர் தேசிய ஆலோசனைக் குழுவின் செயற்பாடுகள், சேவை வழங்கல் நிகழ்ச்சித் திட்டத்தில் குடும்பச் சுகாதாரத்தின் குடும்பத் திட்டமிடலிலிருந்து முழுமைப் படைப்புக் கோட்பாட்டு அணுகுமுறைக்கு மாற்றமடையும் எடுத்துக்காட்டு மாதிரி என்பவற்றை உள்ளடக்கியுள்ளன. ஆகவே, தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கட்டமைப்பானது ஓர் பிரமிட்டு வடிவத்தைப் பெற்றது. சனத்தொகை மற்றும் குடும்பச் சுகாதாரம் தொடர்பான தேசியக் கொள்கை உயர்வான இடத்தில் இருந்தது. அதற்கு அடுத்த மட்டத்தில் வெளிப்படையான ஆதரவு நிகழ்ச்சித் திட்டமும் அதைத் தொடர்ந்து அரசாங்கத்தாலும் அரசசார்பற்ற நிறுவனங்களாலும் அமுல்படுத்தப்பட்ட தகவல், கல்வி மற்றும் தொடர்பாடல் என்பவற்றிற்கான தேசிய ஆலோசனைக் குழு நிகழ்ச்சித் திட்டமும் இருந்தன. இதற்கு அடுத்ததாக குடும்பச் சுகாதாரம் தொடர்பான பாடசாலைக் கல்வி திட்டம் அமைந்திருந்தது. இதையடுத்து, அத்திவாரத்தில் அமைந்திருந்த மிகப் பெரிய நிகழ்ச்சித் திட்டமாக குடும்பச் சுகாதார சேவைகள் வழங்கல் திட்டம் காணப்பட்டது (அபேகோன், *2009*).

செயற்பாட்டுத் திட்டத்தின் ஏராளமான பகுதிகள் அமுலாக்கப்பட்டமை காரணமாக சனத்தொகை மற்றும் குடும்பச் சுகாதாரம் தொடர்பான குறிகாட்டிகளில் மேலும் முன்னேற்றங்கள் ஏற்பட்டன. திட்டமிடப்பட்டவாறு *2000* ஆம் ஆண்டளவில், கருவள வீதமானது பதிலீட்டு மட்டத்தை அடைந்தது. கருத்தடைச் சாதன கிடைப்பனவு வீதம் *70* சதவீதமான ஓர் உயர் மட்டத்தை அடைந்தது. கருத்தடை முறைகளுக்கான பூர்த்தி செய்யப்படாத தேவையானது மேலும் குறைவடைந்து *9* சதவீதமாகியது. இதனால், சனத்தொகை மற்றும் அபிவிருத்தி தொடர்பான சர்வதேச மகாநாட்டின் பின்னர், கடந்த *15* வருட காலத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதற்காக *2004* ஆம் ஆண்டில் நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் தலைமையகத்தில் சர்வதேச சமூகம் ஒன்றுகூடிய போது, *1994* ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட செயற்பாட்டுத் திட்டங்களில் சாத்தியப்படுமென எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளில் பெரும்பாலானவற்றை இலங்கை நிறைவு செய்துள்ளது எனும் தகவலை அரசாங்கத்தின் சார்பில் கலந்துகொண்ட சுகாதார அமைச்சரால் தெரிவிக்கக்கூடியதாக இருந்தது.

இலங்கையில் நிகழ்ந்தவாறு கருவள வீதம் வீழ்ச்சியடையாது இருந்திருக்குமாயின் இந்த நாடு மிகக் கடுமையான சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்கொண்டு இருக்கும். இலவசக் கல்வி, சுகாதார சேவைகள் மற்றும் ஏனைய சமூக சேமநலச் சேவைகள் என்பவற்றை சனத்தொகையில் பெரும் எண்ணிக்கையானோருக்கு வழங்குவது கடினமானதாக இருந்திருக்கும்.

*2006* ஆம் ஆண்டளவில் இந்த நாடானது தனது குடித்தொகையியல் நிலைமாற்றத்தின் இறுதிக் கட்டத்தை அடைந்ததுடன், சுகாதார அமைச்சின் சனத்தொகைப் பிரிவானது நீடித்திருக்கத்தக்க அபிவிருத்தியின் பொருட்டு சனத்தொகை வளர்ச்சியை ஸ்திரப்படுத்துவதில் தனது ஆரம்ப இலக்குகளை எய்தியது. சனத்தொகை வயதுக் கட்டமைப்பானது பிரமிட் வடிவத்திலிருந்து ஓர் பீப்பாய் வடிவத்திற்கு மாற்றம் பெற்றது. *1963* இல் *42* சதவீதமாகக் காணப்பட்ட *15* வயதிற்குக் கீழ்ப்பட்ட சனத்தொகையின் அளவானது *2006* ஆம் ஆண்டில் *24* சதவீதமாக குறைவடைந்து, இக்காலகட்டத்தில் *82* ஆக இருந்த தங்கியிருப்போர் வீதமானது *45* சதவீதமாக குறைவடைந்தது. அதே நேரத்தில் இளம் வயதுகளுக்கான சனத்தொகை வயதுக் கட்டமைப்பில் ஓர் புடைப்பு தோற்றம் பெற்றது. இவ்விளையோர் கல்வி கற்றவர்களாகவும் இருந்தனர். இது பொதுவாக ‘குடித்தொகையியல் மிகைக்கொடை’ எனக் குறிப்பிடப்படுகின்றது. இவ்வாறாக, இலங்கையில் காணப்படும் குடித்தொகையியல் கட்டமைப்பானது எல்லாக் கணிப்பீடுகளிலுமே பொருளாதார விரிவாக்கத்திற்குச் சாதகமானதாக உள்ளது. ஆயினும் சாத்தியப்படத்தக்க பொருத்தமான பொருளாதாரச் சூழலை உறுதிப்படுத்துவதில் ஏற்படும் தவறானது இந்தக் குடித்தொகையியல் மூலம் உருவாக்கப்பட்ட வாய்ப்புகளை வீணாக்குவதாக அமையும் என்பதையும் வலுயுறுத்திக் கூறவேண்டிய அவசியம் உண்டு.

## முடிவுரை

சுருக்கமாகக் கூறின், இலங்கையில் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட சனத்தொகை தொடர்பான ஆரம்பகால செயற்பாடுகள் பின்னர் சட்டரீதியாக அமைக்கப்பட்டதுடன், சுகாதார அமைச்சின் கீழ் ஓர் தேசியக் கொள்கையாகவும் விரிவுபடுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்தில் ஓர் உந்துதலையும் அதிகளவான கவனம் செலுத்தலையும் வழங்குவதன் பொருட்டு சனத்தொகைக் கொள்கைத் திட்டமிடல் மற்றும் ஒருங்கிணைப்பு என்பன மேன்மை தங்கிய ஜனாதிபதியின் கீழ் செயற்பட்ட திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சிற்கு உரியதாக இருந்தன. குடும்பத் திட்டமிடலுக்கான கேள்வி உருவாக்கம் பூர்த்தியடைந்த போது, இச்செயற்பாடுகள் குடும்பத் திட்டமிடல் மற்றும் குடும்பச் சுகாதாரச் சேவைகளின் வழங்கலுக்குப் பொறுப்பாகவுள்ள சுகாதார அமைச்சின் கீழ் மீண்டும் வந்தன. ஐந்து தசாப்த காலத்தில் ஏற்பட்ட இந்த நிலைமாற்றத்தில் சரியான தருணத்தில் பொருத்தமான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், முக்கியமான பதவிகளில் பொருத்தமானவர்கள் நியமிக்கப்பட்டனர்.

ஆயினும், எதிர்காலத்தில் பொதுமக்களின் அதிகரித்த வருமானம் காரணமாக குடும்பத் திட்டமிடல் செயற்பாடுகளில் காணப்படும் அரசாங்கத்தின் வகிபாகமானது இறுதியில் குறைவடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, அதிகளவான திருமணமான தம்பதியினர் தமது தேவைகளை நிறைவு செய்ததற்காக வேறு வழியின்றி அரச சார்பற்ற நிறுவனங்களினதும் தனியார் துறையினரதும் வளங்களையே துணையாக நாடுவர்.

உயரளவான சனத்தொகை வளர்ச்சியிலிருந்து ஒப்பீட்டு ரீதியாக மெதுவான சனத்தொகை வளர்ச்சியாகக் குறைவடைந்த இந்த நிலைமாற்றத்தில் மிக முக்கியமானவர்களாக இருந்தவர்கள் யாவரெனில், இந்த நிகழ்ச்சித்திட்டச் செயற்பாடுகளை முகாமைசெய்து, ஒருங்கிணைத்து அவற்றை அமுல்படுத்தியவர்களேயாவர். அவர்கள் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் மிக முக்கியமான கூறாகவும் உயிர் நாடியாகவும் இருந்ததுடன், இவ்வமைப்புகளில் அதிகாரம் வாய்ந்தோராகவும் இருந்தனர். எனது நான்கு தசாப்த கால அரசாங்கச் சேவையில் நான் முன்னொரு போதும் சந்தித்திராத அர்ப்பணிப்புமிக்க, நேர்மையான மற்றும் நட்பிணக்கமுடைய மக்களில் ஒரு சிலரைச் சந்தித்து அவர்களுடன் சேர்ந்து பணியாற்றும் வாய்ப்பை பெற்றிருந்தமை எனது சிறப்புரிமையாகும்.

(ஓர் அரசாங்க ஊழியனாக கடமையாற்றிய கடந்த நான்கு தசாப்த காலத்தில் கலாநிதி அபயக்கோன் அவர்கள் இலங்கையின் குடித்தொகையியல் துறை, சனத்தொகைக் கொள்கைகள் மற்றும் உபாயங்கள் என்பவற்றை வகுத்தல் அத்துடன் அமுல்படுத்துதல் என்பவற்றில் மிகப்பெரிய அளவில் பங்களிப்புச் செய்துள்ளார். அவர் 'Mr. Population' எனப் பிரபல்யமாக அழைக்கப்படுகின்றார்.)

### துணை நூற்பட்டியல்


Abeykoon, A.T.P.L. (2009). "ICPD 15 Years on: Sri Lanka's Participation, Policy and Programme Initiatives" in *'ICPD – 15 Years on' Sri Lanka: A Review of Progress*, Family Planning Association of Sri Lanka, Colombo.

Abeykoon, A.T.P.L.(1996). *Population Programme in Sri Lanka: The Environment, Strategies, Structure, Managerial Processes and Strategic Issues for the Future*, Research Paper Series-8, Population Information Centre, Ministry of Health, Highways and Social Services, Colombo.

Government of Ceylon (1955). *Six-Year Programme of Investment, 1954/55 to 1959/60*, Planning Secretariat, Colombo.

Ministry of Planning and Employment (1971). *The Five Year Plan 1972-1976*, Department of Government Printing, Ceylon.

National Planning Council (1959). *The Ten-year Plan*, The Planning Secretariat, Colombo, Ceylon.

Sears, Dudley (1971). Matching Employment Opportunities and Expectations, International Labour Office, Geneva.

The Department of National Planning (1962). *The Short-term Implementation Programme*, Government Press, Colombo, Ceylon.


### அடிக்குறிப்பு

[1] Based on the keynote address at the inauguration of the Annual Scientific Sessions of the Population Association of Sri Lanka, 2011. ■

............36ம் பக்கத் தொடர்ச்சி

இதை முதன்முதலாக 1994 இல் மற்சுமோரோ (Matsumoto) எனும் இடத்திலுள்ள மாடிக்கட்டிடத் தொகுதியில் பயன்படுத்தினர். பிறர் கூற்றின்படி, அவர்களுக்கு எதிரான வழக்கு வாதங்களை விசாரித்த நீதிபதி அங்கேயே வசித்து வந்தார் என்பதே அவ்விடத்தை அவர்கள் தெரிவு செய்தமைக்கான காரணமாக இருந்தது. இதில், எட்டுப் பொதுமக்கள் இறந்ததுடன், 200க்கும் மேற்பட்டோர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர். ஆனால், குற்றம் புரிந்த ஓர் அமைப்பாக ஓம் ஷின்றிக்யோவை இனங்காண்பதற்கு விசாரணையாளர்கள் தவறிவிட்டனர். 1995 மார்ச் 20ஆம் திகதியன்று டோக்கியோ சுரங்கப்பாதைத் தொகுதியில் ஐந்து தொடரூந்து (புகையிரதம்) வண்டிகளில் ஒன்றிணைக்கப்பட்ட வகையில் சாறினை *(sarin)* வெளியேறச் செய்தமையானது அவர்களுடைய வியப்பூட்டும் அடுத்த தாக்குதலாக அமைந்திருந்தது. இது 12 பேர் இறப்பதற்கும், ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைவதற்கும் காரணமாக அமைந்தது. இந்தத் தடவை, இதற்குப் பொறுப்பானவர்களைப் பொலிஸாரால் இறுதியில் இனங்காணக்கூடியதாக இருந்ததுடன், ஷோகோ அசஹரா (Shoko Asahara) நீதிமன்ற விசாரணைக்குட்படுத்தப்பட்டு, தீர்ப்பாக அவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.

இவ்வாறான அமைப்புகள் முறைசார்ந்த வகையில் 'பயங்கரவாத அமைப்புக்களாக' விபரிக்கப்படுகின்றனவோ இல்லையோ, சர்வதேச ஒப்பந்தங்களுக்கோ அல்லது தேசிய சட்டங்களுக்கோ சட்ட ரீதியாகக் கட்டுப்பட வேண்டிய கடப்பாடுடையவையாக அவை தம்மைக் கருதுவதில்லை என்பதுடன், அவற்றைப் பொறுத்தவரையில், பாதுகாப்பற்ற குடிமக்களுக்கு எதிராக பாரிய தாக்குதல்களை மேற்கொள்வதற்கு, இரசாயன ஆயுதங்களைப் பெற்றுக்கொள்வது மிக மலிவானதாக இருப்பதுடன், அதற்கான இயலாற்றல்களை விருத்தி செய்வது மிகவும் இலகுவானதாகவும் காணப்படுகின்றது. ஓம் ஷின்றிக்யோ (Aum Shinrikyo) அமைப்பின் செயற்பாடுகள் இந்த உண்மையை சந்தேகத்திற்கு இடமின்றி உலகின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளது. நேரிடக்கூடிய சம்பவங்களை உள்ளடக்குவதன் பொருட்டு, இரசாயன ஆயுதங்கள் தொடர்பான இச்சமவாயம் வடிவமைக்கப்பட்டபோதும், இதில் கைச்சாத்திட்டுள்ள நாடுகளின் உயர் மட்டத்திலான விருப்பார்வ ஒத்துழைப்பு, இரசாயன ஆயுதங்களைத் தடை செய்வதற்கான அமைப்பு (Organisation for the Prohibition of Chemical Weapons - OPCW), தேசிய அதிகார அமைப்பு, அத்துடன் அங்கத்துவ நாடுகளின் சுங்கத் திணைக்களம், சட்டத்தை அமுல்படுத்தும் அமைப்பு, பாதுகாப்புப் பிரிவு, புலனாய்வு நிறுவனங்கள் போன்ற இரசாயன ஆயுதங்கள் தொடர்பான இச்சமவாயத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பாகவுள்ள பெரும் எண்ணிக்கையிலான நிறுவனங்களின் இடையறாத விழிப்புணர்வு என்பவற்றிலேயே அதன் வெற்றி தங்கியுள்ளது. இவ்விடயங்கள், குறைந்த பட்சம், அபிவிருத்தியடைந்த நாடுகளில் உள்ள மிக முக்கியமான இரசாயன கைத்தொழில்கள் தொடர்பில் பொருத்தமான வகையில் அமைந்துள்ளன.

இரசாயன ஆயுதங்கள் தொடர்பான சமவாயத்தில் இன்னும் பல நாடுகள் கைச்சாத்திடவில்லை அல்லது அதை அதிகாரபூர்வமாக ஏற்புடையதாக்கவில்லை எனும் உண்மையைக் கவனத்தில் கொள்ளும் போது, இவ்வுடன்படிக்கையானது நன்கு செயற்பட்டு வருவதுடன், கடந்த 14 வருட காலத்தில் இவ்வுலகை பாதுகாப்பான ஓர் இடமாக ஆக்கியுள்ளது. ஆயினும், அச்சமூட்டும் வகையில் தோற்றமளிக்கும் இந்த இரசாயன ஆயுதங்களைப் பெற்றுக்கொள்வதற்கான அதிகளவு சாத்தியக்கூறுகளை பயங்கரவாத அமைப்புகள் கொண்டுள்ளன. இதற்கான பதில், சர்வதேச ஒத்துழைப்பு, நுணுக்க விபரங்களில் ஆழ்ந்த கவனஞ் செலுத்துகின்ற கண்காணிப்பு மற்றும் முடிவுறா விழிப்பு என்பவற்றிலேயே காணப்படுகின்றன.

***நன்றி:*** இரசாயன ஆயுதங்களைத் தடை செய்வதற்கான அமைப்பால் (Organisation for the Prohibition of Chemical Weapons - OPCW) 2004 ஆம் ஆண்டில், ஒழுங்கு செய்யப்பட்ட ஓர் இணைந்த நிகழ்ச்சித்திட்ட பயிற்சியில் பங்கேற்பதற்கான வாய்ப்பை வழங்கியமைக்காக, அவ்வமைப்பிற்கு இக்கட்டுரையாசிரியர் தனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றார். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார வளர்ச்சி

**பேராசிரியர் டனி அத்தப்பத்து**

***முதுநிலைப் பேராசிரியர் - பொருளியல்***
***ருஹூணு பல்கலைக்கழகம்***

**அறிமுகம்**

கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்புகளிலும், பல்கலைக்கழகங்களிலும பொருளியலை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களுக்கு, பொருளாதார வளர்ச்சி தொடர்பான அடிப்படைக் கோட்பாட்டு அம்சங்கள் சிலவற்றைப் பற்றிய ஆரம்ப அறிவையும், விளக்கத்தையும் வழங்கும் நோக்கத்துடனேயே இக்கட்டுரை வெளியிடப்படுகின்றது. பொருளாதார வளர்ச்சி பற்றிய பின்வரும் அம்சங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன: (அ) பொருளாதார வளர்ச்சியின் வரைவிலக்கணம், (ஆ) பொருளாதார வளர்ச்சியை அளவிடுதல், (இ) பொருளாதார வளர்ச்சியின் நன்மைகள், (ஈ) பொருளாதார வளர்ச்சிக்கான காரணங்கள், (உ) பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் கொள்கைகள், (ஊ) பொருளாதார வளர்ச்சிக்கான செலவுகள்.

**பொருளாதார வளர்ச்சியை வரையறுத்தல்**

பொருளாதார வளர்ச்சி என்பது, ஒரு நாட்டினுடைய பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றின் உற்பத்தி இயலளவில் ஏற்படும் ஓர் அதிகரிப்பாகும். உணவுப் பொருட்கள், ஆடைகள், வீடமைப்பு, கார்கள், மருத்துவ சேவைகள் என்பவற்றை ஒரு நாட்டினால் எந்தளவுக்கு அதிகமாக உற்பத்தி செய்ய முடியுமோ, அந்தளவுக்கு அந்த நாட்டு மக்களின் வாழ்க்கை மேம்பட்ட நிலையில் இருக்கும். பொருளாதார வளர்ச்சி, இவ்வகையான உற்பத்திப் பொருட்களின் கிடைப்பனவை காலப்போக்கில் அதிகரிப்பதுடன், அப்பொருளாதார வளர்ச்சியானது உயர் வாழ்க்கைத் தரத்திற்கு காரணமாகவும் அமைகின்றது. ***பொருளாதார வளர்ச்சியை, கோட்பாட்டு ரீதியான நோக்கில், குறிப்பிட்ட ஒரு பொருளாதாரத்தினுடைய உற்பத்தி இயலளவின் அல்லது சாத்தியமான வெளியீட்டின் ஓர் விரிவாக்கமாக வரையறுக்க முடியும்.*** பொருளாதார வளர்ச்சி பற்றிய எண்ணக்கருவை முன்வைப்பதற்கு இரு வழிமுறைகள் காணப்படுகின்றன. முதலாவது வழிமுறை யாதெனில், உரு 1 இல் காட்டப்பட்டுள்ளவாறு உற்பத்திச் சாத்திய எல்லை (Production Possibility Frontier - PPF) தொடர்பானதாகும். இதில், பொருளாதார வளர்ச்சி என்பது, உற்பத்திச் சாத்திய எல்லையின் $PPF_1$ இலிருந்து $PPF_2$ இற்கான வெளி நோக்கிய ஓர் நகர்வாக விபரிக்கப்படுகின்றது. வேறு விதமாகக் கூறின், ஒரு நாட்டினுடைய உற்பத்தி இயலளவில் ஏற்படும் விரிவாக்கத்தின் காரணமாக, குறிப்பிட்ட ஏதாவது ஒரு காலபபகுதியில் அந்நாடு மேலும் அதிகமான பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்வதை பொருளாதார வளர்ச்சி சாத்தியப்படச் செய்கின்றது.




உரு 1 உற்பத்திச் சாத்திய எல்லையில் ஏற்படும் நகர்வு

உரு 2 இல் காட்டப்பட்டுள்ளவாறு, மொத்த நிரம்பல் தொடர்பான வழிமுறையே, பொருளாதார வளர்ச்சி பற்றிய எண்ணக்கருவை முன்வைப்பதற்கான இரண்டாவது வழிமுறையாகும். இதன் படி, குறிப்பிட்ட பொருளாதாரத்தினுடைய நீண்டகால மொத்த நிரம்பல் வளையியின் வலது பக்கம் நோக்கிய ஓர் நகர்வுடன் பொருளாதார வளர்ச்சி தொடர்புற்றுள்ளது. இது, குறிப்பிட்ட பொருளாதாரத்தின் சாத்தியமான வெளியீட்டு மட்டத்தில் ஏற்படும் அதிகரிப்புக்கு நிகராக இருக்கின்றது. குறிப்பிட்ட ஒரு பொருளாதாரத்தின் வளக் கொடை மற்றும் உற்பத்தித் திறன் என்பவற்றில் ஏற்படும் அதிகரிபபானது, குறிப்பிட்ட ஏதாவது ஒரு விலையில் மேலும் அதிகளவான பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்வதை சாத்தியப்படச் செய்யும். எனவே, மொத்த நிரம்பல் வளையியானது வெளிப்புறமாக, $AS_1$ இலிருந்து $AS_2$ ஆக நகர்வடையும். இது, $Y_1$ இலிருந்து $Y_2$ இற்கான நிறை தொழில்மட்ட வெளியீட்டு (அல்லது சாத்தியமான வெளியீட்டு) அதிகரிப்புக்குக் காரணமாகின்றது.




உரு 2 மொத்த நிரம்பலில் ஏற்படும் நகர்வு

**பொருளாதார வளர்ச்சியை அளவிடுதல்**

பொருளாதார வளர்ச்சியை அளவிடுவதற்கான மிகச் சிறந்த வழிமுறையைப் பற்றி நாம் தற்போது கலந்துரையாடுவோம். புள்ளிவிபரவியல் நோக்கில், பொருளாதார வளர்ச்சி என்பது ஒரு நாட்டினுடைய மெய் வெளியீட்டில் ஏற்படும் ஓர் அதிகரிப்பாகும். இதனால், பொருளாதார வளர்ச்சியை அளவிடுவதற்காக இரு முறைகளை பொருளியலாளர்கள் பயன்படுத்துகின்றனர்; (i) குறிப்பிட்ட ஒரு கால கட்டத்தில், மெய் மொத்த தேசிய உற்பத்தியில் (GNP) அல்லது தேறிய தேசிய உற்பத்தியில் (NNP) ஏற்படும் அதிகரிப்பு, (ii) குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தில், ஆள்வீத (தலா) மெய் மொத்தத் தேசிய உற்பத்தியில் அல்லது ஆள்வீத தேறிய தேசிய உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பு. இவ்விரு அளவீடுகளுமே பயனுடையவையாகும். உதாரணமாக, இராணுவ ஆற்றல் அல்லது அரசியல் மேம்பாட்டு நிலை தொடர்பான பிரச்சினையை கவனத்தில் கொள்வோமாயின், முதலாவது அளவீட்டு முறை அதிகளவு பொருத்தப்பாடு உடையதாகும். ஆனால், ஆள்வீத வெளியீட்டு வளர்ச்சியானது, நாடுகள் அல் லது பிராந்தியங்கள் மத்தியிலான வாழ்க்கைத் தரங்களை ஒப்பிடுவதற்கு ஏனையவற்றை விட ஐயத்திற்கு இடமில்லாமல் மேம்பட்டதாகும். இரு வகையான அளவீட்டின் மூலமும் பெறப்படுகின்ற பொருளாதார வளர்ச்சியானது, வருடாந்த சதவீத அடிப்படையில் கணிக்கப்படுகின்றது. உதாரணமாக, கடந்த வருட மெய் மொத்தத் தேசிய உற்பத்தி யானது 200 பில்லியன் ரூபாவாக வும், இந்த வருட மெய் மொத்தத் தேசிய உற்பத்தி 210 பில்லியன் ரூபாவாகவும் இருக்குமாயின், இவ்வருட மெய் மொத்தத் தேசிய உற்பத்தியில் இருந்து, கடந்த வருட மெய் மொத்தத் தேசிய உற்பத்தியைக் கழித்து வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரு 3 பொருளாதார வளர்ச்சியின் வேறுபட்ட வடிவங்கள்

தொகையை, கடந்த வருட மெய் மொத்தத் தேசிய உற்பத்தியால் பிரித்து, அதை *100* ஆல் பெருக்குவதன் மூலம், [அதாவது, (210 - 200) / 200 x 100] அல்லது *5* என, பொருளாதார வளர்ச்சி வீதத்தைக் கணிப்பிட முடியும்.

மெய் மொத்தத் தேசிய உற்பத்தியின் அல்லது ஆள்வீத மெய் மொத்தத் தேசிய உற்பத்தியின் மாற்ற வீதத்தை ஓர் குறிகாட்டியாகப் பயன்படுத்தி, பொருளாதார வளர்ச்சியை அளவிடுவதற்கு பொருளியலாளர்கள் முயற்சிப்பார்களாயின், அவர்கள் எதைப் பெற வேண்டுமென விரும்புகின்றனரோ, அதை அளவிட முடியாதவர்களாகவே உள்ளனர். மொத்தத் தேசிய உற்பத்தி வளர்ச்சியானது, குறிப்பிட்ட பொருளாதாரத்தினுடைய ***சாத்தியமான*** வெளியீட்டு இயலளவின் வளர்ச்சியை விட ***உண்மையான*** வெளியீட்டு மாற்ற வீதத்தையே அளவிடுகின்றது. உரு 3 இல், புள்ளி A இலிருந்து புள்ளி B க்கான நகர்வானது, உற்பத்திச் சாத்திய எல்லையை நோக்கிய ஓர் நகர்வாக அமைகின்றது. இது, குறிப்பிட்ட பொருளாதாரத்தில் காணப்படும் மிகை இயலளவை முழுமையாகப் பயன்படுத்துவதன் விளைவாக, உண்மையான வெளியீட்டில் ஏற்படும் ஓர் அதிகரிப்பாகக் காணப்படுகின்றது. ஆனால், புள்ளி A இலிருந்து புள்ளி B க்கான நகர்வானது உற்பத்தி இயலளவில் ஏற்படும் அதிகரிப்புக்குக் காரணமாக அமையவில்லை என்பதனால், கோட்பாட்டு ரீதியான நோக்கில் இது பொருளாதார வளர்ச்சியாக அமையவில்லை. இதற்கு மாறாக, புள்ளி B இலிருந்து புள்ளி C க்கான நகர்வைச் சாத்தியப்படச் செய்யும் உற்பத்திச் சாத்திய எல்லையின் நகர்வானது பொருளாதார வளர்ச்சியின் விளைவாக ஏற்பட்டதாகும். ஆயினும், பொருளியலாளர்கள் மெய் மொத்தத் தேசிய உற்பத்தியில் ஏற்படும் மாற்ற வீதத்தை அவதானிக்கின்ற போது, இரு வகையான விளைவுகளுக்கும் இடையே காணப்படும் வேறுபாட்டை, குறிப்பாக பொருளாதாரமானது வணிகச் சுற்றுவட்டத்துக்கு உட்பட்டுள்ளபோது, அவர்களால் இலகுவாக வித்தியாசப்படுத்த முடியாது போகின்றது. ஆகவே, பொருளாதார வளர்ச்சியை மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) வளர்ச்சி நோக்கில் அளவிடுவதே மிகச் சிறந்ததாகும்.

**பொருளாதார வளர்ச்சியின் நன்மைகள்**

பொருளாதார வளர்ச்சி மெய் வெளியீட்டில் ஏற்படும் அதிகரிப்பாகக் கருதப்படுகின்றது. அது பின்வரும் நன்மைகளை வழங்குகின்றது;

i. **வருமானங்களை அதிகரித்தல்:** மொத்த வெளியீட்டு வளர்ச்சி என்பது, சனத்தொகையுடன் ஒப்பிடுமிடத்து, அதிகரித்தளவிலான வாழ்க்கைத் தரமாகக் கருதப்படுகின்றது. மொத்த வெளியீட்டில் ஏற்படும் ஓர் விரிவாக்கமானது, நுகர்வோர் மேலும் அதிகமான பொருட்களையும் சேவைகளையும் அனுபவிப்பதை சாத்தியமாக்குகின்றது.

ii. **வேலையின்மையைக் குறைத்தல்:** உயர் வெளியீடு காரணமாக, நிறுவனங்கள் அதிகளவான தொழிலாளர்களை வேலைக்கமர்த்துகின்றன. இது அதிகளவான வேலைவாய்ப்புகளை உருவாக்குகின்றது.

iii. **அரசாங்கக் கடன்பெறலைக் குறைத்தல்:** பொருளாதார வளர்ச்சியானது, உயர் வரி வருவாய்களை தோற்றுவிக்கின்றது. இதனால், அரசாங்க செலவீனங்களுக்கு நிதியளிப்புச் செய்வதற்காக கடன் பெறுவதற்கான தேவை குறைவடைகின்றது.

iv. **வறுமைக் குறைப்பு:** வளர்ச்சியடையும் ஓர் பொருளாதாரத்தால் வறுமையைத் தணிப்பதற்கான புதிய திட்டங்களை செயற்படுத்த முடியும்.

v. **பொதுச் சேவைகளை மேம்படுத்துதல்:** அதிகரித்த வரி வருவாய்கள் காரணமாக, பொதுப் பொருட்கள் மற்றும் உட்கட்டுமான அபிவிருத்தி, சுகாதாரப் பராமரிப்பு, கல்வி போன்ற நலன்வாய்ந்த பொருட்கள் என்பவற்றை வழங்குவதற்காக, அரசாங்கத்தால் மேலும் அதிகளவு பணத்தை செலவிட முடியும்.

vi. **சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல்:** வளர்ச்சியடையும் ஓர் பொருளாதாரத்தால் நுகர்வு, முதலீடு, பொதுப் பொருள் உற்பத்தி என்பவற்றின் தற்போதைய மட்டங்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில், சுற்றுச்சூழலைப் பாதுகாத்துப் பேணுவதற்காக மேலும் அதிகளவு பணத்தை ஒதுக்க முடியும்.

vii. **அருமைத்தன்மையின் சுமையைக் குறைத்தல்:** நிலையாகவுள்ள ஓர் பொருளாதாரத்தைப் போலன்றி, எதிர்காலத்தில் மேலும் உற்பத்தியை மேற்கொள்வதற்கான அதனுடைய இயலளவை சமகாலத்தில் அதிகரிக்கும் அதேவேளை, வளர்ந்து வரும் ஓர் பொருளாதாரத்தால் மேலும் அதிகளவு நுகரவும் முடியும்.

**பொருளாதார வளர்ச்சிக்கான காரணங்கள்**

கோட்பாட்டு ரீதியாக, உற்பத்திச் சாத்திய எல்லையை அல்லது நீண்டகால மொத்த நிரம்பல் வளையியை (LRAS) வலப் பக்கம் நகரச் செய்யும் காரணிகளே பொருளாதார வளர்ச்சியைத் தீர்மானிப்பவையாகும். இக்காரணிகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன; (அ) இயற்கை வளங்களின் அளவும் தரமும், (ஆ) மனித வளங்களின் அளவும் தரமும், (இ) பௌதீக மூலதனத்தின் இருப்பு, (ஈ) முயற்சியாண்மை ஆற்றல், (உ) தொழில்நுட்ப அறிவு, (ஊ) சொத்துரிமைக் கட்டமைப்பு, (எ) பொருளாதாரச் சுதந்திரம். இவ்விடயங்களை, பொருளாதார வளர்ச்சியில் நிரம்பல் காரணிகளென அழைக்க முடியும்.

i. **இயற்கை வளங்கள்:** நிலம், நதிகள், கனிமப் படிவுகள் போன்ற, இயற்கையால் வழங்கப்படுகின்ற உற்பத்தி உள்ளீடுகளே இயற்கை வளங்களாகும். இந்த இயற்கை வளங்கள் இரு வேறு வடிவங்களில்; அதாவது, புதுப்பிக்கக் கூடிய மற்றும் புதுப்பிக்க முடியாத வடிவங்களில் காணப்படுகின்றன.

ii. **மனித மூலதனம்:** கல்வி, பயிற்சி, அனுபவம் என்பவற்றின் ஊடாக தொழிலாளர்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு மற்றும் திறன்கள் என்பனவே மனித மூலதனமாகும்.

iii. **பௌதீக மூலதனம்:** பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்ற சாதனங்கள் மற்றும் கட்டமைப்புகள் என்பவற்றின் இருப்பே பௌதீக மூலதனம் என அழைக்கப்படுகின்றது.

iv. **முயற்சியாண்மை ஆற்றல்:** நிலம், ஊழியம், மூலதனம் என்பவற்றை ஒழுங்குபடுத்துகின்ற மனித வளமே முயற்சியாண்மை என அழைக்கப்படுகின்றது. முயற்சியாளர்கள், எதை, எவ்வாறு உற்பத்தி செய்தல் என்பது தொடர்பிலான புதிய யோசனைகளுக்குத் தீர்வு காண்பதுடன், வணிகத் தீர்மானங்களை மேற்கொண்டு, அத்துடன் இத்தீர்மானங்களின் விளைவாக தோன்றும் நட்ட அச்சங்களைத் (ஆபத்துகளை) தாங்கியும் கொள் கின்றனர்.

v. **சமூக மூலதனம்:** சமூக மூலதனம், பொதுவான பிரச்சினைகளை தீர்ப்பதற்காக மக்களால் கருவியாகப் பயன்படுத்தப்படக் கூடிய சமூக நம்பிக்கை, நியம நடத்தைகள் மற்றும் வலையமைப்புகள் என்பவற்றின் இருப்பைக் குறிக்கின்றது. குறிப்பிட்ட இடங்களில் காணப்படும் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற நகர் சார்ந்த தொழில விவகாரங்களின் வலையமைப்புகள் சமூக மூலதனத்தின் முக்கியமான ஓர் வடிவமாகக் காணப்படுவதுடன், இவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலையமைப்புகள் எந்தளவுக்கு நெருக்கமானதாகக் காணப்படுகின்றனவோ, அந்தளவுக்கு சமூகத்தின் அங்கத்தவர்கள் பரபஸ்பர நன்மைக்காக ஒத்துழைப்பதற்கான அதிகளவு வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. சமூக மூலதனம் உற்பத்தித் திறன் வாய்ந்ததாகும்: (உதாரணமாக) இரு விவசாயிகள் தமது கருவிகளைப் பரிமாற்றம் செய்து கொள்வதனால், குறைந்தளவு பௌதீக மூலதனத்துடன் அதிகளவான வேலை மேற்கொள்ளப்படுகின்றது, அதிகரித்தளவிலான முயற்சியாண்மை ஆற்றலுக்குத் தேவைப்படும் நிதி மூலதனத் தொகுதிகளை சுழற்சி முறை கடன் சங்கங்களால் உருவாக்க முடியும், சமூக வலைத்தளங்களில் தகவல்கள் இட்டு வைக்கப்பட்டிருக்குமாயின், தொழில் தேடல் முயற்சிகள் செயற்திறன் வாய்ந்தனவாக இருக்கும்.

vi. **தொழில்நுட்ப அறிவு:** தொழில்நுட்ப அறிவு என்பது, பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்வதற்கான மிகச் சிறந்த வழிமுறைகள் பற்றிய புரிதலாகும். தொழில்நுட்ப அறிவானது, பல வடிவங்களில் காணப்படக்கூடும். சில தொழில்நுட்பங்கள் அனைவருக்கும் பொதுவான அறிவாக உள்ளன - இத்தொழில்நுட்பம் ஒரு நபரால் பயன்படுத்தப்பட்ட பின்னர், அது அனைவருக்கும் தெரிந்த ஒன்றாகிவிடுகின்றது. ஏனைய தொழில்நுட்பங்கள் குறிப்பிட்ட சிலருக்கு மாத்திரம் உடைமையானது - இத்தொழில்நுட்பத்தைக் கண்டு பிடித்த கம்பனிக்கு மாத்திரமே இது தெரிந்திருக்கும். ஆயினும், ஏனைய சில தொழில்நுட்பங்கள் குறுங்காலத்திற்கே உடைமையாளர்களுக்கு உரித் துடையன. மருந்தாக்கக் கம்பனி ஒன்று புதியதோர் மருந்தைக் கண்டுபிடிக்கின்றபோது, அம்மருந்தின் ஒரே யொரு உற்பத்தியாளராக இருப்பதற்கான தற்காலிக உரிமையை, அக்கம் பனிக்கு காப்புரிமை முறைமை வழங்குகின்றது. ஆயினும், இக்காப்புரிமை முடிவுறுகின்றபோது, அந்த மருந்தை தயாரிப்பதற்கு ஏனைய கம்பனிகளும் அனுமதிக்கப்படுகின்றன. தொழில்நுட்ப அறிவின் அனைத்து வடிவங்களுமே குறித்த ஒரு பொருளாதாரத்தினுடைய பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்திக்கு இன்றியமையாதனவாகும்.

vii. **சொத்துரிமைக் கட்டமைப்பு:** வளங்களின் பயன்பாடு மற்றும் அவற்றை இடம் மாற்றுவதற்கான உரிமைகளை வரையறுக்கின்ற சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றுடன் சொத்துரிமைகள் தொடர்புடையதாய் இருக்கின்றன. இரு சொத்துரிமைக் கட்டமைப்புகளை கவனத்தில் கொள்க. ஒரு கட்டமைப்பில், தமது ஊழியத்திற்கான முழுமையான பண ரீதியான சன்மானங்களையும் வைத்திருப்பதற்கு மக்கள் அனுமதிக்கப்படுகின்றனர். மற்றைய கட்டமைப்பில், அதில் அரைவாசியை மாத்திரமே வைத்திருப்பதற்கு அனுதிக்கப்படுகின்றனர். இரண்டாவது கட்டமைப்பை விட, முதலாவது சொத்துரிமைக் கட்டமைப்பானது அதிகளவான பொருளாதாரச் செயற்பாடுகளைத் தூண்டுமென அநேகமான பொருளியலாளர்கள் எதிர்வு கூறுகின்றனர்.

viii. **பொருளாதாரச் சுதந்திரம்:** பொருளாதாரச் சுதந்திரம் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கின்றது என சில பொருளியலாளர்கள் நம்புகின்றனர். பொருளாதாரச் சுதந்திரம் குறைவாகக் காணப்படும் நாடுகளை விட, பொருளாதாரச் சுதந்திரம் கூடுதலாகக் காணப்படும் நாடுகள் மிகவும் விரைவாக அபிவிருத்தியும் பொருளாதார வளர்ச்சியையும் அடைகின்றன. "பொருளாதாரச் சுதந்திரச் சுட்டெண்" ஒன்றை தயாரிப்பதற்கான முயற்சியை The Heritage மன்றமும் Wall Street சஞ்சிகையும் ஒன்றிணைந்து மேற்கொண்டன. இச்சுட்டெண்ணானது, வர்த்தகக் கொள்கை, நாணயக் கொள்கை, சொத்துரிமைக் கட்டமைப்பு, ஒழுங்குவிதிகள், அரசாங்கத்தின் இறைச் சுமை முதலியன போன்ற பொருளாதார சுதந்திரத்தின், 10 வகையினங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள, 50 சாரா மாறிகளை அடிப்படையாகக் கொண்டது. பொருளாதாரச் சுதந்திரமும் ஆள்வீத மெய் மொத்தத் தேசிய உற்பத்தியும் ஒன்றுடனொன்று தொடர்புபட்டுள்ளன என்பதை இத்தரவுகள் காட்டுகின்றன.

பொருளாதார வளர்ச்சியில், உற்பத்திச் சாத்திய எல்லையை வலப்புறமாக நகரச் செய்யும் மேலே குறிப்பிடப்பட்ட காரணிகளை ***நிரம்பல் காரணிகள்*** எனும் சொற்றொடரைப் பயன்படுத்தி விபரிக்கலாம். அவை, உற்பத்தியையும் உற்பத்தித் திறனையும் அதிகப்படுத்தக்கூடிய பௌதீக மற்றும் நிறுவன ரீதியான கூறுகளாகும். ஆனால், வளர்ச்சியடைவதற்கான ஆற்றல் காணப்படுதலும், பொருளாதார வளர்ச்சி உண்மையில் கைகூடுதலும் முற்றிலும் வேறுபட்ட விடயங்களாக இருக்கக்கூடும். திட்டவட்டமாக, பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்யும் இரு மேலதிகமான விடயங்கள் உள்ளன. முதலாவதாக, பொருளாதார வளர்ச்சியில் ஒரு ***கேள்விக் காரணி*** காணப்படுகின்றது. அதிகரித்துச் செல்லும் உற்பத்தி ஆற்றலை நிகழச் செய்வதற்கு, ஒரு நாடு தனது விரிவடைந்த வளங்களின் நிரம்பலை முழுமையாகப் பயன்படுத்துவதற்கான முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டும். இதற்கு மொத்தக் கேள்வியின் ஓர் அதிகரித்துச் செல்லும் மட்டம் தேவைப்படுகின்றது. இரண்டாவதாக, பொருளாதார வளர்ச்சியில் ஓர் ***ஒதுக்கீட்டுக் காரணி*** காணப்படுகின்றது. உற்பத்தி ஆற்றலை அடைவதற்கு, ஒரு நாடு அதனுடைய வளங்களை முழுமையாக பயன்படுத்துவதற்கான முன்னேற்பாடுகளை மாத்திரமன்றி, அவற்றிலிருந்து முழுமையான உற்பத்தியை மேற்கொள்வதற்கான முன்னேற்பாடுகளையும் செய்ய வேண்டும். மொத்த வெளியீட்டின் விரிவாக்கத்திற்கு உற்பத்தியை விரிவாக்கம் செய்வதற்கான ஆற்றல் மாத்திரம் போதுமான ஓர் நிபந்தனையாக அமையவில்லை. விரிவுபடுத்தப்பட்ட வள நிரம்பல்களின் உண்மையான பயன்பாடு மற்றும் உற்பத்தி செயயப்படும் பயன்நிறைந்த பொருட்களின் உச்ச அளவிலான தொகையைப் பெற்றுக் கொள்ளும் வகையில் அவ்வளங்களை ஒதுக்கீடு செய்தல் என்பனவும் தேவைப்படுகின்றன.

## பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் கொள்கைகள

பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல் என்பது, உற்பத்திச் சாத்திய எல்லையை அல்லது நீண்டகால மொத்த நிரம்பல் வளையியை வலதுபுறம் நோக்கி நகர்த்துவதாக கருதப்படுகின்றது. ஆகவே, பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் கொள்கைகள் வளக் கொடையையும் உற்பத்தித்திறனையும் அதிகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். அத்தகைய கொள்கைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன; (அ) சேமிப்புகளையும் முதலீட்டையும் ஊக்குவித்தல், (ஆ) வெளிநாட்டு முதலீட்டுக்கு ஊக்கமளித்தல், (இ) மனித மூலதனத்தில் முதலீடுகளை மேற்கொள்ளல், (ஈ) சொத்துரிமைகளைப் பாதுகாத்தலும் அரசியல் உறுதிப்பாட்டைப் பேணுதலும், (உ) வர்த்தகத்தைத் தாராளமயமாக்கல், (ஊ) வரிகளைக் குறைத்தலும் ஒழுங்குவிதிகளைத் தளர்த்துதலும், (எ) ஆராய்ச்சியையும் அபிவிருத்தியையும் ஊக்குவித்தல்.

i. **சேமிப்புகளையும் முதலீட்டையும் ஊக்குவித்தல்:** உற்பத்தியால் தோற்றுவிக்கப்படுகின்ற ஓர் காரணியாக மூலதனம் இருப்பதன் காரணமாக, ஒரு நாடு வைத்துள்ள மூலதனத்தின் அளவை அந்நாட்டால் மாற்ற முடியும். இவ்வாறாக, தற்போதைய வளங்களை மூலதன ஆக்கத்தில் மேலும் முதலீடு செய்வதன் மூலம், எதிர்கால உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவது ஒரு வழிமுறையாகும். பொருளாதாரத்தின் மூலதன இருப்பு மட்டத்தை உயர்த்துவதற்கு, குறிப்பிட்ட நாடு பொருட்கள் சேவைகளின் தற்கால நுகர்வை தியாகம் செய்ய வேண்டியுள்ளது. நாணய மற்றும் இறைக் கொள்கைகள் ஊடாக சேமிப்புக்கும் முதலீட்டிற்கும் ஊக்கமளித்தலானது, ஓர் அரசாங்கத்தால் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கான மற்றுமோர் வழிமுறையாகும்.

ii. **வெளிநாட்டு முதலீட்டிற்கு ஊக்கமளித்தல்:** ஒரு நாட்டைப் பொறுத்தவரை, புதிய மூலதனத்தில் முதலிடுவதற்கான ஒரே வழிமுறையாக உள்நாட்டில் வசிப்போரின் சேமிப்பு மாத்திரம் அமையவில்லை. மற்றைய வழிமுறையும் உண்டு. அது யாதெனில், வெளிநாட்டவர்களால் மேற்கொள்ளப்படும் முதலீடாகும். வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் முதலீடுகள் பலவடிவங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் உள்ளன. வெளிநாட்டு அமைப்பு ஒன்றிற்குச் சொந்தமானதும் அவ்வமைப்பால் இயக்கப்படுவது மான ஓர் மூலதன முதலீடு வெளி நாட்டு நேரடி முதலீடென அழைக்கப் படுகின்றது. வெளிநாட்டு பணத்தினால் நிதியளிப்புச் செய்யப்படும் அதே வேளை, உள்ளூரில் வசிப்போரால் இயக் கப்படும் முதலீடானது, பட்டியலிடப் பட்ட முதலீடு என அழைக்கப்படுகின் றது. இவ்விரு எடுத்துக்காட்டுகளி லுமே, உள்நாட்டு மூலதன இருப்பை அதிகரிப்பதற்கு வெளிநாட்டு முதலீட் டாளர்கள் பங்களிப்புச் செய்கின்றனர்.

iii. **மனித மூலதனத்தில் முதலீடுகளை மேற்கொள்ளல்:** கல்வியானது, அதா வது மனித மூலதனத்திலான முதலீடா னது, குறைந்தபட்சம், ஓர் நாட்டினுடைய நீண்டகால பொருளாதார வெற்றிக்கான பௌதீக மூலதனத்தில் முதலீடுகளை மேற்கொள்வதைப் போன்று, முக்கி யத்துவம் வாய்ந்ததாகும். சிறந்த பாட சாலைகளையும் தரம் வாய்ந்த கல்வி யையும் வழங்குதல் மற்றும் அவற்றி லிருந்து அனுகூலங்களைப் பெற்றுக் கொள்வதற்காக சனத்தொகையை ஊக்குவித்தல் என்பவற்றின் மூலம், ஓர் அரசாங்க கொள்கையால் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடியும் என்பது மற்றுமோர் வழிமுறையாகும்.

iv. **சொத்துரிமைகளைப் பாதுகாத்த லும் அரசியல் உறுதிப்பாட்டைப் பேணுதலும்:** மக்களுக்குச் சொந்த மாகவுள்ள வளங்கள் தொடர்பில் அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு அவர்களுக்குள்ள ஆற்றலை சொத் துரிமைகள் குறிப்பிடுகின்றன. நீதி முறைமையானது, இந்நோக்கத்திற் காக சந்தைப் பொருளாதாரத்தில் ஓர் முக்கியமான வகிபாகத்தை ஆற்று கின்றது. அது, கொள்வனவாளரும் விற்பனையாளரும் தமது ஒப்பந்த எதிர்பாக்கைகளை நிறைவு செய்வதை உறுதிப்படுத்தி, சொத்துரிமைகளை நடைமுறைப்படுத்துகின்றது. ஏராள மான நாடுகளில் இந்த நீதி முறைமை சிறந்த முறையில் செயற்படுவதில்லை. இங்கே ஒப்பந்தங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்ப துடன், மோசடிகளுக்குத் தண்டனை கள் வழங்கப்படுவதும் இல்லை. சில நாடுகளில், வணிகச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக அரசாங்க உயர் அதிகாரிகளுக்கும் அமைச்சர்களுக் கும் நிறுவனங்கள் இலஞ்சம் வழங்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின் றது. இவ்வாறாக, பொருளாதாரச் செழிப்பு நிலையானது பகுதியளவில் அரசியல் வெற்றியில் தங்கியுள்ளது. செயற்திறனற்ற நீதி முறைமை, இலஞ்ச ஊழலில் ஈடுபடுகின்ற அர சாங்க உயர் அதிகாரிகள், உறுதியற்ற அரசியல் முறைமை என்பவற்றைக் கொண்டுள்ள ஓர் நாட்டைவிட, செயற் திறன் வாய்ந்த நீதி முறைமை நேர்மை யான அரசாங்க அதிகாரிகள், உறுதி யான அரசியல் யாப்பு என்பவற்றைக் கொண்டுள்ள ஒரு நாடு பொருளாதார ரீதியில் உயர்வான வாழ்க்கைத் தரத்தை அனுபவிக்கும்.

v. **வர்த்தகத்தைத் தாராளமயமாக்கல்:** நாடுகளை உலக பொருளாதாரத்து டன் ஒருங்கிணைக்கும் வெளிநோக் கிய பொருளாதாரக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் நாடுகள் மேம்பட்ட நிலையில் உள்ளன எனப் பெரும்பா லான பொருளியலாளர்கள் தற்போது நம்புகின்றனர். வர்த்தகமானது, ஓர ளவுக்கு, ஒருவகையான தொழில் நுட்பமாகும். ஒரு நாடு தேயிலையை ஏற்றுமதி செய்து இரும்பை (உருக்கை) இறக்குமதி செய்கின்ற போது, தேயிலையை உருக்காக மாற் றுவதற்கான ஒரு தொழில்நுட்பத்தை அது கண்டுபிடித்துள்ளதைப் போன்ற வகையிலான நன்மைகளை அந்நாடு அனுபவிக்கின்றது. ஆகவே, வர்த்தக் கட்டுப்பாடுகளை நீக்குகின்ற ஒரு நாடானது, ஒரு பாரிய தொழில்நுட்ப மேம்பாட்டின் பின்னர் ஏற்படும் வளர்ச் சியை ஒத்த வகையிலான பொருளா தார வளர்ச்சியை அனுபவிக்கும்.

vi. **வரிகளைக் குறைத்தலும் ஒழுங்கு விதிகளைத் தளர்த்துதலும்:** வரி வீதங்களைக் குறைத்தலும் ஒழுங்கு விதிகளைத் தளர்த்துதலும் தனியார் முதலீட்டை ஊக்குவிக்கும்.

vii. **ஆராய்ச்சியையும் அபிவிருத்தி யையும் ஊக்குவித்தல்:** ஒரு நூற் றாண்டுக்கு முன்னர் காணப்பட்ட வாழ்க்கைத் தரத்தை விட, இன்றைய வாழ்க்கைத் தரம் உயர்வாக இருப்ப தற்கான முக்கியமான காரணம் யாதெ னில், தொழில்நுட்ப அறிவு மேம்பாட டைந்துள்ளமையேயாகும். பெரும்பா லான தொழில்நுட்ப மேம்பாடுகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட ஆட்களால் மேற்கொள்ளப் படும் ஆராய்ச்சிகளின் மூலமான கண்டுபிடிப்புகளின் விளைபயனாக ஏற்படுவனவாக உள்ளபோதும், புதிய தொழில்நுட்பங்களுக்கான ஆராய்ச்சி யையும் அபிவிருத்தியையும் ஊக்கு விப்பதில் அரசாங்கத்திற்கும் ஓர் வகி பாகம் உண்டு. தனது இறைக் கொள் கைக் கருவிகளைப் பயன்படுத்துவ தன் மூலம், ஆராய்ச்சிக்கும் அபி விருத்திக்குமான ஊக்குவிப்பு உதவி களை ஓர் அரசாங்கத்தால் வழங்க முடியும். ஆராய்ச்சியை ஊக்குவிக் கின்ற அரசாங்கக் கொள்கையாக அமைந்துள்ள மற்றுமோர் வழிமுறை யாதெனில், காப்புரிமை முறைமையா கும். தமது கண்டுபிடிப்புகளின் மூலம் இலாபம் ஈட்டுவதற்கு கண்டுபிடிப்பா ளர்களை அனுமதிப்பதன் மூலம், தனியாட்களும் நிறுவனங்களும ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கான ஊக்கு விப்பு உதவிகளை இந்த காப்புரிமை முறைமை அதிகப்படுத்துகின்றது.

## பொருளாதார வளர்ச்சியின் பிரதிகூலங்கள்

அண்மைய வருடங்களில், ஏற்கனவே செல்வம் நிறைந்து காணப்படும் சமு தாயங்களின் தொடர்ச்சியான பொருளா தார வளர்ச்சிக்கான அழுத்தமான விருப் பம் தொடர்பில் மிகத் தீவிரமான ஐயப் பாடுகள் எழுப்பப்பட்டுள்ளன. பின்வரும், ஒன்றுடனொன்று தொடர்புபட்டுள்ள, விவாதங்கள் பொருளாதார வளர்ச்சிக்கு எதிரான கருத்துகளை உள்ளடக்கியுள்ளன:

i. **சுற்றுச்சூழல் தொடர்பான கவலை கள்:** உற்பத்தி மற்றும் நுகர்வு என்ப வற்றின் விரைவான வளர்ச்சியானது எதிர்மறையான வெளிவாரி விளைவு களைத் (உதாரணமாக, வளி மாசடை தல் மற்றும் வீதி நெரிசல் என்பவற் றால் ஏற்படும் அதிகரித்தளவிலான இரைச்சலும் தரம் குறைந்த வளியும், வீட்டுத்துறையின் துரித வளர்ச்சி மற்றும் கைத்தொழில் கழிவுகள்) தோற்றுவிக்கக் கூடும். சுற்றுச்சூழலின் அழிவுக்கு வழிவகுக்கும் பொருளா தார வளர்ச்சியானது, மக்களின் வாழ்க்கைத் தரத்தில் எதிர்மறையான விளைவுகளைக் கொண்டிருக்கும் என்ப துடன், ஒரு நாட்டினுடைய நிலைத் திருக்கக்கூடிய பொருளாதார வளர்ச்சி வீதத்திற்குத் தடங்கல் செய்யவும் கூடும்.

ii. **மனித ஆற்றல் பயனொழிந்துபோ தல்:** பொருளாதார வளர்ச்சியின் மிக முக்கியமான கூறாக அமைந்துள்ள, மாற்றமடைந்து செல்லும் தொழில் நுட்பமானது, புதிய கவலைகளையும் தொழிலாளர்களின் பாதுகாப்பின்மைக் கான புதிய மூலங்களையும் தோற்று விக்கின்றது. மிக வேகமாக முன்னோக் கிச் செல்லும் தொழில்நுட்பம் கார ணமாக, தொழிலாளர்களுடைய கடின மான முயற்சி மூலம் அடையப்பெற்ற திறன்களும் அனுபவங்களும் பய னொழிந்து போவதற்கான நிகழ்வாய்ப் புகளை, உயர் மற்றும் கீழ் மட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்குகின்ற னர். இதனால், அவர்கள் கட்டமைப்பு ரீதியாக வேலையற்றோராகின்றனர்.

iii. **சந்தர்ப்பச் செலவு:** உயர் பொருளா தார வளர்ச்சியின் சந்தர்ப்பச் செலவு யாதெனில், தற்போதைய நுகர்வை தியாகஞ் செய்தலாகும். இல்லா விடில், அந்நுகர்வை அனுபவித்திருக்க முடியும். எதிர்காலத்தில் ஓர் உயர்வீத நுகர்வை அடைவதற்காகவே தற்போ தைய நுகர்வு தியாகம் செய்யப்படு கின்றது.

iv. **பணவீக்க ஆபத்து:** பொருளாதார மானது, மிக விரைவாகவும் மிகக் குறுகிய காலத்திலும் வளர்ச்சியடையு மாயின், மொத்த நிரம்பலைக் காட் டிலும் கேள்வி உயர்வடைதனால், பணவீக்க அபாயம் காணப்படுவதற் கான வாய்ப்பு உண்டு.

v. **வருமானப் பகிர்விலுள்ள சமத் துவமின்மை:** துரித பொருளாதார வளர்ச்சியானது, வருமானப் பகிர் விலான ஏற்றத்தாழ்வுகளுக்கும் கார ணமாக அமையக்கூடும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாசியாவில் வர்த்தகத் தாராளமயமாக்கமும் வறுமையும்

ஆசிரியர்கள்: ஜயதிலக எஸ். பண்டார, பிரேமச்சந்திர அத்துக்கொறல்ல, சமன் கெலேகம

வெளியீடு: றூட்லெட்ஜ், இலண்டன், 2011, பக்கங்கள் 195

மதிப்பாய்வு:

கலாநிதி சரத் ராஜபத்திரண

*வருகைதரு ஆராய்ச்சியாளர்*

*அமெரிக்க தொழில்முயற்சி நிறுவனம்,*

*வொஷிங்டன் டி. சி,*

*ஐக்கிய அமெரிக்கா*

**முன்னுரை**

இலங்கையின் புகழ்பெற்ற மூன்று பொருளியலாளர்களால் தொகுக்கப்பட்ட வர்த்தகத்தை தாராளமயமாக்கலும் தென்னாசியாவில் வறுமையும் என்னும் விடயம்பற்றிய இந்த கட்டுரைகளின் தொகுப்பு தென்னாசியாவின் பொருளாதார நூல்களுக்கு (எழுத்தாண்மைத் துறைக்கு) மேலும் வளம் சேர்ப்பதாக அமைகின்றது. இதில் பேசப்பட்டும் விடயம் கொள்கை வகுப்பாளருக்கும் புலமையாளருக்கும் சம அளவில் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. அத்துடன் இதில் கூறப்பட்டுள்ள வர்த்தகத்திற்கும் வறுமை ஒழிப்புக்குமிடையிலான மாயமான தொடர்பை விளங்கிக் கொள்வது தொகுப்பாசிரியர்களுக்கும் தனி நூலாசிரியர்களுக்கும் சில சமயம் சவாலாகவும் அமைகின்றது. இருப்பினும், அநேகமாக அந்தந்த நாட்டை சேர்ந்த பிரபலமான அறிஞர்களே வழங்கியுள்ள கட்டுரைகளைக் கொண்டமைந்த உயர்தரத்திலான ஆய்வாக இது உள்ளது. எந்தவொரு உண்மையான ஆய்வாளரும் கொள்கை வகுப்பாளரும் உயர்தரத்து மாணவரும் இதனைப் புறக்கணிப்பாராயின் அது அவருக்கே நட்டமாகும். எந்தவொரு நாடும் வெளிநாட்டு வர்த்தகத்தை புறக்கணித்துவிட்டு அல்லது தொடக்கப்பட்ட வர்த்தக சீர்திருத்தத்தை இடையில் நிறுத்திவிட்டு உயர்மட்ட வளர்ச்சியை அடைவது பற்றி சிந்திக்க முடியாது. அதே நேரத்தில் இது ஒரு மந்திரக்கோல் அல்ல. இது அதிகரித்த பொருளாதார அபிவிருத்தி, வறுமைக் குறைப்பு என்பவற்றை அடைந்து கொள்ள பொருளியலாளர்களுக்கு வலுச்சேர்க்கக் கூடிய கருவிகளில் ஒன்று மட்டுமே.

**அறிமுகம்**

இந்த ஆய்வு, பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான், இலங்கை ஆகிய ஏழு தென்னாசிய நாடுகளையும் அடக்கியுள்ளது. இலங்கையின் மிகவும் முந்திய அனுபவத்திலிருந்து, மாலைதீவு, பூட்டான் ஆகிய நாடுகளின் பின்னைய முயற்சிகள் வரை இந்த ஆய்வு நான்கு தசாப்தங்களுக்குமேல் விரவியுள்ளது. பிரதான வர்த்தக சீர்திருத்த முயற்சிகள் 1980, 1990களுள் அடங்கும் இரண்டு தசாப்தங்களுள் அடர்ந்து காணப்படுகின்றன. இந்த ஆய்வுக்கு அடிப்படையாக இருக்கக் கூடிய சில ஆக்கங்கள் உள்ளனவாயினும் வறுமைக்கு வர்த்தகத்துடனான இணைவுபற்றி அறியப்படாத விடயங்கள் அதிகம் உள்ளன. இந்த ஆய்வு அந்த முக்கியமான பிரச்சினையை கருத்தில் கொள்வதுடன் இது தொடர்பில் எமது அறிவில் காணப்படும் குறைகளையும் இப்பிராந்தியத்தின் மீது விசேட கவனம் செலுத்துவதன் மூலம் நிவர்த்தி செய்கின்றது.

இந்த ஆய்வில் ஒன்பது அத்தியாயங்கள் உள்ளன. அத்தியாயம் 1, வர்த்தகத்தை தாராளமயமாக்கலும் தென்னாசியாவில் வறுமையும்: சீர்த்திருத்தங்கள், ஒழுங்கமைக்கப்பட்ட விடயங்கள் மற்றும் வெள்ளோட்டம் என்பன மூன்று தொகுப்பாசிரியர்களாலும் மேற்கொள்ளப்பட்ட முழு ஆய்வுக்கும் அறிமுகத்தை வழங்குவதுடன் கூர்மையான சுருக்கத்தையும் தருகிறது. ஜயதிலக எஸ். பண்டாரவினால் எழுதப்பட்ட வர்த்தகம் மற்றும் வறுமை, தத்துவ ரீதியான சான்று மற்றும் கொள்கை பிரச்சினைகள் என்னும் அத்தியாயம் 2 வர்த்தகத்திற்கும் வறுமைக்கும் இடையிலான தொடர்பு பற்றிய பகுப்பாய்வு எதிர்கொள்ளும் பிரச்சினை பற்றியும் பல நாடுகளிலும் காணப்படும் பொருளாதாரப் பின்னடைவுகளிலிலிருந்து கணிப்பிடக்கூடிய பொதுச் சமநிலை (CGE) மாதிரியுரு, பகுதி சமநிலை மற்றும் வாழ்க்கைச் செலவு பகுப்பாய்வு வரை வெவ்வேறு முறைகளில் அமைந்த ஆய்வுகளூடாக வாசகரை இட்டுச் செல்கின்றது. இது பல முடிவுகளை பெற்றுள்ளது. அத்துடன் இந்த அத்தியாயம் ஆய்வுக்குரிய நாட்டிற்கு உரித்தான சிறப்பு அம்சங்கள் மீதும், நேர் தொடர்பிலிருந்து எதிர் தொடர்புவரை அநுபவங்கள் மூலம் பெறப்படும் தெளிவில்லாத முடிவுகள் மீதும் தங்கியிருந்து கொண்டு வர்த்தகத்திற்கும் வறுமைக்கும் உள்ள தொடர்பை அநுபவ முறையில் காண்பதில் உள்ள கஷ்டங்களை குறிப்பிடுகின்றது. போதியளவு ஆர்வமற்ற பொதுவான விடயத் தலைப்புகளில் எழுதப்படும் சலிப்புத் தரும் மோசமான கட்டுரைகளைத் தவிர்த்து அதற்கு பதிலாக வாசிப்பதற்கு மிக உகந்ததாக இது அமைகின்றது. 3 ஆவதிலிருந்து 9ஆவது வரையிலான எஞ்சியுள்ள கட்டுரைகள் தனித்தனி நாடுகளைக் கருத்திலெடுத்து எழுதப்பட்டவையாக உள்ளன.

**நாடுகள் பற்றிய விடய ஆய்வு :**

**அத்தியாயம் 3;** பங்களாதேஷ் பற்றிய இந்த 3வது அத்தியாயம் செலிம் றைகான் என்பவரால் எழுதப்பட்டது. இது பங்களாதேஷின் வர்த்தக தாராளமயமாக்கத்தின் முன்னேற்றம் பற்றிய முழுமையான பார்வையை வழங்குகின்றது. தாராளமயமாக்கங்களின் முக்கிய கட்டம் உலக வங்கியின் கட்டமைப்புச் சீராக்கத் திட்டத்தினாலும் விரிவாக்கிய அமைப்பு. சீராக்கல் வசதி சர்வதேச நாணய நிதியினாலும் ஆதரவளிக்கப்பட்டது. இங்கு பின்பற்றப்பட்ட வழியானது, தற்போது அதிகமான நாடுகளில் பொதுவாகக் காணப்படும் ஒழுங்கு முறையாக உள்ளது. அதாவது அளவு ரீதியான தடைகளின் அடிப்படையில் அமைந்த மட்டுப்படுத்தப்பட்ட இறக்குமதி முறைமையிலிருந்து சுங்கத்தீர்வை முறைக்கு மாறி பின்னர் சுங்கத்தீர்வைகளையும் அவற்றினை ஒத்த வேறு வரிகளையும் காலப்போக்கில் குறைத்தல் என்னும் ஒழுங்கு முறை காணப்படுகிறது. நிறையளிக்கப்படாத சராசரி சுங்கவரியானது 1991 - 1992க்கு இடையிலும் 2004 - 2005க்கு இடையிலும் கணிசமாகக் குறைக்கப்பட்டது. ஆனால் சில சுங்க வரிக் குறைப்புகளோடு புதிய இறக்குமதி வரிகள் அறிமுகம் செய்யப்பட்டன அல்லது சுங்க வரிகளுக்கு மேலாக துணை - சுங்கவரிகள் விதிக்கப்பட்டன. துணை சுங்கவரிகள் உள்ளூர் உற்பத்திக்கு பாதுகாப்பு அளிப்பதாக அன்றி வருவாயை உயர்த்துவதையே நோக்கமாகக் கொண்டிருந்தன. ஆனால் பாதுகாப்பு விளைவைக் கொண்ட சம அளவிலான கலால் தீர்வை விதிக்கப்படவில்லை. பங்களாதேஷ்ஷா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னது குறிப்பான சில கைத்தொழில்களை, பாதுகாப்பதற்காக அவற்றுக்கு பெறுமதி கூட்டிய வரியிலிருந்து விலக்களித்தது. தேசிய மட்டத்தில் வர்த்தகத்திற்கும் வறுமைக்கும் இடையிலான தொடர்பு பற்றிய பொருளியலளவை ஆய்வுகள் இந்த இரண்டுக்கும் இடையில் திட்டவட்டமான நேர்த் தொடர்பு இருப்பதாக காட்டவில்லை. ஆனால் இந்த ஆய்வு சில கைத்தொழில்களுக்கு ஒரு நேர்த்தொடர்பு இருப்பதை கண்டறிந்தது. அத்தியாயம் 2இல் எடுத்தாளப்பட்ட விதமான தனது எல்லைக்குள் அமைந்த இயங்கு நிலை பொது சமநிலை மாதிரியுருவே CGE பயன்படுத்தப்பட்டது. சுங்கத் தீர்வைகளை குறைப்பதன் குறுங்கால தாக்கம் நலன்புரி சேவைகள் குறைவதும் வறுமை அதிகரிப்பதும் ஆகும். இருப்பினும் நீண்ட காலத்தில் கூடிய வினைத்திறன் மிக்க துறைகளை நோக்கி வளங்கள் மீள் ஒதுக்கீடு செய்யப்பட்ட போது நலன்புரி சேவைகள் அதிகரிக்க வறுமை குறைந்தது. குறுங்கால நட்டங்களை புறக்கணிக்கச் செய்யும் அளவுக்கு வறுமை குறைதலின் நீண்ட கால நன்மை இருக்குமா என்பதை நிச்சயமாக கூறமுடியாது. சில சமயம் பங்களாதேஷில் இந்த தொடர்பை மேலும் சிக்கலாக்கும் வேறு பல காரணிகள் இருந்திருக்கலாம். இந்த காரணிகளுள், சீர்த்திருத்தங்களுடன் கூடிவர வேண்டிய கொள்கைகள் இல்லாதிருந்தமை, திட்டங்களை செயற்படுத்துவதில் போதிய ஈடுபாடு காணப்படாமை, வெள்ளம், அரசியலில் காணப்பட்ட நிச்சயமற்ற தன்மை என்பவையும் அடங்கும். இந்த குறைபாடுகள் வருமான வளர்ச்சியை குறைக்கவும் வறுமை ஒழிப்பை மேலும் கடினமாக்கவும் செய்திருக்கலாம்.

**அத்தியாயம் 4;** பூட்டான் பற்றிய இந்த அத்தியாயம் சென்சோ டோஜி என்பவரால் எழுதப்பட்டது. பூட்டான், 1960 அளவிலேயே வெளிநாடுகளின் செல்வாக்குக்காக திறக்கப்பட்டபோதும், 2002-2007 காலப்பகுதியிலே வர்த்தகம் ஊடாக வெளியுலகுடன் ஒன்றிணையத் தொடங்கியது. ஏனைய நாடுகளால் முழுதாக சூழப்பட்ட தன்மையும் இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளுடனான இருபக்க ஒப்பந்தங்களும் இந்த நாட்டின் ஒட்டுமொத்த வர்த்தக அந்தஸ்தை தீர்மானிக்கின்றன. சுங்க தீர்வைகள் பூச்சியத்திலிருந்து 100 சதவீதம் வரை 1970களில் கொண்டுவரப்பட்டன. பூட்டான், தொகை ரீதியான கட்டுப்பாடுகளுக்கு பதிலாக சுங்கத் தீர்வைகளை கொண்டு வந்ததன் மூலம் அதன் வர்த்தக முறைமையைத் தாராளமயமாக்கியது இருப்பினும் வர்த்தகம் கணிசமான அளவால் அதிகரித்த போதும் சுங்கத்தீர்வைகள் போதிய வருவாயைக் கொண்டுவரவில்லை. இதனால் பூச்சியத்திலிருந்து 50சதவீதம் வரையான ஏழு-பிரிவு விற்பனை வரி புகுத்தப்பட்டது. பூட்டானின் வர்த்தகத்தின் பெரும் பகுதி, இந்தியாவுக்கு மின்சாரத்தை ஏற்றுமதி செய்வதாக உள்ளது. அதேசமயம் 1998-2008 காலப்பகுதிக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி சராசரியாக 8.3 சதவீத வளர்ச்சி கண்டது. தலைக்குரிய வருமானம் 2008இல் 1990 டொலராக உயர்ந்தது இதே தசாப்தத்தில் வறியோரின் எண்ணிக்கை 36.3 சதவீதத்திலிருந்து 23.2 சதவீதமாக குறைந்தது பூட்டானில் வறுமையானது குறைந்த விவசாய உற்பத்தி திறன், துண்டாடப்பட்ட நிலம், குறைந்த மட்டக் கல்வி, ஆரோக்கிய குறைவு, உணவுத் தட்டுப்பாட்டுக்கு முகங்கொடுக்கும் ஆற்றலின்மை என்பவற்றுடன் சேர்ந்து வரும் தோற்றப்பாடாகும். இந்த கட்டுரையாளர், பூட்டானின் ஒப்பீட்டு நயம் அதன் இயற்கை வளங்களிலும் நீர்மின்சக்தி போன்ற மூலதனச் செறிவு நடவடிக்கைகளிலும் உள்ளதனால் வர்த்தகத்தின் அதிகரிப்பு உயர்ந்த வேலை வாய்ப்புக்கு இட்டுச் செல்லாது என்பதை சுட்டிக்காட்டுகின்றார். வர்த்தகத்தை கட்டுப்படுத்துவதனால் பூட்டான் நன்மை பெறும் என்பது இதன் கருத்தாகாது எனவும் அவர் வலியுறுத்துகின்றார்.

**அத்தியாயம் 5;** இந்தியா பற்றிய இந்த அத்தியாயம் றஷ்மி பங்கா மற்றும் சுருதி சர்மா ஆகியோரால் எழுதப்பட்டது. இந்தியா மிகவும் சுவாரஷ்யமான ஆய்வுக்குரிய நாடாகும். இறக்குமதி பதிலீட்டு அடிப்படையிலான துரித கைத்தொழில் மயமாக்கலை எய்தும் நோக்கில் சோவியத் மாதிரியிலான 5 ஆண்டுத் திட்டத்துடன் தொடங்கிய இது மிகத் தீவிரமாக கட்டுப்படுத்தப்பட்ட பொருளாதாரமாக இருந்துள்ளது. உயர் பணவீக்கம் மற்றும் தாக்குப்பிடிக்க முடியாத நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை என்பவற்றுடன் சேர்ந்து 1991ம் ஆண்டு உண்டான பேரண்ட நெருக்கடியின் பின்பே உண்மையான வர்த்தக தாராளமயமாக்கல் தொடங்கியது. அதன் சனத்தொகை அளவு, கிராமியத் துறையின் தாழ்ந்த மட்ட உற்பத்தித் திறன் என்பவற்றை கருத்தில் கொண்டு இந்திய வறுமையை பார்க்கும் போது இந்த நாட்டில்தான் தனியொரு நாட்டுக்கான அதி உயர் அளவிலான வறிய மக்கள் காணப்படுகின்றனர். சனத்தொகை வளர்ச்சி வீதத்தைவிட சற்றே அதிகமாக காணப்பட்ட ஆரம்ப கால குறைந்த பொருளாதார வளர்ச்சியின் பின்னணியில் இந்தியாவினால் வறுமைப் பிரச்சினையைத் தீர்க்க உருப்படியாக எதுவும் செய்ய முடியாமல் போயிருக்கும். ராஜ் கிருஷ்ணா இதை 'இந்து வளர்ச்சி வீதம்' என அழைத்தார். லைசன்ஸ் இராச்சியம் பெரும்பாலும் குலைக்கப்பட்டதைத் தொடர்ந்து வர்த்தக தாராளமயப்படுத்தலும், வேறு பொருத்தமான கொள்கைகளும் அமுலாகியபோது பொருளாதார வளர்ச்சி ஆண்டுக்கு 7.8 சதவீதமாக உயர்ந்தது. வறுமையை ஒழிக்க தொடங்கியபோதும் அது நல்ல வேகத்தில் நடக்கவில்லை. இந்த அத்தியாயத்தை எழுதியவர்கள் வறுமை மீதான வர்த்தகத்தின் தாக்கத்தை மதிப்பீடு செய்ய தயாரிப்பு கைத்தொழில், விவசாய துறை ஆகியவற்றில் தேர்ச்சி பெறாத ஊழியர் சம்பளத்தைப் பயன்படுத்தினர். இது ஒரு மறைமுக அளவீடே. ஏனெனில் தேசிய மாதிரி (Sample) ஆய்வுகள் ஒப்பிடத்தக்க வறியோர் எண்ணிக்கையின் நேரடி அளவீட்டை தருவதில்லை. விவசாயம் நேரடியாகவும் மறைமுகமாகவும் 60 சதவீதம் வரையிலான மக்கள் தொகைக்கு ஆதாரம் வழங்குகின்றது. விவசாய வர்த்தகம் ஓரளவு தாராளமயப்படுத்தப்பட்ட போதும் தீர்வைகள், அரச வர்த்தகம், ஏற்றுமதி இறக்குமதிக்கான அனுமதி பத்திர முறை அடங்கலாக பல வழிகளூடாக செயற்படும் ஏற்றுமதி, இறக்குமதி கட்டுப்பாடுகள் இன்னும் காணப்படுகின்றன. இந்தியா தொடர்ந்தும் விவசாயத்துக்கு பாதுகாப்பு வழங்கி வந்தது. சராசரிக் கட்டாய விவசாயத் தீர்வை 114 சதவீதமாகவும் முதனிலை உற்பத்தி பொருட்களுக்கு 100 சதவீதமாகவும் இடைநிலை பொருட்களுக்கு 150 சதவீதமாகவும், உணவாகும் எண்ணெய்களுக்கு 300 சதவீதமாகவும் உள்ளது. சில பொருட்களுக்கு குறைந்தளவான தீர்வை விதிக்கப்பட்டது. அதே சமயம் தொகை ரீதியான கட்டுப்பாடுகள் 2000, 2001 ஆண்டுகளில் ஒழிக்கப்பட்டன. விவசாயத்துறையானது தயாரிப்பு கைத்தொழில் துறை சீர்த்திருத்தங்களினால் ஏற்பட்ட விலை ஒழுங்குபடுத்தல்களிலிருந்து நன்மையடைந்தது. இருப்பினும் விவசாய துறை சீர்திருத்தங்களினால் மாற்றமுறவில்லை. இதன் விளைவாக வளர்ச்சி குறைவாக இருந்து வருகின்றது. அத்துடன் விவசாயத்துறை குறைந்தளவான உற்பத்தி திறனையே கொண்டுள்ளது. இது கிராமிய வருமான வளர்ச்சி மீது தாக்கம் செலுத்துவதனால் கிராமிய துறையில் வறுமை குறைப்புக்கான முயற்சிகள் மீதும் தாக்கம் செலுத்துகின்றது. விவசாயத்துறைக்கு எதிரான வகையில் தயாரிப்பு கைத்தொழில் துறையில் வலுவான சீர்திருத்தங்கள் இடம்பெற்றுள்ளன. தயாரிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தொழிலுக்கான எளிமையான சராசரி சுங்கத்தீர்வை 1992இல் 82 சதவீதத்திலிருந்து 2002இல் 29 சதவீதமாக வீழ்ச்சி அடைந்திருந்தது. அத்துடன் விவசாயமல்லாத பொருட்களுக்கான அதியுச்ச வீதம் 2006-07இல் 12.5 சதவீதமாக குறைந்தது. வர்த்தக தாராளமயமாக்கல் மற்றும் அதனோடு சேர்ந்து வந்த கொள்கைகளின் விளைவாக உற்பத்தித்திறன் மற்றும் போட்டியிடும் ஆற்றல் அதிகரித்து தயாரிப்பு துறையில் வளர்ச்சி ஏற்பட்டது. தயாரிப்பு துறை போன்று, சேவைகளின் வர்த்தகம் பற்றிய பொது ஒப்பந்தம் (GATS) தொடர்பிலான கடப்பாடுகளுக்கமைய சேவைகள் துறையிலும் வலுவான தாராளமயப்படுத்தல்கள் இடம்பெற்றன. 1990-2000 காலப்பகுதியில் சேவைகள் வர்த்தகம் ஆண்டுக்கு 6 சதவீதத்தில் அதிகரித்தது. வெளியீடுகளின் வளர்ச்சியை கருதும்போது 1994க்கும் 2004க்கும் இடைப்பட்ட காலத்தில் சேவைகள் 7.9 சதவீத வளர்ச்சி கண்டன. ஆனால் இதே காலப்பகுதியில் விவசாயம் 3 சதவீத வளர்ச்சியையும் தயாரிப்பு கைத்தொழில் துறை 5.3 சதவீத வளர்ச்சியையும் தான் கண்டன. கூடிய நம்பகத்தன்மை கொண்ட மாநில ரீதியான வறுமை, குறைவை பதிவு செய்தது. 1993-1994 காலப்பகுதியில் 35.67 சதவீதமாக காணப்பட்ட வறியோர் எண்ணிக்கைச் சுட்டெண் 1999-2000 காலப்பகுதியில் 26.1 சதவீதமாக வீழ்ச்சி கண்டது. தேசிய அளவில் நம்பத்தகுந்த ஏற்புடைய வறுமை அளவீடு இல்லாத காரணத்தால், இக் கட்டுரை ஆசிரியர்கள் வறுமையின் மறைமுக அளவீடாக சம்பளங்கள் மீதான வர்த்தகத்தின் தாக்கத்தை ஆராய்ந்தனர். தேர்ச்சியற்ற வேலையாட்களுக்கான கேள்விக்காக ஒரு பிற்செல்கை மாதிரியுருவும் அவர்களின் நிரம்பலுக்காக கூலி வீத சமன்பாடும் பயன்படுத்தப்பட்டுள்ளது. கைத்தொழில்களுக்கு இடையிலான வித்தியாசங்களுக்கான ஏற்பாடுகளை செய்தபின், இந்த கைத்தொழிலின் ஏற்றுமதி அடர்த்தி தேர்ச்சியற்ற கூலிகள் மீது ஒரு சாதகமான, கணிசமான தாக்கத்தை கொண்டிருந்ததை இந்த முடிவுகள் காட்டின. இருப்பினும் உற்பத்திகளின் இறக்குமதி, இந்த கைத்தொழிலின் தேர்ச்சியற்ற உழைப்பின்மீது கணிசமான தாக்கத்தை கொண்டிருப்பதில்லை. விவசாயத்தை பொறுத்தளவில் வர்த்தக தாராளமயமாக்களின் தாக்கம் அதன் ஏற்றுமதி நடவடிக்கைகள் மீது தாக்கம் செலுத்துவதில்லை. இருப்பினும் கூடுதலான இறக்குமதி விவசாயம் நடவடிக்கைகளில் ஈடுபடும் தேர்ச்சியற்ற உழைப்பின் கூலியை குறைப்பதாக உள்ளது. இந்நடவடிக்கைகள் துறையைப் பொறுத்தும் உற்பத்தியை பொறுத்தும் ஏற்றுமதிக்கு ஒரு விதமாகவும் இறக்குமதிக்கு இன்னொரு விதமாகவும் வேறுபட்டுக் காணப்படுவதால் ஆய்வு முடிவுகள் பன்மைப்பொருள் கொண்டவையாக உள்ளன. வறுமை குறைவதற்கு இந்தியா விவசாயத்துக்கான பாதுகாப்பை குறைக்க வேண்டும் என பொதுவாக யாரும் வரக்கூடிய முடிவை இந்த கட்டுரையாசிரியர்கள் எடுக்கவில்லை என்பதை கவனித்தல் வேண்டும்.

**அத்தியாயம் 6;** மாலை தீவு பற்றிய இக்கட்டுரை ஜகத் திஸநாயக்க, சுவேந்திரி ஜயரத்ன ஆகியோரால் எழுதப்பட்டது. ஏழு தென் ஆசிய நாடுகளிடையே, 2008 இல் அதிகூடிய தலைக்குரிய வருமானமாக 4059 அமெரிக்க டொலரை மாலை தீவு பெற்றபோதும் ஐக்கிய நாடுகள் இந்த நாட்டை, நேபாளம், பங்களாதேஷ், பூட்டான் போன்று குறைவிருத்தி நாடு என வரைவிலக்கணம் செய்துள்ளது. ஐக்கிய நாடுகள் விசேட அக்கறைப்படும் வகையிலான ஒரு சிறு தீவுப்பொருளாதாரமாகவும் இது உள்ளது. இதன் சிறிய அளவு காரணமாக ஏனைய உலக நாடுகளுடன் சேர்ந்து போவதை தவிர வேறு தெரிவு இந்த நாட்டுக்கில்லை. இருப்பினும் இங்கு உயர் சுங்கத் தீர்வைகள் இருந்து வருகின்றன. அநேகமாக, வருவாயை உயர்த்துவதற்கான ஒரு வழிமுறையாகவே இது உள்ளது. பூச்சியத்திலிருந்து 200 சதவீதம் வரை அதிகரிக்கும் பத்து வீச்சுக்களில் அமைந்த சிக்கலான சுங்கவரி அமைப்பாகவும் இது உள்ளது. இந்த தீர்வை முறையினால் கிடைக்கும் பாதுகாப்பின் அளவில் வித்தியாசம் காணப்படுகிறது. இதனால் வளங்களின் சிறப்பான மீள் ஒதுக்கீட்டுக்கு தடையாக உள்ளது. தொகை ரீதியான கட்டுப்பாடுகளுக்கு பதிலாக சுங்கவரிகளை கொண்டு வந்ததுடன் மாலைதீவில் 1989 இல் வர்த்தக தாராள மயமாக்கம் தொடங்கியது. பிரதான உணவு வகைகள் தீர்வையின்றி இறக்குமதியாகின்றன. இவற்றை இறக்குமதி செய்ய கோட்டா முறை மேற்கொள்ளப்படுகின்றது. வர்த்தக தாராளமயமாக்கலை தொடர்ந்து ஏற்றுமதிகளும் இறக்குமதிகளும் நல்ல வளர்ச்சியை காட்டின. ஆனால் பல்வகை நார்ப்பொருள் ஒப்பந்தம் முடிவுக்கு வந்தமையினால் 2005இல் 15 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டது. ஆயினும் மீண்டும் ஏற்றுமதி வளர்ச்சியேற்பட்டது என கட்டுரையாசிரியர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். வர்த்தக தாராள மயமாக்கலை தொடர்ந்து மொத்த உள்நாட்டு உற்பத்தி 13 சதவீதமாக அதிகரித்தது. கால அடிப்படையிலான தரவுகள் இன்மையால், மாலைதீவில், கால ஓட்டத்தில் வறுமை என்ன மாற்றத்தை கண்டது என பகுப்பாய்வு செய்வதன் கஷ்டத்தை கட்டுரையாசிரியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இருப்பினும் இந்த நாட்டில் மூன்று தசாப்தங்களில் வறுமைக் குறைப்பு முன்னெப்போதும் காணப்படாதவாறு மிகச் சிறப்பாக உள்ளது என அவர்கள் கூறுகின்றனர். கொள்வனவு சக்தி சமத்துவம் எனும் வகையில் ஒரு அமெரிக்க டொலர் அளவீட்டை அடிப்படையாகக் கொண்ட தனிவறுமைக் கோட்டைப் பயன்படுத்தியதன் மூலம், மாலைதீவுச் சனத்தொகையில் 4 சதவீதமானோரே வறுமையில் உள்ளனர் என இது காட்டியது. வர்த்தக தாராளமயமாக்கலைத் தொடர்ந்து ஒட்டுமொத்தமான வேலைவாய்ப்பு அதிகரித்தது. அப்போது வளங்களின் மீள் ஒதுக்கீடு காரணமாக சில வேலைகள் இழக்கப்பட்டன. வர்த்தக தாராளமயமாக்கல் வறுமை ஒழிப்பில் நன்மையான நேரடி தாக்கத்தை கொண்டிருந்தது. இருப்பினும் மாலை தீவின் ஏற்றுமதிகள் பல்வகைப்படுத்தப்படவில்லை, அதன் மூலவள அடிப்படை குறுகலானது, மற்றும் பிரதான தீவுக்கும் ஏனைய தீவுகளுக்கும் இடையிலான வருமான சமத்துவமின்மை அதிகரித்துள்ளது என இக்கட்டுரையாளர்கள் கூறுகின்றனர். இப்படியான பிரச்சினைகள் எதிர்பார்க்கப்பட வேண்டியவைதான். தனியொரு கருவியாக, வர்த்தக தாராளமயமாக்கத்தினால் இந்த பிரச்சினைகளைக் கையாள முடியாது.

**அத்தியாயம் 7;** நேபாளம் பற்றிய யுவா ராஜ் ஹத்திவட எழுதிய கட்டுரை இதுவாகும். பூட்டான் போலவே, நேபாளமும் ஏனைய நாடுகளால் சூழப்பட்டுள்ளது. இதன் வெளிநாட்டு வர்த்தகம் அநேகமாக இந்தியாவூடாகவே நடைபெறுகின்றது. நேபாள ரூபாய் இந்திய ரூபாயுடன் மிக நெருக்கமாக பிணைக்கப்பட்டுள்ளது. இந்தியாவுடன் சுதந்திர வர்த்தகம் உள்ளது. இந்திய விலைகளே நேபாளத்தின் விலைகள், வருமானம், வேலை வாய்ப்பு என்பவற்றை தீர்மானிக்கின்றன இந்த பிராந்தியத்தின் ஏனைய நாடுகளை போன்றே இங்கும் 1956-1985 காலப்பகுதியில் கட்டுப்படுத்தப்பட்ட வர்த்தக முறைமை காணப்பட்டது. நேபாளம் 1990களில் சந்தை மைய சீர்திருத்தங்களையும் வர்த்தக சீர்திருத்தங்களையும் தொடங்கியது. இரண்டு பொருளாதாரங்களுக்கு இடையிலான நெருங்கிய தொடர்பின் பின்னணியில் நேபாளத்தின் கொள்கைகள் இந்தியாவுடன் ஒத்துப் போயின. அடி மட்டத்திலிருந்த வர்த்தகமானது ஏற்றுமதி, இறக்குமதி தொடர்பில் முறையே 19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதவீத 18 சதவீத வளர்ச்சிகளைக் கண்டது. தாராளமயமாக்கலை தொடர்ந்து இவை முறையே 28 சதவீத, 20 சதவீத துரித வளர்ச்சிகளைக் கண்டது. இவ்வாறான திடீர் பாய்ச்சலின் பின்னர், வளர்ச்சி வீதமானது தொடர்ந்து பேணக் கூடிய ஒரு மட்டத்திற்கு வந்தது. வர்த்தகத்தின் அமைப்பிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. ஏற்றுமதிகளில் முதனிலைப் பொருட்களின் பங்கு 1980 ல் 70 சதவீதமாகவிருந்து 2007இல் 22 சதவீதமாக விரைந்து வீழ்ச்சியடைந்தது. அநேகமாக கம்பளியாலான விரிப்புகள், தயாரித்த ஆடைகள் அடங்கிய தயாரிப்பு பொருட்களின் பங்கு 1990 ல் 70 சதவீதத்துக்கும் மேலாக உயர்ந்தது. பல்வகை நார்ப் பொருள் ஒப்பந்தம் செயலிழந்ததை தொடர்ந்து நேபாளின் தயாரித்த ஆடை கைத்தொழில் வீழ்ச்சி கண்டது. இருப்பினும் இறக்குமதி அமைப்பில் மாற்றம் ஏற்படவில்லை. இக் காலப்பகுதியில் மூலதனப்பொருட்களின் இறக்குமதி 25 சத வீதமளவில் காணப்பட்டது. அதே சமயம், 1980, 1990களில் நேபாளின் பொருளாதார வளர்ச்சி குறிப்பிடத்தக்க மாற்றத்துக்கு உள்ளாகாமல் 4.5 சதவீதமளவில் காணப்பட்டது. இருப்பினும், 1996 ல் வறுமைக் கோட்டின் கீழ் இருந்தோரின் தொகை 42 சதவீதமாக இருந்தது. இது 2004 ல் 31 சதவீதமாக குறைந்தது. ஆயினும் இதன் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி 2007 ல் 380 அமெரிக்க டொலராக இருந்தது. இது தென் ஆசியாவில் மிகவும் குறைவானதாக இருந்தது. வர்த்தக தாராளமயமாக்கல் இடம் பெற்றபோதும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்றுமதிகள், இறக்குமதிகளின் பங்கு பெரியளவில் அதிகரிக்கவில்லை. ஏற்றுமதிகள், இறக்குமதிகள் ஆகிய மாறிகளின் உள்ளடக்கம் மாறியிருந்தது. வறுமை கணிசமாக குறைந்திருப்பினும் இதில் வர்த்தகத்தின் பங்களிப்பு மட்டுப்பட்டதாக இருந்தது. இது தரவு சேகரிப்பதில் உள்ள பிரச்சினை. வர்த்தகத்தில் பெரும் பகுதி அறிவிக்கப்படாமல் உள்ளது. இதற்கு இந்தியாவுடன் உள்ள 1800 மைல் நீளமான எல்லை காரணமாக இருக்கலாம். இதனால் இந்த மாறிகள் குறைத்து மதிப்பிடப்படுகின்றன. வர்த்தகம், வறுமைக் குறைப்பு என்பவற்றுகிடையில் பலமான தொடர்பை காண முடியாமல் இருப்பதற்கு இன்னொரு காரணம் கிராமப்பகுதிகளில் வருமானத்தை உயர்துவதில் வேறுபகுதிகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தின் முக்கியத்துவம் ஆகும்.

**அத்தியாயம் 8;** இது பாகிஸ்தான்பற்றி றெஹானா சித்திக் எழுதியது. ஏனைய தென்னாசிய நாடுகள் போன்றே பாகிஸ்தானிலும் வர்த்தக முறைமை பல கட்டங்களூடாக மாறிச் சென்றுள்ளது. 1947 தொடக்கம் 1980 வரையான முதல் இரண்டு கட்டங்களில் ஒப்பீட்டளவில் தாராளவர்த்தகம் காணப்பட்ட நிலைமையிலிருந்து பாதுகாப்பு அளிக்கப்படும் இறக்குமதிப் பிரதியீடு ஊடாக கைத்தொழில் மயமாக்கலுக்கு மாறும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த காலகட்டத்தின் நடுப்பகுதியில், இரட்டை நாணய மாற்று வீதத்தின் அடிப்படையிலான ஏற்றுமதி போனஸ் திட்டமொன்றைப் பயன்படுத்தி ஏற்றுமதி வளர்ச்சிக்கு கூடிய ஊக்குவிப்பு வழங்க பாகிஸ்தான் முயன்றது. 1988-1993 காலப்பகுதியில் உலக வங்கியின் கட்டமைப்புச் சீராக்க நிகழ்ச்சித்திட்டத்தினால் ஊக்குவிக்கப்பட்ட வர்த்தக முறைமையைத் தாராளமயமாக்க தொடங்கியது. சுங்க வரிகள் படிப்படியாகக் குறைக்கப்பட்டன. சுங்கத்தீர்வை பரம்பல் நான்கு வீச்சுகளாக குறைக்கப்பட்டது. 1990 அளவில் 2.7 சதவீதமான இறக்குமதிகளே தொகை ரீதியாக கட்டுப்படுத்தப்பட்டன. இவ்வாறான முயற்சிகள் காணப்பட்டபோதும் இறக்குமதிக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் இடையிலான விகிதம் குறிப்பிடு மளவுக்கு மாறவில்லை. ஆனால் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளின் உள்ளடக்கம் மாற்றத்துக்குள்ளானது. இது வளங்களின் மீள் ஒதுக்கத்தினால் உண்டானது. இதே சமயம் நாணய மாற்றுவீத முறைமை நிலைத்த முறைமையிலிருந்து முகாமைத்துவம் செய்யப்படும் மிதக்கும் முறைக்கு மாற்றப்பட்டது. வருமானம் மற்றும் செலவு மதீப்பீடுகளால் அளவிடப்படும் வறுமை நிலைவரம் 1998 - 1999 ல் 22.6 சதவீதத்திலிருந்து 2006 ல் 22.6 சதவீதமாக குறைந்தது. வறுமை வீதம் கிராமிய பகுதிகளில் 13.1 சதவீதமாகவும் இருந்தது. (வறுமைக்கும் வர்த்தகத்திற்கும் இடையிலான தொடர்பை அறிவதற்கான வேறு முறைகளைப் பயன்படுத்த முடியாத அளவுக்கு தரவுகள் குறைவாக இருந்தமையைக கவனத்திற் கொள்கையில்) எளிய பிற்செல்கை மாதிரியுருக்கள் பயன்படுத்தி, 1973-2005 காலப்பகுதிக் குரிய வளர்ச்சிக்கும் வறுமைக்கும் இடையிலான நெருக்கமான உறவு காண்டறியப்பட்டது. இருப்பினும் திறந்த தன்மைக்கும் வறுமைக்கும் இடையிலான தொடர்பு சீராக இருக்கவில்லை. இறக்குமதிக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் இடையிலான விகிதம் மற்றும் வர்த்தகத்திற்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் இடையிலான விகிதம் என்பவற்றின் உயர்ச்சி வறுமை குறைப்பில் முக்கியமான பங்களிப்பைச் செய்தன. மாறாக சராசரி தீர்வை வீதம் மற்றும் ஏற்றுமதிக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் இடையிலான விகிதம் போன்ற வர்த்தக தாராளமயப்படுத்தல் சுட்டிகள் உற்பத்தி அமைப்பில் தங்கியிருந்தன. குறிப்பாக ஏற்றுமதி பக்கத்தில் தங்கியிருந்தன. தொகுத்துக் கூறின் வர்த்தக தாராளமயமாக்கலுக்கும் வறுமை குறைப்புக்கும் இடையில் நேர்த் தொடர்பு இருந்தது. ஆனால் இது குறித்த கைத்தொழிலின் அமைப்பிலும் ஏனைய காரணிகளிலும் தங்கியிருந்தது.

**அத்தியாயம் 9;** இதை இலங்கை பற்றி டெஷால் டி மெல், ருவான் ஜயதிலக ஆகியோர் இணைந்து எழுதியுள்ளனர். இலங்கை சுதந்திரத்திலிருந்து 1960 தொடக்கம் வரை தாராள வர்த்தக முறைமையை பின்பற்றியது. 1960 இலிருந்து, சென்மதி நிலுவை பிரச்சினைகள் மற்றும் 1956 ல் மகஜன எக்சத் பெரமுனையின் வெற்றியுடன் வந்த சிந்தனை மாற்றம் என்பவற்றின் காரணமாக கடுமையான வர்த்தக கட்டுப்பாடுகள் புகுத்தப்பட்டன. ஒரு சிறு இடைவெளிக்குப் பின் ஐக்கிய தேசிய கட்சி 1965 ல் ஆட்சிக்கு வந்து பகுதியளவிலான தாராள மயமாக்கலை முன்னெடுக்க முயன்றது. இந்த அரசாங்கம் 1970 ல் தோற்கடிக்கப்பட்டது. இதன் பின் மாக்ஸிஸ கட்சிகளுடன் தேசியவாத வெளிப்பூச்சுடன் கூடிய இடதுசாரிக் கொள்கையுடைய பிரிவினரையும் உள்ளடங்கிய சமதர்மக் (சோஸலிச) கொள்கைகளுக்குச் சார்பான கூட்டரசாங்கம் அமைந்தது. சென்மதி நிலுவை பிரச்சினை காரணமாக விசேடமாக முதலாவது எண்ணெய் நெருக்கடி மற்றும் பல வருட கால வர்த்தக கட்டுப்பாட்டை தொடர்ந்து 1970-1977 காலப்பகுதியில் பண்டங்கள் மற்றும் (உற்பத்தி) காரணிகளின் சந்தையில் அரசாங்கம் மிக தீவிரமாக, தலையீடு செய்தது. சோவியத் யூனியனுக்கு வெளியே மிகவும் கூடியளவு அரச தலையீடு காணப்பட்ட நாடுகளில் ஒன்றாக இலங்கை காணப்பட்டது.

1977 இல் ஐ. தே. க. பதவிக்கு வந்தபின் அது, பொருளாதாரத்தைத் தாராளமயமாக்கியது. கிழக்கு ஆசிய பொருளாதாரங்களின் வெற்றி மற்றும் முன்னைய அரசாங்கத்தின மிக மோசமான பொருளாதார செயலாற்றுகை என்பவற்றின் பின்புலத்தில், கொள்கை அடிப்படையில் வர்த்தக முறைமை பெரும் மாற்றத்துக்கு உள்ளாகியது. முன்னைய அரசாங்கத்தின் காலம் (1970-1977), குறைந்த வளர்ச்சி வீதத்துக்கும் வேலையின்மைக்கும் இட்டுச் சென்ற கட்டுப்படுத்தப்பட்ட பொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாதாரம் மற்றும் உள்நோக்கிய இறக்கு மதிப் பிரதியீடு ஆகிய கொள்கைகளின் வழி அமைந்திருந்தது. 1977இல் புதிய அரசாங்கம், பொருளாதார தாராள மயமாக்கலினூடாக கொள்கைகளை மாற்றியமைத்தது, வர்த்தக முகாமை யைத் தீவிரமாக தாராளமயப்படுத்திய முதலாவது தென் ஆசிய நாடாக இலங்கை ஆகியது துரித மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் மீதான பெரும் செலவை அரசாங்கம் செய்ய வேண்டி யிருந்த நிலையில் தாராளமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டம் வேகமிழந்தது. பாரிய அரசாங்க செலவீனம் மற்றும் இதனால் விளைந்த வரவு செலவு திட்ட பற்றாக் குறைகள் என்பன உயர் பண வீக்கத்திற் கும், நாணயமாற்று வீதத்தின் உயர்ச் சிக்கும் இட்டுச் செல்ல அரசாங்கம் தாராளமயமாக்கலின் தீவிரத்தைத் குறைத்துக்கொண்டது. பின்பு 1994 ல் ஐ. தே. க. மீண்டும் அதிகாரம் இழந்தது. புதிய சமதர்மக் கொள்கைகளுக்குச் சார்பான அரசாங்கம் தாரளமயப்படுத்தும் திட்டத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. ஆனால் ஏற்கெனவே இருந்த தாராளமயப்படுத்தலை தொடர்ந் தது எனலாம். ஆயினும் உள்நாட்டு யுத்தம் காரணமாக துணை சுங்கத் தீர்வை களைப் பயன்படுத்தி சகல ஏற்றுமதிகள், இறக்குமதிகள் மீதும் கூடுதல் உள்நாட்டு வரிகளை விதித்து கூடுதலான இறை பெறப்பட்டது. மிக அண்மையில் சமாதா னம் ஏற்பட்டதைத் தொடர்ந்து சுங்கத் தீர்வை ஒழுங்கு சீராக்கம் செய்யப்பட்டது. இலங்கையில் தற்போது மிகவும் சிக்க லான வர்த்தக முறைமை காணப்படுகிறது. இந்த கட்டுரையை எழுதியவர்கள் உற்பத்தி மற்றும் சந்தை தொடர்பில் பரவ லாக்கல் அதிகம் காணப்படாததையிட்டு கவலையடைகின்றனர். ஏனைய தென் ஆசிய நாடுகளை போன்றே இலங்கை யிலும் வறுமை ஒரு கிராமிய தோற்றப் பாடாக உள்ளது. தேசிய வறியோர் எண்ணிக்கை சுட்டெண் 1990 - 91 ல் 26.1 சதவீதமாக இருந்து 2007 ல் 15.7 ஆக குறைந்துள்ளது. (80 சதவீதமான மக்கள் வாழும்) கிராமிய வறுமை இதே காலத்தில் மெதுவான வீதத்திலேயே குறைந்தது. மறுபுறத்தில் பெருந்தோட்டத் துறை வறுமை 2002 ல் 30 சதவீதத் திலிருந்து 2006-2007 ல் 32 சதவீதமாக அதிகரித்தது. இந்த கட்டுரையாசிரியர் வர்த்தக தாராளமயமாக்கல் வறுமை ஒழித்தலில் முக்கிய தாக்கம் செலுத்தியது எனவும் தேயிலை, தைத்த ஆடைகள் ஊடாகவும், வர்த்தகத்துக்கு அப்பால் சுற்றுலாத்துறை, மத்திய கிழக்குக்கான ஊழிய ஏற்றுமதி ஊடாகவும் ஏற்பட்டது எனவும் கூறுகின்றனர். வர்த்தகத்திற்கும் வறுமைக்கும் இடையிலான இணைப்பு பற்றிய பொருளியல் அளவீட்டு ஆய்வு, வறுமையில் காணப்படும் துறை ரீதியான வித்தியாசம் தொடர்பாடலிலும் சர்வதேச சந்தையை எட்டக் கூடிய பொது வசதிக ளிலும் தங்கியுள்ளது எனக் காட்டியது. பொதுவாக வர்த்தக தாராள மயமாக்கம் வேலை உருவாக்கத்துக்கு வழிவகுத்து அதன் மூலம் வறுமைக் குறைப்புக்கு பங்களிப்பு செய்துள்ளது. வர்த்தகத்திற் கும், வேலை வாய்ப்புக்கும், வறுமை குறைப்புக்குமிடையில் சாதகமான தொடர்பு காணப்படுகின்றது. ஆனால் கூடுதலாக நகரப் பகுதிகளுக்கே இது பொருந்துகின்றது.

**பொதுப்படையான பிரச்சினைகள் தொடர்பான விமர்சனங்கள்**

இவ்வகையான ஆய்வுகளில் பல பிரச் சினைகள் உள்ளன. வர்த்தகத்திற்கும் வறுமைக்கும் இடையிலான இணைப்பு பல பரிமாணங்களை உடையதால் இந்த ஆய்வு கடினமாகின்றது. வர்த்தக தாராள மயமாக்கல் என்ற எண்ணக் கருவுக்கு பல வரைவிலக்கணங்கள் உள்ளன. வறுமை என்ற எண்ணக்கரு இன்னும் கடினமானது. இது குறைந்த வரு மானத்தை மட்டும் குறிக்காத பல்பரிமாண எண்ணக் கருவாக உள்ளது. குறைந்த வருமானம் என்பதோடு (மனித மூலதனம் மற்றும் நிதி ரீதியான) சொத்துக்களை அடைவதற்கான வழிவகை, சுகாதாரம், கல்வி, சமூகபாதுகாப்பு என்பவற்றை பெறுவதற்கான வழிவகை இவற்றோடு கூட அரசியல் வழி வரும் வலுவாக்கம் குறைவுபடுதல் போன்ற வேறு பல அம்சங்களையும் வறுமை அடக்கியுள் ளது. இருப்பினும், இந்த தொகுப்பு இந்த சவால்களை நடைமுறைக்கு பொருத்த மான வகையில் தெளிவாகக் கையாள் கின்றது. இந்த பெறுமதி வாய்ந்த தொகுப்பை ஆக்குவதில் தொகுப்பாசிரி யர்கள் மிக சிறப்பாக செயற்பட்டுள்ளனர். வர்த்தக தாராளமயமாக்கலுக்கும் வறு மைக்கும் இடையிலான இணைப்பைப் பற்றி ஆராய்வதற்கான நல்லதொரு ஆய்வு கூடமாக தென் ஆசியா திகழ் கின்றது. முதலில் இந்த நாடுகள் யாவுமே தாராள வர்த்தக முறைமைக்கு மாறியுள் ளன. இது வெவ்வேறு வேகத்தில் வெவ் வேறு அளவில் நடந்திருக்கலாம் எனவே இந்த தாராளமயமாக்கலின் விளைவு களும் வித்தியாசமாகவே இருக்க வேண் டும். வித்தியாசமான அநுபவங்களும் இதன் மூலம் கிடைக்கக் கூடியதாக இருந்தது. இரண்டாவது இந்த நாடுகள் வறுமை மட்டத்தை பொறுத்தளவில் வெவ்வேறு நிலைமையிலிருந்து தொடங் கியவை. எனவே இப்பிராந்தியத்திற்கான ஒரு சராசரி வறுமைச் சுட்டெண் (ஒரு நாளுக்கு 1.25 அமெரிக்க டொலர் என்ற வறுமைக் கோட்டின் கீழ் வருவோரின் விகிதமாக அளக்கும் வறியோர் எண்ணிக் கைச் சுட்டெண்) வித்தியாசமாகவே இருக்க முடியும். மேலும் இது இலகு வான முயற்சியாகவும் இருக்க முடியாது. ஆனால் அவ்வாறான சுட்டி தயாரிக்கப்பட வில்லை. அவ்வாறான ஒரு சுட்டியைப் பயன்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்களும் பயன்பாடுகளும் மிகக் குறைவானவை என்பதால் அது தேவையாக இருக்கவு மில்லை. மூன்றாவது வறுமையின் தோற்றப்பாட்டின் மீது வர்த்தகத்தை தவிர ஏனைய பல காரணிகளும் தாக்கம் புரிகின்றன. பொருளியல் காரணிகளும் பொருளியல் சாராத காரணிகளும் செல் வாக்கு செலுத்துகின்றன. எனவே வறுமையோடு ஒத்துமாறும் வர்த்தக தாராளமய மாறி ஒன்று கவனமாக தெரியப்பட வேண்டும். நான்காவது வர்த்தக தாராளமயமாக்கல் ஒரு திசை முகப்பட்ட தோற்றப்பாடு அல்ல. ஏனெனில் 1977 ல் மிகவும் முந்தியதாக இலங்கை யிலும் 1990 ல் மிகவும் பிந்தியதாக பூட்டா னிலும் தொடங்கிய வர்த்தக தாராளமய மாக்கலில் சில பின்னடைவுகளும், முன்னேற்றங்களும் வெவ்வேறு காலத் தில் காணப்பட்டுள்ளது. இறுதியாக முக்கியத்துவம் வாய்ந்த விவசாயத் துறையில் குறைந்த உற்பத்தி திறனை கொண்ட மக்களையும் பொது சேவை களைப் பெறுவதற்கான வழிவகைகள் மட்டுப்படுத்தப்பட்ட மக்களையும் கல்வி, சுகாதாரம் பெண்களின் அந்தஸ்து தொடர் பான சமூக சுட்டிகளில் பின்தங்கியுள்ள மக்களையும் கொண்ட நிலைமையில் தென் ஆசிய பிராந்தியம் மிகவும் கூடிய எண்ணிக்கையான வறியோரைக் கொண் டுள்ளது.

ஓரளவுக்கு, தென்னாசியாவின் தாராளமய மாக்கல் பாதை வேறு பிராந்தியங்களை விட குறிப்பாக மத்திய கிழக்கு, சகாரா வின் கீழான ஆபிரிக்காவைவிட பலமான தாகவும் விரைவானதாகவும் இருந்து வருகிறது. மிக அதிகளவில் கட்டுப்படுத் தப்பட்ட சகாராவின் கீழ் பிராந்தியத்தில் 1900களில் விரைந்த தாராளமயமாக்கம் நடந்தது. வளர்ச்சி மற்றும் வறுமை குறைப்பு தொடர்பில் முன்னேற்றம் எதுவும் இல்லாத நிலைமையில் 1900 களில் தாராளமயமாக்கலின் தீவிரத்தை அதிகரித்தது. மத்திய கிழக்கு சீர்த் திருத்தம் மெதுவானதாகவும் குறைந்தள வில் நடந்ததாகவும் இருந்தது. லத்தீன் அமெரிக்கா, விரைந்த தாராளமயமாக் கலை செய்தது. ஆனால் இதை ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரிய பாதையில் தொடர்ந்து கொண்டு செல்ல முடியவில்லை. முதலாவதாக தொடங்கிய கிழக்கு ஆசியா பலமான சீர்திருத்தங்களை 1980களின் முற்பகுதியிலேயே தொடக்கிவிட்டது. இதை தொடர்ந்து இங்கு வறுமை குறைப்பில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டது. நவீன உலக வரலாற்றில் எக்காலகட்டத்திலும் காணப்படாத வகையில் சீனாவும் இந்தியாவும் கடந்த மூன்று தசாப்தங்களில் வறுமையைக் குறைத்துள்ளன. வறுமையிலிருந்து மீட்கப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை தொடர்பில் இந்த நாடுகள் பெருமளவு சாதித்துள்ளன. இருப்பினும் இந்தியாவிலேயே தற்போதும் ஆகக் கூடுதலான வறியோர் காணப்படுகின்றனர். (இவை தொடர்பான உண்மையான எண்ணிக்கைகள் பற்றிய சுர்ஜித் பல்லா என்பவரின் மாற்றுக் கருத்துக்கள் உள்ளன.) வளங்களை கூடிய வினைத்திறன் மிக்க துறைகளுக்கு மாற்றும் வேறு சீர்திருத்தங்கள், சிறப்பான பேரண்ட கொள்கைகள் ஆகியவையுடன் கூடி வரும் ஒரு சீரான, பலமான வர்த்தக சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தை கொள்கை வகுப்பாளர்கள் கண்டுகொள்ள தற்போதைய இந்த ஆய்வு உதவக் கூடியதாக இருக்கும். சீர்திருத்தத்துக்கான வழி இலகுவானதோ அல்லது ஒரே பிராந்திய நாடுகளில் ஒரே அளவில் பயன்தரக் கூடியதோ அல்ல என்ற நிதானப்படுத்தும் உண்மையை இந்த ஆய்வு எடுத்துக் காட்டுவதாக உள்ளது. வர்த்தக தாராளமயமாக்கம் ஒரு மந்திரக் கோல் அல்ல, வறுமை குறைப்புக்கு உதவும் வகையில் உயர் வளர்ச்சிக்கு இட்டுச் செல்வதற்கு பொருளாதாரத்தை கூடிய வினைத்திறன் மிக்கதாக்க உதவும் வழிவகைகளில் இதுவும் ஒன்று மாத்திரமே என்ற உண்மையையும் இந்த ஆய்வு சுட்டிக்காட்டுகின்றது. இந்த வகையில் வறுமையின் முக்கிய கூறான கிராமிய வறுமை தொடர்வதற்கான பங்களிப்பை செய்துள்ள விவசாயத்தை தென் ஆசிய பிராந்தியம் தொடர்ந்தும் பாதுகாத்து வந்துள்ளது.

**குறித்த நாடுகளுக்கு உரித்தான பிரச்சினைகள் தொடர்பான விமர்சனங்கள்**

தொகுப்பாசிரியர்களினால் நெறிப்படுத்தப்பட்ட அந்தந்த நாட்டு கட்டுரை ஆசிரியர்கள் வர்த்தகத்திற்கும் வறுமைக் குறைப்புக்கும் உள்ள தொடர்பை ஆராய்ந்து அறிவூட்டவல்ல நம்பகத் தன்மை மிக்க பகுப்பாய்வு ஒன்றை செய்துள்ளனர். நாடு ஒவ்வொன்றையும் பற்றி ஆய்வில் கண்டறியப்பட்டவை புதிய விடயங்கள். இவை இந்த நாடுகளின் கொள்கை வகுப்பாளர்களுக்கு தேவையான அடிப்படையை கொடுத்துள்ளன. கட்டுரை ஆசிரியர்கள் தாம் கண்டறிந்த உண்மைகளை மிகைப்படுத்தாமலும் குறைவுபடுத்தாமலும் கூறியதை பாராட்ட வேண்டும். ஒரு தெளிவான எல்லைக்குள் இந்த ஆய்வை அவர்கள் கொண்டு சென்றதையும் பாராட்ட வேண்டும். வர்த்தக கொள்கைக்கும் வறுமை ஒழிப்புக்கும் இடையிலான தொடர்பை ஆராய்வதற்கு பொருத்தமான முறைகளை தெரிவதில் சிறப்பாக செயற்பட்டுள்ளனர். வர்த்தகத்திற்கும் வறுமை ஒழிப்புக்கும் இடையில் உள்ள இணைப்பை ஆராய அவர்கள் பங்களாதேஷில் C G E மாதிரி உருக்களையும் இலங்கையில் எளிய பின் செல்லும் பகுப்பாய்வு முறையையும் பூட்டானில் வரலாற்று பகுப்பாய்வு முறையையும் அவர்கள் பயன்படுத்தியுள்ளனர். இருப்பினும் இந்த மதிப்பீட்டைச் செய்தவர்கள் சில பலவீனங்களையும் இனம் கண்டுள்ளனர். அவை சுருக்கமாக கீழே தரப்படுகின்றன:

i. இந்த வர்த்தக தாராளமயப்படுத்தல் எவ்வகை நாணயமாற்று முறைமையில் இடம் பெற்றது என்பதை கவனிக்காமல் விட்டமை. அந்நிய செலாவணி முறைமை, வர்த்தக தாராளமயமாக்கலின் வெற்றி தோல்வியில் அல்லது அது கொண்டுவரக் கூடிய உற்பத்தி திறன் அதிகரிப்பின் அளவில் பெரும் தாக்கம் புரியக் கூடியது. எவ்வாறாயினும் வர்த்தகம் செய்யக்கூடிய, செய்ய முடியாத பொருட்களின் விலை அல்லது உண்மையான நாணயமாற்று வீதம் நாணயமாற்று முறைமையினால் நிச்சயமாக பாதிக்கப்படுகிறது. வர்த்தகம் செய்ய முடியாத பண்டங்களின் முக்கிய கூறாக தேர்ச்சியற்ற ஊழியங்கள் உள்ளன. இந்த விலையில் அல்லது நாணயமாற்று வீதத்தில் ஏற்படும் மாற்றம் வறுமையின் அளவை தீர்மானிக்கும் ஒரு காரணியாக உள்ளது. இவ்வாறே பாகிஸ்தான் தனது வர்த்தக முறைமையை நிலைத்த வீதத்திலிருந்து முகாமைத்துவம் செய்யப்படும் - மிதக்கும் நாணயமாற்று வீதத்துக்கு மாற்றியதும் இறை மற்றும் நாணய கொள்கை ஊடாக உண்மையான மாற்று வீதத்தை பேணியதும் தாக்கங்களை ஏற்படுத்திய விடயங்களாகும். இது போலவே 1977 ல் இலங்கை மேற்கொண்ட வர்த்தக தாராளமயமாக்கத்தால் பூரணமான நன்மை கிடைக்கவில்லை. இதற்கான காரணம் மகாவலி அபிவிருத்தி திட்டத்தோடு ஏற்பட்ட Dutch disease ஆகும்.

ii. சில கட்டுரை ஆசிரியர்கள் எடுத்துக் கொண்ட விடயத்துக்கு அப்பால் சென்று வர்த்தக தாராளமயப் படுத்தலின் நன்மை, தீமைகள் யாரைப் போய்ச் சேர்ந்தது என்பது பற்றி கவனம் செலுத்தியுள்ளனர். இந்த வகையில் சிலர் பாதிக்கப்படத் தான் செய்வார்கள். மோசமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு ஏற்பாடு செய்வது வர்த்தக தாராளமயமாக்கலை நடைமுறைப்படுத்திய அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

iii. வர்த்தக விகிதத்தின் அடிப்படையில் (அதாவது ஏற்றுமதி, இறக்குமதியின் கூட்டுத்தொகையை மொ.உ.உ. ஆல் பிரித்துப் பெறப்படுவது) வர்த்தகத்தின் திறந்த தன்மையை வரைவிலக்கணம் செய்வது சரியல்ல. இந்த முறையில்தான் மாலைதீவு உயர் வர்த்தக விகிதம் உடையதாயிற்று. இது மாலைதீவின் குறுகிய மூலவள அடிப்படையால் உண்டானதே அன்றி தாராள வர்த்தக முறைமையினால் உண்டானதல்ல.

iv. குறித்த நாட்டுக்குரித்தான வளங்கள், தாராள மயமாக்கலைத் தூண்டிய காரணிகள், இதற்கு கையாளப்பட்ட வழிமுறைகள் என்பவை தொடர்பில் விளைவுகளைப் பகுப்பாய்வு செய்யும் ஒரு ஆய்வை படிக்க சிலர் விரும்பியிருக்கலாம். சகல நாட்டு ஆய்வுகளிலும் இது நடந்தது என கூற முடியாது.

ஒட்டுமொத்தமாக பார்க்கும்போது இந்த விமர்சனத்தை செய்பவர் இத் தொகுப்பில் உள்ள ஆய்வுகள் புதியவை, உயர்தரமானவை, தென் ஆசியா பற்றிய ஆய்வுகளுக்கு வளம் சேர்ப்பவை என கருதுகின்றார். இது கொள்கை வகுப்பாளர்களுக்கும் புலமையாளர்களுக்கும் ஏற்புடையது என சிபார்சு செய்யப்படுகின்றது. வர்த்தக சீர்திருத்தத்தின் அடுத்த கட்டம் பற்றி சிந்திக்கும் போது, அது எந்த கட்டத்தில் காணப்படுவதாக இருப்பினும் கொள்கை வகுப்பாளர்கள் இந்த ஆய்வுகளின் முடிவுகளைப் பயன்படுத்துவர் என நம்பலாம். இந்த ஆய்வுகளை மேலும் செப்பனிட்டு கால ஓட்டத்தில் கிடைக்கக் கூடிய புதிய தரவுகளையும் உள்வாங்கி, இவ்விடயம் பற்றிய நியம உசாத்துணையாக ஆக இந்த பங்களிப்பை பயன்படுத்தி இந்த பணியை அடுத்த கட்டத்துக்கு புலமையாளர்கள் கொண்டுசெல்வர் என நம்புகின்றோம். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ................. நிகழ்வுக் குறிப்பேட்டுத் தொடர்ச்சி

'இலங்கையின் கொலைக் களங்கள்'' எனப் பெயரிடப்பட்டுள்ள சனல் 4 ஆவணப்படமானது விடுதலைப் புலிகளின் இணையத்தளங்கள் ஊடாக முன்னரே வெளியிடப்பட்ட காட்சிகளின் வெறும் தொகுப்பாக உள்ளதுடன், இலங்கையில் தற்போது இடம்பெற்றுக்கொண்டிருக்கும் நல்லிணக்க மற்றும் அபிவிருத்தி முயற்சிகளை வலுவிழக்கச் செய்வதற்காக, தன்னலப்பற்றுடைய தரப்பினரின் உத்தரவினால் அவை காண்பிக்கப்படுவனவாகவும் உள்ளன என இலங்கையின் வெளிவிவகார அமைச்சு ஓர் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

16 சென். பீற்றர்ஸ்பேக் சர்வதேச பொருளாதார மன்றத்தில் ஓர் பார்வையாளராகக் கலந்துகொள்வதற்காக, இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவர்கள் ரஷ்யாவுக்குப் பயணமானார்.

17 ''இலங்கையின் இறைமையை நாம் மதிப்பதுடன், அதனுடைய உள்நாட்டு விவகாரங்களில் வெளிச்சக்திகள் தலையிடுவதை எதிர்த்தும் வருகின்றோம்'' என சென். பீற்றர்ஸ்பேர்க்கில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுடன் இரு தரப்பு பேச்சுவார்த்தைகளை நிகழ்த்திய வேளையில், சீனாவின் ஜனாதிபதியான ஹூ ஜின்ராவோ கூறினார்.

இலங்கையின் எந்த முயற்சிகளிலுமே ரஷ்யா தலையிடாது என, சென். பீற்றர்ஸ்பேக்கில் வைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவர்களுக்கு ரஷ்ய ஜனாதிபதி டிமித்திரி மெத்தேவ் உறுதியளித்தார்.

சென். பீற்றர்ஸ்பேர்க் சர்வதேச பொருளாதார மன்றத்தில் வைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவர்களைச் சந்தித்த, உலகில் மிகப்பெரிய இயற்கை வாயு அகழ்வுக் கம்பனிகளில் ஒன்றான கஸ்பரோம் எனும் ரஷ்யாவின் மிகப்பெரும் சக்தி வளத்துறை கம்பனியின் தலைவரான அலெக்சி மில்லர் என்பவர், மன்னார் கரைக்கு அப்பால் மேற்கொள்ளப்படவுள்ள எண்ணெய் அகழ்வாராய்ச்சி முயற்சிகளுக்கும், மற்றும் ஏனைய இடங்களிலும் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு செயற்கருவிகளை மேம்படுத்துவதற்குமான உதவிகளை இலங்கைக்கு வழங்குவதற்கு ஒத்துக்கொண்டார்.

சனல் 4 தொலைக்காட்சி நிறுவனத்தால் வெளியிடப்பட்ட மிகப் பிந்திய காணொலிக் காட்சிகளைப் பரீட்சித்துப் பார்க்கவுள்ளதாக, இலங்கையின் கற்ற படிப்பினைகள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

18 சர்வதேச சமூகமும் ஐக்கிய நாடுகள் போன்ற சர்வதேச அமைப்புகளும் இலங்கைக்கு உதவ வேண்டுமென சென். பீற்றர்ஸ்பேர்க்கில் இடம்பெற்ற இரு தரப்புப் பேச்சுவார்த்தைகளின்போது, ஸ்பெயினின் பிரதமர் ஜோஸ் லூயிஸ் ரொட்ரிக் ஷபாட்டறோ அவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிடம் கூறினார்.

ஹெய்ரோவில் ஒன்றுகூடிய ஐக்கிய நாடுகள், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அரபு லீக் ஆகியன லிபியாவில் காணப்படும் முரண்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஓர் அரசியல் செயல்முறைக்கான கோரிக்கையை விடுத்தன.

இலங்கையில் யுத்த காலத்தில் இடம்பெற்ற நீதிமுறைமைக்குப் புறம்பான கொலைகள் பற்றிய குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக, ஐக்கிய அமெரிக்காவின் சித்திரவதைகளால் பாதிக்கப்படுவோரை பாதுகாத்தல் சம்பந்தமான சட்டத்திற்கு உட்பட்ட வகையில் வாதிடுவதற்காக, ஹேக் சமவாயத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள மூன்று குடியியல் வழக்குகள் தொடர்பில், ஐக்கிய அமெரிக்காவின் ஓர் மாநில நீதிமன்றம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவர்களுக்கு அழைப்பாணை விடுத்துள்ளது என இலங்கையின் நீதியமைச்சு தெரிவித்துள்ளது.

19 ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவர்களுக்கு ஐக்கிய அமெரிக்காவின் ஓர் மாநில நீதிமன்றத்தால் விடுக்கப்பட்ட அழைப்பாணையை நிராகரிப்பதாக இலங்கையின் நீதியமைச்சு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அவசியமான சட்ட நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன என நீதியமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

20 சனல் 4 ஆவணபடத்தில் காட்டப்பட்ட, ஊடகவியலாளராகவும் செய்தி வாசிப்போராகவும் இருந்த இசைப்பிரியா எனும் பெண், விடுதலைப்புலிகள் அமைப்பில் ஓர் உறுப்பினராக இருந்தவர் என்பதை இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

ஐரோப்பாவில் காணப்படும் அதிகரித்துச் செல்லும் படுகடன் நெருக்கடியானது, உலகெங்கும் ஏற்பட்டு வரும் பொருளாதார மீட்சிக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளதென சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. தீர்க்கமான நடவடிக்கை எடுக்காதுவிடின், தற்போதுள்ள இந்த நெருக்கடியானது ''உலகளாவிய பாரிய பின்விளைவுகளை'' கொண்டிருக்கும் என, சர்வதேச நாணய நிதியத்தால் வெளியிடப்பட்டுள்ள ஓர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டின் இறுதிக்குள் அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம் வழங்கும், அரசாங்கத்தின் குறிக்கோளுக்கு ஒத்திசைவு உடையதாக, இலங்கையின் நீடித்திருக்கத்தக்க சக்திச் செயற்திட்டத்தை அமுலாக்குவதற்காக 120 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உடன்பட்டுள்ளது.

கடல் மட்டங்கள், கடந்த இரு ஆயிரமாம் ஆண்டுகளில் இருந்ததை விட வேகமாக உயர்ந்து வருவதாக பென்சில்வேனிய பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளரான பேராசிரியர் பெஞ்சமின் கோட்டன் அவர்கள் கூறியுள்ளார். இக்கடல் மட்ட உயர்வானது, காலநிலை மாற்றத்தின் சாத்தியப்படத்தக்க பேரிடரான ஓர் விளைவாக அமைந்துள்ளது எனவும் அவர் மேலும் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

22 ''இலங்கையின் கொலைக் களங்கள்'' எனப் பெயரிடப்பட்டுள்ள ஆவணப்படத்தை ஐக்கிய நாடுகளின் சேர்ச் சென்றரில் திரையிடுவதன் மூலம், அங்கு ஒன்றுகூடியவர்களை தவறாக வழிநடத்துவதற்காக, சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட ஓர் முயற்சியை, ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் இரு தூதவர்களான கலாநிதி பாலித கொஹொன அவர்களும் மேயர் ஜெனரல் சவேந்திர சில்வா அவர்களும் தோல்வியுறச் செய்துள்ளனர். இவ்விரு தூதவர்களும், இந்த ஆவணப்படத்தின் ஒன்றுக்கொன்று முரணானதும் ஒற்றைச் சார்புடையதுமான விபரிப்புகளை பற்றி அங்கு ஒன்றுகூடியோரிடம் விளக்கிக் கூறினர்.

26 மேலும் அதிகரித்துச் செல்லும் படுகடன் மட்டங்கள் மற்றும் வளர்ச்சியடைந்த பொருளாதாரங்களில் அண்மைக்கால நிதி நெருக்கடியைத் தூண்டிய, சொத்து வணிகத்திலான தற்காலிகச் செழிப்பு நிலைக்கு ஒத்த ஓர் நிலைமை போன்ற ஆபத்துகளுக்கு வளர்ந்து வரும் பொருளாதாரங்கள் உட்பட்டுள்ளன என சர்வதேசக் கடன் தீர்வைகளுக்கான வங்கி எச்சரித்துள்ளது.

27 ஸ்கண்டிநேவிய நாடொன்றில் பணிபுரிந்த தகவல் தொழில்நுட்ப வல்லுநரான திரு. கணபதிப்பிள்ளை தேவதாசன் என்பவர் சனல் 4 காணொலிகளை மிகக் கவனமாக பரீட்சித்துப் பார்த்து, அது சந்தேகத்திற்கு இடமின்றி போலியாகத் தயாரிக்கப்பட்டுள்ளதென கூறியுள்ளார்.

அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராகப் புரியப்பட்ட குற்றச் செயல்களுக்காக, லிபியத் தலைவர் மும்மர் கடாபி, அவரது மகன் சைவ் அல்-இஸ்லாம் மற்றும் அந்த நாட்டின் உளவுத்துறைத் தலைவர் ஆகியோருக்கு ஹேக் நகரிலுள்ள சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் பிடியாணைகளை அனுப்பிவைத்துள்ளது.

28 குற்றவியல் குற்றச்சாட்டுகளுக்காக லிபியாவின் தலைவர் மும்மர் கடாபிக்கும் அவருடன் நெருக்கமான இருவருக்கும் வழங்கப்பட்ட பிடியாணைகளை லிபியா நிராகரித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் புதிய முகாமைத்துவப் பணிப்பாளராக பிரெஞ்சு நிதியமைச்சரான கிறிஸ்ரின் லக்கா நியமிக்கப்பட்டுள்ளார் என இந்நிதியத்தின் நிறைவேற்றுச் சபை அறிவித்துள்ளது. இப்பெண்மணி, தனது ஐந்து வருடப் பதவிக் காலத்தை 2011 ஜூலை 5 ஆம் திகதியன்று ஆரம்பிப்பார்.

யுத்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு இலங்கை மிக விரைவாகச் செயற்பட வேண்டுமென ஐக்கிய அமெரிக்கா வற்புறுத்திக் கேட்டுள்ளது.

**ஜூலை**

1 ''ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்குவதே தருஸ்மன் அறிக்கையின் நோக்கமாக இருந்தபோதும், அது இச்சூழலுக்குப் பொருத்தமானதன்று'' என டோக்கியோவில் நடைபெற்ற இலங்கை வணிக ஒத்துழைப்பு ஒன்றுகூடலின் 16 ஆவது கூட்டுக்குழுவில் கலந்துகொண்ட யப்பானின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டுக் கொள்கை தொடர்பான முதுநிலை ஆலோசகர் யசுஷி அகாஷி அவர்கள் தெரிவித்ததாக லங்கா இணையத்தளம் மேற்கோள் காட்டியுள்ளது.

7 ஜெனிவாவில் நடைபெறும் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் தருஸ்மன் அறிக்கையை முன்வைப்பதற்கான அவசியம் எதுவும் இல்லையென அணிசாரா இயக்கத்தைச் சேர்ந்த 22 நாடுகள் குறிப்பிட்டுள்ளதாக, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அவர்கள் பாராளுமன்றத்திற்கு அறிவித்தார்.

The Economist சஞ்சிகையால் இறுதியாக நடாத்தப்பட்ட உலகளாவிய வாழ்க்கைச் செலவு தொடர்பான பொது மதிப்பீட்டு ஆய்வின்படி, உலகிலுள்ள மிகக் குறைந்தளவு வாழ்க்கைச் செலவைக் கொண்டுள்ள நகரங்கள் மத்தியில் கொழும்பு ஓர் உயர்ந்த நிலையில் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பொது மதிப்பீட்டிற்கு இணங்க, டோக்கியோவானது தற்போதும் உலகின் மிகவும் செலவு கூடிய நகரமாகக் காணப்படுகின்றது.

9 ஐந்து சதாப்தங்களுக்கும் மேலாக நீடித்த இரு உள்நாட்டு யுத்தங்களின் பின்னர், சூடானிலிருந்து தென் சூடான் பிரிந்தமையின் விளைவாக, இந்த தென் சூடானானது உலகின் புத்தம் புதிய நாடாக உருவாகியுள்ளது.

11 முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் அவர்களாலும் ஏனைய முதுநிலை அதிகாரிகளாலும் உத்தரவிடப்பட்ட, தடுத்துவைக்கப்பட் டோர் மீதான துஷ்ப்பிரயோகம் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிக்குமாறு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அவர்களை **“ஹியூமன் றைஸ் வொச்”** எனும் மனித உரிமைகள் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. டாபர், லிபியா, இலங்கை போன்ற இடங்களில் புரியப்பட்ட சர்வதேசச் சட்டங்களுக்கு முரணான யுத்தக் குற்றச்சாட்டுகளுக்கு எதிரான விசாரணைக்கான ஐக்கிய அமெரிக்காவின் கோரிக்கைகளைப் போன்று, இதையும் (தடுத்துவைக்கப்பட்டோர் மீதான துஷ்ப்பிர யோகம்) விசாரிக்குமாறு **‘ஹியூமன் றைஸ் வொச்”** கோரிக்கை விடுத்துள்ளது.

நிதி இழப்பீடுகளுக்கு எதிரான காப்பீட்டு ஒப்பந்தத்தை முறையாக நிறைவேற்றத் தவறியதன் விளைவாக, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பணம் செலுத்த வேண்டியுள்ளமையால், ஸ்ரான்டட் சார்ச்சஸ் வங்கிக்கு அது 162 மில்லியன் அமெரிக்க டொலரையும் அதற்கான வட்டியையும் சேர்த்து செலுத்த வேண்டுமென இலண்டன் நீதிமன்றம் ஒன்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

13 லிபியத் தலைவரான மும்மர் கடாபியைப் பதவியிலிருந்து விலகுமாறு கோரி, லிபியாவிலுள்ள கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவானவர்கள், தமக்கு ஆதரவான பகுதிகளில் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

15 ஐரோப்பிய வலய படுகடன் நெருக்கடி தொடர்பிலான பெரும் குழப்பங்கள் மத்தியில், நட்ட அச்சுப் பகுப்பாய்வில் தோல்வியுற்ற வங்கிகளைப் பலப்படுத்துமாறு சர்வதேச நாணய நிதியம் ஐரோப்பாவைக் கோரியுள்ளது. கிரேக்கம், அயர்லாந்து, போர்த்துக்கல் ஆகியவற்றை நிதி ரீதியாக மீட்டெடுப்பதில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் பங்காளியாகச் செயற்படும் சர்வதேச நாணய நிதியமானது, ஐரோப்பிய வங்கி அதிகார சபையின் புதிய மூலதனத் தேவைகளை வங்கிகள் நிறைவு செய்கின்றனவா? என்பது தொடர்பிலான இப்பகுப்பாய்வை வரவேற்றுள்ளது. வெளியிடப்பட்டுள்ள முடிவுகளுக்கு இணங்க, 91 வங்கிகளில் 8 வங்கிகள் (ஸ்பெயின் வங்கிகள் 5, கிரேக்க வங்கிகள் 2, ஒஸ்திரிய வங்கி 1) நட்டமடைந்துள்ளன.

21 அமெரிக்க காங்கிரஸ் குழுவானது 2010 இற்கென திட்டமிடப்பட்டுள்ள ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தில் இலங்கைக்கான 13 மில்லியன் டொலர் உதவியை நிறுத்திவைத்துள்ளது. இத்தீர்மானமானது விவாதத்திற்கும் அனுமதிக்குமாக காங்கிரஸின் முன் வைக்கப்பட்டுள்ளது.

26 கடும் வரட்சியால் பாதிக்கப்பட்ட கிழக்காபிரிக்கத் தீபகற்பப் பிராந்தியம் தொடர்பாக உரோமில் நடைபெற்ற ஓர் அவசரக் கூட்டத்தின் பின்னர், சோமாலியா, எதியோப்பியா, கென்யா ஆகியவற்றிற்கு உணவுப் பொருட்களை ஆகாயமார்க்கமாக எடுத்துச் செல்லும் முயற்சியை ஆரம்பிப்பதில் ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டம் உறுதியாக இருந்தது. சோமாலியாவில் அண்ணளவாக 3.7 மில்லியன் மக்கள் அதாவது, அந்த நாட்டினுடைய சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் பட்டினிச் சாவின் விளிம்பில் இருப்பதுடன், இப்பிராந்தியத்தில் காணப்படும் மிக மோசமான வரட்சி காரணமாக, டிபூட்டி, எதியோப்பியா, கென்யா, உகண்டா ஆகிய இடங்களில் வசிக்கும் மில்லியன் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மும்மர் கடாபிக்கு விசுவாசமான எஞ்சியிருந்த அனைத்துப் பணியாளர்களையும் வியப்பூட்டும் வகையில் வெளியேற்றியதன் பின்னர், லிபியாவினுடைய கிளர்ச்சி பேரவையை அந்த நாட்டினுடைய சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு அரசாங்கமாக பிரித்தானியா அங்கீகரித்துள்ளது என பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹக் கூறியுள்ளார்.

28 லிபிய கிளர்ச்சியாளர்களை அந்த நாட்டினுடைய சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு குழுவாக அங்கீகரிக்கும் பிரித்தானியாவின் தீர்மானத்தை மும்மர் கடாபியின் அரசாங்கம் பகிரங்கமாகவும் மிகக் கடுமையாகவும் கண்டித்துள்ளது.

30 யுத்தக் குற்றங்களுக்காக இலங்கை மீது பொருளாதாரத்தடையை விதிக்குமாறு இந்திய மத்திய அரசை தமிழ்நாட்டு முதலமைச்சரான ஜெ. ஜெயலலிதா அவர்கள் வற்புறுத்தி உள்ளார்.

31 கள நிலைவரத்தை ஆராய்வதற்காக இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு, ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்டு இயங்கும் சனல் 4 தொலைக்காட்சி நிறுவனத்திற்கு இலங்கை அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது. அத்தகையதோர் விஜயத்திற்கு துணை புரிவதற்கான இலங்கையின் தயார்நிலையைப் பற்றி ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் பிரதித் தூதுவர் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா அவர்கள் சனல் 4 இன் வெளிநாட்டு விவகாரங்களுக்கான நிருபர் ஜொனதன் மில்லருக்கு அறிவித்துள்ளார். ■

**ஜனாதிபதியின் உரையின் தொடர்ச்சி ..........**

சர்வதேச சமூகம் கவனத்தில் கொள்ள வேண்டிய மேலுமொரு முக்கியத்துவம் வாய்ந்த விடயம் யாதெனில், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் நலிவுற்ற நிலையும், அவற்றின் பாதுகாப்பிற்குப் பொருத்தமான நிறுவன ரீதியான ஏற்பாடுகளை வழங்குவதுமாகும்.

மூன்று மாதங்களுக்கு முன்னர், கொழும்பில் நடைபெற்ற ஆசிய – ஆபிரிக்க சட்ட ஆலோசனைக் குழுவின் 50 ஆவது வருட ஒன்றுகூடலை தொடக்கி வைத்தவேளை நான் அவதானித்தவாறு, அபிவிருத்தியடைந்த நாடுகளில் தயாரிக்கப்படும் வர்த்தக மற்றும் கைத்தொழில் பொருட்களை ஏனைய நாடுகளில் குவித்தலானது, இங்கு பிரதிநிதித்துவம் வகுக்கும் ஏராளமான ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளின் பொருளாதாரங்களுக்கு ஆபத்து விளைவிக்கின்றது.

தலைவர் அவர்களே, மேதகைகளே!

இறுதியாக, அபிவிருத்தியடைந்த நாடுகளின் விவசாய உற்பத்திக்கு ஆதரவளிப்பதற்காக அந்நாடுகளின் திறைசேரிகளாலும் மத்திய வங்கிகளாலும் வழங்கப்படுகின்ற கணிசமானளவு மானியங்களை பயன்படுத்துதல் மற்றும் வேறு வடிவிலான பாதுகாப்பு ஏற்பாடுகள் என்பன சந்தைச் சக்திகளின் இடைவினைவின் மிகக் கடுமையான திரிவுபடலுக்குக் காரணமாக அமைவதுடன், அபிவிருத்தியடைந்து வரும் ஏராளமான நாடுகளிலுள்ள விவசாயிகள் தமது ஏற்றுமதிப் பொருட்களுக்காக சர்வதேசச் சந்தைகளை நியாயமான அடிப்படையில் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளை பெருமளவுக்கு குறைக்கின்றது என்பதையும் நான் கூற விரும்புகின்றேன்.

கைத்தொழில் நாடுகளின் செயற்பாட்டால் சுற்றுச்சூழலானது சரிவிகித சமானம் அற்ற வகையில் மாசுபடுத்தப்படுதல் அத்துடன் இதன் விளைவாக சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் என்பவற்றின் மீது ஏற்படும் பாதிப்புகளை, பிரச்சினைகளை மேலும் மோசமாக்குவதற்கு மிகக் குறைந்தளவே பங்களிப்புச் செய்துள்ள அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் மீது கண்டிப்பான கட்டுப்பாட்டெல்லைகளை விதிப்பதன் மூலம், மேற்கொள்ளப்படுகின்ற நீதியின் சாயலுடன் கூடிய தீர்வுகளால் சீர்ப்படுத்த முடியாது. இச்சூழ்நிலைகள், சமூக நீதியின் முக்கியத்துவத்தை சர்வதேச மட்டத்தில் வலிமை மிக்கதாக ஆக்குகின்றன.

சிறப்பான மும்மணிகளும் உங்கள் அனைவரையும் ஆசிர்வதிக்கட்டும்!

*** 2011 செப்டெம்பர் 23 ஆம் திகதியன்று, நியூ யோர்க்கில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 66 ஆவது கூட்டத்தொடரில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவர்களால் ஆற்றப்பட்ட உரையின் ஓர் பகுதியே இதுவாகும்.**

**மூலம்:** www.priu.gov.lk ■


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

QD/24/News/2011 எனும் இலக்கதின்கீழ்
இலங்கை அஞ்சல் திணைக்களத்தில்
பதிவுசெய்யப்பட்டுள்ளது

# பொருளியல் நோக்கு

1975 ஆம் ஆண்டிலிருந்து மக்கள் வங்கியின் ஆராய்ச்சித் திணைக்களத்தால் தடங்கலின்றி வெளியிடப்பட்டு வரும் ***பொருளியல் நோக்கு.*** சமகால சமூக-பொருளாதார மற்றும் அபிவிருத்தி விடயங்களின் அழமான ஆய்வுக்கும் கலந்துரையாடலுக்குமான பொது மன்றத்தை வழங்குகிறது. இவ்வேட்டின் அண்மைக்கால இதழ்கள் பின்வரும் முக்கிய தலைப்புகளை உள்ளடக்கியுள்ளன:

- *வங்கித் தொழில்*
- *சுற்றுலாத்துறை*
- *வரவு-செலவுத் திட்டம் - 2011*
- *பொருளாதார அபிவிருத்தியில் வரி அறவீடு*
- *அறிவுப் பொருளாதாரம்: பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்திக்கான கல்வி*
- *துறைமுகங்களும் கப்பற் போக்குவரத்தும்: ஓர் மத்திய நிலையமாக இலங்கை*
- *இலங்கையில் விவசாயம் தொடர்பான சுதேச அறிவாற்றல்*

ஆர்வமுள்ள வாசகர்கள், இவ்வேட்டின் பிரதிகளை தலைமைக் காரியாலயத்திலுள்ள எமது வெளியீட்டு விற்பனை நிலையம், முன்னணிப் புத்தகசாலைகள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் வங்கிக் கிளைகள் என்பவற்றில் கொள்வனவு செய்ய முடியும். ஏற்கனவே வெளிவந்த சில இதழ்கள் கூட விற்பனைக்குண்டு.

**வருடாந்தச் சந்தா** — **உள்ளூர் -12 இதழ்கள் ரூபா 540/-**
**வெளிநாடு -12 இதழ்கள் அமெரிக்க டொலர் 50**

சந்தாவை, வேண்டுகோள் கடிதமொன்றுடன் காசோலை/காசுக் கட்டளை மூலமாக அனுப்ப முடியும். பணச் செலுத்தல் எமது விற்பனை நிலையத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

காசோலைகள்/காசுக் கட்டளைகளில்
**மக்கள் வங்கி - பொருளியல் நோக்கு எனக் குறிப்பிட்டு.**
கீழுள்ள முகவரிக்கு அவை அனுப்பிவைக்கப்பட வேண்டும்

***ஆராய்ச்சிப் பணிப்பாளர், ஆராய்ச்சித் திணைக்களம்,***
***மக்கள் வங்கி, தலைமைக் காரியாலயம், கொழும்பு 02***
***இலங்கை.***

***தொலை பேசி:*** 011-2481429, 011-2436940
***தொலை நகல:*** 011-2543864 *மின்னஞ்சல்:* ersales@peoplesbank.lk

***பொருளியல் நோக்கு***
***மக்கள் வங்கியின் ஒரு சமூக சேவைச் செயற்திட்டமாகும்***

மக்கள் வங்கியின் ஆராய்ச்சித் திணைக்கள வெளியீடு

பொருளியல் நோக்கில் இருந்து பெறப்பட்டதாகக் குறிப்பட்டு, இவ்வேட்டின் உள்ளடக்கத்தை மேற்கோள்காட்டவோ அல்லது மீள்பிரசுரிக்கவோ முடியும்.

இதழ் இல: 0260/9779

**பிரதி ஒன்றின் விலை : ரூபா 45/-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org